
# ஆதாம் முதல் சீயோன் வரை



# ஆதாம்

# முதல்

# சீயோன்

# வரை

**இளைய வயதினருக்கான ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையிலான வேதம்**

Translated into Tamil and Published by,
**Sangliandapuram Bible Students,**
**Trichy.**

# முன்னுரை

ஆரம்பக் கால வேதமாணவர் இயக்கத்தினுடைய சிறப்பு அம்சங்களில் ஒன்றாக, 1914 ஆம் வருடத்தில் வெளி வந்த, தி போட்டோ டிராமா ஆப் கிரியேஷன் இருந்தது. இதன் தனித்தன்மை வாய்ந்த அசையும் புகைப்படங்கள், கைகளினால் வரையப்பட்ட கண்ணாடி வில்லைகள் மற்றும் ஒலிப்பதிவுக் கருவியில் பதிவு செய்யப்பட்ட குரளொலி ஆகியவை உலகமுழுவதும் உள்ள லட்சக்கணக்கானோருக்கு காண்பிக்கப்பட்டது.

இதன் அனுகுமுறையானது கால வரிசைப்படி, மனுக்குலத்தின் அடிச்சுவடை சிருஷ்டிப்பிலிருந்து இந்நாள் வரையிலான வரலாற்றை, வேத நிகழ்ச்சிகளோடு மாத்திரமல்லாமல் சபை வரலாற்றோடும் உள்ளடக்கியுள்ளது. இம்மாதிரியான அனுகுமுறை இப்படைப்பை அனைத்து வயதினருக்கும் பொருந்தக்கூடியதாக அமைந்துள்ளது. எப்படியெனில், இந்த எழுத்து நடை இளையவர்களால் எளிதில் புரிந்துக் கொள்வதற்கு கடினமாக இருந்தது.

இந்த புத்தகத்தை இளவயது வாசகர்களுக்குத்தக்கதாக 1996-ஆம் வருடம் வாஷிங்டன், பிரிமொர்டனின் பெபெர்லி கிறிஸ்டினசென் என்பவர் எழுதினார். அவர் இதற்கு மூல நூலான போட்டோ டிராமா புத்தகத்தை அடிப்படையாகவும், உந்துதலாகவும் பயன்படுத்தினார். அதின் பெரும்பாலான அம்சங்கள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது. வசனப் பகுதிகள் அனைத்தும், குறிப்பிடாத பட்சத்தில் நியூ இண்டர் நேஷ்னல் வெர்ஷன் பதிப்பிலிருந்து குறிப்பிடப்படுகிறது.

இந்த பாடங்கள் அனைத்திற்கும் குறிப்புகள் தந்து எங்களுக்கு உதவிய அநேகருக்கு எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம்.

இது இளைய வயதினருக்கான வேத ஆலோசனைக்கு ஏற்ற லாபகரமான கருவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

**வெளியீட்டாளர்.**

## பாடம் - 1

# விண் உலகங்களின் தேவனுடைய மகிமை

**“கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு, அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.” - சங்கீதம் 111:10**

நம்முடைய அனுதின வாழ்வில், நாம் பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபிக்கலாம், ஏனென்றால் அவர் நம்மை மிகவும் நேசித்து, பராமரிக்கிறவராகவும் இருக்கிறார். அவர் சர்வவல்லமையுள்ள சிருஸ்டிகர். அவர் வல்லமையுள்ள சூரியனைப் படைத்து, நாம் காணக்கூடாத அநேக நட்சத்திரங்களையும் படைத்திருக்கிறார். அவர் சிறிய காரியங்களையும் படைத்திருக்கிறார். மென்மையான இதழ்களையுடைய பூக்கள், பல வண்ணப் பறவைகள், விதவிதமான புல் வகைகள், இன்னும் எண்ணில் அடங்கா பல படைப்புகளை சொல்லிக்கொண்டே போகலாம்.

இந்த பூமி நமக்கு மிகப் பெரிதாக தோன்றினாலும் இது சனி, செவ்வாய் போன்ற கிரகங்களை விட மிகச்சிறியது. ஆயினும் இந்த இரண்டுமே சூரியனை காட்டிலும் சிறியது. பீப்பாவின் சுற்றளவை சூரியனின் பரப்பளவிற்கு ஒப்பிட்டு பாருங்கள், சூரியனுடைய சுற்றளவு மூன்று அடி விட்டமாக இருந்தால், செவ்வாயுடைய அளவு ஒரு ஆரஞ்சைபோலவும், பூமியின் அளவு ஒரு பட்டாணியைப் போலவும், இன்னும் மற்ற சிறிய கோள்கள் கடுகு போலவும் இருக்கிறது.

வெளிச்சத்தையும் வெப்பத்தையும் கொடுக்கிற ஒரு நட்சத்திரம் சூரியனாகும். சில கோள்களும் சந்திரனும் சூரியனிலிருந்து வரும் வெளிச்சத்தை பிரதிபலிக்கிறது. இது போல அநேக பில்லியன் நட்சத்திரங்களும் சூரிய குடும்பங்களும் அண்ட சராசரத்தில் உள்ளது. நம்முடைய தேவன் எவ்வளவு சிறப்பானவர்.

அண்ட சராசரத்தின் படைப்புக்கு முன் இருந்த துவக்கத்தின் விவரங்களை நாம் யோவான் 1:1,2,3 ஆம் வசனங்களில் வாசிக்கலாம். நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு தொடக்கம் இல்லை. நமக்கு இது


புரியாத ஒருகாரியமாகவும் இருக்கலாம், எல்லாவற்றுக்கும் ஒரு துவக்கம் உண்டு. “லோகாஸ்” என்ற இயேசு தேவனால் படைக்கப்பட்ட முதலும் கடைசியுமான படைப்பாக இருக்கிறார். (வெளி 3:14,கொலோசெயர்1:15)

சகல திட்டங்களையும் தேவன் தீட்டினார், பிதாவாகிய தேவன் சிறந்த சிற்பாசாரியாகவும், லோகாஸ் சிறந்த ஓர் கட்டுனராகவும் இருக்கிறார். அதை நம்முடைய ஆண்டவராம் இயேசு மிக சிறப்பாக நிறைவேற்றினார். சகலத்தையும் மிக நேர்த்தியாகவும் அருமையாகவும் படைத்து முடித்தார்.

“ஆதியாகமம்” என்றால் துவக்கம், (ஆதியாகமம் 1:1) ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். இந்த வசனம் மட்டுமே சகல அண்டசராசரங்களின் படைப்பை பற்றி கூறுகிறது. அதற்கு பின் வரும் வசனங்களில் மனிதனுடைய குடியிருப்புக்காக இந்த உலகத்தை ஆயத்தப்படுத்தியதை பற்றி சொல்லப்படுகிறது.

பூமி தன்னை தான் சுற்றி வருவதினால், நமக்கு இரவும் பகலும் மாறி மாறி வருகிறது. இந்த பூமி சூரியனை ஒரு முறை சுற்றும் போது நமக்கு ஒரு வருடம் கடந்து போகிறது.

**(பிதாவாகிய தேவன் சிறந்த சிற்பாசாரியாகவும், லோகாஸ் சிறந்த ஓர் கட்டுனராகவும் இருக்கிறார்.)**



# பாடம் - 2

## படைப்பின் முதல் நாள்

**“தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார், சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று.” - ஆதியாகமம் 1:3,5**

இந்த பூமி எத்தனை நாட்களுக்கு முன்பாக படைக்கப்பட்டது என்றும் எவ்வாறு படைக்கப்பட்டது என்றும் வேதாகமம் தெளிவாக கூறவில்லை. ஆனால் இந்த பூமியை படைக்கும் போது அது வெறுமையாகவும், ஒழுங்கின்மையாகவும், இருந்தது என்று வாசிக்கிறோம். அங்கு மரங்களோ, செடிகளோ, ஆறுகளோ, கடல்களோ எதுவும் இல்லை.

ஆறு படைப்பின் நாட்களில் தேவன் இந்த பூமியை மனுஷர் குடியிருப்புக்கு ஏற்றதாக மாற்றினார். (ஏசாயா 45:18) இது நமக்கு ஏழாவது படைப்பின் நாளின் காலத்தை எடுத்துக்காட்டுகிறது. அதாவது ஒவ்வொரு படைப்பின் நாட்களுக்கும், ஏழாயிரம் வருடங்கள் உள்ளது. ஏழாம் நாளோடு ஒரு படைப்பின் வாரம் முடிவு பெறுகிறது.

துவக்கத்தில் பூமிக்கு சரியான ஒரு உருவம் இல்லை, அநேக பொருட்கள் சேர்ந்து, வேகமாக சுற்றிக் கொண்டு இருந்தது. இது வேகமாக சுற்றும் போது தண்ணீரும், மற்ற தாது பொருட்களும், வெப்பம் அதிகமாக இருந்ததினால் ஆவியாக சுற்றிலும் வீசப்பட்டது. அவைகள் அந்த வெப்பத்திலிருந்து குளிரும் போது பெரிய பெரிய வட்டங்களாக பூமியில் படிய ஆரம்பித்தது. இந்த வட்டங்களே பூமிக்கு உருண்டையான வடிவத்தை கொடுத்தது. முழுமையாக வெப்பம் தனிந்த பின்பு பூமி ஒரு பந்தை போல் காட்சி அளித்தது. ஆனால் தேவன் முன்னதாகவே வெளிச்சத்தை படைத்திருந்திருந்தாலும் நான்காம் நாள் வரைக்கும் எந்த வெளிச்சமும் பூமிக்குள் ஊடுருவி பாயவில்லை.

நம்முடைய அண்டசராசரம் இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அநேக விஞ்ஞானிகள் இன்னும் ஆராய்ச்சி செய்து பூமியின் படைப்பை பற்றி விவரித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த விஞ்ஞானிகள் புதுப் புது காரியங்களை கண்டுபிடிக்கும் போதெல்லாம், அந்த காரியங்கள் நமக்கு வேதாகமத்தில் சாட்சியாக முன்பே எழுதப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக (யோபு 26:7) பூமி அந்தரங்கத்தில் தொங்குகிறது. இதை மிக சமீபத்தில் தான் கண்டுப்பிடித்தார்கள்.

வேதாகமத்தில் உள்ள அனைத்தையும் மற்றும் படைப்பு முழுவதையும் இன்று வரை மனிதர்கள் முழுமையாக புரிந்து கொள்ள இயல வில்லை, ஆனால் படைப்பின் திட்டத்தை வகுத்த பின்பு அதை வேதாகமத்தில் எழுதி நமக்கு கொடுத்திருக்கிறார். நம்முடைய வேதாகமம் சகல சிருஷ்டிப்பின் காரியங்களையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

**(நம்முடைய அண்ட சராசரம் இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிறது.)**



# பாடம் - 3

# படைப்பின் இரண்டாம் நாள்

**“கர்த்தாவே, நீரே என் தேவன், உம்மை உயர்த்தி, உமது நாமத்தைத் துதிப்பேன் நீர் அதிசயமானவைகளைச் செய்தீர், உமது பூர்வ ஆலோசனைகள் சத்தியமும் உறுதியுமானவைகள்.” - ஏசாயா 25:1**

ஒரு நாளின் கால பகுதி எவ்வளவு? நாம் அறிந்த வரை அது 24 மணி நேரம். (சங்கீதம் 95:8) வசனத்தை வாசிக்கும் போது, இது வனாந்திரத்தில் அவர்கள் பிரயாணம் செய்த வருடங்களை “சோதனையின் நாட்கள்” என்று குறிப்பிடுகிறது, இஸ்ரயேல் மக்கள் வனாந்தரத்தில் நாற்பது வருடங்கள் பிரயாணம் செய்தார்கள் என்று வாசிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பிடும் போது (11 பேதுரு 3:8) கர்த்தருக்கு ஒரு நாள் ஓர் ஆயிர வருடம்போலவும், ஆயிரவருடம் நேற்று கழிந்த நாள் போல இருக்கிறது என்கிறார், “நாள்” என்ற வார்த்தைக்கு அகராதியில் குறிப்பிட்ட காலம் என்று கூறலாம். ஒரு படைப்பின் நாளுக்கு அநேக ஆயிர வருடங்கள் தேவைப்பட்டது.

இரண்டாம் படைப்பின் நாளில் தேவன் பூமியை சுற்றி, காற்று மண்டலத்தை உண்டாக்கினார். வருங்காலத்தில் இந்த காற்று மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் சுவாசிப்பதற்கு தேவை என்பதை அவர் அறிந்திருந்தார். பூமியைச் சுற்றி தண்ணீரும், தாதுக்களும் உள்ள வளையங்கள் அடுக்கடுக்காக இருந்தது. இதிலிருந்து கொஞ்சம் தண்ணீர் பூமியின் மீது விழுந்து சமுத்திரமாகவும், ஆறுகளாகவும், குளங்களாகவும் மாறியது. மீதியிருந்த தண்ணீர் வானத்தில் மேகங்களாக மாறியது. இதற்கு மத்தியில் காய்ந்த வெட்டவெளி இருந்தது.

இரண்டு நாட்களில் இந்த பூமி புல் பூண்டுகளை முளைப்பிக்க ஆயத்தமாக இருந்தது. சிருஷ்டிக்கப்படாத செடி, கொடிகளுக்கும், மிருகங்களும் வாழ்வதற்க்கும் படிப்படியாக தேவன் இந்த பூமியை பக்குவப்படுத்திக் கொண்டு இருந்தார். அவர் ஒவ்வொன்றையும் நிதானித்து, ஞானமாக திட்டமிட்டு, கிரமமாகவும், அற்புதமாகவும் செயல்படுத்தினார்.

அவர் படைத்த ஒன்பது கோள்களில் பூமிக்கு மட்டுமே உயிர் மூச்சை கொடுக்கும் பிராண வாயு இருக்கிறது. இந்த பூமியிலிருந்து சுமார் நான்கு மைல்களுக்கு மேலே இந்த பிராண வாயு இருக்காது. அதற்கு மேலே செல்லுபவர்கள் அவர்களுக்கு தேவைப் பட்ட பிராண வாயுவை எடுத்துச் செல்ல வேண்டும் அல்லது மரித்து விடுவார்கள். ஆகவே வின் வெளி செல்லுபவர்கள் தேவையான பிராண வாயுவை எடுத்து செல்லுவது வழக்கம்.

நாம் நம்முடைய பரலோக தந்தைக்கும் ஆண்டவராம் இயேசுவுக்கும் சிரம் தாழ்த்தி நன்றிகளை தெரிவிக்கலாம், எவ்வளவு நேர்த்தியாக இந்த சிருஷ்டிப்புகளை சிருஷ்டித்திருக்கிறார்கள்.



**உயிரினங்கள் வாழ்வதற்கு தேவையான பிரான வாயு பூமியில் மட்டுமே இருக்கிறது.**

# பாடம் - 4

# படைப்பின் மூன்றாம் நாள்

**"நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது." - சங்கீதம் 124:8**

நாம் ஒரு கடற்கரைக்குப் போய், ஒரு வாளி தண்ணீரை வேகமாக ஓர் இடத்தில் ஊற்றினால், உற்றின தண்ணீர் மணலுக்குள் ஒரு பெரிய துவாரத்தை ஏற்படுத்தி, சுற்றிலும் மலைகள் போன்ற தோற்றம் உடையவைகள் ஏற்படும் சிறிய சிறிய குளங்கள் போன்ற தண்ணீர் தெப்பங்களை காணலாம்.

இப்படியே நம்முடைய பிதாவும், குமாரனும் இந்த பூமியின் மேல் மலைகளையும், கடல்களையும் சிருஷ்டித்திருக்க வேண்டும். பூமியைச் சுற்றி இருந்த வளையங்களின் மிக வேகமான அழுத்தங்களின் காரணமாக பிரமாண்டமான மலைகளையும், ஆழமான பள்ளத்தாக்குகளையும் உண்டாக்கப்பட்டது. நாம் கடற்கரையில் குளங்கள் ஆறுகள் வெட்டுவது போல் இதுவும் உண்டாக்கப்பட்டது.

இதுவே மூன்றாம் நாளின் படைப்புகளாக இருந்தது. கடலும் வெட்டாந்தரையும் வெவ்வேறாக பிரிக்கப்பட்டது. பூமியில் புல்லும், செடிகளும், மரங்களும் முளைக்க ஆரம்பித்து, பூமியும் குளிர்ந்து மனிதர்களுடைய குடியிருப்புக்கு ஏற்றதாக மாறியது.

நிலம் காய்ந்து, சுத்தமான தண்ணீர் பூமியின் புல் பூண்டுகள் வளர்வதற்கு உதவியாக இருந்தது. (ஆதியாகமம் 1:11,12) அப்பொழுது தேவன், பூமியானது புல்லையும் விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது.

தேவன் படைத்த சகலமும் தங்கள் தங்களின் படியே உயிரினங்களை உருவாக்குவதற்கு கட்டளையிட்டார். தாவரங்களானாலும், மிருகங்களானாலும் அவைகளைப் போலவே உற்பத்திசெய்யவேண்டும் என்று கட்டளையிட்டார்.

மூன்றாம் நாளிலும் பூமியில் அதிகமான கரியமில வாயு சூழ்ந்து கொண்டு இருந்தது. இன்னும் பூமியின் மேல் மழை பெய்ய வில்லை, ஆனாலும் தண்ணீர் மேகம் போல அடர்த்தியாக, பூமியின் மேல் சூழ்ந்து கொண்டு இருந்தது. பூமி தன்னில் உள்ள வெப்பத்தை வைத்துக் கொண்டு சூடாகவே இருந்தது. இந்த சூழ்நிலைகள் பெரிய மரங்கள் வளர்வதற்கு மிகச் சாதகமாக இருந்தது.

நாம் ஒரு சமுத்திரத்தை அல்லது ஒரு கடலை பார்க்கும் போது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. (ஆபகூக் 2:14) சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல இந்த பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். இப்படித்தான் தேவனுடைய ராஜ்ஜியத்தில் அவரை அறியும் அறிவு நிறைந்திருக்கும், நாம் மலைகளை பார்க்கும் போது, தாவீது எழுதியது போல (சங்கீதம் 121:1,2) எனக்கு ஒத்தாசை வரும் பரவதத்திற்கு நேராக என் கண்களை ஏறெடுப்பேன். வானத்தையும் பூமியையும்உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.



**(மூன்றாம் நாள் பசுமையான தாவரங்கள் துரிதமாக வளர்ந்தது)**

# பாடம் - 5

# படைப்பின் நான்காம் நாள்

**"எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்." - சங்கீதம் 8:1**

இந்த படைப்பின் வரலாறு எபிரேய மொழியில் சுமார் 3,500 வருடங்களுக்கு முன்பாக எழுதப்பட்டது. எபிரேயர்களை நாம் இஸ்ரயேலர்கள் என்றும் யூதர்கள் என்றும் அழைக்கலாம். நம்முடைய ஜேம்ஸ் அரசனால் ஆங்கில வேதாகமம் 1611 ஆம் வருடத்தில் அச்சிடப்பட்டது. எபிரேய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த சில வல்லுனர்கள், வாசகர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் மொழி பெயர்த்திருந்தாலும் சில தவறுகள் ஏற்பட்டது.

எடுத்துக் காட்டாக ஆதியாகமம் 1:16 வசனத்தில் தேவன் பெரிய சுடரையும் சிறிய சுடரையும் படைத்தார் என்று வாசிக்கிறோம். ஆனால் எபிரேய மொழியில் இந்த வசனத்தில் "படைத்தார்" என்ற வார்த்தைக்கு பதிலாக "நியமித்தார்" அல்லது "ஒளி வீசச் செய்தார்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஆகவே தேவன் நான்காம் நாளிலே பூமியின் மேலே சூரியனையும், சந்திரனையும் ஒளி வீசச் செய்தார். ஆனால் இந்த சூரியனும், சந்திரனும் அநேக நாட்களுக்கு முன்பாக படைக்கப்பட்டது, இவைகளுடைய ஒளி பூமிக்கு வந்து சேருவதற்கு, வானத்திலுள்ள கரியமில கலந்த காற்றும், மேகங்களும் பனியும், தடையாக இருந்தது. மேல் மட்டத்திலிருக்கும் தண்ணீர் ஒவ்வொரு சுற்றாக பூமியின் மீது விழுந்ததினால் பூமியின் காற்று மண்டலம் மிகவும் தெளிவாக இருந்தது, சூரிய ஒளியும், சந்திரனுடைய ஒளியும் நட்சத்திரங்களுடைய ஒளியும், பூமியின் மேல் பிரகாசித்தது.

சூரியனுடைய கதிர்களும், சந்திரனுடைய கதிர்களும் இன்னும் அதிகமான உயிரினங்களை வரைச்செய்தது. பூமியின் மேல் சில

மாற்றங்களை ஏற்படுத்த இந்த ஒளியை பயன்படுத்தினார். தேவன் இந்த சூரியனைக் கொண்டு மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் காலங்களை நியமித்தார். இவைகளின் மூலம் பூமிக்கு அதிகமான பிராண வாயு கிடைத்தது. சந்திரன் இரவு நேரத்தில் கடல் அலைகள் மூலம் காலத்தை கணக்கிட வைத்தார். முந்திய காலத்தில் மக்கள் இந்த சந்திர கணக்கை வைத்துத்தான் வருடங்களை கணக்கிடுவார்கள். “சந்திரனைக் காலக்குறிப்புகளுக்காகப் படைத்தார், சூரியன் தன் அஸ்தமனத்தை அறியும்.” (சங்கீதம் 104:19)

இந்த காரியங்கள் பூமியின் மேல் அதிகமான வளர்ச்சியை கொண்டுவந்தது. அநேக விதமான தாவரங்கள் முளைத்தது. கடல் வாழும் ஜந்துக்களான பூச்சிகள், நத்தைகள் இன்னும் அநேக மீன் வகைகள் அதிகமாக உற்பவித்தது. இந்த படைப்பின் நாள் நம்முடைய தேவனுடைய அற்புதமான திட்டங்களை எடுத்து காட்டுகிறது.

**(முன்பு படைக்கப்பட்ட சூரியன், சந்திரன், நட்சத்திரங்களும் பூமியின் மேல் ஒளி தந்தது.)**



# பாடம் - 6

## படைப்பின் ஐந்தாம் நாள்

**"தேவன் மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகல வித நீர் வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார். தேவன் அது நல்லது என்று கண்டார்." ஆதியாகமம் 1:21**

மிருகங்கள் சுவாசிக்கத்தக்கதாக இப்போது இந்த பூமியை சுற்றி உள்ள காற்று மண்டலம் தூய்மையாக இருந்தது. தண்ணீரிலும் காற்றிலும் அதிகமாக இருந்த கரிப்பொருளை கடலில் இருக்கும் சுண்ணாம்பு போன்றவைகள் உறிந்தது. கால போக்கில் இது கடலுக்கு அடியில் சுண்ணாம்பு கற்களாக படிந்தது. மிக பெரிய காடுகளும் கடலுக்குள் முழுகி கரிப்பொருளாக மாறியது மேலும், இப்படியாக பெரும் பகுதியான கரியமில வாயு எடுத்துக் கொள்ளப்பட்டு. மிருகங்கள் சுவாசிக்க வழிவகுத்தது.


திரளான மீன்களும், கடல்வாழ் ஜந்துக்களும் தண்ணீரை நிரப்பிற்று. சில ஊர்வன ஜந்துக்கள் நிலத்திலும், நீரிலும் வாழ்ந்தது.

ஆதியாகமம் 1:21 "மகா மச்சங்களை... சிருஷ்டித்தார்" என்று ஜேம்ஸ் அரசனால் மொழிப்பெயர்க்கப்பட்ட வேதாகமத்தில் வாசிக்கிறோம். ஆனால் இதை "ராட்சத பிராணிகள்" என்று சரியாக மொழிபெயர்த்திருக்கவேண்டும். "டைனோசரஸ்" மிக அழகாக வர்ணிக்கப்படுகிறது. "சிறகுள்ள பறவைகள்" என்பது பறவைகளையும், சில பறக்கும் ஊர்வன ஜந்துக்களையும் குறிக்கும். இவைகளுக்கு 25 அடி நீளமான இறகுகள் இருந்தன.

மிருகங்கள் படைக்கப்படும் முன் அவைகளுக்கு தேவையான புல் பூண்டுகள் முளைத்தது என்று விஞ்ஞானிகள் கூறும்போது, நாம் தேவனுடைய ஞானத்தையும், வல்லமையையும் நினைக்கும் போது மிக ஆச்சரியமாக இருக்கிறது. தேவன் சகலத்தையும் அதின் அதின் காலத்திலே நேர்த்தியாக செய்கிறார் என்பதற்கு இது ஒரு சரியான எடுத்துகாட்டாகும். பூச்சி, பறவை, போன்றவைகளை கொண்டு உணவு தரும் செடிகளின் விதைகளை பூமி எங்கும் பரப்பினார் என்று நாம்

அறியும் போது தேவனுடைய திட்டத்தை கண்டு நாம் மிகுந்த வியப்பு அடைகிறோம். இப்படியாக அவர் படைத்த அனைத்து உயிரினங்களுக்கும் ஆகாரம் கிடைத்தது. புதிதாக வளரக்கூடிய பெரிய தாவரங்களுக்கு அதிகமான சூரிய வெளிச்சமும், ஈரப்பதம் தேவைப்பட்டது. முந்திய மப்பும் மந்தாரமுமான படைப்பின் நாள் முடிவதற்கு காத்திருந்த நாட்கள் செல்ல செல்ல சூரியனின் கதிர்கள் பூமியின் மேல் பாய தேவன் காத்திருந்தார். தேவனுடைய மகத்தான ஞானம், நேர்த்தியாக வெளிப்படுகிறது. பாருங்கள். அதற்கு பின் அவர் பல வண்ணங்கள் கொண்ட நறுமணம் வீசும் செடிகளை படைத்தார்.

நம்முடைய குடியிருப்புக்காக தேவன் எவ்வளவு நேர்த்தியாக ஒவ்வொன்றையும் ஆயத்தம் செய்தார் என்று நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் இந்த உலகத்திற்கு வருவதற்கு முன்பே அவர் சகல காரியங்களையும், முன் திட்டமிட்டு படிப்படியாக படைத்து வந்தார். ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் அவர் உணவை ஆயத்தம் செய்து, ஏற்ற வேளையில் அவைகளுக்கு ஆகாரம் கொடுக்கிறார். அவருடைய வல்லமை புகழ்த்தக்கது. பூமியின்மேல் மழையை பெய்யச் செய்து, புல் பூண்டுகளை முளைப்பித்து மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறார். எவ்வளவு அற்புதமான திட்டமிட்ட படைப்புகள். (சங்கீதம் 147:5,8,9).



# பாடம் - 7

## படைப்பின் ஆறாவது நாள்

**"அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது, சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று." ஆதியாகமம் 1:31**

கடைசியாக இந்த பூமி மனுஷர்குடியிருப்புக்கு ஏற்றதாக மாறியது. அதிக பட்சமான கரியமிலவாயுவை மரம் செடி கொடிகள் பயன்படுத்தியது. மனிதர்கள் சுவாசிப்பதற்கு ஏற்ற பிராண வாயு பூமியில் இருந்தது. தாவரங்கள் அனைத்தும் இயல்பான நிலைக்கு வந்தது. மிருகங்களுக்குள் சில மாற்றங்கள் ஏற்பட்டது. கனமான எலும்புகளுடைய ராட்சித மிருகங்கள் (டைனோசரஸ்) மாண்டது. அதற்கு பதிலாக இப்போது நாம் காணக் கூடிய மிருகங்கள் இந்த பூமியில் வாழ்ந்தது. ஆறாவது படைப்பின் நாளின் முடிவில் மனிதன் படைக்கப்பட்டான்.

தேவன் "லோகாஸை" பார்த்து, "நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக" என்றார் (ஆதியாகமம் 1:26) மனிதன் மண்ணினால் படைக்கப்பட்டு, ஜீவிக்கக்கூடிய சுவாசத்தை பெற்று ---- ஒரு அற்புதமான பூரண மனிதனான்.


மனுஷன் தேவ சாயலில் படைக்கப்பட்டதால், தேவன் சர்வத்தையும் ஆண்டுகொள்ளுவது போல அவன் இந்த பூமியில் உள்ளவைகளை ஆண்டு கொள்ளுவதற்கு அதிகாரம் பெற்றான். மனிதன்பேசவும், சிந்தித்து செயல்படவும், நன்மை, தீமை இன்னதென்றும் பகுத்துதறியக்கூடிய ஆற்றலை பரிசாக பெற்றிருந்தான். அவன் சங்கீதங்களை ரசிக்கவும், இசை அமைப்பவனாகவும் இருந்தான். தேவனை தொழுது கொண்டு, சேவித்து மகிழ்விக்கும் விருப்பம் அவனுக்குள் இருந்தது. அவன் அறிவும், அன்பும், உயர்பண்பும், புதிதானவைகளை கண்டுபிடிப்பவனாகவும் இருந்தான்.

தாவீது, தன்னை குறித்து சொல்லும் போது, (சங்கீதம் 139:14)" நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால்...." மனித சரீரத்தை குறித்து அதிகமாக கற்று கொள்ளும் போது, இந்த வசனம் எவ்வளவு உண்மை என்று உணரலாம்.

நம்முடைய ஆதி பெற்றோர் மனுகுலத்தில் உள்ள மற்ற குழந்தைகளைபோல் பிறக்காமல், தேவனால் பூரண மனிதர்களாக நேரடியாக படைக்கப்பட்டார்கள்.

மனித வரலாற்றை நாம் படிக்கும்போது, யுகங்களை பற்றிய தேவ ஏற்பாட்டை விவரமாக கற்றுக் கொள்ளுவது மிக அவசியம். மனுக்குலத்திற்காக தேவன் வைத்திருக்கும் திட்டங்களை அறிந்து கொண்டு அதில் நினைவில் வைக்க உதவியாக இருக்கும். வேதாகமத்தை கற்று கொள்வதற்கு வாழ் நாள் முழுவதிலும் இந்த வரை படத்தை நாம் பயன்படுத்தலாம். ஒவ்வொரு வசனமும் எந்த இடத்தில் பொருந்தும் என்பதையும் அறிந்து கொள்ளலாம். (ஆபகூக் 2:2).

ஆதாம், ஏவாள் ஏதேனில் வாழ்ந்த காலத்தையும், நோவா வெள்ளத்திலிருந்து காக்கப்பட்ட காலத்தையும், இயேசு எங்கு மரித்தார் என்றும், நாம் ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும் ராஜ்யத்தை பற்றியும், இவைகள் சம்பவிக்கும் குறித்த காலத்தையும் துல்லியமாக அறிந்துகொள்ளலாம். இப்படியாக வசனங்களை ஏற்ற காலத்திற்கு பொருத்துபவர்களே, சத்தியத்தை பகுத்து போதிப்பவர்களாக இருக்கிறார்கள். (11தீமோத்தேயு 2:15).




**யுகங்களின் தேவ ஏற்ப்பாட்டின் வரைப்படத்தில், எந்த வசனம் எங்கு சரியாக செயல்படும் என்று அறிந்து கொள்ளலாம்.**

# பாடம் - 8

## படைப்பின் ஏழாம் நாள்

**தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். ஆதியாகமம் 2:3**

படைப்பின் ஆறாம் நாள் முடிவில் ஆதாம் படைக்கப் பட்டார். ஏவாள் ஆதாமின் ஒரு பகுதியாக இருந்தாள். ஏற்ற காலத்தில் அவள் ஆதாமிலிருந்து பிரிக்கப்பட்டு அவர்களுடைய குழந்தைகளுக்கு ஒரு தாயாகவும், ஆதாமுக்கு ஒரு நல்ல துணைவியாகவும், உதவியாளருமாக செயல்பட தேவன் அவளை சிருஷ்டித்தார். பின்பு படைப்பின் வேலைகளிலிருந்து தேவன் ஓய்வெடுத்தார்.

அடுத்து வந்த ஏழாம் நாளில், மனிதன் பலுகி பெருகி பூமியை நிரப்பி, ஏதேனின் பரிபூரணத்தை பூமி எங்கும் பரப்புவதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. பிறக்கக்கூடியபடியே பிறந்து - கடந்த ஆறாயிர வருடங்களிலும் பலுகி பெருகிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஆம், தேவன் கடந்த 6000 வருடங்களாக ஓய்ந்திருக்கிறார். ஆனால் இக்கால பகுதியில் அநேக காரியங்கள் நடந்து விட்டது. தேவன் பாவத்தையும், தீமைகளையும், துன்மார்க்கத்தையும் திட்டமிடவில்லை. இப்படியிருக்க தேவன் ஏன் இதை தடுக்க வில்லை, அல்லது அவர் ஓய்ந்திருக்கும் வரைக்கும் மக்கள் வேதனை படவிட்டு விட்டாரா ? தேவன் சகலத்தையும் அறிந்தவராக இருக்கிறார். நேற்று கழிந்த காரியங்களை நாம் காணுவது போல, அவர் வரக்கூடிய காரியங்களை நன்கு அறிந்திருந்தும் அவனை தடுக்கவில்லை. ஏன் என்றால் ஒரு மனிதனை கட்டாயப்படுத்தி கீழ்படியவைக்க தேவனுக்கு ஒரு பெரிய காரியம் அல்ல.

ஆதாம் கீழ்படியாமல் போனாலும் தேவனுடைய சித்தம் செய்து முடிக்கப்படும். மேசியாவின் யுகத்தில் மனுகுலம் பூரண நிலமைக்கு

சீர்த்திருத்தபட்டு, பூமி முந்தைய ஏதேனைப் போல் மாறும். இதுவே சீர்பொருந்துதல் அல்லது இளைப்பாருதலாகும்.

மனுக்குலம் கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழுவது எவ்வளவு அற்புதமான ஆசீர்வாதமாக இருக்கும். அப்போது அவர்கள் நீதியையும் நியாயத்தையும் கற்றுக் கொண்டு மனப்பூர்வமாக தேவனுடைய சட்டங்களுக்கு கீழ்படிவார்கள். அவர்களுடைய இந்த தீமையான அனுபவங்கள் அவர்களை அப்போது சரியான முடிவு எடுக்க உதவி செய்யும்.

பின்பு மனுக்குலம் தேவனுடைய சாயலையும், ரூபத்தையும் பெறுவார்கள். “சாயல்” என்பது சிந்தித்து செயல் படக்கூடியவர்களாகவும், “ரூபம்” என்பது தேவன் அண்ட சராசரங்கள் மேல் ஆண்டு கொள்ளுவது போல் இந்த பூமியை ஆளுவதையும் குறிக்கும். இவைகள் பொறுமையாக நிறைவேறும்.

தேவனுடைய திட்டங்களை செயல் படுத்துவதின் மூலம், நாம் தேவனுடைய அன்பையும், வல்லமையையும், நீதியையும், ஞானத்தையும் காண முடியும்.

**ஆதாம் படைப்பின் ஆறாம் நாள் முடிவிலே படைக்கப்பட்டார்.**



# பாடம் - 9

## தாயாகிய ஏவாளின் படைப்பு

**இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதியாகமம் 2:24**

சில காலம் ஆதாம் ஏதேனில் தனியாக இருந்தார். அவர் மிருகங்களோடும், பறவைகளோடும் கூடி வாழ்ந்தார். ஆனாலும் தன்னைப் போல் ஒருவரும் இராததினால் அவர் தனிமையில் இருந்தார். ஏவாள் ஆதாமின் விலா எலும்பிலிருந்து உருவாக்கப்பட்டதினால் அவள் ஆதாமின் ஒரு பகுதியாக இருந்தாள்.

ஆதாம் ஏவாளை மிகவும் நேசித்தார். அற்புதமான சிருஷ்டிகரை பற்றியும் அவர் கொடுத்த ஆசீர்வாதங்களையும், ஏவாள் கற்று அறிய உதவி செய்தார். ஏவாளும் ஆதாமை மிகவும் நேசித்து ஏதேனில் அவரோடு வாழ்க்கையை பகிர்ந்து கொண்டாள். ஏவாள் தேவனுடைய அற்புதமான கைவேலைகளை சுட்டி காட்டும் போது இருவரும் இணைந்து ரசித்ததால் அவைகள் மென்மேலும் அழகாய் தோன்றியது.

இவர்கள் மிக சந்தோஷமாக இருந்தார்கள் என்பதற்கு சந்தேகமே இல்லை, இதுவே தேவனுடைய திட்டமாக இருந்தது. மனிதர்கள் திருமணம் செய்து பிள்ளைகளை பெற வேண்டும் என்று தேவன் விரும்பினார். அவர்கள் அவரை நேசித்து அவருடை ஆசீர்வாதங்களில் களிகூற வேண்டும் என்றும் விரும்பினார்.

நம்முடைய வேதாகமத்தில் அநேக அற்புதமான சரித்திரங்கள் மணவாளங்களையும் மணவாட்டிகளையும், பெற்றோர்களையும், பிள்ளைகளையும் பற்றியும் கூறுகிறது. இயேசு மணவாளன் என்று அழைக்கப்படுகிறார். மத்தேயு 9:15, 25:1 1,44,000 பரிசுத்தவான்களை மணவாட்டி என்று அழைக்கபடுகிறார்கள். (வெளி 21:9,22:17)

பூமி மக்களால் நிறைந்திருப்பதினால், தேவனுடைய ராஜ்யத்தில் திருமணங்களும், பிள்ளை பெறுவதும் இருப்பதில்லை. (மத்தேயு 22:30),.பூமியில் உள்ள அனைவரும், தேவன் முன் திட்டமிட்டபடியே அவருடைய ஆசீர்வாதங்களை பெறுவார்கள்.

பரிசுத்தவான்களை தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள். இவர்கள் இயேசுவுக்கு பங்காளிகளாகவும் அனைவரும் ஒரே குடும்பமாகவும் இருப்பார்கள். (ரோமர் 8:16,17) இயேசுவின் மரணமும், உயிர்த்தெழுதலும் இந்த பூமியில், மக்கள் அனைவரையும் நித்தியமாக தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்வதற்கு வழி வகுத்ததினால் அவர் நித்திய பிதா என்று அழைக்கப்படுவார். (ஏசாயா 9:6).

தேவனுக்கும் மனுகுலத்திற்கும் குடும்ப வாழ்க்கை அவசியமான ஒன்றாகும். ஆதாம் ஏவாள் அநேக பிள்ளைகளை பெற்றார்கள், அவர்கள் கொஞ்சம் குறையை பூரண நிலமையில் இருந்ததினால் அவர்களுடைய பிள்ளைகள், திருமணம் செய்து கொண்டு, இந்த பூமியில் தங்களுகென்று குடும்பங்களை ஏற்படுத்தினார்கள். இப்படியாக மனித குடும்பங்கள் பெருகி பூமியை நிரப்பினார்கள். (ஆதியாகமம் 1:28)



# பாடம் - 10

## தாயாகிய ஏவாள் ஏமாற்றப் பட்டாள்

**"சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் சாகவே சாவதில்லை என்றது." ஆதியாகமம் 3:4**

ஏவாள் தேவனை பற்றி அனைத்தையும், தனக்கும் ஆதாமுக்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட அழகான ஏதேன் தோட்டத்தை பற்றியும் அறிய ஆவலாக இருந்தாள். அங்கிருந்த அநேக காரியங்களை அறிந்து கொள்ள விரும்பினாள். அந்த ஒரு மரத்தின் கனியை புசிக்கவேண்டாம் என்று ஏன் சொன்னார்? ஞானமுள்ள அழகான சர்ப்பம் மட்டும், இந்த மரத்தின் கனியை புசித்து உயிரோடு இருப்பது எப்படி ?

பூரணமான ஜோடியை ஏமாற்றுவதற்கு சாத்தான் மிக தந்திரமாக திட்டம் வகுத்தான். அவன் ஏவாளிடம் தன்னை வணங்க சொல்லியிருக்கலாம். ஆனால் அவள் அதிர்ச்சி அடைந்து அவனை விட்டு போயிருப்பாள். ஆகவே சாத்தான் அவளை கவனித்து, அவள் வழிகளை நன்கு அறிந்தான். அவள் மிக்க சந்தோஷமாக இருந்தாள், அவள் ஆதாமை நேசித்தாள், தேவனையும் நேசித்தாள். அவளுடைய குணங்களில் எதை சாதகமாக பயன்படுத்துவது என்று அவன் யோசித்தான் அதிகமான அறிவை பெற அவள் ஆசித்தாள்.

ஞானம் மிகவும் நல்லது. நாம் அறிவை ஞானமாக பயன்படுத்தும் அளவுக்கு தேவன் நமக்கு அறிவை அபிரிவிதமாக கொடுத்திருக்கிறார். ஏவாள் தொடர்ந்து தேவனுக்கு கீழ்படிந்து அவரை நேசித்திருந்தால் இன்னும் அதிகமான அறிவை கொடுத்திருப்பார். அந்த சூழ்நிலையில் தேவன் தன்னுடைய சட்டங்களுக்கு கீழ்படிய கற்றுக்கொடுப்பது நலமாக இருக்கும் என்று விரும்பினார்.

தேவனுக்கு கீழ்படிந்து விசுவாசமாக இருப்பார்களா என்று சோதிக்க அந்த மரத்தின் கனியை புசிக்கவேண்டாம் என்று தற்காலிகமாக சொல்லப்பட்டது. கீழ்ப்படியாமைக்கு மரணமே

தீர்ப்பாக வைக்கப்பட்டது. ஜீவனற்ற நிலை மரணமாகும். மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள், இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை. (பிரசங்கி 9:5,10).

சாத்தான் சர்வவல்லமையுள்ள தேவனை போல் இருந்த மக்களின் ஆராதனையை பெற விரும்பினான். விலக்கப்பட்ட அந்த விருட்சத்தின் கனியை அவன் தந்திரமுள்ள சர்ப்பத்தை புசிக்கும்படி ஏவினான். கனியை புசித்த சர்ப்பம் உயிரோடிருந்தை கண்டு அவளும் அதை புசித்தாள். இதை அறிந்த ஆதாம் ஏவாளை பிரிந்து வாழ இயலாதவராய் மரணத்திற்குள் அவளை பின்பற்ற முடிவு செய்தார். (ஆதியாகமம் 2:17)

தேவனை விசுவாசிப்பதை விட்டு, ஆதாம் கீழ்ப்படியாமல் ஏவாளை போல் அந்த கனியை புசித்தார். ஆகவே இதன் விளைவாக மரணம் இவர்கள் மேலும், இவர்கள் பிள்ளைகள் மேலும் வந்தது.

இப்படியாக "புசிக்கும் நாளில் சாகவே சாவதில்லை" என்ற முதல் பொய் மனுக்குலத்தை பாவத்தையும், மரணத்தையும் நோக்கிய பயணத்தை தொடங்கி வைத்தது. இவைகளின் கொடூரமான விளைவுகள் என்ன என்பதை நாம் நன்கு அறிவோம்.

**சாத்தான் ஏவாளை வஞ்சிக்க வகை தேடினான்.**



# பாடம் – 11

# ஏதேனை விட்டு வெளியேறுவது

**“பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்.” எசேக்கியேல் 18:4**

நித்திய ஜீவன் அல்லது மரண தீர்ப்பு என்று எப்படிப்பட்ட வாக்குறுதியானாலும் சரி, தேவனுடைய வார்த்தைகள் என்றுமே நிலையாக நிற்ககூடியது. தேவன் தன்னுடைய சிந்தையை மாற்றினால், நாம் அவரை விசுவாசிக்க முடியாது. ஆனால் அவர் என்றுமே மாறாதவர் என்பதை நாம் அறிவோம், மேலும் அவருடைய வார்த்தைகளில் என்றுமே உண்மையுள்ளவராக இருக்கிறார்.

மரணம் என்ற தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது. ஆதாம் உடனே மரிக்கவில்லை, ஆனால் தீர்ப்பளிக்கப்பட்ட நேரத்திலிருந்து மரிக்க தொடங்கினார். மரணம் மெதுவாக செயல்பட்டது. ஆதாம் வாழ்ந்த நாட்கள் 930 வருடங்கள் (ஆதியாகமம் 5:5) எபிரேய வேதாகமத்தில் ஆதியாகமம் 2:17 என்ற வசனம் “மரித்து கொண்டே மரிப்பீர்கள்.” என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆதாம் ஏவாளுக்கு பிறந்த எல்லா பிள்ளைகளும் அபூரணமாக, மரண நிலைமையில் பிறந்தார்கள். ஜீவ விருட்சம் இருந்த ஏதேனை விட்டு, பண்படுத்தப்படாத வனாந்திரமான இருந்த பூமிக்கு இவர்கள் விரட்டப்பட்டார்கள். 6000வருடங்கள் அவர்களுடைய சந்ததி துன்பப்பட்டு மரிக்கவேண்டும். இந்த மரண சாசனம் ஒவ்வொருவருக்கும் துன்பத்தையும், வேதனையும், துக்கத்தையும் வருவித்தது.

ஆதாம், ஏவாளின் கீழ்ப்படியாமை, அழகான வீடாகிய ஏதேனையும், சிருஷ்டிகரின் ஐக்கியத்தையும் இழக்க செய்தது. இவர்கள் ஏதேனில் இருக்கும் பூரணமான உணவையும், விசேஷமாக, ஜீவ விருட்சத்தின் கனியை புசியாதபடிக்கு தேவன் சுடர் ஒளி வீசும் பட்டயத்தையுடைய கேருபீன்களை ஏதேனில் நிறுத்தினார். காலங்கள் செல்ல செல்ல செல்ல ஏதேனும், பூமியின் மற்ற பகுதிகளை போல் களைகளும் முள்ளுகளும் நிறைந்ததாக மாறியிருக்க வேண்டும்.

போதுமான உணவை புசிக்க கடினமாக உழைக்க வேண்டியதாக இருந்தது. தோட்டங்களையும், தாங்கள் வசிப்பதற்கு புது வீடுகளையும் கட்ட பல மணி நேரங்கள் வேலை செய்தார்கள். இந்த கடினமான வேலைகளை செய்யும்போது. தேவன் அவர்களுக்காக உண்டாக்கின தோட்டத்தையும். அதில் அவர்கள் வாழ்ந்த இன்பமான காலங்களையும் நினைவுக் கூர்ந்திருப்பார்கள்.

சில நாட்களுக்கு பின்பு அவர்களும் மரித்தார்கள், அவர்கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் மரித்தார்கள். ஆதாமின் மூலம் அனைவரும் மரண தீர்ப்பிலிருந்ததினால் அனைவரும் மரித்தார்கள்.

ஆனால் இவைகளை முன் அறிந்த தேவன், அனைவரையும் இந்த பூமியில் ஜீவனோடு கொண்டுவர திட்டமிட்டார். இதற்காகவே இயேசு இந்த உலகத்திற்கு வந்து இந்த மனுகுலத்திற்காக தன்னுடைய ஜீவனையே கொடுத்தார். ஆதாமின் மேல் வந்த மரண தீர்ப்பிலிருந்து இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் மனுகுலத்தை விடுவித்தது. எல்லோரையும் அவர் நேசித்ததினால், அவர் மனப்பூர்வமாக தம்மை ஒப்புக்கொடுத்தார்.

**ஏதேனில் உள்ள ஜீவ விருட்சங்களின் மத்தியிலிருந்து ஆதாமும், ஏவாளும் விரட்டப்பட்டார்கள்.**



# பாடம் - 12

## மேட்டிமை, பெருமை, கோபம், கொலை

**“சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.” எபேசியர் 4:31,32**

ஏதேனை விட்டு வெளியேறின ஆதாம் ஏவாள் மீண்டும் அங்கு செல்ல முடியவில்லை. அழகான நந்தவனத்தில் மகிழ்ச்சியோடும், திருப்தியோடும், சுறுசுறுப்பாக வாழ்ந்தார்கள். ஆனால் இப்போது நிலைமை மாறியது.

வெளியே இருந்த வனாந்திரம் பார்வைக்கு அழகாக தோன்றவில்லை. ஏதேனில் புசித்தது போல புசிப்பதற்கு ஒன்றும் இல்லை. தங்களுடைய சரீரத்தின் நலனுக்கும், புசிப்புக்கு ருசியுள்ள செடிகள் எவை என்று அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பசிக்கும் ஒவ்வொரு நேரத்திலும் மரத்திலிருந்தும் புதர்களிலிருந்தும் கனிகளை பறித்து புசிக்க முடியவில்லை. இப்பொழுது உணவை தேடி பல மணி நேரங்கள் அலைந்தார்கள். உணவை தேடிச் செல்லும் போது முள்ளும், குறுக்கும் அவர்கள் கையில் குத்தி இரத்தம் சிந்தியிருக்கவேண்டும். உணவு தரும் செடிகளை அதிகமாக பயிரிட கஷ்டப்பட்டு களைகளை பிடிங்கி எறியும் போது, வேர்வை முகத்தில் வடிந்திருக்கும்.

ஏவாள் படைக்கப்படும் முன் மிருகங்களோடு வாழ்ந்த வாழ்க்கை மிக சுலபமாக இருந்ததே என்று ஆதாம் ஏவாளை பார்க்கும் போது சிந்தித்திருக்க வேண்டும். கனியை புசித்தால் நாம் இப்படியாக தண்டிக்கப்படுவோம் என்று ஆதாம் ஏன் சொல்லவில்லை ? நான் படைக்கப்படும்முன் அவர் படைக்கப்பட்டாரே, தேவனும் அவரோடு பேசியிருப்பாரே, அவருக்கு கீழ்படியவும், பாவத்தில் விழாமல் நம்மை இவர் நடத்தியிருக்கலாமே என்று ஆதாமை பார்க்கும்போது ஏவாள் நினைத்திருக்கலாம்.

அவர்களுக்கு முதல் குழந்தை பிறந்த போது, ஏவாள் மிக சந்தோஷத்தோடு நம்பிக்கை கொண்டு, தன் மகனை கட்டி அனைத்து, கர்த்தரால் ஒரு குமாரனை பெற்றேன் என்றாள். (ஆதியாகமம் 4:1) அவனுக்கு காயீன் என்று பெயரிட்டார்கள். இவர்களை மீட்க, தேவனால் வாக்களிக்கப்பட்ட ஸ்திரீயின் வித்து, காயீன் என்று நினைத்தார்கள். (ஆதியாகமம் 3:15) இவர்கள் இன்னும் அநேக பிள்ளைகளை பெற்றெடுத்தார்கள்.

ஆபேல் ஒரு மேய்ப்பனாகவும், காயீன் நிலத்தை பயிரிடுகிறவனாகவும் இருந்தான். இவர்கள் தேவனுடைய ஆசீரை பெற பலிகளை செலுத்தினார்கள். ஆபேல் செலுத்தின ஆட்டுக்குட்டியின் பலி அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் காயீன் செலுத்தின நிலத்தின் கனிகளை அவர் அங்கீகரிக்கவில்லை, இதுனிமித்தம் காயீன் மிகுந்த கோபம் அடைந்து, ஆபேலை கொலை செய்தான்.

தேவனுக்கு விருப்பமான பலியை செலுத்துவதற்கு காயீன், ஆபேலிடம் ஆட்டுக்குட்டியை கேட்டிருக்கவேண்டும். இந்த ஆட்டுக்குட்டி நம்முடைய ஆண்டவராம் இயேசுவையும், அவருடைய பலியையும் சித்திரிக்கிறது. அதற்கு பதிலாக காயீன் தன்னுடைய இருதயத்தில் கோபத்தையும், பகையையும் கொழுந்து விட்டு எறியச்செய்து, ஒரு கொலைகாரனாக மாறினான்.

**தேவனுடைய ஆசீரை பெற ஆபேலும், காயீனும் காணிக்கையை செலுத்தினார்கள்.**



# பாடம் – 13

## முதல் இரத்தசாட்சி – ஆபேல்

**"நான் உனக்கு போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்." சங்கீதம் 32:8**

காயீன் ஆபேலை கொலை செய்ய வேண்டும் என்று நினைக்கவில்லை, ஒரு மனிதன் மரித்ததை அவர் ஒரு போதும் கண்டதில்லை மேலும் அவன் கொலையை பற்றி கேள்விப் பட்டதுமில்லை. காயீன் சாத்தானை அழித்து, இவர்கள் இழந்த சந்தோஷங்களை திரும்ப கொடுப்பான் என்று ஆதாம், ஏவாள் நிச்சயத்திருந்தார்கள். காயீனும் இதை எதிர்பார்த்தான் மேலும் அவன் தேவனிடம் பிரியமாக இருக்க விரும்பினான். ஆபேலின் பலி அங்கீகரிக்கப்பட்டதும், தன்னுடைய பலி அங்கீகரிக்கப்படாமல் போனதும் காயீனுக்கு மிக அதிர்ச்சியாக இருந்தது.

ஆண்டவரின் வழிநடத்துதலுக்கு காத்திருப்பதற்கு பதிலாக (ஆதியாகமம் 4-6,7) காயீனுடைய எரிச்சல் அவனை கொலைக்காரனாக்கியது அவனுடைய கோபம் எல்லை மீறியதால் பயங்கரமான பின் விளைவுகள் ஏற்பட்டது. ஆபேல் முதல் முதலில் மரித்தான், அதைக் கண்ட காயீன் பயந்து தேவனுடைய சமூகத்துக்கு விலகி மறைந்து கொள்ள முயற்சி செய்தான்.

அதற்குப் பின் தேவனோடு தொடர்பு கொண்ட மற்றவர்களும் இதே தவறை தொடர்ந்து செய்தார்கள். யூத மக்கள் தங்களை, ரோம சேவகர்களிடமிருந்தும், வரி வசூலிப்பவர்களிடமிருந்தும் விடுவிக்க ஒரு வல்லமையுள்ள அரசனை விரும்பியதால் இயேசுவை கொன்றார்கள். புறஜாதிகள் தங்களுடைய ராஜ்யத்தையும், ஐசுவரியத்தையும் கண்டு புகழ வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய வழியை பின்பற்றவில்லை. அநேக அற்புதங்களை செய்தாலும், ஒரு தச்சனுடைய குமாரனை அவர்களால் ஏற்று கொள்ள முடியவில்லை. வேத வசனங்களில் உள்ள விளக்கங்களை பார்ப்பதற்கு பதிலாக (ஏசாயா 53) அவர்களின் மேட்டிமையான சிந்தை அவர்களை பாவத்திற்கு உட்படுத்தியது.

அவர்களை விடுவிக்க வந்த மேசியாவை பொறாமையினாலும் மூர்க்கமான கோபத்தினாலும் கொன்று போட்டார்கள்.

இயேசு மரிப்பதற்கு வெகு நாட்களுக்கு முன்பு ஆபேல் முதல் இரத்த சாட்சியாக மரித்தார் அதற்கு பின்பு அநேக இரத்த சாட்சிகள் மரிக்க வேண்டியதாக இருந்தது. ஆதாம் ஏவாள் ஏதேனில் வசித்தது முதல் 4000 வருடங்களுக்கு பின் தேவன் இந்த உலகத்தை இரட்சிக்க தன்னுடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார். (யோவான் 3:16, 1தீமோத்தேயு 2:5)

அந்நேரத்தில் இயேசு தாமே தன்னை மரணத்திற்கு ஒப்புகொடுத்தார். அவர் பாவம் செய்யாத பரிபூரண மனிதராக இருப்பதினால் அவர் மரிக்கவேண்டியதில்லை, ஆனால் ஏற்ற காலத்தில் மனுக்குலத்தின் மேல் சுமத்தப்பட்டுள்ள மரண சாசனத்தை குழைத்துபோட அவர் ஆதாமுக்க பதிலாக தன்னை ஈடுபலியாக கொடுக்க வேண்டும் என்ற தேவனுடைய சித்தத்தை அறிந்திருந்தார்.

மேசியாவின் யுகத்தில் அனைவரும் ஜீவனோடு எழுந்தும், நித்தியமாக வாழும் வாய்ப்பை பெறுவார்கள்---தேவனுடைய ஒரு அற்புதமான வாக்குறுதி

**முதல் முதலில் மரித்தவர் ஆபேல்**



# பாடம் - 14

## வேதனைகளும் துக்கமும் ஆரம்பித்தது

**“நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.” சங்கீதம் 23:4**

ஆதாமின் குடும்பத்தில் இந்த முதல் மரணம் அவர்களை மிகுந்த துக்கத்தில் ஆழ்த்தியது. முதல் முறையாக மனித மரணத்தை பார்த்தது மிக பயங்கரமான அதிர்ச்சியாக மட்டும் இல்லாமல், ஆதாம் ஏவாள் வாழ்ந்த வருடங்களில், நேசிக்கப்பட்ட ஆபேலை இழந்தார்கள். காயினின் நிலை என்ன? ஆதியாகமம் 3:15 ஆம் வசனத்தில் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தின் சந்ததியாக் நிச்சயமாக அவன் இருக்கவில்லை.

தேவனுடைய நண்பர்களாக ஏதேனில் இருக்கும் போது உள்ள நிலைமைக்கு எவ்வளவு வித்தியாசம், அவர்களுடைய குமாரன் ஒருவன் இறந்து விட்டான், மற்றவன் தேவனால் தண்டிக்கப்பட்டு (அவர்களுடைய ஒரு குமாரத்தியை அழைத்து கொண்டு) வீட்டை விட்டு வெளியேறினான். என்ன செய்வது என்று அவர்களுக்கு தெரிய வில்லை.

காயின் பயந்து செல்லுவதற்கு அங்கு யார் இருந்தார்கள்? ஆதாம் ஏவாளுக்கு அநேக பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு எத்தனை பிள்ளைகள் பிறந்தார்கள் என்றும் அவர்களுடைய பெயர்களை பற்றியும் குறிப்புகள் ஏதும் இல்லை. அவர்களுக்கு குமாரர்களும் குமாரத்திகளும் பிறந்தார்கள் என்று வேத வசனங்கள் குறிப்பிடுகிறது. (ஆதியாகமம் 5:4) அக்காலத்தில் ஜனத்தொகை அதிகமாக இருந்தது.

காயின் தன்னுடைய மனைவியை நோத் என்ற தேசத்திற்கு அழைத்து சென்று ஒரு பட்டணத்தை கட்டி ஏனோக்கு என்ற

தன்னுடைய மூத்த குமாரனுடைய பெயரை சூட்டினான். மற்ற மனிதர்கள் காயினை கொலை செய்யாதபடிக்கு தேவன் காயீன் மேல் ஒரு அடையாளத்தை போட்டு அவனை காப்பாற்றினார். (ஆதியாகமம் 4:15)

ஆதாம் நூற்று முப்பது வயதான போது ஒரு குமாரனை பெற்று அவனுக்கு சேத் என்று பெயரிட்டார்கள். தேவனால் வாக்களிக்கப்பட்ட சந்ததி இவன்தான் என்று நம்பினார்கள்.

ஆனால் சாத்தானை அழித்து அனைவரையும் விடுவிக்கக் -கூடிய அந்த சந்ததி சேத் இல்லை. அநேக ஆயிர வருடங்களுக்கு பின் சேத்தின் வம்சத்தில் அந்த வாக்களிக்கப்பட்ட சந்ததியாக இயேசு பிறந்தார். தேவனுடைய வாக்குறுதிகள் மூலமாக நமக்கு நம்பிக்கை, சந்தோஷம், சமாதானம் வரும்போது துக்கம், பாவம், வேதனைகள், மரணம் நித்தியமாக முடிவடைந்துவிடும். எல்லா ஜனத்திற்கும் வியாதியையும், துக்கத்தை கொடுக்கும் சகலமும் மேசியாவின் ராஜ்யத்தில் கை பற்றப்படும், அப்பொழுது தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதை போல பூமியிலும் செய்யப்படும். (மத்தேயு 6:10) தேவனுடைய திட்டங்கள் அறிவிற்கு ஏற்புடையதாகவும் ஒற்றுமையாக செயல்படும்.

**துக்கமும் மரணமும் நித்தியமாக இந்த உலகத்தை விட்டு நீங்கக்கூடிய காலம் வருகிறது**



# பாடம் - 15

## தேவ குமாரர்களும் மனுஷகுமாரத்திகளும்

**“மனுஷ குமாரத்திகள் அதிக சௌந்தரியமுள்ளவர்கள் என்று தேவ குமாரர்கள் கண்டு அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களை தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொண்டார்கள்.” ஆதியாகமம் 6:2**

மனிதர்களை படைக்கும் முன் தேவ தூதர்கள் படைக்கப்பட்டார்கள். இதில் அநேக தூதர்கள் தேவனுக்கு பணி செய்வதில் சந்தோஷமடைந்து, அவர்கள் பெற்ற ஆசீர்வாதங்களின் நிமித்தம் மகிழ்ச்சி அடைந்தார்கள். இந்த உலகத்தை நிலைபடுத்தி, மனுஷனை அரசனாக தேவனும் “லோகாசும்” நியமிக்கும் போது இவர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு பாடினார்கள். ஆதாமுக்கு இன்னும் அநேக மில்லியன் பிள்ளைகள் பிறப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதுவே அனைத்துபடைப்பின் தொகுதியில் தேவனுடைய அற்புதமான குடும்பமாகும்.

ஆனால் தேவனுடைய திட்டத்தில் திருப்தியடையாத ஒரு ஆவிக்குரிய ஜீவீ இருந்தது. அவன் லூசிபர் என்று அழைக்கப்பட்டான். (அதிகாலையின் மகனான விடிவெள்ளி). இவன் மிக சௌந்தரியமும் திறமையுள்ளவனாகவும் இருந்தான். இவன் தேவனோடும், லோகாசோடும் இணைந்து செயல்பட்டிருந்தால் மிகுந்த உதவியாக இருந்திருக்கும். துரதிஷ்டமாக அவன் தன்னுடைய சிருஷ்டிகரோடு இணைந்து செயல்பட விரும்பவில்லை. அவன் பேராசையுள்ளவனும், பொறாமையுள்ளவனுமாக இருந்ததினால், படைக்கப்பட்ட அனைத்திலும் லோகாசுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது ஏன் என்று ஆச்சரியப்பட்டான். (ஏசாயா 14:12)

அவன் தேவனை எதிர்த்தான். சில தேவ தூதர்கள் அவன் பின் சென்றார்கள். ஆயினும் சிலர் அவனுக்கு முழுமையாக உதவி செய்ய இயலவில்லை. ஆதாம், ஏவாள் படைக்கப்பட்டார்கள். பூமி முழுவதும் ஜனங்களால் நிரப்பப்படும் வரைக்கும் பிள்ளைகள் பிறப்பார்கள்.

தேவனையும் அவருடைய அன்பைப்பற்றியும் தேவ தூதர்களுக்கு தெரிந்த அளவுக்கு பிறக்கக்கூடிய சந்ததிக்கு தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லை, ஆகவே இவர்கள் என்னை தேவனாக ஏற்று கொள்ளுவார்கள் என்று சாத்தான் நினைத்திருக்கலாம். ஒரு பயங்கரமான காரியம் நடந்தது. சாத்தானாக மாறிய லூசிப்பேர் (சாத்தான் என்பதற்கு எதிர்ப்பவன், பகையாளி அல்லது நன்மையை வெறுப்பவன் என்று பொருள்படும்) ஆதாம் ஏவளையும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ய தூண்டினான். அவன் ஏவாளிடம், நீங்கள் சாகவே சாவதில்லை என்று பொய் சொல்லி, தேவன் புசிக்க வேண்டாம் என்று சொன்ன கனியை ஏவாள் புசிக்கும் படி அவளை சோதனைக்கு உட்படுத்தினான். (ஆதியாகமம் 3:4). அக்காலத்தில் தூதர்கள் மனித உருவம் எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருந்தது, எனவே அநேக தூதர்கள் மனுஷகுமாரத்திகளை திருமணம் செய்ய மனித உருவம் எடுத்து கொண்டார்கள்.

பாவம், தீமை என்ற அனுபவங்களை பெறுவது மனுக்குலத்திற்கு நன்மையாக இருக்கும் என்று தேவன் கண்டு, சாத்தானையும் அவனை பின்பற்றுபவர்களையும், விழுந்து போன தூதர்களையும் தகாக வழிகளில் நடக்க தொடர்ந்து அனுமதித்தார். பாவத்தின் கொடூரமான விளைவுகளை கற்றிந்ததினாலும், இந்த தீமையின் அனுபவங்களை முழுமையாக பெற்றதினாலும் மேசியாவின் யுகத்தில் மனுக்குலம் நீதியுள்ளவைகளை தேர்வு செய்ய உதவும்.



**லூசிபேர் மிக அழகும், திறைமையுள்ளவனாகவும், தேவனுடைய செயல்களில் அதிர்ப்த்தியுள்ளவனாகவும் இருந்தான்.**

# பாடம் - 16

## பேழையை கட்டும் பணிகள்

**"கர்த்தர் நோவாவை நோக்கி-நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள், இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்." ஆதியாகமம் 7:1**

மனிதர்களாக வந்த தூதர்களுக்கும் மனித பெண்களுக்கும் பிறந்த குழந்தைகளை "நேபிலீம்ஸ்"(ஈராட்சதர்கள்) என்று அழைத்தார்கள். தேவ தூதர்கள் இவர்களை பெற்றெடுத்ததினால் இவர்கள் மற்ற குழந்தைகளை விட பலசாலிகளாக இருந்தார்கள். இவர்கள் மிக அறிவுள்ளவர்களாக இருந்தாலும், தேவனுக்கு பணி செய்ய வகை தேடாமல், இந்த பூமியை தங்கள் வசப்படுத்திக் கொள்ள அநேக தந்திரமான வழிகளை யோசித்தார்கள்.

இவர்களுடைய துன்மார்க்கமான வன்முறைகள் நாளுக்கு நாள் பெறுகிக் கொண்டு போவதை தேவன் சில நூற்றாண்டுகளாக கவனித்தார். கடைசியாக இந்த பூமியில் காக்கப்படுவதற்கு எட்டு பேர் மட்டும் தகுதி பெற்றார்கள். மற்ற அனைத்து குடும்பங்களும் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக, தூதர்களோடு சம்பந்தம் கலந்திருந்தார்கள். இவர்கள் மத்தியில் வாழ்ந்த விதிவிலக்கான குடும்பத்தின் தலைவர் நோவா, இவருக்கு மூன்று குமாரர் சேம், காம், யாபேத்தும் இவர்களுடைய மனைவிகளும் தன்னுடைய மனைவியுமாக, எட்டு பேர் காக்கப்பட்டார்கள்.

நோவா, தானும், தன் குடும்பத்தினரும், சில மிருகங்களையும், பறவைகளையும், வரக்கூடிய ஜலப்பிரளயத்திலிருந்து காக்க ஒரு பேழையைக் கட்டுவதற்கான துல்லியமான கட்டளைகள் பெற்றார். அந்நாள் வரைக்கும் பூமியின் மேல் மழை பெய்யாததினால், நோவா உலர்ந்த தரையில் பேழையை கட்டுவதை பார்த்து உலக மக்கள் பரியாசம் செய்து சிரித்தார்கள்.

இந்த உலகம் பசுமையான வீட்டை போல இருந்தது. மிதமான

குளிர்ச்சியான சீதோஷணத்தில் செடி கொடிகள் பூமியின் மேல் படர்ந்தது. காலங்களில் எந்த வித மாற்றமும் இல்லை. பூமியெங்கும் ஒரே விதமான சீதோஷ்ணம் இருந்தது. ஆனால் பூமியைச் சுற்றி இருந்த தண்ணீர் வளையங்கள் உடைந்ததால், அந்த தண்ணீர் பூமியின் மேல் மழையாக பெய்து ஜலப்பிரளயத்தை ஏற்படுத்தியது. (ஆதியாகமம் 2:5,6 7:18).

விநோதமாக கட்டப்பட்ட இந்த பிரமாண்டமான பேழை சுமார் 500 அடி நீலமும், 80அடி அகலமும், 50அடி உயரமுமாக இருந்தது. இது மூன்று தட்டுகள் கொண்டு, கொப்பேரு மரத்தால் செய்யப்பட்டு, கீழ் பூசப்பட்டதால் தண்ணீரில் மிதந்தது. வெளி காற்றோடு வெளிச்சம் வருவதற்கு ஒரு ஜன்னல் வைக்கப்பட்டிருந்தது. வெள்ளம் பேழையை சேசப்படுத்தாதபடிக்கு சரியாக வடிவமைக்க தேவன் நோவாவுக்கு கட்டளை கொடுத்தார்.

இந்த பேழை பிரயாணத்திற்கு அல்ல, மிதக்க மட்டுமே கட்டப்பட்டது. ஆகவே இந்த பேழையை செலுத்த எந்த விதமான கருவிகளும் பயன்படுத்தப்படவில்லை. மிருகங்கள் தங்குவதற்கும், அவர்களுடைய தீவனங்களை சேமிப்பதற்கும் அதிக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

**வெள்ளம் பேழையை சேதப்படுத்தாதபடிக்கு சரியாக வடிவமைக்க தேவன் நோவாவுக்கு கட்டளை கொடுத்தார்.**



# பாடம் - 17

## நேபிலீம்கள் அழிக்கப்பட்டது

**"பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து, .." - 2 பேதுரு 2:4**

தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்ததால் ஆதாமின் குடும்பம் முழுவதும் மாண்டது. மனித இனமாக பிறந்த அனைவரும் இதில் அடங்குவார்கள். ஆனால் இயேசு அவர்களுக்காக மரித்ததினால் ஒவ்வொருவரும் மீண்டும் உயிரடைவார்கள்.

மேலும் ஆதாமின் பிள்ளைகளுக்கு பிறக்காத சந்ததி உயிர்த்தெழமாட்டார்கள். இந்த தூதர்களுக்கும் இவர்களுக்கு பிறந்த பிள்ளைகளுக்கும் (நேபிலீம்ஸ்) இயேசு மரிக்க வில்லையே.

தேவன் நமக்கு அளித்த வாழ்க்கை ஒரு அற்புதமான ஆசீர்வாதம், இதில் நேபிலீம்களுக்கு அவர் அங்கீகாரம் கொடுக்கவில்லை. வெள்ளம் வந்த போது அவர்கள் நித்தியமாக அழிக்கப்பட்டார்கள். ஒருவருக்கொருவர் தீமை செய்யாமல், தெய்வீகமான சட்டங்களை கடைபிடித்து, சமாதானமும், சந்தோஷமும், நன்மை எங்கும் வாசமாயிருக்கும் ராஜ்யத்தில் இவர்கள் என்றுமே பொருந்த மாட்டார்கள். (ஏசாயா 65:25)

மனுஷ குமாரத்திகளாக (ஆதாமின் குடும்பத்தில் பிறந்த குமாரத்திகள்) இருந்ததினால் இந்த நேபிலிம்களின் தாய்மார்கள் உயிர்பிக்கப்படுவார்கள். ஆதாமின் பாவத்திநிமித்தம் மரணத் தீர்ப்பு அளிக்கப்படாத நேபிலீம்களின் தந்தையான தூதர்கள் ஆதாம் படைக்கப்படுமுன் பரலோகத்தில் இருந்தார்கள்.

ஜலப்பிரலயத்திற்கு பின்பு, கீழ்படியாத தூதர்கள் (மிக கொடியவர்களாக மாறினார்கள்) மீண்டுமாக பரலோகத்திற்கோ, அல்லது பூமியின் மேல் மனிதர்களாகவோ, திரும்ப முடியவில்லை. இவர்கள் "டார்டரஸில்" (ஆகாய மண்டலத்தின் மற்றொரு பெயராகும்)

தள்ளப்பட்டார்கள். தேவன் இவர்களின் வல்லமைகளை சற்று குறைத்து, மீண்டும் மனித சரீரத்தை எடுத்துக் கொண்டு அவர்களிடம் உறவு கொள்ளாதபடி தடை செய்தார்.

எப்படியிருந்தாலும், ஒருவர் இந்த சீர் கெட்ட தூதர்களை வரவழைத்தால், அவர்கள் மூலமாக செயல் படலாம், ஆனால் தேவனிடத்தில் இவர்களுக்கு எந்த விதமான கனமும், மதிப்பும், இரக்கமும் கிடைக்காது. இவர்களை ஆவிக்குரிய ஜீவிகள், பொய் தெய்வங்கள், மறைவியலாக? செயல் படும் ஒரே கூட்டாளிகள்.

எந்த விதத்திலும் நாம் இவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது. குறித்த காலத்தில் இவர்கள் நீதியாக நியாயம் விசாரிக்கப்படுவார்கள். அதாவது, இனி சாத்தானும் அவனை சார்ந்தவர்களும் ஒரு போதும், இந்த மனுகுலத்தை வஞ்சிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று பொருள் படுகிறது.

**இயேசுவின் மரணத்தால் மாண்டுபோன மனுகுலம் மீண்டுமாக ஜீவனை பெறும்.**



# பாடம் - 18

## இந்த யுகத்தின் முடிவு

**“அப்பொழுது இருந்த உலகம் ஜலப் பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்.” -2பேதுரு 3:6”**

ஒரு சந்ததி போகிறது மறு சந்ததி வருகிறது, ஆனால் பூமி என்றைக்கும் நிலைத்திருக்கிறது. (பிரசங்கி 1:4). தேவன் இந்த பூமியை ஒரு முக்கியமான நோக்கத்திற்காக சிருஷ்டித்தார்-அவர் மனுக்குலம் நித்தியமாக குடியிருப்பதற்கு அதை படைத்தார். (ஏசாயா 45:18) துன்மார்க்கமான ஜனங்கள் வெள்ளத்தில் அழிக்கப்பட்டார்கள் ஆனால் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட பூமி நிலைத்திருந்தது. பிரவாகித்த வெள்ளம் குளங்களிலும், ஏரிகளிலும், நதிகளிலும் தங்கி வெட்டாந்தரை காணப்பட்டது, முதலாம் உலகம் முடிவடைந்து மற்றொரு யுகம் தொடங்கியது.

இந்த முதலாம் உலகம் ஆதாமின் படைப்பிலிருந்து ஜலப்பிரலயம் வரை நீடித்தது -1656 வருடங்கள் கொண்ட கால பகுதியாகும். இந்த காலத்தில் தேவ தூதர்கள் உலகத்தை கண்காணித்தார்கள். ஆனால் அவர்களின் தீய செயல்கள் பூமியில் துன்மார்க்கதத்தை அதிகரித்ததால் தேவன் அவர்களை தொடர்ந்து அனுமதிக்கவில்லை.

இரண்டாம் உலகத்தை “இன்றைய தீமையான உலகம்” என்று அழைக்கப்படுகிறது. இதை முற்பிதாக்களின் யுகமாகவும், யூதர்களின் யுகமாகவும், சுவிசேஷ யுகமாகவும் பிரிக்கப்படுகிறது.

ஜலப்பிரளயத்தை தொடர்ந்து முற்பிதாக்களின் யுகம் துவங்கியது. இது யாக்கோபின் மரணம் வரைக்கும் நீடித்தது. இக்காலத்தில் தேவனுடைய கிருபையும் தொடர்பும் சில தனி நபர்களோடு மட்டும் இருந்தது. இதில் சிலராகிய நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபும் அடங்குவார்கள். இவர்கள் ஆதாமை போல்

பூரண மனிதர்களாக இல்லாதிருந்தாலும், தேவன் மேல் வைத்த விசுவாசத்தினால் நீதிமான்களாக எண்ணப்பட்டார்கள்.

தேவன் யாக்கோபின் பெயரை இஸ்ரயேல் என்று மாற்றினார் - அவருக்கு பிறந்த 12 பிள்ளைகளும், அவர்களின் குடும்பங்களும் இஸ்ரயேலின் 12 கோத்திரங்கள் என்று அழைக்கப்பட்டார்கள். யாக்கோபின் மரணத்தோடு, யூத யூகம் தொடங்கியது, அப்பொழுது தேவன் இஸ்ரயேல் மக்களோடு மட்டுமே தொடர்பு வைத்திருந்தார். (யூத ஜாதி)

சுவிசேஷ யுகம் இயேசுவின் முதல் வருகையில் தொடங்கியது. வேலைகள் முடிந்தவுடன் மேசியாவின் யுகம் துவங்கும். அங்கு மூன்றாவது உலகமும் துவங்கும்--- வரக்கூடிய யுகாயுகங்கள். யுகங்களை பற்றிய தேவ திட்டங்கள் நிதானமாக செயல்படும். ஆனால் நிச்சயமாக அவைகள் வந்தடையும். பூமி மகிமை படுத்தப்படும், ஏதேனில் தொலைந்த அனைத்தும் மீண்டும் கொடுக்கப்படும். இந்த யுகத்தின் முடிவில் மனுகுலம் இழந்த அனைத்தும் கல்வாரியில் மீட்பின் மூலம் திரும்ப பெறுவர்.

இயேசுவை சிலுவையில் அறையபட்டு, புதைக்கப்பட்ட இடமாகிய கல்வாரி எருசலேமின் மதில் சுவர்களிலிருந்து சற்று தூரத்தில் இருக்கும் ஒரு குன்றாகும். அது மண்டை ஓட்டின் வடிவில் இருந்ததினால் அதை கல்வாரி என்று அழைத்தார்கள், கல்வாரி என்பதற்கு மண்டை ஓடு என்று அர்த்தமாம்.

## ஜலபிரளயம் பூமியை அழிக்கவில்லை



# பாடம் - 19

## வானவில்லின் உடன்படிக்கை

**"இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லை யென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார்." ஆதியாகமம் 9:11**

மழை நின்ற போது, பூமி காய்ந்தது, நோவாவும் அவர் குடும்பத்தினரும், சகல மிருகங்களும், பேழையை விட்டு வெளியேறியது தேவன் அவர்களை இரக்கத்தோடு, பராமரித்ததற்காக, தேவனுக்கு ஒரு பலிபீடத்தை கட்டி, பலி செலுத்தி, தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

சூரிய கதிர்கள் பூமியின் மேல் நேரடியாக பாயாததினால் ஜலப்பிரளயம் வரைக்கும் ஒருவரும் வானவில்லை கண்டதில்லை. ஆனால் பூமியை சுற்றி வளையங்களாக நின்ற தண்ணீர் உடைந்து பூமிக்கு வந்த போது மெல்லிய நீராவியை ஊடுருவி பாய்ந்த சூரிய கதிர்கள் அழகான வானவில்லை ஏற்படுத்தியது. இதுவே முதலாவது வானவில்லாகும். இது மனுக்குலத்தை முழுவதும் ஜலத்தினால் அழிப்பதில்லை என்று நோவாவுக்கும் மற்ற மனிதர்களுக்கும் தேவன் கொடுத்த முதல் வாக்குறுதியின் அடையாளமாகும். (ஆதியாகமம் 9:13,15).

இந்த ஜலப்பிரயம் அநேக மாற்றங்களை கொண்டுவந்தது. (ஆதியாகமம் 9:2) மிருகங்கள் மனிதர்களை கண்டு பயந்தது என்று வாசிக்கிறோம். (ஆதியாகமம் 9:3) உணவுக்காக இந்த மிருகங்கள் மனிதர்களுக்கு கையளிக்கப்பட்டது. (ஆதியாகமம் 9:21) திராட்சைரசம் மதுவாக மாறியது என்று வாசிக்கிறோம். இதை நோவா எதிர்ப்பார்க்க வில்லை.

இந்த பூமி பசுமையான வீட்டைபோல இருந்தது என்று விஞ்ஞானம் சொல்லுகிறது. பூமி எங்கும் ஒரே சீதோஷணமான வெப்ப நிலை இருந்தது. ஆனால் ஜலப்பிரளயம் பெரிதான மாற்றங்களை கொண்டுவந்தது. வட துருவத்திலும், தென் துருவத்திலும் மிகுதியான

குளிர்ச்சியும், மத்திய ரேகை சுற்றியுள்ள பகுதிகள் மிகவும் வெப்பமாகவும் மாறியது.

இவைகள் தொடர்ந்து வேகமாக நடந்தது. மானை போல் ஒரு மிருகம் புல்லை மேய்ந்து கொண்டிருந்தது. திடீர் என்று அதை சுற்றியிருந்த தண்ணீர் உறைந்தவுடன், அது விரைத்து மரித்துபோனது. அதை கண்டு பிடித்த போது, அதின் வயிற்றில் பச்சையாக புல் செமிக்காமல் காணப்பட்டது. அது போல் ஒரு பெரிய மிருகம் வயிற்றிலும், வாயிலும் பசுமையான உணவு இருக்கும்போதே குறைந்த வெப்பதினால், உறைந்து மரித்தது. இன்றைக்கும் அநேக யானை தந்தங்கள் இந்த பகுதிகளில் காணப்படுகிறது, இந்நாள் வரைக்கும் இப்பகுதிகளில் புல் பூண்டுகள் கூட முளைப்பதில்லை. ஆகவே மிருகங்களும் அங்கு வாழ்வதில்லை.

அதிகமாக கொட்டப்பட்ட தண்ணீர் ஆர்டிக் பகுதிகளில் மிக பெரிய பனி மலைகளையும் வயல்களையும் உருவாக்கியது. சருக்கி வரும் மிக பெரிய பனி கட்டி பாலங்கள் பூமியின் மேல் ஆழமாக வெட்டி அநேக மாற்றங்களை ஏற்படுத்தியது. இதை “பனியுகம்” (“Ice age or Glacial period”) என்று குறிப்பிடுகிறார்கள்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருப்பதினால் நமக்கு விலையுர்ந்ததாக இருக்கிறது. மேலும் இது உலகத்தின் பழமை வாயந்த பாடப் புத்தகம் என்பது குறிப்பிடத்தக்கது.

**சூரியக் கதிர்கள் நேரடியாக பாயாததினால் ஜலப்பிரளயம் வரைக்கும் வானவில் காணப்படவில்லை.**



# பாடம் - 20

## கிரேக்கர் எகிப்தியருடைய தெய்வங்கள்

**"நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளை பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தை கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்." - 2பேதுரு 1:16**

உண்மையானவைகள் அல்ல என்று அறிந்து, நாம் படித்து மகிழ்ந்த கட்டுக் கதைகள், புராண கதைகள் அநேகம் உண்டு. இது போல் கிரேக்கிலும், ரோமாபுரியிலும் பழங்காலத்தில் உள்ள அநேக கற்பனை கதைகள் படிப்பதற்கு சுவராசியமாக இருந்தாலும், அதில் நடைமுறைக்கு தேவையான பாடங்களும் இருக்கும்.

இந்த கிரேக்க ரோம மக்கள் இந்த பழமை வாய்ந்த கதைகளை நம்பி, "பேக்கஸ்", "சீரிஸ்", "அப்போலோ", போன்றவைகள் இவர்களின் உண்மையான தெய்வங்கள் என்று வழிபட்டார்கள். அதிக விளைச்சலுக்காகவும், பெலனுக்காகவும், சந்தோஷத்திற்காகவும் இவைகளை கனப்படுத்தும் நோக்கத்தில் காணிக்கைகளை எரி பலிகளாக செலுத்தினார்கள் மேலும், இந்த கற்பனை தெய்வங்களை மகிழ்விக்க அநேக சடங்காச்சாரங்கள் அனுசரிக்கப்பட்டது.


பிதாவாகிய தேவன், அண்டசராசரங்களையும் படைத்த சர்வவல்லமையுள்ள உன்மையான ஒரே தேவன் என்று நாம் அறிந்திருக்கிறோம். இப்படியிருக்க மற்ற தெய்வங்களை பற்றிய கறபனை வந்தது எப்படி?

"தேவன்" என்ற வார்த்தைக்கு "வல்லமையுள்ளவர்" என்று பொருள்(வல்லமையுள்ள, அதிகாரம் பெற்ற). அநேக வல்லமையுள்ள பலவான்கள் இருந்தார்கள். இவர்களில் சிலர் நல்லோர்களும் தீயோர்களுமாக வாழ்ந்தார்கள். இந்த பூமியில் வல்லமையோடு வாழ்ந்த பலமுள்ள தனிநபர்கள் "நேபிலீம்ஸ்" ஆவர். இவர்கள் ஜலப்பிரளயத்தில் அழிக்கப்பட்டார்கள். ரோமர்களும், கிரேக்கரும், மனித ரூபம் எடுத்த இந்த சீர் கெட்ட தூதர்களை தேவர்களாக வணங்கி வந்தார்கள். இவர்களை "டெமி காட்ஸ்" என்று

அழைத்தார்கள். “டெமி” என்பதற்கு பாதி அல்லது குறைவு என்று பொருள். ஆகவே இந்த தேவர்கள் தூதர்களை விட குறைவானவர்களும் மனிதர்கள் தூதர்களை தந்தையாக கொண்டதினால் மனிதர்களைவிட அதிக பலமுள்ளவர்களாக இருந்தார்கள். தேவனால் அங்கீகரிக்கப்படாத ஒரு கலப்பினமாக இருந்த்தார்கள். மிருகங்களிலாவது, செடிகளிலாவது வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவைகள் ஒன்று சேர்ந்து ஒரு புதிய இனத்தை உருவாக்குவது கலப்பினமாகும்.

சீர் கெட்ட தூதர்களுக்கும், அவர்களுக்கு பிறந்த நேபிலீமுகளுக்கும் மனிதர்களை ஆளவும், வல்லமை பெறவும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் இருந்தது. இவர்கள் செய்த வல்லமையுள்ள துன்மார்க்கமான காரியங்கள் அனைத்தும் இவர்கள் அழிந்த பல காலங்களுக்கு பின் அறிவிக்கப்பட்டது. இவர்களது மூடதனத்தையும், பாவமான செயல்கள் இரசிக்கப்பட்டு தங்களை தேவர்கள் என்று நினைத்துக்கொண்டவர்கள் அவர்களை போல் செயல்பட்டார்கள்.

மனிதனின் படைப்புதொடங்கி, வரிசையாக எகிப்திய பாரோன்களின் கல்லறைகளில் குடுபங்களின் நாமங்கள் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு வரிசையில் ஆதாமும், அவர் பிள்ளைகளும், அவர் பேர பிள்ளைகளும்...எழுதப்பட்டிருக்கிறது. அதில் ஆதாமின் குடும்பத்தில் இல்லாத சில தனி நபர்களின் நாமங்களும் உள்ளது. இவர்கள் இந்த இராட்சதர்கள் அல்லது நேபிலிம்களாக இருக்கவேண்டும்.



**(புராண கதைகளில் வரும் தெய்வங்கள் அனைவரும் விழுந்து போன தூதர்கள்.)**

# பாடம் - 21

## ஆதாமில் இருந்து மோசே வரைக்கும்

**"அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி.... நீ போ நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்கு போதிப்பேன் என்றார்." யாத்திராகமம் 4:11,12**

"எரோடாடஸ்" என்ற கிரேக்க வரலாற்று ஆசிரியர் எழுதும் போது "ஆபைடாஸ் டேப்லெட்" இல் எழுதப்பட்டிருந்த அதே செய்திகளை எழுதியிருந்தார். எகிப்தியனாகிய "மானித்தோவும்" அதே உண்மைகளை எழுதியிருந்தார். பிதாவாகிய தேவனின் தீர்க்கதரிசியான மோசே வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகத்தை எழுதும் போது வரலாற்றுப் பூர்வமாக மிகச் சிறந்த செய்திகள் அவருக்கு பழக்கமாக இருந்தது.

"அபைடாஸ் டேப்லெட்" என்பது பாரோன் களையும் ராஜாக்களை பற்றியும் பதிவுகள் கொண்ட பலகையாகும். இதை" செட்டி-1" என்ற பாரோனின் கல்லறையில் கண்டுபிடிக்கப்பட்டது. மற்றவர்களைப் போல பெரிய வரிசையில் எழுதாவிட்டாலும், அவர் எழுதினதை பத்திரப்படுத்த அநேக முயற்சிகள் எடுத்தார். இதனுடைய துல்லியமான நகல் இன்றைக்கு "பிரிட்டிஷ்" அரும் பொருட்காட்சி சாலையில் உள்ளது.

மோசே ஒரு ஏழை எபிரெய குழந்தையாக பிறந்தாலும், தேவன் அவரை எகிப்தின் சகல ஞானத்திலும் அறிவிலும் தேர்ச்சி பெறுவதற்காக பாரோன் குமாரத்தி அவரை தத்தெடுக்கும்படி செய்தார். தேவனுடைய வேலைகளை செய்ய மோசே எகிப்தில் உள்ள நேர்த்தியான பள்ளியில் மிக சிறந்த பயிற்சி பெற்றார். மேலும் அவருடைய எபிரெய தாய் தேவனுடைய ஜனத்தை அற்புதமாக வழிநடத்தினதையும், பராமரித்ததையும் சொல்லியிருக்க வேண்டும். அவள் தன்னுடைய கணவன் மோசேயிடம் கேட்டு அறிந்திருக்க வேண்டும். இந்த அனைத்து காரியங்களையும் லேவியிடமிருந்த கேட்டறிந்த தன்னுடைய தந்தையிடமிருந்து மோசே அறிந்திருப்பார். லேவி அவருடைய தாத்தா ஆபிரகாமிடமிருந்து சகலத்தையும்

அறிந்திருப்பார். இவர் நோவாவின் பிள்ளைகளிடமிருந்தும், அவர்கள் மெத்துசலாவிடமிருந்தும், மெத்துசாலா ஆதாமிடத்திலிருந்து கேட்டறிந்திருப்பார்.

மோசே ஒரு இளம் வாலிபனாக இருந்த போது, தேவனை சேவிப்பதை தெரிந்து கொண்டு அடிமைகளாக இருந்த தன்னுடைய ஜனத்தோடு துன்பங்களை அனுபவிப்பதற்கு, எகிப்தின் ஐசுவரியங்களையும், வசதியாக வாழும் வாழ்கையின் சந்தோஷங்களையும் விட்டு விட்டார்.

எகிப்திய பள்ளியில் சகல துறையிலும் தேர்ச்சி பெற்றிருந்தாலும், தேவனை தெரிந்து கொண்ட ஜனமாக இருந்தார். (ஆகவே அவர்களின் வரலாற்றை முதலில் தெரிந்தவராக இருந்தார்) தேவன் அவரை வழிநடத்தி, கட்டளைகளை கொடுத்ததினால் மற்றவர்களை விட அதிகமான ஆசீர்வாதங்களை பெற்றவரானார். தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தில் என்ன எழுத வேண்டும் என்று எவ்வளவு அற்புதமாக வழிநடத்தப்பட்டார்.

**மோசே எகிப்திய இளவரசியால் தத்தெடுக்கப்பட்டார்.**



# பாடம் - 22

# பாபேல் கோபுரம்

**“பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால், அதின் பேர் பாபேல் என்னப்பட்டது. கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப் போகப்பண்ணினார்.” ஆதியாகமம் 11:9**

நோவாவின் குடும்பத்தினர் தேவனை புகழ்ந்து அவருடைய நீதியின் நிமித்தமும், வல்லமையின் நிமித்தமும் அவரை மகிமைப் படுத்தினார்கள். இப்படிப்பட்ட ஒரு ஜலப்பிரளயம் மீண்டுமாக வருவதில்லை என்பதற்கு அடையாளமாக வானவில்லை கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

வருடங்கள் கடந்த செல்ல, தேவன் மனுக்குலத்திற்காக செய்ததை அநேகர் மறந்து போனார்கள், ஜனங்கள் தேவன் பேரில் வைத்த நம்பிக்கையை இழந்ததால், தங்களுக்காக உயரமான கோபுரத்தை கட்ட தொடங்கினார்கள். ஆகவே அவர்கள் வானவில்லை கானும்போது நோவாவையும், தேவனையும் அவருடைய உடன்படிக்கையையும் நினைக்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு உயரமான கோபுரத்தை வானத்தை தொடும் அளவுக்கு கட்டினால், வர இருக்கும் வெள்ளத்தில் தங்களை காப்பாற்றி கொள்ளலாம் என்று நினைத்தார்கள். இதை கண்ட தேவன் அந்த கோபுரத்தை முடிக்க அனுமதிக்கவில்லை. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாதபடிக்கு தேவன் அவர்களின் மொழியை தாறுமாராக்கினார். (ஆதியாகமம் 11:4-8)

அயலானோடு நாம் பேசிக்கொன்டு இருக்கும் போது, திடீர் என்று அவர் பேசுவது நமக்கு புரியாமல், நாம் பேசுவது அவருக்கு புரியாமல் இருந்தால், எவ்வளவு குழப்பமாக இருக்கும். ஒரு வேளை அவர் எபிரேய மொழியிலும் பேசினால் எப்படி இருக்கு.

இது நிமித்தமாக அவர்கள் கட்டின கோபுரம் சடுதியில் தடைபட்டது. அவர்கள் இனி ஒருமித்து செயல்பட முடியவில்லை. இதனால் இவர்கள் பூமியெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள். இப்படியாக

ஜனங்கள் பூமி எங்கும் சீராக பரவி, பலுக வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

பாதியில் நிறுத்தப்பட்ட இந்த கோபுரம் பாழடைந்தது. ஒன்றும் மீந்து விட இல்லை. ஆனால் அங்குள்ள ஒரு பெரிய ஓட்டையில் கட்டிடம் கட்டுவதற்கு கற்கள், சுண்ணாம்பு கற்கள், பளிங்கு கற்களை தோண்டவும், பெயர்த்துக்கொள்ளவுமே உதவுகிறது. அந்த கோபுரம் பல அடுக்குகள் கொண்டதும், கீழுள்ள அடுக்கை விட மேல் உள்ள அடுக்கு சற்று சிறிதாகவும் இருந்தது.

இன்றைக்கு மொழிகளால் பிரிந்திருக்கும் மக்களை இன்னும் பிரிப்பது இயலாத காரியமாக போய்விட்டது. பாதுகாப்புக்காக மீண்டும் இணைந்து வாழ்வது மனித இயல்பாயிருக்கிறது. இன்று அநேக மக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை பேசுகிறார்கள். வித விதமான மொழிகளை பேசுபவர்கள் மத்தியில் அர்த்தம் சொல்லுவதற்கும் அநேகர் உள்ளனர். பல நாட்டை சேர்ந்த மக்கள் ஒருமித்து கூட்டம் கூடவும், மாநாடுகளை நடத்தவும் இது பயன்படுகிறது.

**தேவன் மேல் வைத்த நம்பிக்கையை மக்கள் இழந்ததினால் அவர்கள் கோபுரத்தை கட்ட தொடங்கினார்.**



# பாடம் - 23

## ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன்

**"கர்த்தர் ஆபிராமை நோக்கி. நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன்தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவர்களைச் சபிப்பேன், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்." ஆதியாகமம் 12:1,3**

ஆபிரகாம் தேவனை முழுமையாக விசுவாசித்ததினால் அவர் தேவனுடைய சிநேகிதனானார் (யாக்கோபு2:3) தேவனுடைய சொல்லுக்கு கீழ்ப்படிந்து தன்னுடைய சொந்த தேசத்தை விட்டு கானான் சென்றார். "உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்" என்ற வாக்குறுதியை பெற்றார். இதை ஆபிரகாமின் உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது. உடன்படிக்கை என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் மத்தியில் செய்யும் ஒப்பந்தமாகும். ஆபிரகாம் அநேக ஜாதிகளுக்கு தந்தையாக இருக்கபோகிறதினால் தேவன் ஆபிராம் என்ற அவருடைய பெயரை ஆபிரகாம் என்று மாற்றினார். (ஆதியாகமம் 17:5)

பழைய ஏற்பாட்டில் நடந்த அநேக சம்பவங்கள் வரக்கூடிய காலத்தில் சிறப்பாக நடப்பவைகளை சித்திரிக்கும் படங்களாக உள்ளது. ஆகவே இந்த சம்பவங்களை நிழல் என்றும், வரக்கூடிய உண்மையான காரியங்களை நிஜம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நிழலான காரியங்கள் தேவனுடைய மிகப் பெரிய திட்டங்களையும், நோக்கங்களையும் நாம் புரிந்து கொள்ள உதவுகிறது.

ஆபிரகாமால் நேசிக்கபட்ட சாராள், வெகு காலமாக காத்திருந்து ஒரு குமாரனை (ஈசாக்கு) பெற்றாள். அதுபோல, ஆபிரகாமின் உடன்படிக்கை வெகு காலமாக மேசியாவின் வருகைக்கும், இயேசு பிறந்து, உடன்படிக்கையின் வேலைகளை தொடங்குவதற்கும் காத்திருந்தது.

ஈசாக்கின் மணவாட்டியாகவும், அவருடைய பிள்ளைகளுக்கு தாயாகவும் இருந்ததினால், ரெபேக்காள் 144,000 பரிசுத்தவான்களுடைய சபையை அடையாளப்படுத்துகிறாள். சபை கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைக்கப்படுகிறது. மேலும் சபை அவரோடு இணைந்து

மரித்தோரை உயிர்பித்து, ராஜ்யத்தில் பூமியில் உள்ள மனுக்குலம் பூரண நிலையை அடைய உதவி செய்வார்கள். மோரிய மலையில் ஈசாக்கை பலி செலுத்தப்பட்டது, நம்முடைய ஆண்டவராம் இயேசு மனுக்குலத்திற்காக கல்வாரியில் பலி செலுத்தினதை அடையாளப் படுத்துகிறது. ஈசாக்கு தன்னுடைய தகப்பனாகிய ஆபிரகாமிடம் பலி செலுத்துவதற்கு மனப்பூர்வமாக ஒப்புகொடுத்தது போல, இயேசுவும் தன்னையே இந்த மனுகுலத்திற்காக சிலுவையில் ஜீவனை ஒப்புகொடுத்தார். தேவன் ஈசாக்குக்கு பதிலாக ஒரு ஆட்டுக்கடாவை கொடுத்தார். ஆனால் இயேசு மட்டுமே பூரண மனிதனாக இருந்ததினால் அவரே ஆதாமுக்கு ஈடாக பலி செலுத்த வேண்டியதாக இருந்தது.

ஆபிரகாமின் வீட்டில் அடிமையாக இருந்த ஆகார், அவருடைய பிள்ளை, இஸ்மயேலுக்கு தாயாக இருந்ததினால் நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையை அடையாளப்படுத்துகிறாள். அவள் அவருடைய பிள்ளை இஸ்மயேலுக்கு தாயாக இருந்தாள். தேவனுடைய திட்டத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு ஒரு இரட்சகர் தேவை என்று அவர்களை உணர்த்துவதற்கு இந்த நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை உதவியது. ஆனாலும் அவர்கள் அபூரணர்களாக இருந்ததினால், பூரணமான சட்டங்களை அவர்களால் கடைபிடிக்க முடியவில்லை.

இஸ்மயேல் இஸ்ரயேலை போல ஒரு ஜாதியாக இருந்தார்கள். ஆபிரகாமின் வீட்டில் அவரும் பங்கு வகித்தார், ஆனால் அவர் வாக்குதத்தம் செய்யப்பட்ட சந்ததியாக இருக்கவில்லை, தேவனுடைய திட்டத்தில் இஸ்ரயேல் ஜாதி ஒரு பகுதியாக இருந்தாலும், கிறிஸ்துவும், சபையுமாக இருக்கும் பரலோக சந்ததி இவர்கள் இல்லை.



**ஈசாக்கின் பலி நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் மரணத்திற்கு அடையாளமாக இருக்கிறது.**

# பாடம் - 24

## சோதோமின் அழிவு

**“இதோ, கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம், இவைகளே அவளிடத்திலும் அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன, சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவன் பலப்படுத்தவில்லை.” எசேக்கியேல் 16:49**

சோதோமின் மக்கள் செழுமையான பள்ளத்தக்கில் வாழ்ந்து வந்தார்கள். நல்ல விளைச்சலுக்கும், வளமாக வாழ்வதற்கும் மற்றவர்களை போல் கடுமையாக உழைக்க அவசியமில்லாமல் இருந்தது. மிகுந்தவசதி வாய்ப்புகளோடு இருந்தார்கள். இவர்கள் சோம்பேரிகளாகவும், சுயநலமுள்ளவர்களும், பெருமையுள்ளவர்களுமாக முற்றிலும் துன்மார்க்கமான வாழ்க்கையை வாழந்தார்கள்.

தேவன் இந்த சோதோமின் மக்கள் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்காகவே இவர்கள் அக்கிரமம் மிகுதியாக போகும் முன் இவர்களை அழிக்க முடிவு செய்தார். இந்த பட்டணத்தில் நீதியுள்ளவர்கள் நான்கு பேர் மட்டுமே இருந்தாரகள். லோத்து, அவரது மனைவி, அவருடைய இரண்டு குமாரத்திகளுமே. தேவன் இரண்டு தூதர்களை அனுப்பி வரக்கூடிய பேராபத்தை குறித்து எச்சரித்தார். லோத்தும் மற்றவர்களை தப்பித்து கொள்ளும்படி எச்சரித்தார். ஆனால் அவர்கள் அவரை கண்டு நகைத்தார்கள்.

திடீர் என்று அந்த பள்ளத்தாக்கில் ஒரு நில நடுக்கம் ஏற்பட்டு, பூமியின் பகுதிகள் இடமாறி அதினால் பூமியின் கீழ் ஏற்பட்ட அழுத்தம், சூடான கந்தகமும், உப்பும், எண்ணையும், பலவிதமான வாயுகளோடு மேலே வெடித்துச் சிதறி, அந்த பட்டணம் முழுவதையும் அழித்து போட்டது. அருகாமையில் இருக்கும் கோமோராவையும், சுற்றி உள்ள பட்டணங்களையும் அது அழித்து.

டன் கணக்காக எரியும் எண்ணையும், கந்தகமும், வாயுகளும்

விண் வெளியை சிதறியது. லோத்தையும், அவன் மனைவியையும், அவன் குமாரத்திகளையும் அந்த பட்டணத்தை விட்டு விரைந்து செல்ல அந்த தூதர்கள் உதவி செய்தார்கள். ஆனால் லோத்தின் மனைவியோ அவர்களுடைய அவர்களுடைய சொத்துக்களையும், வீடுகளையும் விட்டு வர மனதில்லாதவளாய் திரும்பி பார்த்தாள். அங்கு சிதறி விழுந்து கொண்டிருந்த உப்பும், கந்தகமும் அவள் மேல் விழுந்து முழுமையாக மூடி ஒரு தூணை போல் மாற்றியது. வேதாகமத்தில் இது ஒரு புதுமையான கதையாக இருப்பதினால் அநேகர் இதை பழங்கால கட்டு கதை என்று நினைத்தார்கள், ஆனால் இது ஒரு உண்மைச் சம்பவம் என்று அநேக ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்திருக்கிறார்கள். (ஆதியாகமம் 19:24-26)

பாவிகளுக்கு (முழு மனுக்குலம்) மரணத்தில் ஏற்படும் சம்பவம், இந்த சோதோம் கோமோராவின் அழிவு ஒரு எடுத்து காட்டாக இருக்கிறது. மரணம் - ஜீவனற்ற நிலை, நித்தியமான உபத்திரவம் அல்ல, மாறாக பாவத்திற்காக கிடைக்கும் தண்டனை. (ரோமர் 6:23)

சோதோமில் வாழ்ந்த மக்கள். நம்பிக்கை அற்றவர்களாக அழிந்து போக வில்லை என்ற வேதம் போதிக்கிறது. ஏனெனில், ஆயிர வருட ஆட்சியில், தேவன் கொடுக்கப்படும். இதுவரை வாய்ப்பு கிடைக்காதவர்களுக்கு, தேவனுடைய சட்டங்களை ஏற்று கொண்டு அவருடைய சத்தியங்களில் மகிழ ஒரு வாய்ப்பு பின் அவரை மறுதலிப்பவர்களை விட இந்த சோதோம் கோமோரா மக்கள் குறைவாக தண்டிக்கப்படுவார்கள். (மத்தேயு 10:15)

**மரணம் மனுகுலத்திற்கு ஒரு நித்தியமான ஆக்கினை அல்ல.**



# பாடம் - 25

## ஆசாரியரும், இராஜாவாகவும் இருந்த மெல்கிசேதேக்கு

**“நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம் மாறாமலுமிருப்பார்.” சங்கீதம் 110:4**

மெல்கிசேதேக்கு தேவனுடைய ஆசாரியரும், அதே சமயத்தில் சாலேமுக்கு இராஜாவாகவும் இருந்தார். எருசலேம் என்பதற்கு சமாதானம் என்று அர்த்தம். இந்த வார்த்தை பின்பு எருசலேம் என்று அழைக்கப்பட்டது. ஒரு அரசனாக ஜனங்களை ஆண்டு வந்தார், ஆசாரியனை போல் ஆசீர்வதித்து, தேவனுடைய வழிகளை அவர்களுக்கு போதித்தார். அவரை பற்றி அறிந்த ஆபிரகாம் தசமபாகம் செலுத்தினார். (உடைமைகளில் பத்தில் ஒரு பகுதி)

வேதாகமம் மெல்கிசேதேக்கை பற்றி சிறதளவே குறிப்பிடுகிறது. இவர் தகப்பனும் தாயும், வம்சவரலாறு இல்லாதவர் என்றும், இவர் நாட்களில் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவராயிராதவர் என்று வேதாகமம் கூறுகிறது. அரசன், ஆசாரியன் என்று இந்த இரண்டு பதவிகளை குறித்தே இப்படி சொல்லப்பட்டிருக்கிறது என்று நாம் அறிந்து கொள்ளும் வரை, நமக்கு சற்று குழப்பமாக இருக்கிறது. அவர் இந்த ஆசாரிய ஊழியத்தை செய்தவர்களை பற்றியும் எந்த விதமான பதிவுகளும் இல்லை. இவைகளை நாம் பார்க்கும் போது வரக்கூடிய மேசியாவின் யுகத்தில் இவர் இயேசுவை அடையாளப்படுத்தக்கூடியவராக இருக்கிறார்.

வேதாகமத்தில் அநேக ஆசாரியர்களும், இராஜாக்களும் இருந்தார்கள், ஆனால் மெல்கிசிதேக்கு மட்டுமே இந்த இரண்டு பதவிகளையும் ஒருமித்து செயலாற்றினவர். தேவனுடைய ராஜயத்தில் இயேசுவை தலையாக கொண்ட சபை மக்கள் மெல்கிசேதேக்கை போல் இருப்பார்கள். இவர்கள் பூமியை ஆட்சி செய்து, மக்களை ஆசீர்வதித்து, தேவனுடைய வழிகளை அவர்களுக்கு போதிப்பார்கள் -இவர்கள் இராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருப்பார்கள்.

இந்த மெல்கிசேதேக்கு மேய்ப்பர்களின் இராஜாவாக இருந்து சமாதனத்தோடு எகிப்தை ஆண்டு கொண்டு, கீஸாவில் உள்ள பிரமாண்டமான பிரமிடை கட்டியிருக்கவேண்டும். இது உலகில் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும், இது கி.மு. 2170 ல் கட்டப்பட்டது. கையாரோ அருகில் உள்ள நைல் நதியின் கறையில், 13 ஏக்கர் நிலப் பரப்பில் கட்டப்பட்ட இந்த பிரமிட், உலகத்தின் சரியான புவியியல் மையத்தில் நின்று கொண்டிருக்கிறது. கீழ் நோக்கி செல்லும் வழி,பாவத்தையும் மரணத்தையும், மேல் நோக்கி போகும் வழிநியாயப்பிரமாணத்தின் யுகத்தையும், சுவிசேஷ யுகத்தையும், ராஜயத்தில் சபையின் மகிமையையும், மனித சீர்பொருந்துதலையும் அடையாளப்படுத்துகிறது. இதில் காணப்படும் அளவுகள், வருடங்களின் கால பகுதிகளையும், பூமியின் எடையையும், சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரத்தையும் மற்றும் அநேக விஞ்ஞான உண்மைகள் உள்ளது.

**கீஸாவில் உள்ள மகா பெரிய பிரமிட்டை மெல்கிசேதேக்கு கட்டியிருக்க வேண்டும்.**



# பாடம் – 26

## யோபுவின் சோதனைகளும், ஆசீர்வாதங்களும்

**“கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.” யோபு 1:21**

ஆபிரகாம், மெல்கிசேதேக்கு வாழ்ந்த காலத்தில் யோபு என்ற ஒரு மனிதரும் வாழ்ந்து வந்தார். அவர் மிகுந்த ஐசுவரியவானும், பெரிய மனுஷனுமாக இருந்தார். அவர் தேவனுக்கு பயந்து அவரை மிகவும் நேசித்து அவருடைய நீதிகளை பாராட்டினார், ஆகவே தேவனும் அவரை நேசித்தார். யோபுவுக்கும் அவர் மனைவிக்கும் மூன்று குமாரத்திகளும், ஏழு குமாரரும் இருந்தார்கள்.

அக்காலத்தில் அவர் தனவந்தர்களில் ஒருவராக இருந்த போதிலும் அவர் விதவைகளை விசாரித்து, ஏழைகளையும், அநாதைகளையும் ஆதரித்தார். தேவன் யோபுவை ஆசீர்வதித்ததின் நிமித்தமாக யோபு தேவனை நேசித்தான் சாத்தான் குற்றம் சாட்டினான். ஆகவே யோபுவை சாத்தான் சோதிக்க தேவன் அனுமதித்தார்.

திடீர் என்று யோபுவுக்கு மிகப் பெரிய பேரழிவு வந்தது. அவருடைய பிள்ளைகள், ஆஸ்தி, செல்வாக்கு, சுகம் அனைத்தும் அவரிடமிருந்து எடுக்கப்பட்டது. இவ்வளவு காரியங்கள் நடந்தாலும், யோபு தன்னுடைய விசுவாசத்தில் தடுமாற வில்லை. “ஆவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்” என்றும் அவர் சொன்னார். (யோபு 13:15) யோபுவின் மனைவி அவருடைய நம்பிக்கையில் பங்கு பெறாததினால் “தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்” என்றாள். (யோபு 2:9).

யோபுவின் சோதனைகளில் அவருக்கு ஆறுதல் சொல்ல மூன்று சிநேகிதர்கள் வந்தார்கள். ஆனால் யோபுவின் மேல் வந்த அனைத்து துரதிஷ்டத்திற்கும் யோபு தான் முழு பொறுப்பு என்று குற்றம் சுமத்தினர்கள். கட்டாயமாக அவர் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்நாள்

வரைக்கும் நாம் யோபுவின் நீடிய பொறுமையை நினைவு கூறவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் அவருக்கு நேரிட்ட சோதனை மிகவும் கடுமையாகவும், கொடூரமாகவும் இருந்ததினால், அவர் அமைதியாக சீயோலில் (கல்லறைக்கு உள்ள எபிரெய வார்த்தை) நித்திரை செய்ய விரும்பினார். உயிர்த்தெழுதலின் போது அவரை நினத்து கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்.

இதன் பயனாக முடிவில் தேவன் யோபுவை ஆசீர்வதித்தார். அவர் சகலத்தையும் இரட்டிப்பாக பெற்றார். (யோபு 42:10) மனுக்குல வரலாற்றின் எத்தனை அழகான ஒரு பாடமாக இருக்கிறது.

பூரணமான ஏதேனை விட்டு மனிதன் விரட்டபட்டான். தான் முழுமையாக புசிப்பதற்குதானே கடினமாக உழைக்க வேண்டும் என்று உணர்ந்தான். வரக்கூடிய இழந்த அனைத்தையும் இயேசுவின் ஆட்சியில் மனுக்குலம் பெற்றுகொள்ளும். இன்னும் இரட்டிப்பாக பெறும். பாவம், மரணம் என்ற சாபங்கள் நீக்கப்படும், ஆயிர வருடங்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதங்களை மனுக்குலம் பெற்று, மரனத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஜீவனை கொடுத்து, பூமியில் உள்ள ஆசிர்வாதங்கள் இரட்டிபாக்கப்படும்.

**எவ்வளவு சோதனைகள் வந்த போதிலும் யோபு விசுவாசத்தை விட்டு தளர வில்லை.**



# பாடம் - 27

## ஈசாக்குக்கு பெண் தேடினார்கள்

**"அவர் - நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணுவார், என் இனத்தாரிடத்திலும், என் தகப்பன் வீட்டிலும் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்வாய்." - ஆதியாகமம் 24:40**

ஆபிரகாம் மோரியா மலையில் தன்னுடைய மகன் ஈசாக்கை பலி செலுத்த சம்மதித்தார். ஆனாலும் தேவன் இந்த பலியை செலுத்த சொன்ன நோக்கத்தை அவர் அறியாதிருந்தார். தேவன் மேல் அவர் வைத்திருந்த விசுவாசத்திற்கும், நம்பிக்கைக்கும் பலனாக, பலி செலுத்த வேண்டிய ஈசாக்குக்கு பதிலாக தேவன் ஒரு ஆட்டுக் கடாவை கொடுத்த போது அவர் சகலத்தையும் உணர்ந்திருப்பார். இனி ஒரு போதும் அவர் மகனை பலி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இந்த சம்பவம் ஒரு நிழலாக படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. பிதாவாகிய தேவன் ஆபிரகாமையும், அவருடைய குமாரன் இயேசு, இந்த முழு உலகத்தின் ஜீவனுக்காக பலி செலுத்தினவர் ஈசாக்கையும் அடையாளப்படுத்துகிறார்கள். பலி பீடத்திலிருந்து ஈசாக்கு எழும்பின சம்பவமானது, மரித்தோரிலிருந்து உயிர்த்த இயேசுவை அடையாளப்படுத்துகிறது.

சாராள் மரித்த பின், ஆபிரகாம் தன்னுடைய விசுவாசமுள்ள வேலைக்காரன் எலியேசரை, ஈசாக்குக்கு ஒரு மணவாட்டியை தேட அனுப்பினார். அந்நாள் மட்டும் ஆபிரகாம் குடும்பத்தினர் வாழ்ந்த ஆரான் மட்டும் போய் அங்குள்ள அவருடைய சொந்த ஜனத்தில் ஒரு பெண்ணை தேர்வு செய்யும்படி அவர் பறப்பட்டார்.

எலியேசர் பத்து ஒட்டகங்களையும் அநேக வேலைக்காரர் -களையும், அழைத்துச் சென்றார். மேலும் அந்த பெண்ணுக்கும் அவள் குடும்பத்தினருக்கும் அழகுள்ள வெகுமதிகளை எடுத்துச் சென்றார். பிதாவாகிய தேவன் தன்னுடைய ஒரே பேரான குமாரன் இயேசுவுக்கு மனவாட்டியை தேர்வு செய்யும்படி அனுப்பட்ட பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகிறது. இந்த "மணவாட்டி" 1,44,000 பேர் கொண்ட சபையாகும்.

ஆரானை சேர்ந்த எலியேசருக்கும், வேலைக்காரர்களுக்கும் மிகுதியானதாகமும், பசியும் உண்டாயிற்று. தனக்கும் தன்

ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்க்கும் பெண்ணே, ஈசாக்குக்கு தேவனால் தேர்வு செய்யப்பட்ட பெண்ணாக இருக்க வேண்டும் என்று, அவர் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்தார்.

ரெபேக்காள் இளவயதுள்ள, சௌந்தரியமான, உத்தமியான ஒரு பெண்ணாக இருந்தாள். அவள் உண்மையான ஒரே தேவனை வழிபட்டவளாக இருந்தாள். எலியேசருக்கும், அவருடைய வேலைக்காரருக்கும், ஒட்டகங்களுக்கும் கிணற்றிலிருந்து தண்ணீர் வார்த்த பின் தங்குவதற்கும். உணவு புசிப்பதற்கும், அவர்கலை தன் தகப்பன் வீட்டுக்கு அழைத்து சென்றாள்.

ரெபேக்காளின் தாயும், சாகோதரனும் எலியேசர் சொன்ன செய்தியை கேட்ட போது, ரெபேக்காளை இன்னும் பல நாட்கள் தங்கும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆனால் எலியேசர் மறு நாள் புறப்பட வேண்டும் என்று சொன்ன போது, ரெபேக்காள் எந்த விதமான தயக்கமுமின்றி அவரோடு பயணப்பட்டாள்.

மாலை வேளையில் ரெபேக்காள் அவள் புதிய வீட்டை நெருங்கினாள். தூரத்தில் வயல் வெளியில் ஈசாக்கை கண்டு தன் ஒட்டகத்தை விட்டு இறங்கி முக்காடிட்டுக் கொண்டு அவரோடு சென்றாள். அடுத்த யுகத்தில், இயேசுவும், மணவாட்டியும், இந்த உலகத்தில் உள்ள மனுக்குலத்தை உயிர்ப்பித்து, ஆட்சி செய்ய போகிறதை, இந்த இருவரும் அடையாளப்படுத்துகிறார்கள். ஆதியாகமம் 24 ஆம் அதிகாரத்தில் இந்த அழகான சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது.



**ரெபேக்காள் உண்மையான ஒரே தேவனை வழிப்படும் அழகுள்ள பெண்ணாக இருந்தாள்.**

# பாடம் - 28

## யாக்கோபு கண்ட "ஏணி" சொப்பனம்

**"அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான், இதோ ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்." ஆதியாகமம் 28:12**

ஏசாவும் யாக்கோபும் இரட்டை பிள்ளைகள், ஆனால் அவர்கள் இருவரின் தோற்றமும், செயல்பாடுகளும் வேறுப்பட்டது. ஏசா முதலில் பிறந்தவன், பலசாலியாகவும், சிறந்த வேட்டைக்காரனாகவும் இருந்தான். யாக்கோபு மிக அமைதியுமாக, சாந்தமுள்ளவனுமாக இருந்தான். தேவனை பற்றியும், அவருடைய வாக்குத்தத்தங்களை பற்றியும் அவர் அடிக்கடி சிந்திப்பார். அதை பற்றி அவர் மேலும் அறிய விரும்பினார்.

ஒரு நாள் ஏசா வேட்டையாடி, வீடு திரும்பும் போது, மிகுந்த களைப்பு அடைந்து பசியினாலும், தாகத்தாலும் சோர்ந்து போயிருந்தான். அப்பொழுது, பார்ப்பதற்கும், புசிப்பதற்கும் ருசியுள்ள, சிவப்பான கூழை யாக்கோபு காய்ச்சிக்கொண்டிருந்தான். ஏசா அந்த கூழில் கொஞ்சம் கொடுக்கும் படி கெஞ்சினான்.

தேவன் ஆபிரகாமுக்கும் அதற்கு பின் ஈசாக்குக்கும் கொடுத்த ஆசீர்வாதங்களின் மிக பெரிய மதிப்பை யாக்கோபு என்றும் உணர்ந்திருந்தான். இந்த உலகத்தின் ஐசுவரியங்களை விட இது மிக சிறப்பானது என்று அறிந்திருந்தான். தேவனால் கொடுக்கப்பட்ட சேஷ்டபுத்திர பாகம் இதில் அடங்கும். ஆகவே இந்த கூழுக்கு பதிலாக சேஷ்டபுத்திர பாகத்தை கேட்டான். அந்நேரத்தில் ஏதாகிலும் புசித்தால் போதும் என்று நினைத்து ஏசா அந்த ஆசீர்வாதத்தை அற்பமாக எண்ணினான்.

அதற்கு பின்பும் யாக்கோபு பார்வையற்ற ஈசாக்கை ஏமாற்றி ஏசாவுக்கு சேர வேண்டிய ஆசீர்வாதங்களை பெற்றான். இதை அறிந்த ஏசா, யாக்கோபை கொல்ல வகை தேடினான். சேஷ்டபுத்திர

பாகத்தை விற்ற போது அதன் மதிப்பை அறியாத ஏசாவுக்கு இப்பொழுது உணர்வு வந்தது.

யாக்கோபு, ஏசாவின் கோபத்திற்கு தப்பி ஓடினார். அன்று இரவு ஒரு அமைதியான இடத்தை கண்டு, அங்குள்ள ஒரு கல்லை தன் தலைக்கு வைத்து நித்திரை செய்தான். தேவன் ஒரு சொப்பனத்தை கொடுத்து அவனை ஊக்குவித்தார்.

அந்த சொப்பனத்தில் ஒரு ஏணி பூமியிலிருந்து வானத்திற்கு வைக்கப்பட்டிருந்தது. அதில் தேவதூதர்கள் ஏறுகிறவர்களாகவும் இறங்குகிறவர்களாகவும் காணப்பட்டார்கள். அப்பொழுது வானத்திலிருந்து மகிமையுள்ள தேவன் பேசுவதை அவன் கேட்டான். தகப்பனாகிய ஈசாக்கின் ஆசீர்வாதத்தை இவர் மூலமாக உறுதிப்படுத்தி, ஆபிரகாமின் உடன்படிக்கைக்கும் யாக்கோபை பங்காளியாக்கினார்.

இந்த சொப்பனம் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குதத்தம் நிறைவு பெறுவதற்கு அடையாளமாக இருந்தது. (ஆதியாகமம் 28:14, அப்போஸ்தலர் 3:25) மீண்டுமாக பரலோகத்திற்கும், பூமிக்கும், தேவனுக்கும் மனிதனுக்கும், சமாதானத்தையும், ஐக்கியத்தையும் கொண்டு வரும்.

**தேவன் யாக்கோபின் ஜெபத்தை கேட்டார் என்பதற்கு இந்த சொப்பனம் உறுதியளித்தது.**



# பாடம் - 29

## யோசேப்பின் அங்கி கண்டுபிடிக்கப்பட்டது

**"அவர்கள் யோசேப்பின் அங்கியை எடுத்து, ஒரு வெள்ளாட்டுக்கடாவை அடித்து, அந்த அங்கியை இரத்தத்திலே தோய்த்து, பல வருணமான அந்த அங்கியைத் தங்கள் தகப்பனிடத்துக்கு அனுப்பி, இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உம்முடைய குமாரன் அங்கியோ, அல்லவோ, பாரும் என்று சொல்லச்சொன்னார்கள்." - ஆதியாகமம் 37:31,32**

பன்னிரெண்டு குமாரர்களுக்கு யாக்கோபு தந்தையானார். மூத்த மகன் ரூபன் இவன் மிக அன்புள்ளவனாக இருந்தாலும், ஞானமற்றவனாக இருந்தான். சிமியோன் ஞானியாக இருந்தாலும் அன்பில்லாதவனாக இருந்தான். ஒவ்வொரு குமாரர்களும் ஒருவரை காட்டிலும் ஒருவர் வேறுப்பட்டவர்களாக இருந்தார்கள். யோசேப்பும் பென்யமீனும் சிறியவர்களாக இருந்ததினாலே வீட்டில் இருந்தார்கள். மற்ற பத்து பேர்களும் தங்களுடைய தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டு இருந்தார்கள். யாக்கோபு யோசேப்பை விசேஷமாக நேசித்ததால் அவனுக்கு பல வண்ண அங்கியை தைத்துக் கொடுத்திருந்தார். அவனுடைய சகோதரர்கள் அவரை இதினிமித்தம் வெறுத்தார்கள். இதற்கு பின்பு அவர் சில சொப்பனங்களை கண்டு அதை தன்னுடைய குடும்பத்தினருக்கு அறிவித்தார். அந்த சொப்பனங்களில் யோசேப்பின் குடும்பத்தினர் யோசேப்பை வணங்குவதாகவும், யோசேப்பு அவர்களை ஆசீர்வதிப்பதாவும் இருந்தது. இந்த காரியங்கள் அவனுடைய சகோதரர்கள் அவன் மேல் வைத்த பகையை இன்னும் தூண்டியது.

ஒரு நாள் யோசேப்பு அவனுடைய சகோதரர்களுடைய சுக செய்தியை விசாரிக்கவும், அவர்களுக்கு உணவு பொருட்களை கொடுக்கவும் வந்தார். தூரத்தில் அவன் வருவதை கண்டு, அவனை தொலைக்க திட்டமிட்டார்கள். இந்த கொடூரமான சகோதரர்கள் அவரை அடிமையாக்கி எகிப்துக்கு போகும் இஸ்மயேலரிடம் விற்று போட்டார்கள். ஒரு ஆட்டை அடித்து யோசேப்பின் பல வண்ண அங்கியை அதின் இரத்தத்தில் தொய்ந்து, யாக்கோபிடம் கொண்டு போய் கொடுத்தார்கள். அவர்கள் விரும்பிய படி, ஒரு காட்டு மிருகம் அவனை கொன்று போட்டது என்று யாக்கோபு நினைத்துக்கொண்டார்.

யாக்கோபை ஒருவரும் தேற்றக்கூடாதபடிக்கு மிக வேதனை அடைந்து, மனம் உடைந்தவராக "இந்த துக்கத்தோடே நான் பாதாளத்தில் இறங்குவேன்" என்றார். (ஆதியாகமம் 37:35) "சீயோல்" என்ற எபிரேய வார்த்தை வேதாகமத்தில், இந்த வசனத்தில் முதல் முதல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் இந்த ஒரு வார்த்தை மட்டுமே "நரகம்" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. நித்தியமான ஆக்கினைக்குள் இடத்திற்கு தன் மகன் சென்றதாக யாக்கோபு நினைக்கவில்லை. அப்படிப்பட்ட இடத்தை பற்றி அவருக்கு தெரியாது. ஆனால் "நரகம்" என்பது நித்திய ஆக்கினைக்குறிய இடம் என்று இந்நாள் வரைக்கும் சிலர் போதித்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் "சீயோலை" சூழ்நிலைக்கு ஏற்றவாறு நரகம், கல்லறை அல்லது குழி என்று பழைய ஏற்பாட்டில் மொழி பெயர்த்திருக்கிறாகள். ஆனால் இன்றைக்கு வேத வல்லுனர்கள் "சீயோல்" என்பதற்கு கல்லறை அல்லது மண்ணறை என்று ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

இதே "சீயோல்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் கிரேக்க மொழியில் "ஆதேஸ்" என்று எழுதப்பட்டிருக்கிறது. சில புதிய மொழி பெயர்ப்பாளர்கள் "சீயோல்", "ஆதேஸ்" என்ற வார்த்தைகளை மொழி பெயர்க்காமல் விட்டு விடுகிறார்கள். **(Revised Standard Version) "sheol"** என்ற ஆங்கில வார்த்தைக்கு மூடி வைப்பது அல்லது மறைத்து வைப்பது என்றும் பொருள்படும். "சீயோல்" அல்லது "ஆதேஸ்" என்ற வார்த்தைகளுக்கும், "நித்திய ஆக்கினை" அல்லது "நித்திய அக்கினி" என்பதற்கும் எந்த விதமான சமந்தமும் இல்லை.



**யோசேப்பின் சகோதரர்கள் அவரை இஸ்மயேலர்களிடம் அடிமையாக விற்று போட்டார்கள்.**

# பாடம் – 30

## யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்டார்

**“நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள் தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்.” - ஆதியாகமம் 50:20**

தேவன் யோசேப்பை கவனித்துக் கொண்டிருந்தார். அவர் பட்ட பாடுகளும், சோதனைகளும் அவருடைய குணங்களை பக்குவப்படுத்தி, அதின் விளைவாக எகிப்தில் பாரோனுக்கு அடுத்த பதவியை பெற அவரை தகுதிப்படுத்தியது.

பாரோன் கண்ட இரண்டு சொப்பனங்களுக்கு யோசேப்பு விளக்கம் சொன்னார். வரக்கூடிய ஏழு வருடங்கள் செழிப்பாக இருக்கும் என்றும், அதை தொடர்ந்து வரும் ஏழு வருடங்கள் பஞ்சம் உண்டாகும் என்றும் அறிவித்தார். முதல் வரும் ஏழு வருடங்களில் விளையும் தானியங்களை பின் வரும் பஞ்சவருடங்களுக்காக சேமித்து வைக்கும் படி யோசேப்பு கட்டளை கொடுத்தார்.

கானானில் உள்ள யோசேப்பின் குடும்பமும் பஞ்சத்தில் பாதிக்கப்பட்டது. புசிப்பதற்கு தானியம் தீர்ந்து போன பின் யோசேப்பின் பத்து சகோதரர்கள் தானியம் கொள்ள எகிப்துக்கு வந்தார்கள். பல வருடங்களுக்கு முன் அடிமையாக விற்ற சகோதரனோடு ஒரு உரையாடல் நடக்கபோவதை அவர்கள் அறியாமல் இருந்தார்கள்.

யோசேப்பு அவருடைய சகோதரரிடம் அன்பாக இருந்து, தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்தாமல், அவர்களுடைய குடும்பத்தினரைப் பற்றி விசாரித்து, தானிங்களை கொடுத்தார். பஞ்சம் தொடர்ந்து நீடிக்கும் என்றும், தானியம் தீர்ந்த பின், மீண்டும் வந்து தானியம் வாங்கி கொள்ளும் படி சொன்னார். நீங்கள் வேவுக்காரர்கள் இல்லை என்று நிரூபிக்க உங்கள் இளைய சகோதரன் பென்யமீனை கூட அழைத்து வாருங்கள் என்றார்.

யாக்கோபு தன் மகனை அனுப்ப மறுத்தார். ஆனால் பஞ்சத்தின் வேகம் அதிகரித்த போது பென்யமீனை அவர்களோடு அனுப்ப சம்மதித்தார். ஆனால், “...நீங்கள் போகும் வழியில் இவனுக்கு மோசம்

நேரிட்டால், நீங்கள் என் நரைமயிரைச் சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள் என்றான்." (ஆதியாகமம் 42:38)

"சீயோல்" என்ற வார்த்தை இரண்டாவது முறையாக வேதத்தில் இங்கு காணப்படுகிறது. கல்லறை என்ற அர்த்தம் கொண்ட இந்த வார்த்தையை 31 முறை தவறாக மொழிப் பெயர்க்கப்பட்டிருக்கிறது. நித்தியமாக எரியும் அக்கினியின் ஆக்கினையில் தன்னுடைய குமாரரோடு சேரப் போகிறோம் என்ற சிந்தைகள் யாக்கோபுக்கு ஒரு போதும் வரவில்லை. இவை தேவனை அவமானப்படுத்தம் கொள்கையாகும். யாக்கோபு தன்னுடைய மரண நிலையை குறித்தே இப்படி சொன்னார்.

இயேசுவும் தன்னுடைய சகோதரர்களால் (இஸ்ரயேல் ஜாதி) நிராகரிக்கப்பட்டதால், யோசேப்பு இயேசுவுக்கு நிழலாக இருந்தார். ஆனால் இதன் பலனாக அவர் மகிமையிலும், கனத்திலும் பரலோக பிதாவுக்கு அடுத்ததாக அவருடைய வலதுபக்கத்தில் உயர்த்தப்பட்டார். மேலும் யோசேப்பு எகிப்தியர்களுக்கு தானியம் கொடுத்தது போல வரக்கூடிய யுகத்தில் மனபூர்வமாக, கீழ்ப்படிபவர்களுக்கு இயேசு நித்திய ஜீவனுக்குரிய உணவை கொடுப்பார்.

**இயேசுவும் சகோதரர்களால் நிராகரிக்கப்பட்டதினால்**
**யோசேப்பு இயேசுவை அடையாலப்படுத்துகிறார்.**



# பாடம் – 31

## யோசேப்பும் அவருடைய சகோதரர்களும்

**“ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.” - எபேசியர் 4:32**

யோசேப்பின் சகோதரர்கள் பென்யமீனோடு எகிப்துக்கு வந்த போது, அவர் ஒரு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தினார். இது அவர்களுக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. யோசேப்பின் மனதில் என்ன சிந்தித்தார் என்று புரியாமல் பயந்தார்கள். கடைசியாக, யோசேப்பு வேலைக்காரர்களை வெளியே அனுப்பிவிட்டு, அடிமையாக விற்கப்பட்ட சகோதரன் என்று தன்னை வெளிப்படுத்தினார். அவர்களை அனைவரையும் மன்னித்து விட்டதாகவும் உறுதியளித்து, பஞ்சத்தில் தங்களுடைய குடும்பம் காக்கப்படுவதற்காக தேவன் அவரை முன்னதாக அனுப்பினார் என்று, தேவனுடைய திட்டங்களை விவரித்து நம்முடைய எல்லா பாடுகளையும் நன்மைக்காகவே அனுமதிக்கிறார் என்று புரியவைத்தார். இப்படியாக தன்னுடைய குடும்பத்தையும், எகிப்தியர்கலையும் பஞ்சத்தில் மரிக்காமல் யோசேப்பு காப்பாற்றினார்.

அனைவரும் மிகுந்த சந்தோஷம் அடைந்தார்கள். அனைவரும் ஒருவரை ஒருவர் கட்டி அழுதார்கள். யோசேப்பு தங்களுடைய சகோதரன் என்பதை அவர்களால் நம்ப முடியவில்லை. யோசேப்பு அவருடைய தந்தையைப் பற்றி விசாரித்து தானியங்கள் மிகுதியாக இருந்த படியால், அவர்கள் அனைவரையும் எகிப்துக்கு வரும்படி அழைத்தார். பாரோன் அரசன் கோசேன் என்ற இடத்தை கொடுத்தான், அது கால் நடை வளர்ப்புக்கு ஏற்ற ஒரு இடமாக இருந்தது.

இஸ்ரயேல் என்று அழைக்கப்பட்ட யாக்கோபு கோசேனில் வாழ்ந்தார். அவர்கள் விருத்தி அடையத் தொடங்கி, அநேக பிள்ளைகளைப் பெற்று ஒரு பெரிய ஜாதி ஆனார்கள். யோசேப்பு அவருடைய சகோதரர்களை நோக்கி “ நீங்கள் தீமை என்று நினைத்து செய்த காரியத்தை தேவன் நன்மையாக மாற்றினார் (ஆதியாகமம் 50:20) என்றார்.

யோசேப்பு இயேசுவையும் அவருடைய சபையையும் அடையாளப்

படுத்துகிறார். அநேக உபத்திரவங்கள் மத்தியிலும், நீடிய பொறுமையோடு பாடுகளை சகித்து, தேவனுடைய சித்தத்தின்படி தங்களால் முடிந்த வரை வாழ்ந்து வந்தவர்கள். ஆகையால் அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் மிகுந்த கனத்தையும் மகிமையையும் பெறுவார்கள், யோசேப்பின் சகோதரர்கள் யூதர்களை அடையாளப் படுத்துகிறார்கள். எகிப்தியர்கள் மீதி இருக்கும் மனுக்குலத்தை அடையாளப்படுத்துகிறார்கள். மேசியாவை மகிமைப்படுத்தி உயர்த்தியதால், யூதர்களும், புறஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். (ஏசாயா 25:6-9).

கானானுக்கு திரும்பிச் செல்லும் பொழுது அவருடைய எலும்புகளை எடுத்து செல்லும் படி யோசேப்பு தன் மரணத்தின் போது கேட்டுக் கொண்டார். இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் 430 வருடங்கள் வாழ்ந்த பின் மோசே இவர்களை தாய் நாட்டுக்கு நடத்தி சென்றார்.

தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை பற்றிய அறிவை அவர் பூரணமாக பெற்றிருந்ததினால் அவர் தேவன் பேரில் வைத்த விசுவாசத்தை பாருங்கள். இப்படியாக பழைய ஏற்பாட்டின் விசுவாசிகள் அனைவரும் வாழ்ந்தார்கள், இன்றைக்கு நாமும் இவர்களை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே உண்மையாகும்.

**யோசேப்பு தன்னை அவர்களுடைய சகோதரன் என்று அவர்களுக்கு தன்னை வெளிப்படுத்தினார்.**



# பாடம் - 32

## மோசே ஒரு இரட்சகர்

**“உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன், உங்கள்மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள்.” யாத்திராகமம் 6:7**

யாக்கோபு மரித்த போது, முற்பிதாக்களாகிய நோவா, ஆபிரகாம், ஈசாக்கு அனைவரின் ஆயுச் நாட்கள் முடிந்தது. தேவன் தனிப்பட்ட மனிதர்களோடு வைத்த தொடர்பு முடிவுக்கு வந்தது என்று பொருளாகும். இப்பொழுது தேவனுடைய கிருபை இஸ்ரயேல் ஜாதியோடிருந்தது. அவர்களின் குடும்பங்கள் விருத்தியடைந்தது. இவர்கள் “இஸ்ரயேலின் பன்னிரெண்டு கோத்திரங்கள்” என்று அழைக்கப்பட்டார்கள்.

இஸ்ரயேலர்கள் மிகவும் வல்லமையடைந்து, தங்களுடைய நாட்டையே கைபற்றி விடுவார்களோ என்று எகிப்தியர்கள் கவலைப்படும் அளவுக்கு இவர்களின் குடும்பங்கள் தொடர்ந்து பெருகிற்று. ஆகவே இவர்களை அடிமையாக்கி அதிகமான வேலைகளை சுமத்தினார்கள். ஆனாலும் அவர்கள் அதிகமாக பெருகினார்கள். ஆகவே பிறக்ககூடிய பிள்ளைகள் கொலை செய்யப்படவேண்டும் என்று கட்டளையிடப்பட்டது.

மோசே மூன்று மாத குழந்தையாக இருந்த போது, அவருடைய தாய் அவரை ஒரு கூடையில் வைத்து நைல் நதியில் மிதக்க விட்டாள். அவருடைய சகோதிரி மீரியாம் அந்த கூடை செல்லும் இடத்தை பின் தொடர்ந்து கரையோரமாக சென்றாள்.

இந்த கூடை எகிப்திய இளவரசியால் கண்டெடுக்கப்பட்டு, ஒரு எகிப்தியனாக வளர்ப்பதற்கு, பாரோன் அரசனாகிய, தன்னுடைய தந்தையின் அரண்மணைக்கு கொண்டு வரப்பட்டது. மோசேயின் தாய் அந்த குழந்தையை பராமரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டாள். அவளுடைய குழந்தையின் பாதுகாப்புக்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபங்கள் நிச்சயமாக பதிலளிக்கப்பட்டது என்று அவள் உணர்ந்தாள்.

மோசே மிக அற்புதமான கல்வியை சகல துறைகளிலும் பெற்றார். மேலும், தன்னுடைய எபிரெய தாயின் மூலம் சில கட்டளைகளையும் பெற்றிருக்கவேண்டும். ஆனால் தன்னுடைய ஜனங்கள் பட்ட

உபத்திரவங்களிநிமித்தம் அவர் எகிப்தில் கிடைத்த மகிமையை சந்தோஷமாக ஏற்று கொள்ள முடியவில்லை. ஒரு இஸ்ரயேலன் கொடூரமாக நடத்தப்படுவதை பார்த்த மோசே, அந்த எடிப்தியனை கொன்று விட்டு மீதியானுக்கு தப்பி ஓடினார். அங்கு மேய்யப்பனாக நாற்பது வருடங்கள் குடியிருந்தார்.

இஸ்ரயேலர்கள் எகிப்தை விட்டு புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தபோது, அவர்களை வழிநடத்த மோசேவை தேவன் நியமித்தார். அவருடைய சகோதரன் ஆரோன் இஸ்ரயேலர்களுக்காக பாரோனின் அரண்மணையில் பேச நியமிக்கப்பட்டார்.

எரிகிற முட்ச் செடியின் மத்தியில் அவர் செய்யவேண்டிய காரியங்கள் மோசேக்கு அறிவிக்கப்பட்டது. இந்த முட்ச் செடி அக்கினியினால் எரிந்த போதும் அந்த செடிவேக வில்லை. மோசே மீதியான் தேசத்தில் மிகவும் சாந்தமாக இருக்ககற்றுக்கொண்டார். அப்பொழுது தேவன் தன்னுடைய மக்களை எகிப்திலிருந்து கானான் தேசம் அழைத்து வருவதற்கு அவரை பயன்படுத்ததிட்டமிட்டார். அப்பொழுது மோசே ஒரு பெரிய தலைவராகவும், இஸ்ரயேல் மக்களுக்கு வழிக்காட்டியாகவும், அவருடைய மக்களுக்கு மிக வேண்டியவராகவும், பாரோனுக்கு மிக பயங்கரமானவருமாக இருந்தார். (ஆப்போஸ்தலர் 7:30-36)

**நைல் நதியில், மோசேவை வைத்த நாணல் பெட்டி, எகிப்தின் இளவரசியால் கண்டுப்பிடிக்கப்பட்டது.**



# பாடம் - 33

## என் ஜனங்களை போக விடு

**"நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும், அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன், நான் எகிப்து தேசத்தை அழிக்கும் போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்." யாத்திராகமம் 12:13**

"என் ஜனங்களைப் போக விடு" என்ற தேவனுடைய செய்தியை மோசேயும் ஆரோனும் பாரோனிடம் ஒவ்வொரு பொழுதும் மீண்டும் மீண்டுமாக அறிவித்தார்கள். ஆனால் இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாக எகிப்தியருக்கு கடினமாக வேலை செய்து கொண்டிருந்ததினால் அவன் இஸ்ரயேல் மக்களை இழக்க மனதில்லாதிருந்தான். இந்த அரசனுடைய காலத்தில் மட்டுமே மிக அதிகமான செங்கல்கள் அறுக்கப்பட்டது என்று வரலாறு குறிப்பிடுகிறது. இவர்கள் போராட்டங்களை செய்யாதபடிக்கு எகிப்தியரின் மேல் விசாரணைக்காரர்கள் இஸ்ரயேல் மக்களின் மேல் கடுமையாக வேலை பாரத்தை சுமத்தினார்கள்.

தேவன் அவருடைய மக்களின் நிலைமைகளை அறிந்திருந்தார். பாரோன் மக்களை கட்டாயமாக விடுதலை செய்ய அநேக வாதைகளை அனுப்பினார். நைல் நதி இரத்தமாக மாறியது, ஆயிரக்கணக்கான தவளைகள் நதியிலிருந்து புறப்பட்டு வீடுகளிலும், படுக்கைகளிலும், அடுப்பிலும், மாவு பிசைகிற தொட்டிகளிலும் வந்தது. தவளைகள் மரித்த பின் பேன்கள், அதற்குபின் வெட்டுகிளிகள் எங்கும் பறந்தது. எகிப்தின் மிருகங்கள் மரணத்திற்கேதுவான வியாதிப்பட்டது. எகிப்திய மக்கள் மேல் எரிபந்தமான கொப்பளங்கள் வந்தது. கல்மழை பெய்து நாட்டை நாசப்படுத்தியது, கல் மழை விட்டு சென்ற கொஞ்ச நஞ்சம் பயிர்களை வெட்டு கிளிகள் தின்றது. எகிப்து எங்கும் காரிருள் பரவியது, அடர்த்தியான இருளாக இருந்தது. இவைகளுக்கு பின்னும் பாரோன் இஸ்ரயேலர்களை அனுப்பவில்லை.

கடைசியாக ஒரு ஆட்டுக்குட்டியை தேர்வு செய்ய கட்டளை பெற்றார்கள். அது ஆணாகவும், ஒரு வயதுக்குட்ப்பட்டதாயும், பழுதற்றதாக இருக்கவேண்டும். நீசான் மாதம் 14ம் தேதியில் அதை அடித்து, சுட்டு கசப்பான கீரையோடு அதை புசிக்கவேண்டும். இதற்கு

இடையில் தங்களுடைய உடமைகளையும், மந்தைகளையும் கூட்டி சேர்த்து, பயணத்திற்கு ஆயத்தப்படவேண்டும். தேவன் ஒரு சங்கார தூதனை எகிப்து தேசத்தில் அனுப்பி, ஒவ்வொரு வீட்டில் உள்ள சகல தலைச்சன் ஆண் பிள்ளைகளையும் சங்கரிப்பார்.

இஸ்ரயேலர்கள் அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை எடுத்து வீட்டு நிலைகால்களில் தெளித்தால் தப்பிவிடுவார்கள். தூதன் அந்த வீட்டை கடந்து செல்லுவதற்கு, இதுவே அடையாளமாக இருந்தது.

நடுஇரவில் தேவனுடைய தூதன் எகிப்து தேசம் எங்கும் கடந்து போனார், எகிப்தில் உள்ள ஜனங்கள் மற்றும் மிருகங்களின் தலைச்சன்கள் மரித்தது. பாரோன் தன்னை விட நேசித்த தன்னுடைய குமாரனை இழந்தான். இவனுடைய மரணம் பாரோனுக்கு பேரதிர்ச்சியாக இருந்தது. அவன் மோசேவை அழைத்து, இஸ்ரயேல் மக்கள் அனைவரையும் உடனடியாக எகிப்தை விட்டு அழைத்து செல்லும் படி கட்டளையிட்டான்.

**இஸ்ரயேல் மக்கள் அந்த "ஈரத்தத்தின் கீழ் இருந்ததால்" சங்கார தூதன் அவர்களை அடிக்கவில்லை.**



# பாடம் - 34

## இஸ்ரயேல் மக்களுடைய வனாந்திர பிரயாணத்தின் அனுபவங்கள்

**"வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக் கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடி, நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே என்றார்கள்." - யோவான் 6:31**

கடைசியாக இஸ்ரயேல் மக்கள் தங்களுடைய அடிமைதனத்தி-லிருந்து விடுதலை பெற்றார்கள். அவர்கள் வனாந்திர வழியாக கானான் செல்வதற்கு மிக தூரமான பயணத்தை தொடங்கினார்கள். தேவன், பகலில் மேக ஸ்தம்பத்தினாலும், இரவில் அக்கனி ஸ்தம்பத்தினாலும் அவர்களை வழிநடத்தினார். இந்த நாற்பது வருட வனாந்திர பிரயானத்தில் விசுவாசத்திற்குரிய அநேக பாடங்கள் இஸ்ரயேல் மக்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது.

ஒவ்வொரு இரவும் அவர்கள் புசிப்பதற்கு தேவன் மன்னாவை அனுப்பினார். இந்த சிறிய மன்னாவை ஒவ்வொரு காலையும் சேர்ப்பதற்கு பொறுமையும் கால அவகாசமும் தேவைப்பட்டது. ஒவ்வொருவரும் ஒரு ஓமர் அளவு பொறுக்கி கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். ஆறாம் நாளில் சேர்க்கப்படும் மன்னா மட்டுமே, ஓய்வு நாளன்று கெட்டுப்போகாமல் இருக்குமே தவிர, மற்ற நாட்களில் சேர்க்கப்பட்ட மன்னா 24மணி நேரத்திற்கு பின் கெட்டு போய்விடும்.

தேவன் இவ்வளவு காரியங்களை செய்திருந்தும், இஸ்ரயேல் மக்கள் வெகு சீக்கிரத்தில் மன்னாவினால் அதிருப்தி அடைந்தார்கள். எகிப்தில் உள்ள மச்சங்கள், வெள்ளரி பிஞ்சி, வெள்ளை பூண்டு, வெங்காயம், வேண்டும் என்று அழுதார்கள். (எண்ணாகமம் 11:5,6) தேவன் கடலில் இருந்து ஒரு கீழ் காற்றை வீசச்செய்தவுடன் காடைகள் பறக்க முடியாதபடி அவர்கள் மத்தியில் வந்தது. அவைகளை அவர்கள் பிடித்து ஏராளமாய் புசித்தார்கள் - மிகுதியாய் புசித்ததினால், அநேகர் வியாதிப்பட்டார்கள், அதில் சிலர் மரித்தும் போனார்கள்.

சில நேரங்களில் குடிக்க தண்ணீர் கிடைக்காத போது அவர்கள் மோசேவிடம் முறையிட்டார்கள். அவர் குறிப்பிட்ட ஒரு மரத்தை வெட்டி போட்டு மாராவின் தண்ணீரை மதுரமாக்கினார். மற்றொரு சூழ்நிலையில், அவருடைய கோலினால் கன்மலையை அடித்து தண்ணீர் புறப்பட செய்து ஜனங்களின் தாகத்தை தீர்த்தார். இயேசுவின் மரணத்தின் (கன்மலையை

அடித்து) மூலம் ஜீவனை கொடுக்கும் மிகப் பெரிய சத்தியத்தின் நதி வேகமாக புறப்பட்டு வந்த காட்சி எவ்வளவு அழகாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது பாருங்கள். கொள்ளி வாய் சர்ப்பங்களின் வாதையினால் அவர்களுக்கு அடுத்த அனுபவம் கிடைத்தது. கர்த்தர் மோசேவை நோக்கி ஒரு வெண்கல சர்ப்பத்தை செய்து, அனைவரும் காணும்படியாக, உயரமான கம்பத்தின் மேல் வைக்கச் சொன்னார். சர்ப்பம் கடித்து மரித்துக்கொண்டு இருக்கும் மக்கள் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தை நோக்கி பார்க்கக் குணம் அடைந்தார்கள். சர்ப்பங்கள் மரணத்தை வருவிக்கும் பாவத்தை அடையாளப் படுதுகிறது. பாவத்தினால் காயப்பட்டு மரித்து கொண்டிருக்கும் உலகத்தை கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் தேவன் ஜீவனை கொடுத்தார். முழு உலகமும் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுவிக்கப்படுவதற்காக இயேசு ஒரு பாவியாக என்னப்பட்டார்.

கோராகு என்ற ஒரு மனுஷன் தலைமைக்கு எதிராக ஒரு கூட்டத்தை சேர்த்தான். இதன் விளைவாக அவனையும் அவன் கூட்டத்தாரையும் பூமி பிழந்து விழுங்கியது. இந்த காட்சியானது, வரக்கூடிய யுகத்தில், மேசியாவுக்கு விரோதமாக எழும்பக்கூடிய சாத்தானையும், மற்ற அனைத்து எதிராளிகளும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவதை அடையாளப்படுத்திகிறது.



**உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பம் இயேசுவின் மரணத்தை அடையாளப்படத்திகிறது.**

# பாடம் - 35

## சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயபிரமாணம்

**“நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் கற்பனைகளைக் கைக் கொண்டு, அவைகளின்படிசெய்தால், நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்.” - லேவியராகமம் 26:3,12**

இஸ்ரயேலர்கள் மோசேயின் வழிநடத்துதலை எதிர் நோக்கியிருந்தார்கள். மோசேயினால் சகல ஆசீர்வாதங்கள் வருகிற-தென்று அறிந்தும், அவர்களுடைய இக்கட்டான சூழ்நிலைகளில் அவரிடம் முறையிட்டார்கள். மோசே அவர்களின் மத்தியஸ்தராக இருந்தார். முரண்பாடுள்ள இருதிரத்தாரை சமாதானம் செய்து நட்பை ஏற்படுத்துவது மத்தியஸ்தரின் வேலையாகும். மோசே தேவனுடைய சித்ததை ஜனங்களுக்கு விவரித்தார் மேலும், கற்பனைகளுக்கு விரோதமாக பாவம் செய்த ஜனங்களை மன்னிக்கும் படி தேவனிடம் மன்றாடினார்.

தேவன் இஸ்ரயேல் மக்களுக்கு அநேக சட்டங்களையும் கற்பனைகளையும் கொடுத்தார், அதில் முக்கியமானது “பத்து கட்டளைகள்”. மோசே சீனாய் மலைக்கு சென்ற போது தேவன் இந்த கற்பனைகளை பற்றி விவரித்தார். எப்படிப்பட்ட உணவுகளை உண்ண வேண்டும் என்ற சில உடல் நலகுக்கான சட்டங்களும், வியாதிப் பட்டிருக்கும் போது என்ன செய்ய வேண்டும் என்றும், வணிகத்தை பற்றி நெறிமுறைகளையும், எல்லா வற்றிற்கும் மேலாக தேவனோடும், மற்ற ஜனங்களோடும் ஐக்கியப்பட்டிருக்கும் காரியங்கள் சட்டங்களாக கொடுக்கப்பட்டது. இவைகளை கேட்ட ஜனங்கள் ஶி “கர்த்தர் சொன்னவை களையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்.” (யாத்திராகமம் 19:8)

சட்டங்கள் பூரணமாக இருந்தபடியால், அபூரணமான இஸ்ரேயலர்கள் அவைகளை கடைப்பிடிக்கமுடியாமல் போனது. இவைகளை கடைபிடிக்க முயற்சி செய்வதின் மூலம் தங்களுக்கு ஒரு இரட்சகர் தேவை என்பதை ஜனங்கள் உணர வேண்டும் என்று தேவன் இதை முன் அறிந்து அனுமதித்தார். தேவன் அவருடைய இராஜ்யத்தில் இஸ்ரயேலர்களை உயிர்ப்பித்து, அவர்களோடு ஒரு புதிய

உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்ற வாக்குறுதி, தேவனுடைய மிகுந்த இரக்கமும் கிருபையுமாகும். இந்த புதிய உடன்படிகையை கடைப்பிடிப்பது சற்று எளிதாக இருக்கும், இவர்கள் இப்படி தொடர்ந்து கடைப்பிடித்தால், இந்த பூமியில் நித்தியமாக ஜீவிப்பார்கள். வனாந்திர பயணத்தில் தேவனுக்கும் இஸ்ரயேலர்களுக்கும் மோசே மத்தியஸ்ராக இருந்த சம்பவம், ஆயிர வருட ஆட்சியில் தேவனுக்கும் மனுக்குலத்திற்கும், கிறிஸ்து (கிறிஸ்து மற்றும் அவர் சபையும்) மத்தியஸ்தராக இருப்பதை அடையாளப்படுத்துகிறது.

**பத்து கட்டளைகள். யாத்திராகமம் 20:3-17**

1.என்னைத் தவிற வேறு தெய்வங்கள் உனக்கு இருக்கக்கூடாது.

2.ஒரு சொரூபத்தையாகிலும், விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவும், நாமஸ்கரிக்கவும் வேண்டாம்.

3.தேவனுடைய நாமத்தை நீ வீணிலே வழங்காதிருப்பாயாக.

4.ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிப்பாயாக.

5.உன் தாயையும், தந்தையையும் கணம் பண்ணுவாயாக.


6.கொலை செய்யாதிருப்பாயாக.

7.உன் கணவனுக்கோ, உன் மனைவிக்கோ துரோகம் செய்யாமல் இருப்பாயாக.

8.களவு செய்யாதிருப்பாயாக.

9.பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக.

10.மற்றவர்களுடைய பொருட்களை இச்சியாதே இருப்பாயாக.



**சீனாய் மலையின் மேல் தேவன் மோசேக்கு பத்து கட்டளைகளை கொடுத்தார்.**

# பாடம் - 36

## ஆசரிப்பு கூடாரத்தின் மறைபொருள்

**"...பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வாரந்தோறும் நினைவுகூறுதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே." - எபிரெயர் 10:3,4**

ஆசரிப்பு கூடாரத்திலிருந்து நாம் அநேக பாடங்கள் கற்றுக்கொள்ளலாம். இங்கு குறிப்பிடப்பட்ட ஆராதனை கூடாரமானது, தேவன் கட்டளையிட்டபடியே, மோசேயால் கட்டப்பட்டது, இது யுகங்களை பற்றி தேவனுடைய திட்டத்தை அடையாளப்படுத்தியதால், இதை மிகுந்த கவனத்தோடு கட்டவேண்டியதாக இருந்தது.

இந்த கூடாரத்தை கட்ட உதவுகிறதற்கு ஜனங்கள் மிகுந்த ஆவலோடு இருந்தார்கள். தேவைக்கு அதிகமான பொன், அழகுள்ள வஸ்திரங்களை, கொண்டுவந்தார்கள். நேர்த்தியான சிற்ப்பாசாரிகளும், வேலையாட்களும் தங்களுடைய முழு முயற்சியை பயன்படுத்தி இதை கட்டினார்கள். (யாத்திராகமம் 12:35,36, 35:29-32, 36:5).


ஒவ்வொருவருமும் பாவநிவர்த்தி செய்யும் நாளில் ஒரு காளையை பலி செலுத்தி ஆசரிப்பு கூடாரத்தின் பிரகாரத்தின் பலி பீடத்தில் தகன பலியாக செலுத்தினார்கள். வருடம்தோரும் மற்ற பலிகள் செலுத்தப்பட்டாலும் இது ஒரு விசேஷமான பலியாக இருந்தது. இதன் மூலம் தாங்கள் பாவிகள் என்றும், இனி பாவம் செய்யாதபடி தங்களை காத்து கொள்ளுவதாகவும், அவருடைய ஜனங்களாக இருக்க விரும்புகிறார்கள் என்றூம், தேவனிடம் ஜனங்கள் அறிக்கையிட்டார்கள்.

இந்த காளை நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் மனித வாழ்வை அடையளப்படுத்துகிறது. இந்த காளைக்கு ஏற்பட்ட அனைத்து காரியங்களும், சபை அங்கத்தினர்களாகிய 144,000 பேர்களை அடையாளப்படுத்தும் ஆட்டு கடாவுக்கும் சம்பவித்தது. ஒரு பூரண மனிதன் (இயேசு) மற்றொரு பூரண மனிதனுக்காக (ஆதாம்) தன்னுடைய ஜீவனை முழு விருப்பத்தோடு சிலுவையில் கொடுத்தார். இப்படியாக அனைத்து மனுக்குலமும், இந்த பூமியின் மேல் உயிர்த்தெழுந்து, நித்தியமாக ஜீவிப்பதற்கு வாய்ப்பை பெறுவார்கள்.

ஆசரிப்பு கூடாரத்தில் உள்ள பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம், மேஜை, மற்றும் ஆசாரியர்கள், பலிகள் அனைத்தும் தெய்வீக திட்டத்தின் முக்கியமான அம்சங்களை எடுத்து காட்டுகிறது. பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள மூன்று பொருட்கள்:- பொன் குத்து விளக்கு, சத்தியத்தின் வெளிச்சத்தையும், சமூகத்து அப்பங்களை சுமந்த மேஜை, (புதிய ஏற்பாட்டையும், பழைய ஏற்பாட்டையும்,) பொன்னால் செய்யப்பட்ட தூபபீடம், சபை வகுப்பார் தொடர்ச்சியாக செலுத்தும் விசுவாசம், அன்பு, மற்றும் தேவனுக்கேற்ற கீழ்ப்படிதலான தூபத்தை அடையாளப்படுத்துகிறது.

மகா பரிசுத்த ஸ்தலத்திலிருக்கூடிய ஒரே பொருள் உடன்படிக்கை பெட்டி. இந்த பெட்டி உள்ளபுறமும், வெளிபுரமும் பொன்னினால் மூடப்பட்டிருந்தது. இதற்கு பொன்னினால் செய்யப்பட்ட மூடியும் இருந்தது. மூடியின் மேல் பொன்னினால் செய்யப்பட்ட இரண்டு கேருபீன்கள் இருந்தன. இவைகளுக்கு மத்தியில் ஒரு ஒளி பிரகாசித்து, தேவன் அவர்களோடு இருப்பதை வெளிப்படுத்தியது. அந்த பெட்டியில் பத்து கற்பனைகளை கொண்ட இரண்டு பலகைகள், ஆரோனின் துளிர்த்த கோல், என்றுமே அழியாத மன்னா வைத்திருந்த பொன் பாத்திரமும் இருந்தது. இவை அனைத்தும் தேவனுடைய மிகப் பெரிய திட்டங்களின் சில பகுதிகளை எடுத்து காட்டுகிறது.

**தேவனுடைய பல திட்டங்களை ஆசரிப்பு கூடாரம் சித்திரிக்கிறது.**



# பாடம் - 37

## யோர்தானை கடப்பது

**“நீ தண்ணீர்களைக் கடக்கும்போதும் நான் உன்னோடு இருப்பேன், நீ ஆறுகளைக் கடக்கும்போதும் அவைகள் உன்மேல் புரளுவதில்லை, நீ அக்கினியில் நடக்கும்போதும் வேகாதிருப்பாய், அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது.” ஏசாயா 43:2**

இஸ்ரயேலர்களை வழி நடத்தின விசுவாசமுள்ள மோசே நேபோ மலையில் மரித்தார், அவருடைய சீஷனும், நண்பனுமான யோசுவா புதிய தலைவரானார். தேவன் மேல் இருந்த அவிசுவாசத்தினால் இந்த ஜனங்கள் நாற்பது வருடம் வனாந்திரத்தில் அலைந்தார்கள். கடைசியாக தேவன் இவர்களை வாக்களித்த கானான் தேசத்திற்கு முன் இருந்த யோர்தானுக்கு வழிநடத்தினார்.

தேவன் ஆபிரகாமுக்கு கானான் தேசத்தை வாக்களித்து 470 வருடங்கள் சென்றது, அதற்கு பின், அவருடைய சந்ததி யோர்தானை கடந்து அதை சுதந்தரித்தார்கள்.

வழக்கத்திற்கு மாறாக இந்த வருடம் யோர்தான் கரை புறண்டு ஓடினதால், அக்கரையிலிருந்த கானானியர்கள், “இஸ்ரயேலர்கள் ஒரு போதும் யோர்தானை கடக்க முடியாது” என்ற நம்பிக்கையோடு சந்தேகத்திற்கு இடமின்றி பாதுகாப்பாக இருந்தார்கள்.

தேவன் யோர்தானின் தண்ணீரை எப்படி தேக்கினார் என்று நமக்கு தெளிவாக சொல்லப்படவில்லை. ஆனால் இப்படிதான் நடந்திருக்க வேண்டும்: எபிரெயர்களின் பாளையத்திற்கு 20 மைல் மேல், ஆதாம் என்னும் ஊரில், மலையிலிருந்து ஒரு பெரும் பகுதியான நில பகுதி யோர்தானுக்குள் சரிந்திருக்கவேண்டும். அதற்கு பின் யோர்தான் நதி வழக்கமாக அதனுடைய பாதையில் செல்ல இயலாமல், ஆதாம் ஊருக்குள் திரும்ப, வழக்கமாக யோர்தான் நதியின் பாதை காய்ந்து வெட்டாந்தரை காணப்பட்டிருக்கவேண்டும், அதற்கு பின் ஜனங்கள் வெட்டாந்தரையாக இருந்த யோர்தானை கடந்திருப்பார்கள்.

உடன்படிக்கை பெட்டியை சுமந்த ஆசாரியர்கள் ஜனங்களை வழி நடத்தினார்கள். இஸ்ரயேல் மக்கள் அனைவரும் கடந்து போகும் வரைக்கும் அவர்கள் யோர்தானின் மத்தியில் நின்றார்கள்.

யோர்தானிலிருந்த 12 பெரிய கற்களை (கோத்திரத்திற்கு ஒன்றாக) எடுத்து அக்கரையில் அடுக்கப்பட்டது. அதேபோல் வேறு 12 கற்கள் கரையிலிருந்து எடுக்கப்பட்டு யோர்தானில் ஆசாரியர்களுடைய பாதத்தின் கீழ் வைக்கப்பட்டது, இந்த கற்கள் நடந்த அற்புதங்களை நினைவுக்கூறும் கற்களாக இருந்தது. (யோசுவா 3:17, 4:1-10)

கானான் தேசம் வரக்கூடிய ஆயிர வருட அரசாட்சியின் புதிய பூமியின் நிலைமையை எடுத்துகாட்டுகிறது. யோர்தான் மனுக்குலத்திற்கு எதிரான மரண தீர்ப்பை அடையாளப்படுத்துகிறது. ஜனங்கள், தேவனுடைய நீதியான சட்டங்களை அவருடைய இராஜ்யத்தில் கற்றுக் கொள்ளுவார்கள். எப்படியிருந்தாலும், சிலர் வேதனைகளை கொடுத்த பழைய வழிகளை விரும்புவார்கள். இப்படியாக இவர்கள் தொடர்ந்து இராஜயத்தில் உள்ள சட்டங்களை எதிர்த்தால், மீண்டும் உயிர்த்தெழுதல், இல்லாத இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள்.

**தேவன் யோர்தானின் தண்ணீர்களை குவித்ததால் ஜனங்கள் அந்த நதியை கடந்தார்கள்.**



# பாடம் - 38

## கானானை கைப்பற்றுதல்

**"அப்பொழுது யோசுவா அவர்களை நோக்கி, நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் பலத்துத் திடமனதாயிருங்கள் நீங்கள் யுத்தம்பண்ணும் உங்கள் சத்துருக்களுக்கெல்லாம் கர்த்தர் இப்படியே செய்வார் என்றான்." யோசுவா 10:25**

தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரயேல் ஜனங்களை அவர் காத்து. நடத்தின் விதங்களை பற்றி, வேதாகமத்தில் அநேக வழக்கத்திற்கு மாறான கதைகள் சொல்லப்பட்டிருக்கிறது.

கானானில் உள்ள எரிகோ பட்டணம் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கப்பட அநேக பலத்த மதில்சுவர்கள் கட்டப்பட்டிருந்தது. இந்த பட்டணத்தை கைப்பற்ற தேவன் ஒரு விநோதமான வழியை யோசுவாவுக்கு கட்டளையிட்டார். பட்டணத்தை சுற்றி, எக்காளங்களை ஊதிக்கொண்டு நடந்த, ஏழாம் நாளின் முடிவில் மதிலகள் சரிந்துவிழுந்தது. யோசுவாவும் அவருடைய சிறிய படையும் பட்டணத்தை எளிதாக கைப்பற்றினார்கள்.

யோசுவா சூரியனையும், சந்திரனையும், நிற்கும்படி கட்டளை கொடுத்த பின் அந்த நாள் நீண்டதை பற்றிய கதை நமக்கு மிகவும் விநோதமாக தோன்றும். எப்படியிருந்தாலும் இதை நாம் சொல் அர்த்தமாக புரிந்து கொள்ள முடியாது. ஒருவேளை அவைகள் நின்றிருந்தால், நம்முடைய சூரிய குடும்பம் அழிந்திருக்கும். வசனங்கள் சூரிய வெளிச்சத்தை பற்றியும் சந்திர வெளிச்சத்தை பற்றியும் பேசுகிறது. இவைகள் வேகமான ஒரு புயலால் மூடிப்பட்டதினால், காரிருள் தோன்றி, அதில் கல் மழை பெய்து, யோசுவாவின் அநேக எதிரிகளை கொன்றுப் போட்டது. அந்தகாரமான காரிருள் மீதியானியர்களை பயமுறுத்தி குழப்பத்திற்குள்ளாக்கியது. இவர்கள் வெளிச்சமான பகலில் இருந்தவர்கள், இன்னும் சொல்லபோனால், சூரியனை வழிப்படுபவர்கள். பகலின் அந்தகாரமும், சந்திரனற்ற இரவும் யோசுவா வெற்றியடைய சாதகமாக பயன்படுத்தப்பட்டது. சூரியனும் சந்திரனும் நின்றதர்க்கான சொல்லப்படும் விளக்கங்களில் இதுவும் ஒன்று. (யோசுவா 10:12-15)

கிதியோனுக்கு 32,000 வீரர்கள் கொண்ட படை இருந்தது. ஆனால் தேவன் அந்த படையை 300 ஆக குறைக்க வைத்தார்.

இந்த சிறிய படையை கொண்டு, கிதியோன் மீதியானியரை முறியடித்தார். அதற்கு பின் தேசம் 40 வருடம் அமைதியாக இருந்தது. இந்த் சிறிய படையை குறித்த ஆச்சரியமான சம்பவங்களை நியாயதிபதிகளின் புத்தகம் 6,7,8, அதிகாரங்களில் வாசித்து அறியலாம்.

மற்றொரு படைத் தளபதி, யெப்தா,அம்மோனியர்களை முறியடித்தால், வீடு திரும்பும் போது எதிராக வருவது எதுவோ அதை தேவனுக்கு பலி செலுத்துவேன் என்று பொருத்தனை செய்தார். வெற்றியோடு வீடு திரும்பும்போது அவனுக்குஎதிராக “வந்தது” அவருடைய ஒரே மகள், தேவனுக்கு பொருத்தனை செலுத்தினால், அதை கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும் என்று யெப்தா அறிந்திருந்தார். (பிரசங்கி 5:4,5) பொருத்தனை செய்தால் அதை நிறைவேற்ற வேண்டும் அல்லது பொருத்தனை செய்யாமல் இருப்பதே நலம், இதை அறிந்தயெப்தாவின் மகள் தகப்பனிடம் போராடவில்லை, ஆனால் பொருத்தனையை செலுத்தும் முன், அவள் தன் தோழிகளுடன் மலைகளுக்கு சென்று, மீதியிருக்கும் அவளுடைய வாழ்க்கையை தேவனுடைய பணிகளை செய்வதற்கு முழுமையாக அற்பணிக்கவும், கணவன் மற்றும் பிள்ளைகள் இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு ஆயத்தம் செய்து கொள்ள கால அவகாசத்தை கேட்டாள். (நியாயதிபதிகள் 11ம் அதிகாரம்).

**யெப்தாவின் குமாரத்தி தேவனுக்காக அவளுடைய தகப்பனால் கொடுக்கப்பட்டாள். அவள் திருமணம் செய்து கொள்ளாமல், தேவனுக்காக தன்னுடைய வாழக்கையை அற்பனித்தாள்.**



# பாடம் - 39

## தாவீது ராஜாவின் அபிஷேகம்

**“கர்த்தர் சாமுவேல் நோக்கி, நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீரவளர்ச்சியையும் பார்க்கவேண்டுடாம், நான் இவனைப் புறக்கணித்தேன். மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன் மனுஷன் முகத்தைப்பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார், என்றார்.” - 1சாமுயேல் 16:7**

தங்களை சுற்றி இருக்கும் தேசங்களில் ராஜாக்கள் இருப்பது போல இஸ்ரயேலர்களும் தங்களுக்கு ஒரு இராஜா வேண்டும் என்றார்கள். பிதாவாகிய சாமுயேல் மூலமாக அவர்களை நியாயம் விசாரித்து, வழிநடத்தினார். ஆனால் இஸ்ரயேலர்கள் ஒரு மனித ராஜா, மற்றும் அரண்மனையில் வாழும் ஒரு ராஜரீகமான குடும்பம் வேண்டும் என்றார்கள். இந்த ஜனங்களை பிரியப்படுத்தும் படி, தேவன் சவுலை இஸ்ரயேலுக்கு முதல் ராஜாவாக தெரிந்தெடுத்தார்.

சவுல் அழகுள்ள, உயரமான, பலசாலியான வாலிபனாக இருந்தார். ஆதியில் மனத்தாழ்மையுள்ளவனாக, தேவனுக்கு பயந்து, மக்களை நீதியான பாதையில் நடத்தினார். ஆனால், சில வருடங்களுக்கு பின் தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாமல் போனார்.

தேவன் அமலேக்கியரை முழுவதும் அழித்து அவர்களுடைய உடமைகளை முற்றிலுமாக அழித்து விட கட்டளையிட்டிருந்தும், சவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் அவர்களுடைய இராஜாவை சிறைப்படுத்தி, முதல்தரமான ஆடு, மாடுகளை உச்சிதமானவைகளையும் அழிக்காமல் வைத்தார்கள். சாமுயேல் இதை குறித்து விசாரித்த போது, தேவனுக்கு பலி செலுத்துவதற்காக இவைகளைக் கொண்டு வந்தேன் என்றார். (1சாமுயேல் 15:22) பலியை காட்டிலும் கீழ்படிதலே உத்தமம் என்று சாமுயேல் பதில் அளித்தார். இதற்கு பின் தேவன் ராஜ்யபாரத்தை சவுலிடமிருந்து நீக்கிவிட்டார்.

ஈசாயின் குமாரனில் ஒருவனை இஸ்ரயேலுக்கு அடுத்த ராஜாவாக தெரிந்தெடுத்தேன் என்றும், அவனை அபிசேஷகம் செய்யும் படி தேவன் சாமுயேலிடம் சொன்னார். ஈசாயின் ஏழு குமாரர்கள் சாமுயேலை கடந்து சென்றார்கள், இவர்கள் உயரமானவர்களும்,

சௌந்தரியமுள்ளவர்களாகவும் இருந்தார்கள், ஆனால் தேவன் அவர்கள் அனைவரையும் நிராகரித்தார். சாமுயேல் மிகவும் ஆச்சரியம் அடைந்து, ஈசாயிடம் அவருடைய பிள்ளைகள் இவ்வளவு தானா என்று கேட்டார். அப்பொழுது ஈசாயி தனக்கு கடைசியாக ஒரு மகன் ஆடுகளை மேய்த்து கொண்டிருப்பதாக அறிவித்தார். தாவீது வந்தவுடன் தேவன் சாமுயேலை நோக்கி, "எழுந்து அபிசேஷகம் செய்" என்றார். அவர் எழுந்து ஒலிவ் எண்ணையை தாவீதின் தலையின் மேல் ஊற்றினார், தேவனுடைய ஆவி அவர் மேல் வந்தது. (1சாமுயேல் 16:12,13).

தாவீது என்பதற்கு நேசிக்கப்பட்டவன் என்று அர்த்தம், அவர் இயேசுவுக்கும், அவருடைய விசுவாசமுள்ள சகோதர சபைக்கும் முன் அடையாளமாக இருப்பதினால் அவரைப் பற்றி காரியங்களை அறிந்து கொள்ளுவது மிகவும் அருமையாக இருக்கும்.

தாவீது இராஜாவாக முடிசூட்டப்படுவதற்கு பல வருடங்களுக்கு முன் அபிசேஷகம் செய்யப்பட்டார். அந்த வருடங்களில் தாவீது ராஜாவாக பணிபுரிவதற்கு அநேக சோதனைகளின் மூலம் கிடைத்த அனுபவத்தினால், தன்னை ஆயுத்தம் செய்தார். அதேபோல் இயேசுவுக்கும் அவருடைய சபை மக்களுக்கும் அடுத்த யுகத்தில் ஆளுகை செய்வதற்கும், ஆசாரியர்களாக இருப்பதற்கும், அநேக சோதனைகள் மூலமாகவும், உபத்திரவங்களின் மூலமாக ஆயத்தப்படுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி கொடுக்கப்படுகிறது.

**தாவீது இராஜாவாக முடி சூட்டப்படுவதற்கு பல வருடங்களுக்கு முன் அபிசேஷகம் பண்ணப்பட்டார்.**



# பாடம் - 40

## சவுலின் பொறாமை

**"....நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது...."- உன்னதப்பாட்டு 8:6**

இராஜாவாகிய சவுல் உயரமான மனிதனாகவும், பார்வைக்கு அழகுள்ளவனாகவும் ஞானமுள்ளவனாகவும், மனுஷர்களால் விரும்பபட்டவனுமாக இருந்தான். ஆனால் சவுல் மற்ற இராஜாக்களை போல் ஜனங்களை ஆட்சி செய்ய முயற்சித்தான். அவனுடைய ராஜ்யம் மற்ற ராஜ்யங்களைப் போல் இல்லை என்பதை அவன் முற்றிலுமாக நிராகரித்தான். அதே சமயத்தில், இஸ்ரயேலுக்கு தேவனே இராஜாவாக இருக்கிறார் என்றும் அவர் தேவனை பிரதிபலிக்கூடியவராக, ஒவ்வொரு காரியத்திலும் தேவனால் வழிநடத்தப்பட வேண்டும் என்ற உண்மையை முற்றிலுமாக புறக்கணித்தார்.

ஆனால் தாவீது தேவனுடைய சித்ததை செய்ய ஆவலாய் இருந்தார். அது மட்டும் அல்ல, அவர் தவறு செய்யும் போது குற்றம் உணர்ந்தவனாக இருந்தார். ஆகவே "தேவனுடைய இருதயத்திற்கு பிரியமான தாசன்" என்று அழைக்கப்பட்டார். (1சாமுயேல் 13:14, அப்போஸ்தலர் 13:22)

சவுல் வழக்கத்திற்கு மாறாக பயமும் அழுத்தமும் கொண்டிருக்கும் நேரத்தில், தாவீது கரமண்டலாம் வாசிக்க, அவன் மகிழ்ச்சி அடைந்தான். ஒரு சமயம் பெலிஸ்தியர்களும், கோலியாத்தும் இஸ்ரயேலை கலங்கடித்த போது தாவீதின் தைரியமும் விசுவாசமும் யுத்தத்தை ஜெயித்தது. அப்பொழுது சவுல் தாவீதை மெச்சி கொண்டான். ஆனால், ஜனங்கள் சவுலை விட தாவீதை புகழ்ந்து பாடின போது, அவன் மிகவும் கோபமடைந்து, பொறாமை கொண்டு அந்த இளைஞனை கொல்ல முயற்சித்தான்.


தாவீதை கொல்லுவதற்கு, சவுல் தன்னுடைய துன்மார்க்கமான சதி ஆலோசனைகளை செயல்படுத்த தன்னுடைய மகன் யோனத்தானின் உதவியை நாடினான். ஆனால் யோனத்தான் தாவீதை மிகவும் நேசித்ததினால் சவுலின் உக்கிர கோபத்திலிருந்து தாவீதை தப்புவித்தான். தாவீதை

அபிசேஷகித்தது. இரகசியமாக இருந்தாலும், தேவனுடைய கிருபை தாவீதோடு இருந்ததை சவுல் உணர்ந்ததினால் அவனுக்குள் பொறாமை அதிகரித்தது.

கோபம் கொண்ட சவுலினால், தாவீதின் உயிர் எப்போதுமே அபாயத்திலிருந்தது. ஆகவே, தேவன் தாவீதை இராஜாவாக முடி சூட்டுவதற்கான குறித்த காலம் வரைக்கும் தாவீது காத்திருப்பது மிக கடினமான சோதனை காலமாக இருந்தது. எப்படியிருந்தாலும், அவர் அநேக விலையுர்ந்த பாடங்களை பொறுமையாக கற்றுக் கொண்டார்.

தாவீது தாழ்மையுள்ளவராக, இருந்தாலும் அவர் மிகுந்து தைரியமானவராகவும் இருந்தார். கர்த்தரின் நாமத்தை கொண்டு பயமில்லாமல் கோலியாத்தை கொன்றார். அவர் தைரியமுள்ளவராக மட்டும் அல்ல, இரக்கமுள்ளவராகவும் இருந்தார். சவுல் அவரை கொல்ல முயற்சித்த போது ஓடி ஒளிந்தார், ஆனால் சவுலை கொல்லுவதற்கு இரண்டு வாய்ப்புகள் கிடைத்தபோது அவரை கொல்ல வில்லை, (1சாமுயேல் 24:10) தேவனால் அபிஷேஷகம் செய்த என் ஆண்டவன் மேல் கை போடமாட்டேன் என்றார்.

**கோபமடைந்த சவுல் பொறாமை கொண்டு தாவீதை கொல்ல முயற்சி செய்தான்.**



# பாடம் - 41

## சவுல் தேவனுக்கு கீழ்படியவில்லை

**“இப்படியிருக்க, நீர் கர்த்தருடைய சொல்லைக்கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்றான்.” - 1சாமுயேல் 15:19**

பிதாவாகிய தேவன் சாமுயேல் தீர்க்கதரிசியின் மூலமாக இராஜாவாகிய சவுலுக்கு அநேக கட்டளைகளை கொடுத்திருந்தார். சவுல், எப்படியிருந்தாலும், தன் சொந்த சித்தத்தையும், மனவிருப்பத்தையும் செயலாற்றி வந்தான். அமலேக்கியர் துன்மார்க்கமான ஜனங்களாக இருந்தார்கள். இவர்கள் இஸ்ரயேலர்களோடு, போரிடும் போது, தேவன் சவுலை நோக்கி, அனைவரையும் வெட்டி போட்டு, அவர்களுடைய உடமைகளை ஒன்றையும் எடுக்கவேண்டாம் என்று கட்டளையிட்டார்.

சவுல், இராஜாவாகிய ஆகாகை சிறைபிடித்தது, மட்டும் அல்ல, அங்குள்ள முதல்தரமான ஆடு, மாடுகளையும் எடுத்து கொண்டான். சாமுயேல் இதை குறித்து கேட்ட போது, தேவனுக்கு பலி செலுத்த எடுத்து வந்தோம் என்றான். இதற்கு சாமுயேல் சொன்ன பதிலில் நமக்கு ஒரு சிறந்த பாடம் உள்ளது. (1சாமுயேல் 15:22)” அதற்குச் சாமுயேல், கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் “என்றார்.”

வெட்டப்பட்ட மக்கள் நித்தியமான ஆக்கினைக்கு (நரகத்தின் நெருப்பு) சென்றிருந்தால், தேவன் இந்த மக்களை வெட்ட சொன்ன காரியம் மிக பயங்கரமானதாக இருந்திருக்கும். ஆனால் வேதாகமம் “மரித்தோருக்கு” இப்படிப்பட்ட ஒரு இடம் இருப்பதாக போதிப்பதில்லை. ஏன் என்றால், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலம் பூமியில் முழு குடும்பங்களும் உயிரோடு எழுப்பப்படுவார்கள். தேவன் ஆதாமுக்கு மரண தீர்ப்பை கொடுத்தார். அதற்கு அனைவரும் மரிக்க வேண்டும் என்று பொருள். இப்படியிருக்க மக்கள் யுத்தத்திலோ, பஞ்சத்திலோ, வியாதியிலோ, எப்படி மரித்தாலும் பிரச்சனை இல்லை. ஏன் என்றால், தேவன் அவருடைய இராஜ்யத்தில், அனைவரையும்

உயிர்ப்பித்து, நித்தியமாக வாழ்வதற்கு ஒரு வாய்ப்பை, ஏற்ற சூழ்நிலைகளையில் ஏற்படுத்திக் கொடுப்பார்.

வேதாகமம் போதிக்கும் சத்தியங்களில், அனைத்து ஜனங்களின் உயிர்த்தெழுதலை பற்றிய சத்தியம் ஒரு அற்புதமான சத்தியமாகும். (யோவான் 5:28, 29) இந்த வாழ்க்கையில் அவருடய சத்தியத்தையும் அவருடைய திட்டங்களையும் அறியாதவர்களுக்கு அடுத்த யுகத்தில், மேசியாவின் ஆட்சியில், வாய்ப்பு கிடைக்கும்.

கடந்த காலங்களில் வேதாகமத்தை வாசிக்க தடை செய்யப்பட்டதாலும், அல்லது அவைகளை படிக்க தெரியாததினாலும், ஜனங்கள் அறியாமையிலிருந்தார்கள். இருண்ட யுகத்தில் கைகளினால் எழுதப்பட்டதால், சில வேதாகமங்கள் மட்டுமே இருந்தது. ஒரு வேதாகமத்தை எழுதுவதற்கு பல மாதங்களும், வருடங்களும் சென்றது. ஆனால், இன்று நமக்கு அச்சடிக்கும் இயந்திரங்கள் இருப்பதினால், மனுக்குலத்திற்காக தேவனுடைய திட்டங்களையும், நோக்கங்களை வாசிக்கவும், கற்று கொள்ளவும் அநேக வேதாகமங்கள் இருக்கிறது. இன்றைக்கு அநேகர் பல விதமான வேதாகமங்களையும், வேத அகராதிகளையும், ஒத்தவாக்கியங்களையும், பயன்படுத்தும் அளவுக்கு வசதிகள் பெருகியுள்ளது.



**முற்காலத்தில் நடந்த யுத்தங்களில் மாண்ட அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.**

# பாடம் - 42

## எந்தோரில் இருந்த சூனியக்காரி

**"....குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும். அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், .....உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம் ...இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார்." - உபாகமம் 18:10-12**

ஜலப்பிரளயத்திற்கு முன் கீழ்ப்படியாமற்போன தூதர்கள், இனி, மனிதர்களை போல் இந்த பூமியில் வாழ அனுமதிக்கப்படவில்லை. மேலும், அவர்கள், விட்டு வந்த பரலோகத்திற்கு திரும்பி போகவும் வாய்ப்பு இல்லை. இவர்களின் கீழ்ப்படியாமைக்கு தண்டனையாக இந்த பூமியை சுற்றியிருக்கும் இடங்கள் மட்டுமே இவர்களுக்கு அனுமதிக்கப்பட்டது. இங்கு இவர்களை அனுமதிக்கும் மனிதர்களின் மூலம் அதரிசனமாக செயலாற்றுகிறார்கள். இப்படியாக செயல்படும் மக்களை ஊடகம் என்றும் அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் மக்களை வஞ்சிப்பதற்கு சாத்தானோடு செயலாற்றுகிறார்கள். இவர்களைவிட்டு விலகி இருப்பது நலமாயிருக்கும். இவர்கள் குடிபோகும் கானான் தேசத்தில் இப்படிப்பட்ட சூனியக்காரர்களையும், அஞ்சனம் பார்க்கிறவர்கலையும் விரட்ட அல்லது கொன்று போடவும் இஸ்ரயேல் மக்களுக்கு மோசே கட்டளையிட்டார்.

சவுல் இந்த யுத்தத்தில் பயந்து தோல்வியடைவான் என்று அறிந்து, பெலிஸ்தியர்கள் இராஜாவாகிய சவுலுக்கு விரோதமாக யுத்தம் செய்ய பாளையம் இறங்கினார்கள். ஆனால், எவ்வகையிலும், ஒத்தாசை பெறுவோம் என்று நம்பிக்கையோடிருந்தான். ஒரு காலம் வரைக்கும் தேவன் அவனை வழி நடத்தினார், ஆனால் இப்பொழுது அரசனாகிய சவுல் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ததால், தேவனிடமிருந்து எந்த உதவிகளையும் பெற முடியாமல் போனது. விரக்த்தியடைந்த சவுல், மரித்த சாமுயேலிடம் அறிவுடைகளை கேட்ட எந்தோரிலிருக்கும் ஒரு சூனியக்காரியை தேடி போனான். (1சாமுயேல் 28:3-25)

மரித்த சாமுயேல் சூனியக்காரிக்கு பதிலளிக்க இயலாததினால், சீர்க்கெட்ட தூதர்களும், தீய ஆவிகளும் சாமுயேலை போல பேசினார்கள். இவர்கள் அந்த சூனியக்காரிக்கு கொடுத்த தகவல்கள், அவள் உண்மையில் சாமுயேலை கண்டு பேசினது, போல் சவுலை நம்ப

வைத்தது. சவுலின் படைகள் அடுத்த நாள் தோல்வி அடைந்து, அவனும், அவன் படைகளும் மரிப்பார்கள் என்று முன் அறிவித்தாள். ஆனால் அந்த யுத்தம் இரண்டு மூன்று நாட்களுக்கு பின்தான், நடந்தது மேலும், சவுலும், அவன் மூன்று குமாரர்களும் கொல்லப்பட்டார்கள். (தாவீதின் நெருங்கி நண்பனான யோனத்தான் உள்ப்பட) ஆனால் இரண்டு குமார்கள் தப்பி, பல வருடங்கள் உயிரோடு இருந்தார்கள்.

விழுந்து போன இந்த தூதர்கள் சாத்தானுடன் சேர்ந்து, “நீங்கள் சாகவே சாவதில்லை” (ஆதியாகமம் 3:4) என்று ஏதேனில் சாத்தான் ஏவாளிடம் சொன்ன பொய்னை, தொடர்ந்து சொல்லி கொண்டு வருகிறார்கள். இப்படியாக சாத்தான் மூலமாக செய்திகளை சேகரிக்கும் மக்கள், மரித்தவர்களிடம் செய்திகளை பெறுவதாக சொல்லுகிறார்கள், ஆனால் “மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்” என்று வேதாகமம் நமக்கு உறுதியளிக்கிறது. (பிரசங்கி 9:5,10).

**மரித்த சாமுயேலை போல வேஷம் போடுவதற்கு எந்தோரில் இருக்கும் “சூனியக்காரி” தீய ஆவிகளை பயனப்படுத்தினாள்.**



# பாடம் - 43

## தாவீது மனம் வருந்தினார்

**“கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, ... எந்த மகனையும் தண்டிக்கிறார்.” - எபிரெயர் 12:6**

மக்களை பற்றி விவரிக்கும் போது, நம்முடைய வேதாகமம் முற்றிலும் உண்மையாக உள்ளது. தாவீதின் நல்ல கிரியைகளையும், வீரமான செயல்களையும் விவரிக்கப்பட்ட அளவுக்கு அவருடைய தவறுகளும் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. தாவீது ஒரு தாழ்மையான மேய்ப்பனாக இருந்தார். ஒரு வீரமுள்ள சேவகனாகவும், அரசனாகிய சவுலின் மகனாகிய யோனத்தானுக்கு நெருங்கிய நண்பனாகவும் இருந்தார். அவரை மிகவும் வெறுத்த மன்னருக்கு ஒரு விசுவாசமுள்ள பிரஜையாக வாழ்ந்து வந்தார்.

ஆனால் தாவீது தன்னுடைய மாம்ச பலவீனத்தால் மேற்கொள்ளப்பட்டு, தன்னுடைய படை வீரனாகிய உரியாவின் அழகான மனைவி பெத்சேபாளை தனக்கு மனைவியாக்கி கொள்ள அவர் யுத்தத்தில் உரியாவை கொன்று போட்டார்.

மரித்திருந்த தாவீதின் மனசாட்சியை உணர்த்தும் படி தேவன் அவருடைய தீர்க்கதரிசியான நாத்தானை அனுப்பினார். ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன், ஏழையின் ஒரே ஆட்டுக்குட்டியை விருந்தாளிக்கு சமைத்ததை பற்றிய ஒரு கதையை நாத்தான் தாவீதுக்கு சொன்னபோது, அவர் மூர்க்க கோபம் அடைந்தவராக அந்த மனிதனுடைய பெயரை கேட்டார்.

அப்பொழுது நாத்தான் “அந்த மனிதன் நீரே” என்று பதில் அளித்தார். இந்த சம்பவம் தாவீதை தாழ்மைப்படுத்தியது. தன்னுடைய குற்றங்களை உணர்ந்து, மனம் வருந்தி, அழுது தேவனிடம் அவர் உடனடியாக மன்னிப்பு கேட்டார். அவர் உண்மையில் உணர்வு அடைந்ததினால் தேவன் அவருடைய பாவங்களை மன்னித்தாலும், அவருடைய தீய செயலுக்காக தேவன் அவரை தண்டித்தார். (11சாமுயேல் 12:1-25).

புதிய ஏற்பாடிலும், பழைய ஏற்பாட்டிலும், வேதாகமம், உண்மையான காரியங்களை மட்டுமே விவரிக்கிறது. ஆபிரகாமை

விசுவாசமுள்ளவராக இருந்து. "தேவனுடைய சிநேகிதன்" என்று அழைக்கப்படிருந்தாலும், (யாக்கோபு 2:23), அவர் வாழ்க்கையில் சில தவறுகளையும் செய்ததை வேதாகமம் சுட்டிக்காட்டுகிறது.

அப்போஸ்தலர்கள் அநேக தவறுகளை செய்தார்கள். இயேசு குற்றம் சாட்டப்பட்டு, சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட போது, அவருக்கு அன்பான சிநேகிதன், சீமோன் பேதுரு, மிகவும் பயந்ததினால், அவரை மறுதலித்தார். யூதாஸின் இடத்தை பிடித்த அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு கொடூரமான மனிதனாக இருந்தார். ஆதி சபையை துன்புறுத்தி, ஸ்தேவானை கல்லெறியும் படி உத்தரவு கொடுத்தார். பேதுருவும், யோவானும் பள்ளி செல்லாத, சராசரி மனிதர்களாக இருந்தார்கள் (ஆப்போஸ்தலர் 4:13).

நாம் தேவனிடம் மன்னிப்பை கேட்கும் போது, அவர் நம்மை நேசித்து, நமக்கு உதவி செய்து, இன்னும் உத்தமமாக வாழ்வதற்கு ஊக்குவிக்கிறார். தவறுகள் செய்திருந்த போதும் தாவீது தன்னுடைய இருதயத்தில் தேவனுக்கு முன் விசுவாசமுள்ளவராக இருந்தார். அவர் இஸ்ரயேலரால் விரும்பப்பட்ட ஒரு அரசனானார். மேலும், தேவன் அவருடைய சந்ததிக்கு, வரக்கூடிய ராஜ்யத்தை வாக்களித்தார்.

**நாத்தான் தாவீதை பார்த்து, "நீரே அந்த மனிதர்" என்றார்.**



# பாடம் - 44

## மகிமை அடைந்த சாலோமோன்

**"கர்த்தருக்கும் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், பரிசுத்தரின் அறிவே அறிவு" - நீதிமொழிகள் 9:10**

இராஜாவாகிய தாவீது தன்னுடைய முழு இருதயத்தோடு தேவனை நேசித்தார், ஆனாலும் அவருடைய அதிகமான வருடங்களை யுத்தங்களில் செலவழித்தார். அவர் தேவனுக்கு ஒரு ஆலயத்தை கட்ட விரும்பும்போது, அவர் அனுமதிக்கப்படவில்லை. இந்த பூமியில் வாழ்ந்த மற்றவர்களைபோல் தாவீதும் அநேக வேதனைகலையும், சோதனைகளையும், அடைந்து, அதிகமான பாடங்களை கற்றுக்கொண்டார்.

இராஜாவாகிய சாலோமோன் தாவீதுக்கும் பெத்சேபாளுக்கும் பிறந்த இரண்டாவது மகனாவார். அவருடைய மூத்த சகோதரர்கள் மரித்த போது சிங்காசனத்திற்கு உரிமையாளரானார். அவர் நாத்தான் தீர்க்கதரிசியால் போதிக்கப்பட்டு வளர்க்கப்பட்டார். அவர் அமைதியாகவும், செழிப்பாகவும் ஆட்சி புரிந்தார், மேலும் தேவனுடைய ஆலயத்தை கட்ட அனுமதிக்கப்பட்டார். அவருடைய ஐஸ்வரியத்தையும், ஞானத்தையும் கண்டு உலகம் பிரமித்தது. தேவனுடைய மகிமையிலிருந்த தேவனுடைய ஜனங்களை போல், சாலோமோன், அளவிடமுடியாத ஐஸ்வரியத்திலிருந்து ஞானமாக ஆசீர்வதித்தார்.

சாலோமோனின் கீர்த்தி நாகரீகமடைந்த உலகம் முழுவதும் பரவிற்று. அரபு தேசத்தின் தென் பகுதியில் வாழ்ந்த ஐஸ்வரியமுள்ள சேபா நாட்டின் இளவரசி அவரை காண வந்தாள். அவள் கண்டு பிரமிப்படைந்தாள். "இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை..." என்றாள். (1இராஜாக்கள் 10:7).

நாத்தான் மரணம் அடைந்த பின்பு இராஜாவாகிய சாலோமோன் மற்ற தெய்வங்களை வழிப்பட தொடங்கினார். ஆகவே மேசியாவாகிய இயேசு அவருடைய வம்சத்தில் வரும் வாய்ப்பை எடுத்து விட்டார்.

இயேசு தேவனுடைய பரிபூரண குமாரனாக இருந்தார் மேலும், அவர் சலோமோனை விட ஞானமுள்ளவராக இருந்தார். ஆனால்

அவருடைய ஜனங்கள் அவரை பெருமை பாராட்டவில்லை. அவர்கள் பலமுள்ள ஒரு யுத்த வீரனையும், ஐசுவரியமுள்ள அரசனையும் தந்திரமுள்ள ஒரு ஆளுநரையும் விரும்பினார்கள். இயேசு ஒரு எளிமையான தச்சனுடைய குமாரன் என்றும், அவர் பூக்கள், மீன்கள், சராசரி மனிதர்களை பற்றியும் பேசிகொண்டிருந்தார் என்று அவர்கள் கேள்விப்பட்டார்கள். சிலர் மட்டுமே ஈர்க்கப்பட்டார்கள்.

ஆவிக்குரிய காரியங்களை அறிந்து மெச்சி கொள்ளுவதற்கு, புரிந்துகொள்ளக்கூடிய “மணக்கண்கள்” திறந்திருக்க வேண்டும். (மத்தேயு 13:16) அப்போது நாம் தேவனுடைய அன்பின் ஆழத்தையும், அகலத்தையும், உயரத்தையும் உணர முடியும்.

இக்காலத்தில் (சுவிசேஷ யுகத்தில்) சிலருடைய மனக்கண்கள் மட்டுமே திறந்திருக்கும். தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய அன்பு, ஞானம் மற்றும் அவருடைய ஐசுவரியத்தையும், அவருடைய குமாரனைப் பற்றிய அறிவை ஒவ்வொருவரும் பெற்றிருப்பார்கள். அப்பொழுது, அவர்கள் தேவனை உண்மையோடும், ஆவியோடும் தொழுது கொள்ளுவார்கள் (யோவான் 4:24).

**சாலோமோனின் மகிமையை கண்ட சேபா நாட்டு இளவரசி வியப்பு அடைந்தாள்.**



# பாடம் - 45

# ஆலயம்

**“தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது, நீங்களே அந்த ஆலயம்.” - (1கொரிந்தியர் 3:17)**

இராஜாவாகிய தாவீது தேவனுடைய வீடாகிய ஆலயத்தை கட்ட மிகவும் வாஞ்சித்தார். அவருடைய ஆட்சியில் அநேக யுத்தங்களை நடத்தி இரத்தம் சிந்தினதால், தேவன் ஆலயத்தை கட்ட அனுமதிக்க வில்லை. (1நாளாகமம் 22:8) பூமியில் வாழும் சபை மக்கள், இராஜாவாகிய தாவீதை அடையாளப்படுத்துகிறார்கள்.

மகிமையடைந்த சபையை, ஆலயம் கட்டின சாலொமோன் இராஜா அடையாளப்படுத்துகிறார். அவருடைய அமைதியான ஆட்சி கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சியை சித்தரிக்கிறது.

வனாந்தரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஆசரிப்பு கூடாரம், இஸ்ரயேலர்களின் மத்தியில் தேவனுடைய தற்காலிகமான வாசஸ்தலத்தை அடையாளப்படுத்துகிறது. அதற்கு பின்பு ஆலயம் அதனிடத்தில் கட்டப்பட்டு, தேவன் அவர்களோடு என்றும் வாசம் செய்வார் என்பதை உணரவைத்தது.

ஆலயத்திற்கும், ஆசரிப்பு கூடாரத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஆசரிப்பு கூடாரம் தற்காலிகமான அமைப்பும், ஆலயம் நித்தியமான அமைப்பாகும்.

ஆசரிப்பு கூடாரம் சுவிசேஷ யுகத்தில் உள்ள சபையையும், அதாவது தற்காலிகமான வீட்டில், நித்தியமான ஆவிக்குரிய ஆலயமாக கட்டப்பட ஆயத்தப்படுகிறார்கள்.

ஆலயம் மகிமை அடைந்த சபையை அடையாளப்படுத்துகிறது. சாலோமோனின் ஆலயத்தை ஆயிரக்கணக்கான வேலை ஆட்கள், ஏழு வருடங்களுக்குள் கட்டி முடித்தார்கள். சுத்தியல், கோடாரி, இருப்பு ஆயுதங்கள், வாச்சுகளின் சத்தம் கேட்கப்படாமல், இந்த ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. (1இராஜாக்கள் 6:7) அதே போல் நடப்பது என்ன என்பதை மற்றவர்கள் அறியாத போதிலும், சபையின் ஒவ்வொரு அங்கத்தினர்களும் செப்பனிடப்பட்டு, பணித்தீர்க்கப்பட்டு ஆவிக்குரிய ஆலயத்தில் பொருத்தப்படுவார்கள்.

வேகமாக ஓடும் இந்த உலகத்தை விட்டு, தனித்து தேவனை துதிக்கவும், ஆராதிக்கவும் ஆலயம் மிக சிறந்த ஓர் இடமாக இருந்தது. தேவனை தொழுது கொள்ள பரிசுத்தமாகவும், தனியாகவும் அமைக்கப்பட்டிருந்தது. மிக நேர்த்தியாகவும், மகிமையுள்ளதாக நித்தியமாக இருப்பதற்காக கட்டப்பட்டது. ஆனால் கி.மு 606 ல் சாடியன்ஸ் யூதேயாவை கைப்பற்றின போது சாலோமோன் கட்டிய ஆலயம் முற்றிலும் அழிக்கப்பட்டது. அநேக நாட்கள் சென்ற பின்பு, இயேசுவின் காலத்தில் அரசனாகிய ஏரோது, அதே இடத்தில் மற்றொரு ஆலயத்தை கட்டினான். அந்த ஆலயமும் காலபோக்கில் அழிக்கப்பட்டது.

இயேசு கிறிஸ்துவை பின் பற்றினவர்கள் தேவனுடைய ஆவிக்குரிய ஆலயமாக கட்டப்படுவதற்கு தங்களை தகுதிப்படுத்தி கொண்டிருக்கிறார்கள். தாவீது தன்னுடைய வாழ்க்கை முழுவதும், தேவ ஜனங்களை எதிர்த்தவர்களை எதிர்த்துப் போராடினது போல, தேவனுடைய பிள்ளைகள் தங்களுடைய வாழ்நாட்களில், அவர்களுடைய பாவத்தில் இருந்து விடுபட போராடிக்கொண்டு இருக்கிறார்கள். தேவனுடைய ஆலயத்தில் அவருடைய விசுவாசமுள்ள பரிசுத்தவான்கள் அனைவரும் “ஜீவனுள்ள கற்களாக” இருப்பார்கள் (1பேதுரு 2:4,5)

**தாவீது யுத்த மனிதனாக இருந்ததினால், ஆலயம் கட்ட அனுமதிக்கப்பட வில்லை.**



# பாடம் - 46

## பாகாலின் தீர்க்கதரிசிகளும் எலியாவும்

**(1இராஜாக்கள் 18:21)**


திஸ்பியனாகிய எலியா தேவனுக்கு விசுவாசமுள்ள ஊழியக்காரனாகவும், தீர்க்கதரிசியாகவும் இருந்தார். அப்பொழுது ஆகாப் இஸ்ரயேலுக்கு இராஜாவாக இருந்தான். அவனுடைய மனைவி யேசபேல் மிகவும் பொல்லாதவளாக இருந்தாள். அவளுடைய தந்தையின் தெய்வங்களான அசேரா என்ற வன தெய்வத்தை, மரங்களாகவும், கம்பங்களாகவும், பாகாலை கல் தூண்களாகவும் வழிப்பட்டாள். இப்படியாக இஸ்ரயேல் ஜனங்கள் வழிபடுவதற்கு தன்னுடைய வீடாகிய தீருவிலிருந்து நூற்றுக் கணக்கான கள்ள தீர்க்கதரிசிகளை கொண்டு வந்தாள். எல்லாவற்றிக்கும் மேலாக, தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசிகளையும் கொன்றுபோட்டாள்.

எலியா ("யேகோவாவே என் தேவன்" என்று பொருள்) தைரியமாக வல்லமையுள்ள ஆகாபை எதிர்த்து, இந்த தேசத்தில் பல ஆண்டுகளுக்கு கடுமையான பஞ்சமுண்டாகும் என்றார். இதனால் ஆகாப் மூர்க்க கோபமடைந்து, எலியாவை கொலை செய்ய முடிவு செய்தார். ஆனால், தேவன் அவரை கீலேயாத் நீருற்று அண்டையில் மறைத்து, காகங்கள் மூலம் இரண்டு முறை போஷித்து காத்தார். காலம் செல்ல நீர் ஓடை காய்ந்தது. எப்படியிருந்தும், தேவன் எலியாவை போஷிக்க ஒரு விதவை வீட்டுக்கு அனுப்பினார். அவளும், தன் மகனும் உணவின்றியிருந்தனர். மழை பெய்யும் வரைக்கும், தேவனுடைய வல்லமையினால் விதவையின் வீட்டின் பானையில் மாவும், கலயத்தில் எண்ணையும் குறையவில்லை. சில காலங்களுக்கு பின்பு அந்த விதவையின் மகன் வியாதிப்பட்டு மரித்த போது, எலியா அவனை உயிரோடு எழுப்பினார்.

கடைசியாக, யேகோவாவே உண்மையான தேவன் என்று ஜனங்களுக்கு உணர வைக்க எலியா வந்தாரே தவிர, இராஜாவிடம் சரணடைய வரவில்லை. அவர் 800 பாகாலின் ஆசாரியர்களையும், தீர்க்கதரிசிகளையும் வரவைழத்து அவர்களுடைய தெய்வத்திற்கு ஒரு பலியை ஆயத்தம் செய்யச் சொன்னார். எலியாவும் ஒரு பலிபீடத்தை

கட்டினார். இரண்டு பலிபீடங்கள் மேலும் காளைகள் வைக்கப்பட்டது. இருவரும் வானத்தில் இருந்து அக்கனி புறப்பட்டு வந்து பலி பொருளை எறித்துப் போட விண்ணப்பம் செய்யவேண்டும். அந்த நாள் முழுவதும் பாகாலின் தீர்க்கதரிசிகள் பலியை ஏற்று கொள்ளுவதற்கு பாகாலை கூப்பிட்டார்கள். எந்த வித பதிலும் கிடைக்கவில்லை. ஆகவே அந்த தீர்க்கதரிசிகள் மிகவும் சத்தமிட்டு பலிபீடத்தின் முன் குதித்தார்கள். கடைசியாக அவர்கள் தங்களை கத்திகளால் கீறிக் கொண்டு இரத்தம் சொட்ட சொட்ட அழைத்தார்கள். ஆனாலும் அவர்கள் தெய்வம் பதில் அளிக்க வில்லை.

பலி பொருள் தண்ணீரில் ஊறத்தக்கதாக எலியா அநேக குடம் தண்ணீரை ஊற்றினார். எலியா தேவனிடத்தில் ஜெபித்தார். வானத்தில் இருந்து அக்கனி புறப்பட்டு வந்து பலி பொருட்களையும், பலிபீடத்திற்கு சுற்றி இருந்த தண்ணீரையும், கற்களையும் எரித்து போட்டது. சகல ஜனங்களும் முகம் குப்புற விழுந்து யேகோவாவே உண்மையான தேவன் என்று ஒப்புக்கொண்டார்கள். பாகாலின் தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் கொல்லப்பட்டார்கள். மழை பூமியை நனைக்க திரும்பியது.



**ஒரு நாளைக்கு இரண்டு முறைகள் அற்புதமாக எலியா காகங்களினால் போஷிக்கப்பட்டார்.**

# பாடம் - 47

## சிதேக்கியா: தாவீது வரிசையின் கடைசி ராஜா

**“இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை ஏழும்பப்பண்ணுவேன், அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரீகம்பண்ணி பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.” - (எரேமியா 23:5)**

இஸ்ரயேலின் அரசனாகிய சவுல் தேவனுக்கு விசுவாசமுள்ளவனாக இல்லாததினால், அவருடைய ராஜ்யம் தாவீதுக்கு கொடுக்கப்பட்டது. தாவீது தேவனால் மிகவும் நேசிக்கப்பட்டவராகவும், ஆயிர வருட ஆட்சியை ஆளக்கூடிய மேசியா, தாவீதின் வம்சத்திலிருந்து எழும்புவார் என்றும் வாக்கு பெற்றார்.

பல நூற்றாண்டுகளாக இஸ்ரயேலின் இராஜாக்கள், தாவிதின் குடும்பத்தை சேர்ந்தவர்களாக இருந்தார்கள். சிலர் நல்லவர்களாகவும் அநேகர் கெட்டவர்களாகவும், இருந்தார்கள். தாவீதின் வம்சத்தில் வந்த கடைசி இராஜா சிதேக்கியா. இவன் மிக பொல்லாதவனாக இருந்தபடியால், தேவன் இவனை குறித்து சொல்லும் போது, “இஸ்ரயேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவுவருங்காலத்தில் உன் நாள் வந்தது. பாகையைக் கழற்று, கீடத்தை எடுத்துப்போடு, அது இனி முன்போலிராது, தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், உரிமைக்காரனானவர் (மேசியா) வருமட்டும் அது இல்லாதிருக்கும் அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.” (எசேக்கியேல் 21:25,26,27) என்றார்.

தேவன் இராஜ்யத்தை சிதேக்கியாவிடமிருந்து எடுக்கும் போது, “நீ பாபிலோனுக்கு சிறையாக கொண்டு செல்லப்படுவாய், ஆனாலும் நீ என்றுமே பாபிலோனை காண்பதில்லை” என்றார். இந்த இரண்டு தீர்க்கதரிசனங்களும் நிறைவேறியது. சிதேக்கியாவை சிறை பிடித்த போது, அவருடயை இரண்டு குமாரர்களையும் கொன்று போட்டு, அவனுடைய கண்களை குருடாக்கினார்கள். அவன் பார்வையற்றவனாக பாபிலோனுக்கு சென்றான்.

துவக்கத்தில் புறஜாதியார் மற்ற ஜாதிகளை ஆள, தேவன்

அனுமதித்தார். இப்படிப்பட்ட வல்லமை, கிமு 606 ஆம் வருடத்திலிருந்து, (சிதேக்கியா சிங்காசனத்தை இழந்த வருடம்) கிபி 1914 ஆம் வருடம் வரைக்கும் உள்ள 2520 வருடங்கள் நீடித்தது.

வேதாகமத்தில் ஒரு நாள் ஆயிர வருடங்களை அடையாளப் படுத்துகிறது. யுத்த வருடத்திற்கு 12 மாதங்களும், மாதத்திற்கு 30 நாட்கள் என்றும் கணக்கிடப்படுகிறது. ஆக வருடத்திற்கு முந்நூற்றறுபது நாட்களும், அது வேதாகமத்தின்படி முந்நூற்றறுபது வருடங்களாக கணக்கிடப்படுகிறது. இஸ்ரயேலின் இராஜ்யம் “ஏழு காலங்கள்” முழுமையாக சிதறடிக்கப்படும். (லேவியராகமம் 26:19,21,24,28) 360 வருடங்களை நாம் 7 என்ற எண்ணோடு பெருக்கினால் இஸ்ரயேல் தேசம் பாழாக்கி விடப்பட்ட (முற்றிலுமாக அழியாமல் இருந்தாலும்) 2,520 வருடங்கள் கால பகுதியை நாம் காணலாம். 1914 ஆம் வருடம் அக்டோபர் மாதம் முதலாம் உலக போர் துவங்கியது. இந்த வருடம் புறஜாதிகளின் காலம் நிறைவு பெற்றது. முதலாம் உலக போர் உலகத்தில் உள்ள எல்லா தேசத்தின் அரசாங்கத்திலும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. சில நாடுகளை வல்லமையற்ற இராஜாக்கள் ஆண்டு வந்தாலும் மற்ற எல்லா நாடுகளிலும் இந்நாள் வரைக்கும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது.

ஆம், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களிடமிருந்து சிங்காசனம் எடுக்கப்பட்டு, பாழாய் விடப்பட்டது. ஆனால் அவர்கள், “உரிமைக்காரனானவர் (மேசியா) வருமட்டும்” (எசேக்கியேல் 21 -27), இந்த நம்பிக்கையோடு விடப்பட்டார்கள்.

**சிதேக்கியாவை சிறை பிடித்த போது, அவருடைய இரண்டு குமாரர்களையும் கொன்று போட்டு, அவனுடைய கண்களை குருடாக்கினார்கள்.**



# பாடம் - 48

## எருசலேம் நகரம் 70 வருடங்கள் பாழாய் கிடந்தது.

**"அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலிவருட -மாயிருப்பதாக..... அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும்..." - லேவியராகமம் 25:11,12**

யூத ஜாதி ஒவ்வொரு ஏழாம் வருடத்தையும் ஓய்வு வருடமாக அனுசரித்து, அந்த வருடம் முழுவதும் நிலத்திற்கு ஓய்வு விட வேண்டும். (லேவியராகமம் 25:1-7) ஒவ்வொரு ஐம்பதாவது வருடமாக இருந்தது. யூபிலி வருடத்தில் கீழ்கானும் கட்டளைகளை கடைபிடிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள்.

1. அடிமைகள் விடுதலையாக்கப்பட்டார்கள் ................ இஸ்ரயேல் ஜனத்திற்குள் அடிமைப்பட்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாக விடுதலை கொடுக்க வேண்டும்.

2. எல்லா கடன்களும் மன்னிக்கப்பட வேண்டும்................ வறுமையின் காரணமாக விற்கப்பட்ட நிலங்களும் சொத்துக்களும் திருப்பி கொடுக்கப்பட வேண்டும்.

3. நிலம் ஒய்ந்திருக்க வேண்டும் ................... திராட்சை தோட்டத்தில் விதைக்கவோ, அறுக்கவோ, களை நருக்கவோ கூடாது. தானாக வளரக்கூடியவைகள் ஏழைகளுக்கும் வழிபோக்கர்களுக்கும் விடப்பட வேண்டும். (லேவியராகமம் 25:8-16)

மற்ற ஜனங்களை போல் இஸ்ரயேலர்களும் சுயநலமாக இருந்தார்கள். 49 வருடங்களாக பயன் கொடுத்த நிலத்தின் பலன்களை அவர்கள் இழக்க விரும்பவில்லை. ஆகவே அறை மனதோடு கடைபிடித்து வந்த யூபிலி ஆண்டை, கால போக்கில் முற்றிலுமாக விட்டுவிட்டார்கள்.

பாபிலோனின் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், இராஜாவாகிய சிதேக்கியாவையும், அவன் ஜனங்களையும் சிறை பிடித்து பாபிலோனுக்கு கொண்டு செல்லும் போது, எருசலேமையும், ஆலயத்தையும் அக்கினியால் சுட்டெறித்தான். தேசம் எழுபது

வருடங்கள் பாழாயிவிடப்பட்டது. யூபிலி வருடங்களை இஸ்ரயேல் மக்கள் கடைபிடிக்காததினால், தேவன் அக்கினியால் அவர்களை தண்டித்து தேசத்தை பாழாக்கி விட்டார்.

இன்று யூபிலிகளை கடைபிடிப்பது எவ்வளவு முக்கியமானது என்று, இஸ்ரயேல் மக்கள் அறியாதிருந்தார்கள். இது தேவனுடைய திட்டத்தில் வர இருக்கும் விசேஷமான காலத்தை சித்தரிக்கிறது என்று அறியாதிருந்தார்கள்.

தேவனுடைய கிரியைகளிலும், திட்டங்களிலும், 7 என்ற எண்ணுக்கு நெருங்கிய சம்பந்தம் உண்டு. இது பூரணத்தை சித்தரிக்கிறது. கால போக்கில் தேவன் அனைத்தையும் பூரணப்படுத்துவார். சீர் பொருந்தும் காலத்திற்கு பின் இவைகள் நடைபெறும். முழு மனுக்குலமும் உயிர்த்தெழுந்து ஆயிர வருடத்தில், தேவனுடைய சட்டங்களுக்கு இசைவாக வாழக்கற்றுக் கொள்ளுவார்கள். (ஏசாயா 35) பூரணமான உலகத்தை பூரணமாக மனிதர்கள் நிரப்புவதை நினைக்கும் போது எவ்வளவு அற்புதமாக இருக்கிறது. துவக்கத்திலிருந்து இதுவே மனுக்குலத்திற்கு தேவனுடைய திட்டமாக இருக்கிறது.

**ஒவ்வொரு ஐம்பதாவது வருடமும் ஒரு யூபிலி ஆண்டாகும்.**



# பாடம் - 49

## தானியேல் சொப்பனத்திற்கு விளக்கம் அளித்தார்

**"தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்." - தானியேல் 1:17**

அநேக ஜனங்களோடு தானியேல் ஒரு இளைஞனாக பாபிலோனுக்கு சிறையாக கொண்டு செல்லபட்டார். பாபிலோன் அரசாங்கத்தில் விசேஷமான பணிகள் புரிய பயிற்சி அளிப்பதற்கு தானியேலும் மற்ற மூன்று சிறை கைதிகளும் தேர்வு செய்யப்பட்டார்கள். இவர்கள் தங்களுடைய வேலைகளை நேர்த்தியாக செய்தார்கள் ஆனால், தொடர்ந்து தேவனிடம் ஜெபித்து, அவருக்கு கீழ்ப்படிந்து, அவருடைய கற்பனையின் படி நடந்தார்கள். அவர்கள் தேவனை முழு மனதோடு நேசித்தார்கள்.

ஒரு நாள் இரவு இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பயங்கரமான சொப்பனம் கண்டு திடுக்கிட்டு எழுந்து, பயத்தினால் தடுமாறினான். சொப்பனம் முக்கியமானது என்று தோன்றியதைத் தவிர, காலையில் அந்த சொப்பனம் நினைவுக்கு வரவில்லை. "பாபிலோனின் ஞானிகள்". அந்த சொப்பனத்தையோ, அதின் விளக்கத்தையோ சொல்லாததினால் இராஜா மூர்க்க கோபமடைந்தான்.

ஒருவேளை, சொப்பனத்தை சொல்லியிருந்தால், எதையாவது யூகித்து அதற்கு விளக்கத்தை சொல்லிருப்பார்கள். ஆனால் இராஜா தாமே மறந்த ஒரு காரியத்தை அவர்களால் விவரிக்கமுடியவில்லை. அனைவரையும் கொல்ல கட்டளை கொடுக்கும் அளவுக்கு இராஜா கோபம் அடைந்தான். இராஜாவுக்கு ஆலோசனை சொல்லும் குழுவில் தானியேலும் அவருடைய கூட்டாளிகளும் இருந்தனர்.

இந்த வாலிபர்கள் தேவனுடைய உதவிக்காகவும், வழிநடத்துதலுக்காகவும் அவரை நோக்கி ஜெபித்தார்கள். நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தையும், அதன் விளக்கத்தையும் தேவன் தானியேலுக்கு வெளிப்படுத்தினார்.

தானியேல் அந்த அதிகாரிகளிடம் ராஜாவின் கட்டளைகளை நிறைவேற்றாதபடிக்கு அந்த சொப்பனத்தின் விளக்கத்தை சொல்லுவதற்கு இராஜாவிடம் அழைத்து செல்லும் படி கேட்டுகொண்டார்.

தானியேல் இராஜாவிடம்: “பொன்னால் செய்யப்பட்ட தலையும், வெள்ளி புயங்களும், வெண்கல தொடைகளும் இரும்பு கால்களும் அவைகளின் பாதங்கள் பாதி இருப்பும், பாதி களிமண்ணுமாக இருந்த பெரிய பிரமாண்டமான சிலையை சொப்பனத்தில் கண்டீர்.” என்றார்.

கைகளால் பெயர்க்கப்படாத கல் ஒன்று உருண்டு வந்து, அந்த சிலையின் பாதங்களை மோதியது, அந்த சிலை கீழே விழுந்தது. பதரைப் போல் நொறுக்கி, காற்றில் பறந்து போனது. அந்த கல் வளர்ந்து பெரிதாகி பூமியை முழுவதும் நிரப்பிற்று.

பொன்னால் ஆன அந்த தலை பாபிலோனின் இராஜா நேபுகாத்நேச்சார் என்று தானியேல் விவரித்தார். மேதோ - பெர்சியாவின் அரசாங்கத்தை வெள்ளிக்கும், கிரேக்க அரசாங்கத்தை வெண்கலத்திற்கும், ரோம அரசாங்கத்தை இரும்பான கால்களுக்கும் ஒப்பிட்டுக் கூறினார். இரும்போடு கலந்த களிமண், ரோம அரசாங்கத்தின் பிரிவுகளை எடுத்து காட்டியது. ஒன்றுக்கு பின் ஒன்றாக வந்த இராஜயங்கள் தரம் குறைவுள்ளதாகவே இருக்கும் என்றார்.

சிலையை மோதின கல் தேவனுடைய ராஜ்யத்தை குறிக்கிறது. பூமியில் உள்ள அரசாங்கங்களுக்கு பதிலாக இந்த ராஜ்யம் நித்தியமாக ஸ்தாபிக்கப்படும். (தானியேல் 2:44)



பிரமாண்டமான சிலையை குறித்த சொப்பணத்தின் விளக்கத்தை தானியேல் விவரித்தார்.

# பாடம் - 50

## தானியேலின் சொப்பனத்தில் வந்த நான்கு மிருகங்கள்

**தானியேலின் சொப்பனத்தில் வந்த நான்கு மிருகங்கள் "வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யம் நித்திய ராஜ்யங்களும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்கக் கொடுக்கப்படும், அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம், சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து. அவருட்க்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான்." (தானியேல் 7:27)**

தானியேல் தேவனை விசுவாசத்தோடும் வெளியரங்கமாக தொழுது கொண்டதால், தேவன் அவருக்கு அநேக காரியங்களை வெளிப்படுத்தினார். உலகத்தில் உள்ள இராஜ்யங்களை அடையாளப்படுத்தும் ஒரு பெரிய சிலை நேபுகாத் நேச்சார் சொப்பனத்தில் கண்டான். இந்த உலக இராஜ்யங்களை பற்றி ஒரு சொப்பனத்தை தானியேலும் கண்டார்.

இந்த உலகம், உலக ராஜ்யங்களை மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் காண்கிறது. ஆனால் தேவன் அவைகளை துன்மார்க்கமாகவும், மிருகத்தனமாகவும் காண்கிறார்.

தானியேலின் சொப்பனத்தில் பாபிலோனை இரண்டு இறக்கைகள் உள்ள ஒரு சிங்கத்திற்கு ஒப்பிடப்பட்டது.-----மிக வல்லமையாகவும் பெருமையோடு அனைவரையும் ஆண்டது. இரண்டாம் மிருகம் கரடிக்கு ஒப்பாக இருந்தது - பயங்கரமும், கெடியும், வல்லமையுள்ளதாகவும் இருந்தது. இது மேதோ - பெர்சிய ராஜயத்தை குறித்தது. சிறுத்தையை போல் தந்திரமாகவும், ஏமாற்றக் கூடியதாகவும், இருக்கும் மூன்றாம் மிருகம் கிரேக்க அரசாங்கத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ரோம சமராஜ்யமானது விவரிக்கமுடியாத பயங்கரமும் கெடியான ஒரு மிருகத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற எந்த மிருகங்களோடு ஒப்பிட முடியாத அளவுக்கு பயங்கரமாக இருந்தது.

கடைசி மிருகத்திற்கு பத்து கொம்புகளும், (கொம்புகள் வல்லமையை குறிக்கிறது) நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்தில் அந்த சிலையின் பத்து விரல்களை போலிருக்கிறது. அந்த பத்து கொம்புகளில் மூன்று கொம்புகளுக்கு பதிலாக ஒரு சிறிய கொம்பு எழும்பியது---ரோம அரசாங்கம் மாறிக்கொண்டு வந்தது. பொய்யான மத அமைப்புகளையும், உலக ராணுவங்களையும் கொண்ட இந்த

இராஜ்யம், கிறிஸ்தவ நாடாக மாறியது, ஆனால் இந்த பரிசுத்த ரோம பேரரசு மிக துன்மார்க்கமாகவும், மற்ற உலக பேரரசுகளைப் போல தேவ பக்தி அற்றதாகவும் இருந்தது.

இந்தப் பக்தியற்றப் பேரரசு பெயரில் மட்டும் கிறிஸ்தவ நாடு? என்று மாறியது. தானியேல் கண்ட சொப்பனத்தில் அந்தச் சிறிய கொம்பு, மூன்று கொம்புகளை (பழைய ரோம பேரரசின் பிரிவுகள்) வீழ்த்தி விட்டு அவைகள் இருந்த இடத்தில் பெரிதாக வளர்ந்தது.

இந்த நான்காவது மிருகம் இந்நாள் வரைக்கும் செயல்பட்டு வந்தாலும், அதனுடைய வல்லமையும், செல்வாக்கும் குறைந்துக் கொண்டு வருகிறது. கால போக்கில், இந்த மிருகமும் அழிக்கப்படும். நாலாம் பேரரசுனுடைய வீழ்ச்சியின் காரணமாக ஐந்தாம் உலக பேரரசு ஸ்தாபிக்கப்படும். கிறிஸ்துவும் அவருடைய சபையும், தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்கள்.(தானியேல் 7:18,27)

ஐந்தாம் பேரரசு, நித்தியமான ஓர் ராஜ்யம், மேலும் பூமியில் உள்ள அனைத்து ஜனங்களும் அதனுடைய சட்டங்களைக் கற்றுக் கொண்டு. அவைகளுக்குக் கீழ்ப்படிவார்கள். “உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலும் செய்யப்படுவதாக” (மத்தேயு 6:10) என்று அநேகருடைய நீண்ட நாள் ஜெபம் கேட்கப்பட்டு, இவைகள் அனைத்தும் நிறைவேறும் போது எத்தனை மகிழ்ச்சியாக இருக்கும்.



# பாடம் - 51

## பாபிலோனின் வீழ்ச்சி

**" என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்." - ஏசாயா 55:11**

இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பெருமை நிறைந்தவனானான் --- பூமியை ஆட்சி செய்பவனாக எண்ணி தன்னைப் போல் ஒரு பெரிய சிலையை நிறுத்தினான். அந்த சிலையை அனைவரையும் சிரம் தாழ்த்தி, வணங்கி தொழுது கொள்ளும்படிக் கட்டளையிட்டான். இந்தச் சிலையை வணங்க மறுப்பவர்களை எரியும் அக்கினி சூளையில் போடும் படிக் கட்டளையிட்டான்.

பாபிலோனிய ராஜ்யத்தில், தானியேலும், அவருடைய மூன்று எபிரெய நண்பர்களும், சிறந்த ஊழிக்காரர்களாக இருந்ததினால், நேபுகாத்நேச்சர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். இவர்கள் இந்த சிலையை வணங்க மறுப்பார்கள் என்று அவன் எதிர்ப்பார்க்கவில்லை. இவர்கள் தேவனை நேசித்து, இராஜாவுக்கு உண்மையாக பணி புரிந்தார்கள். இராஜா மிகவும் கோபம் அடைந்து அக்கினி சூளையை ஏழு மடங்கு சூடாக்கி அதில் அந்த எபிரேயர்களைத் தூக்கிப் போட்டார்கள். அவர்களை கட்டி அந்த அக்கினிச் சூளையில் போட்ட சேவகர்களை அக்கினி பட்சித்துப் போட்டது.(தானியேல் 3:20-22)

ஆனால் அக்கினியில் போடப்பட்டவர்களோடு மற்றொரு புருஷரும் அந்த அக்கினியில் உலாவிக் கொண்டு இருப்பதைக் கண்ட இராஜாவும் அங்கிருந்த மற்றவர்களும் கண்டு அதிர்ச்சியில் பிரமித்தார்கள் -- ஒருவர் "தேவகுமாரனை போல் இருந்தார்". ஒருவருக்கும் எந்தச் சேதமும் இல்லை. இவர்கள் வணங்கும் தேவன் வல்லமையுள்ளவர் என்று உணர்ந்து, அனைவரையும் அந்தத் தேவனை வணங்கக் கட்டளையிட்டான்.

ஆனால், பாபிலோன் ராஜ்யத்தின் வல்லமையுள்ள இராஜாவாகவும் அவனுடைய விலை மதிப்பற்ற ஐசுவரியத்தின் நிமித்தமும், நேபுகாத்நேச்சார் இன்னும் முழுமையாக பெருமையடைந்தான். அவன் ஒரு மிருகத்தைப் போலாகி, மிருகங்களோடு சஞ்சரித்து, மாட்டைப் போல் புல்லை மேய்ந்தான். அவன் சுய நினைவு திரும்ப ஏழு வருடங்கள் சென்றது.

நேபுகாத்நேச்சாரின் பேரன் பெல்ஷாத்சார் பாபிலோனுக்கு இராஜாவானான். அவனும் மிகுந்த பெருமையுள்ளவனாக இருந்தான். ராஜ்யத்தில் மிகுதியான ஐசுவரியம் இருந்ததால், அதிக சோம்பேறித்தனம் அங்குக் காணப்பட்டது. இவை அனைத்தும் பாபிலோனின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

பெல்ஷாத்சார் பாபிலோனின் பிரசித்தியை கொண்டாட தன்னுடைய அதிகாரிகள் ஆயிரம் பேருக்கு ஒரு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தினான். இவர்கள் புசித்து குடித்து மகிழ்ச்சியாக இருந்த போது மனுஷ கையுறுப்பு ஒன்று அரண்மனையின் சுவற்றில் “மெனே மெனே தெக்கேல் உப்பார்சின்” என்ற வார்த்தைகளை நெருப்பினால் எழுதியது, ராஜா தானியேலிடம் விளக்கத்தைக் கேட்டு அறிந்தார், அந்த விளக்கமானது அவருடைய கன்னத்தில் அறைந்தது போலிருந்தது “தேவன் உன்னுடைய நாட்களை எண்ணி, உன் ராஜ்யத்தை முடிவுக்கு கொண்டு வந்தார், நீ தராசிலே நிறுக்கப்பட்டு குறையக் காணப்பட்டாய். உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது”.(தானியேல் 5:26-28)

பாபிலோன் மிக வல்லமையான நாடாக இருப்பதினால் அதைக் கைப்பற்றுவது மிகவும் கடினமானக் காரியம் என்று அனைவரும் யோசித்தப் போது, அந்த இரவில் மேதிய அரசனாகிய கோரேசும் அவருடைய சேனைகளும் காய்ந்துப் போன ஆற்றில் நடந்து சென்று பட்டணத்தைக் கைப் பற்றினார்கள். இராஜாவாகிய பெல்ஷாத்சாரை கொன்று போட்டு, கோரேஸ் இராஜாவானார்.



**சுவற்றின் மேல் இருந்த கை எழுத்தின் அர்த்தத்தை தானியேல் இராஜாவுக்கு விவரித்தார்.**

# பாடம் - 52

## தரியு மற்றும் கோரேஸ் இராஜாக்கள்

**"ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள் அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்." - தானியேல் 4:37**

70 வருடங்கள் பாபிலோனின் சிறையாக இருந்த போது, நான்கு இராஜாக்கள் இஸ்ரயேலின் தேவனைப் பற்றி அறிந்து கொண்டார்கள். மிருகங்களோடு வாழ்ந்த வாழ்க்கையிலிருந்து சுய நினைவு திரும்பி, அவன் கண்கள் வானத்திற்கு ஏறெடுத்து, இஸ்ரயேலின் தேவனை மகிமைப்படுத்தி புகழ்ந்த இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், முதல் இராஜா.

இரண்டாவது, இராஜாவாகிய பெல்ஷாத்சார், தேவனுடைய ஆலயத்தில் இருந்து எடுத்து வந்த பொன் பாத்திரங்களில் மது அருந்திய போது, அன்று இரவில் கொல்லப்பட்டு, பாபிலோன் ராஜ்யம் முடிவுக்கு வந்தது. (தானியேல் 5:2-4,30)

மூன்றாவது, அந்த இரவில் பாபிலோனைக் கைப்பற்றின மேதிய அரசனாகிய தரியு. அவன் தானியேலை, அழைத்துச் சென்றான். அங்குள்ள அதிகாரிகளுக்கும், பிரபுக்களுக்கும் மேலாகவும், இன்னும் சர்வத்திற்கும் மேலாக தானியேலே ராஜ்யத்தை ஆள வேண்டும் என்று விரும்பினான்.

தரியு தானியேலின் நேர்மையைப் பாராட்டி, அவரை அதிகமாக நேசித்து, ஒரு உயர்ந்த நண்பனாகப் பாவித்தார். ஆனால், இராஜாவின் இரக்கத்தின் நிமித்தம் மற்ற அதிகாரிகளும், பிரபுக்களும் பொறாமைக் கொண்டு பகைத்தார்கள். தங்களுக்கு இந்த இரக்கம் கிடைக்கவில்லை என்பதற்காக இவர்கள் இப்படி பகைக்காமல், பேரரசின் சொத்துக்களைக் களவாட முடியாதபடி தானியேல் அவைகளை கவனமாக விழித்திருந்ததால் பகைத்தார்கள்.

தானியேலின் மேல் குற்றம் சுமத்த முகாந்தரம் தேடியும், அவர்களால் ஒன்றும் கண்டுபிடிக்கமுடியவில்லை. தானியேல் அதிகமான நேரங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும், மீதியிருக்கும் நேரங்களில்

தேவனை நோக்கி ஜெபித்தார். அமைதியாக இருந்த தன்னுடைய மேல் வீட்டில், பலகனிகளைத் திறந்து வைத்து ஒரு நாளைக்கு மூன்று முறை ஜெபித்தார். இதை குறித்து தானியேல் வெட்கப்படவில்லை. இவர் உண்மையாக தேவனை தொழுது கொள்ளுகிறார் என்பதை அனைவரும் உணர்ந்தார்கள்.

பசியுள்ள சிங்கங்களின் கெபியில், தானியேலைப் போட இதுவே போதுமான காரணமாக அமைந்தது. இதை பற்றிய விவரங்களும், தானியேலின் அனுபவங்களும், விடுதலையையும் தானியேல் 6ஆம் அதிகாரத்தில் விவரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாலாவது, தேவனால் உணர்த்தப்பட்டு, இஸ்ரயேல் ஜனங்களுக்கு விடுதலைக் கொடுத்து, பாலஸ்தீனாவுக்கு திரும்பி அனுப்பின பெர்சிய இராஜாவாகிய கோரேஸ். இவர் தன்னுடைய பணத்தையும் கொடுத்து, ஆலயத்தில் இருந்து எடுக்கப்பட்ட பொன் பாத்திரங்களையும், மற்றவைகளையும் திருப்பிக் கொடுக்கக் கட்டளையிட்டார்.

கிட்டத்தட்ட 50,000 இஸ்ரயேலர்கள் பாலஸ்தீனாவுக்கு திரும்பினார்கள். சிறைபிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை காட்டிலும் இவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. இந்த 50,000 பேர்கள் மட்டுமே தேவனுடைய கட்டளைகளை நினைவில் கொண்டு, தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்தில் வாழ விரும்பினார்கள். இவர்கள் பட்டணத்தை எடுத்து கட்டினார்கள், கால போக்கில் ஆலயத்தையும் கட்டினார்கள்.

**தானியேலின் எதிரிகள் அவரை சிங்கங்களின் கெபியில் போட திட்டமிட்டார்கள்.**



# பாடம் – 53

## உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு

**“நான் என் தாசனாகிய யாக்கோபுக்குக் கொடுத்ததும், உங்கள், பிதாக்கள் குடியிருந்ததுமான தேசத்திலே குடியிருப்பார்கள். அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் அதிலே என்றென்றைக்கும் குடியிருப்பார்கள்.” - எசேக்கியேல் 37:25**

தானியேலை போல் தேவனால் பயன்படுத்தப்பட்ட ஒரு ஆசாரியன் “எசேக்கியேல்”. விசுவாசமுள்ள இஸ்ரயேலர்கள், வருங்காலத்தில் அவர்களின் ஜாதியின் நிலைமையை பற்றி அறிய வாஞ்சையாயிருந்தார்கள்-- தேர்ந்தெடுத்த ஜனங்களுக்காக தேவனுடைய திட்டம் என்ன? தானியேல் புறஜாதியாரின் அரண்மனையில் பணி புரிந்து, தன்னுடைய தேவனைப் பற்றி பாபிலோனியர்களுக்கு அறிவித்தார். ஆனால், எசேக்கியேல் தேவனுடைய திட்டங்களை அவருடைய ஜனங்களுக்கு அறிவித்து அவர்கள் மத்தியில் வாழ்ந்தார்.

இஸ்ரயேலின் மூப்பர்கள் தேவனுடைய சித்ததை அறிய எசேக்கியேலிடம் வந்தார்கள். தேவனுடைய தீர்க்கதரிசிகளுக்குக் கீழ்ப்படிந்து, சமாதானத்தோடு தங்களை நேபுகாத்நேச்சாருக்கு ஒப்பு கொடுத்து, சிறையாக பாபிலோனுக்குக் சென்றிருந்தாலும், அவர்கள் தாய் நாட்டுக்கு வரவேண்டும் என்று ஏங்கினார்கள்.

தேவன் எசேக்கியேலுக்கு ஒரு காட்சியை காண்பித்தார். அந்த காட்சியில் உலர்ந்த எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கைக் கண்டார். இந்த எலும்புகள், பாபிலோனில் சிதறியிருந்த நம்பிக்கையற்ற இஸ்ரயேல் ஜனங்களைக் குறிக்கிறது என்று அறிந்திருந்தார். (எசேக்கியேல்37:1-6)

அந்தத் தரிசனத்தில் எலும்புகளைச் சுற்றி நடந்த எசேக்கியேல், இவைகள் உயிர் அடையுமா என்று ஆச்சரியப்பட்டார் -- இஸ்ரயேல் ஜாதி மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுமா? இந்த தரிசனமானது, சிதறிக் கிடந்த எலும்புகள் ஒன்று சேர்க்கப்பட்டு முழு உருவமாகும் நாள் வரும் என்பதைக் காட்டியது. ஜீவ சுவாசம் அதற்குள் வரும் போது, அது உயிரையையும். ஆம், இஸ்ரயேல் தேசம் மீண்டும் உயிரடையும். இவைகள் மிகுந்த குழப்பத்தின் மத்தியில் நடைபெறும் -- இடி முழக்கங்களும், பூமி அதிர்ச்சிகளும் -- சுவிசேஷ யுக முடிவில்,

உபத்திரவக் காலத்தில் தேவன் இஸ்ரயேலை மீண்டும் கூட்டிச் சேர்ப்பார் என்று இது சித்தரிக்கிறது. (தானியேல் 12:1-4)

இந்த எலும்புகள் கூட்டிச் சேர்க்கப்பட்டது என்பதற்கு, 1948 ஆம் வருடம் இஸ்ரயேல் ஒரு தேசமாக அங்கீகாரம் பெற்ற காரியமே ஆதாரமாக உள்ளது. தேவன் சுவிசேஷ யுகத்தின் முடிவில், பல நூற்றாண்டுகளுக்கு முன் எந்த இடத்திலிருந்து சிதறடிக்கப் பட்டார்களோ, அதே இடத்திற்கு அவர்களை கூட்டிச் சேர்த்திருக்கிறார். இது மரித்தோரின் உயிர்த்தெழுதல் அல்ல, மாறாக இஸ்ரயேலர்களின் "மரித்த நம்பிக்கை" உயிர் பெற்றது.

இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் இப்போது தான் துவங்கியுள்ளது. வர இருக்கும் ஆயிர வருடத்தில் இது நிறைவுபெறும், அப்போது தேவன் அவர்களுடைய கல்லான இருதயங்களுக்குப் பதிலாக சதையான இருதயத்தை பொருத்துவார். இது உடனடியாக நடக்கக் கூடிய காரியம் அல்ல. "கோபத்தின் மகா நாளிலே" வேதனைகள், துன்பங்கள் மூலமாக படிப்படியாக நிறைவேறும். தேவனுடைய நீதியுள்ள கற்பனைகளைக் கடைபிடித்து, அவருடைய ஆசீர்வாதங்களைப் பெறும் போது இருதயங்கள் மாற்றப்படும். (எசேக்கியேல் 11:19)



**இஸ்ரயேல் தேசம் மீண்டும் உயிர் பெறுகிறது, மேலும் 1948 ஆம் வருஷம் தனி நாடாக அங்கீகரிக்கப்பட்டது.**

# பாடம் - 54

## மாம்சமாக்கப்பட்ட லோகோஸ் (வார்த்தை)

**“அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.” (யோவான் 1:14)**

நீண்ட காலங்களுக்கு முன் இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்தார். அவர் பரலோகத்தில் ஆவியின் ஜீவியாக தன்னுடைய பிதாவாகிய யோகோவா தேவனோடு இருந்தார். அவர் “லோகோஸ்” என்று அழைக்கப்பபட்டார். இந்த கிரேக்க வார்த்தைக்கு “வார்த்தை” அல்லது “வாய் மொழி” என்று அர்த்தமாம். வசனங்கள் அவரை ஆல்பா மற்றும் ஒமேகா என்றும் அழைக்கிறது.(வெளி 21:6) இதற்கு தொடக்கம் மற்றும் முடிவு என்று பொருள்படும். தேவனுடைய நேரடி சிருஷ்டிப்பில் அவரே முதலும், கடைசியுமானவர்(வெளி 22:13).

தேவனுடைய கட்டளையின் படி, அற்புதமான உலகங்களையும், ஜீவராசிகளையும் சிருஷ்டித்தார். தேவனைத் தவிர, மற்ற அனைவரையும் விட அவர் அதிகமான வல்லமையும், திறமையும் கொண்டிருந்தார். தேவனுடைய திட்டங்களுக்கு எதிராக அவர் என்றுமே செயல்பட்ட -தில்லை. மேலும், தேவனுடைய சித்தத்தை செய்வதில் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

தேவனுடைய நேச குமாரன், “லோகோஸ்” தேவனுடைய சாயலாக இருக்கிறார் என்று கொலோசெயருக்கு எழுதின நிருபம் (1:15-18) விவரிக்கிறது. தேவனுடைய முதல் பிறப்பு, இந்த பரலோகத்தில் உள்ளவைகளையும், பூமியில் உள்ளவைகளையும் சிருஷ்டித்தவர். அவர் ஆவியின் ஜீவியாக இருந்தாலும் அழியாமை கொடுக்கப் -படவில்லை - அவர் மரிக்கக் கூடியவராக இருந்தார்.

அவர் அந்த நீண்ட காலங்களுக்கு முன், இந்த பூமிக்கு மனித குழந்தையாக வந்து, பூரண மனுஷனாக வளர்ந்து, ஆதாமுக்குப் பதிலாக அவருடைய ஜீவனை கொடுப்பேன் என்று சொல்லியிருந்தார். இதன் மூலம் ஆதாம் மேலும், மற்றும் மனிதனாக பிறந்த ஒவ்வொருவர் மேலிருக்கும் மரண தீர்ப்பும் எடுத்துப் போடப்படும்.

“லோகோஸ்” அழியா நிலைமையில் இருந்திருந்தால், ஆதாமுக்கு பதிலாக அவர் மரித்திருக்க முடியாது. ஒருவருக்குள் ஜீவன்

இருப்பதை அழியாமை என்று சொல்லலாம் -ஜீவனோடிருக்க யாரையும் சார்ந்து வாழ வேண்டிய அவசியமில்லை.

தேவனும் “லோகோசும்” ஒருவரை ஒருவர் அதிகமாக நேசித்தார்கள். இவர்கள் இணைந்து அண்டசராசரங்களையும், அதில் உள்ளவைகளையும் சிருஷ்டித்தார்கள். இவர்கள் மனிதனை விரும்பி, நேசித்து சிருஷ்டித்தார்கள்.(ஆதியாகமம் 1:26) புசிக்க வேண்டாம் என்று சொன்ன விருட்சத்தின் கனியை ஆதாம் புசித்து, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போன போது இவர்கள் எவ்வளவு வேதனை அடைந்திருப்பார்கள். எப்படியிருந்தாலும், ஆதாம் இந்த கீழ்ப்படிதலின் பரீட்சையில் விழுந்த போவார் என்று முன் அறிந்த தேவன், அதற்குரிய மீட்பை ஏற்படுத்தினார்.

“லோகோஸ்” மனுக்குலத்தை மிகவும் நேசித்ததால் அவர் பரலோகத்தில் தன்னுடைய மகிமையையும், கனத்தையும், தன்னுடைய பிதாவோடு வைத்திருந்த நெருக்கமான உறவையும் விட்டு கொடுக்க மனப்பூர்வமாகச் சம்மதித்து, தன்னையே தாழ்த்தி தூதர்களை விட சற்றுக்குறைவான நிலைமையை எடுத்துக் கொண்டார்.(எபிரேயர் 2:9)

இயேசு “லோகோஸாக” தன்னுடைய பிதாவோடு இருந்த போது பெற்றிருந்த நிலைமையை மட்டுமே, மீண்டும் தரும்படி யோவான் 17:5 ஆம் வசனத்தில், ஜெபித்தார். ஆனால், அவர் முடிவு பரியந்தம் கீழ்ப்படிந்து விசுவாசத்தில் நிலைநின்றதால், தேவன் மகிமையையும், கனத்தையும், மட்டும் அல்ல, திவ்விய சுபாவத்தையும் (அ) அழியாமையையும் பரிசாகக் கொடுத்தார்.



# பாடம் - 55

## மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும்

**“இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்தசந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.” - லூக்கா 2:10**

“லோகோஸ்” ஆவிக்குரிய செல்வாக்கிலும், மகிமையிலும், கனத்திலும் மிகுந்த ஐசுவரியவானாக இருந்தார். ஆனால், அவர் நமது நிமித்தமாக, பரிபூரண ஆவிக்குரிய ஜீவியாக இருந்த போது பெற்றிருந்த அனைத்தையும் விட்டு விட்டு, தரித்திரரானார். தேவன் அவரின் வாழ்க்கை நிலைமையை மாற்றி, மரியாளின் கருவுக்குள் வைத்தார். தேவன் கொடுத்த ஜீவனை மரியாள் போஷித்து வளர்த்தாள். இயேசு பிறந்த போது தூதர்கள் கெம்பீரித்து, மேய்ப்பர்களிடம் அவரின் பிறப்பை அறிவித்தார்கள். “லோகோஸ்” மனிதனாகப் பிறந்தார் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

தேவனுடைய சட்டங்கள் பூணமாக இருக்கிறது. “ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்கு கண், பல்லுக்கு பல்”(உபாகமம் 19:21). ஒரு பரிபூரணமாக மனிதன் மட்டுமே, தேவனுக்குக் கீழ்படியாமல், மரண தீர்ப்பைப் பெற்ற ஆதாமை மீட்க முடியும். அனைவரும் பாவிகளாகவும் அபூரணராகவும் இருப்பதினால், எந்த சராசரி மனிதனும், ஜீவனைக் கொடுக்க முடியாது அல்லது எந்தத் தூதர்களாலும் தங்களுடைய ஜீவனைக் கொடுக்க முடியாது. புரவம் செய்வதற்கு முன் ஆதாம் இருந்த பரிபூரண நிலைமையில் உள்ள ஒரு மனிதன் மட்டுமே ஜீவனை கொடுக்க முடியும்.(1தீமோத்தேயு 2:6, சங்கீதம் 49:7)

மரணத்தில் இருக்கும் ஆதாமின் இடத்தை எடுப்பதற்கு பூரண மனிதனும் இல்லாதிருக்கும் பட்சத்தில் தேவன் ஒரு பூரண மனிதனை ஆயத்தம் செய்வதற்கு “லோகோஸை” ஒரு குழந்தையாக உருமாற்றி, யூத ஸ்திரீ கன்னிமரியாளிடம் பிறக்க செய்தார். அந்தக் குழந்தை பரிசுத்தமானதும், பாவமற்றதும், பாவிகளுக்கு விவகினவருமாக இருந்தார். இவர் இயேசு என்று அழைக்கப்பட்டார். அவர் இனி ஆவிக்குரிய ஜீவியாக இல்லாததினால் அவர் இனி லோகோஸாக இல்லாமல், ஒரு அழகான சிறு குழந்தையாக இருந்தார் - ஒரு பூரண மனித ஜீவன். இந்தக் குழந்தை, இயேசு கிறிஸ்து என்ற மனிதனாக வளர்ந்தார். அவர் முப்பது வயதை கடந்த போது, யூத சட்டத்தின் படி வளர்ச்சி அடைந்த முழு

மனிதனானார். அப்போது அவர் தன்னை தான் ஆதாமுக்குப் பதிவாக பலி செலுத்தி முழு மனுகுலத்திற்கும் இரட்சகராவதற்கு தகுதி பெற்றார். இரட்சகா; என்பதற்கு ஜீவனை கொடுப்பவர் என்று பொருள் படும்.

"பூமியில் சமாதானமும், மனுஷருக்கு சந்தோஷம்" என்று தூதர்களால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை என்று நாம் அறிவோம். இந்தத்தீர்க்கதரிசனம் குறித்தக் காலத்தில் அவருடைய ராஜ்யத்தில், பூமியில் உள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் பொழுது நிறைவு பெறும் என்பதையும் நாம் அறிவோம்.

இப்படியாக தூதர்களால் அநேக நாட்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட இந்த "நற்செய்தியானது", உண்மையில், குறித்த காலத்தில், "முழு மனுமக்களுக்கும் ஒரு நற்செய்தியாக" இருக்கும். தேவன் இந்த பூமிக்குரிய படைப்புகளின் மேல் வைத்த மிகுந்த அன்பினால், அவர் எவ்வளவு அற்புதமான ஆசீர்வாதங்களை மனுக்குலத்திற்காக் குவித்து வைத்திருக்கிறார்.

**இயேசுவின் பிறப்பை**
**தூதர்கள். மேய்ப்பர்களிடம்**
**அறிவித்தார்கள்.**



# பாடம் - 56

## முன்னோடியான யோவான்

**“கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே”. - மத்தேயு 3:3**

உலகத்திலேயே மிக அற்புதமான ஒரு குழந்தையாக இயேசு கன்னி மரியாளிடம் பிறந்தார். இவர் பிறப்பதற்கு ஆறு மாதத்திற்கு முன் மரியாளின் ஒன்றுவிட்ட சகோதரியான எலிசெபெத்தும் யோவான் என்ற ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவரும் தேவனால் பயன்படுத்தப்பட்டார். அவர் பின் வரும் நாட்களில் யோவான் ஸ்நானகன் என்று அழைக்கப்பட்டார்.

தேவனுடைய பெரிதான இரக்கத்தினால் யோவான் பிறந்தார். இதைக் குறித்து லூக்கா(1:5-25) விவரிக்கிறார். மேசியாவின் வருகையைக் குறித்து இந்த யோவான் ஜனங்களுக்கு முன் அறிவித்தார்.

யோவான் வளர்ந்து ஆவியில் பெலப்பட்டார் என்று, லூக்கா 1:80 ஆம் வசனம் குறிப்பிடுகிறது. இஸ்ரயேல் தேசத்தில் ஊழியம் செய்ய உதவும் படியான ஒரு எளிமையான வாழ்க்கையாக அவர் வனாந்திரத்தில் வாழ்ந்தார். இந்த வாழ்க்கையானது அவருக்குள் அதிகமான தைரியத்தையும், வல்லமையையும் ஏற்படுத்தியது.

யோவான் யூத யுகத்தின் கடைசி தீர்க்கதரிசியாவார். சபை வகுப்பாரின் வளர்ச்சிக்கு ஏதுவாக இயேசு, சுவிசேஷ யுகம் என்று அழைக்கப்படும் புதிய யுகத்தை தொடங்கி வைத்தார்.

தேவன் இஸ்ரயேலை விடுவிக்க ஒருவரை அனுப்புவார் என்ற தேவனுடைய வாக்குறுதியை யோவான் விசுவாசித்தார். மேசியாவின் வருகையில் பாவிகள் ஆசீரை பெற இயலாது என்று யோவான் உணர்ந்து, “மனம் திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபமாயிருக்கிறது” என்று ஜனங்களுக்குப் போதித்தார். இதைக் கேட்ட சிலர் சட்டத்திற்கு எதிராக பாவம் செய்ததை நினைத்து மனம் வருந்தியப் பொழுது, யோவான் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நானம், அவர்களின் பாவங்களைக் கழுவுவதைச் சித்தரிக்கிறார்.

புறஜாதிகள், மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் இல்லை. ஆகவே, அவர்கள் அதற்கு விரோதமாக பாவம் செய்யாததினால் யோவான் ஸ்நானகன், அவர்களைக் குறித்து கவலைப்படவில்லை.

நியாயப்பிரமாணத்தை எவ்வகையிலும் கடைபிடிக்க வேண்டும் என்று முயற்சி செய்யும் விசுவாசமுள்ள யு தர்களுக்கு யோவான் ஞானஸ்நானம் கொடுக்க வில்லை. மாறாக, எதற்கும் கவலைப்படாமல், சட்டத்திற்கு விரோதமாகத் தொடர்ந்து பாவம் செய்தவர்களுக்கு அவர் ஞானஸ்நானம் கொடுத்தார்.

யோவான் கொடுத்த ஞானஸ்நானம் கிறிஸ்தவர்களுக்கு அல்ல. இதன் நோக்கம் முற்றிலும் வேறுப்பட்டது. கிறிஸ்தவ ஞானஸ்நானம், பாவங்களை கழுவுவது மட்டும் நோக்கம் அல்ல. மேலும், தேவனிடத்தில் ஒரு புதிய வாழ்க்கை முறையை அர்ப்பணிக்கப்படுகிறது.

இஸ்ரயேல் ஜாதி எகிப்தை விட்டு மோசேயைப் பின்பற்றினக் காரியம் சுவிசேஷ யுகத்தில் ஞானஸ்நானத்தைச் சித்தரிக்கிறது. இஸ்ரயேல் மக்கள், தேவனுடைய சித்ததை செய்வதற்கு முழு விருப்பதையும் தெரிவித்து, மோசேயைப் பின் பற்றி, பிளந்து நின்ற சிவந்த சமுத்திரத்தைக் கடந்ததுப் போல, ஞானஸ்நானம் பெற்றவர்கள் தேவனுடைய சித்ததை செய்வதற்கு, இந்த உலக சந்தோஷங்களை விட்டு விட்டு முழு விருப்பத்தோடு இயேசுவுக்குப் பின் செல்லுகிறார்கள்.



**இயேசு, யோவான் ஸ்நானகனுக்கு ஆறு மாதங்கள் இளையவர்.**

# பாடம் - 57

## இயேசுவின் ஞானஸ்நானம்

**" தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் " - எபிரேயர் 10:7**

இயேசு ஞானஸ்நானம் பெற யோவானிடம் தன்னை ஒப்புவித்தார். இயேசு பூரண மனிதன் என்றும், பாவம் செய்யாததினால், அவர் மனம் வருந்த வேண்டியதில்லை என்று அறிந்த யோவான் இயேசுவைக் கண்டு ஆச்சரியப்பட்டார். ஆனால், இயேசு "இப்பொழுது இடங்கொடு" என்றார்.

இயேசுவின் ஞானஸ்நானம் புதிதும், விசேஷமான அர்த்தத்தையுடையதாக இருந்தது. மரண பரியந்தம், அவருடைய முழுவாழ்க்கையை, தேவனுக்கு பலியாகத் தத்தம் செய்வதை அடையாளப்படுத்துகிறது. யோவான் இதைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால், இயேசு சொன்னபடி அவர் யோர்தானில் ஞானஸ்நானம் கொடுத்தார். சுற்றியிருந்தவர்களைப் பார்த்து "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி" என்றார். (யோவான் 1:29)

இயேசுவின் மேல் புறா வடிவத்தில், பரிசுத்த ஆவி வருவதை யோவான் கண்டார். "இவர் என் நேச குமாரன், இவரில் நான் பிரியமாக இருக்கிறேன்" என்ற பிதாவின் சத்ததையும் கேட்டார்.

இயேசு தண்ணீரிலிருந்து வெளியே வந்தவுடன், பரிசுத்த ஆவியைப் பெற்றதினால். பரலோகத்தின் சத்தியங்களை இன்னும் தெளிவாகப் புரிந்தது. மேலும், தேவனுடைய "ஆழமான காரியங்கள்" (சத்தியங்கள்) புலப்பட்டது(1கொரிந்தியர் 2:10). இயேசு அவருடைய முப்பதாவது வயதில் முழுகினது முதல் சிலுவையின் மரண பரியந்தம், 3½ வருடங்கள், அவர் ஸ்நானம் செய்து கொண்டார். சொல்ல போனால், தண்ணீரில் முழுகுவது ஞானஸ்நானத்தின் துவக்கமாகவே உள்ளது. தேவனுடைய சித்தம் செய்ய வேண்டும் என்ற நம்முடைய இருதயத்தின் விருப்பத்தை இது அடையாளப்படுத்துகிறது.(லூக்கா 12:50) இயேசு சிலுவையில் மரிக்கும் போது, "எல்லாம் முடிந்தது" என்று கதறி ஜீவனை விட்டார். யோர்தானில் ஆரம்பிக்கப்பட்ட அவரது மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் முடிவு பெற்றது.

கிறிஸ்தவர்கள் இயேசுவின் மரணத்திற்குள் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்.(ரோமர் 6:3) ஒரு கிறிஸ்தவன் தண்ணீரிலிருந்து எழுவது, தன்னுடைய சகல சுய விருப்பங்களையும் நித்தியமாக "புதைப்பதைக்" காட்டுகிறது. முற்றிலும் ஆண்டவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புது வாழ்க்கைத் துவங்குகிறது. இதை ஒருவர் சுயமாக செய்ய இயலாது. ஆனால், இயேசுவின் பலியினாலும், உயிர்த்தெழுதலினாலும் இதற்கு தேவையான உதவிகள் அளிக்கப்படும் என்று வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

ஞானஸ்நானம் பெற்றவர் பரிசுத்த ஆவியின் வல்லமையை பெறுவதினால், சத்தியத்தைப் புரிந்து கொள்வதற்கும், பகுத்துப் போதிப்பதற்கும் உதவியாக உள்ளது.(2தீமோத்தேயு 2:15)

இயேசுவைப் போல, மரணத்திற்குள் ஸ்நானம் எடுப்பதே சபைக்கு உண்மையான ஸ்நானமாகும். தண்ணீரில் முழுகுவது வெறும் அடையாளம் மட்டுமே. மன விருப்பத்தோடு, உண்மையாகக், கற்றுக் கொள்ளும் மனதோடு, மீதியிருக்கும் தங்களுடைய வாழ்நாட்களில் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின் பற்றுவார்கள். இதில் விசுவாசத்தோடு நிலைத்திருந்தால், இயேசுவோடு முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவர்கள்.



**ஒரு கிறிஸ்தவன் ஞானஸ்நானம் பெறும் பொழுது ஆண்டவருக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட புது வாழ்க்கையைத் துவங்குகிறான்.**

# பாடம் - 58

## ராஜ்யத்தின் சுவிசேஷம்

**"என் தேவனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும், உம்முடைய கண்களைத் திறந்து, எங்கள் பாழிடங்களையும், உமது நாமம் தரிக்கப்பட்டிருக்கிற நகரத்தையும் பார்த்தருளும் " - தானியேல் 9:18**

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள், ஏறக்குறைய பதினாறு நூற்றாண்டுகளாக மோசேயைக் காட்டிலும் பெரிய இரட்சகர் வருவார் என்று, எதிர்ப்பார்த்து, ஜெபித்து வந்தார்கள். தாவீதைக் காட்டிலும், தேவனுடைய இருதயத்திற்கு இன்னும் பிரியமான அல்லது சாலொமோனைக் காட்டிலும் அதிக மகிமையுள்ள ஒரு இராஜாவை எதிர்ப்பார்த்தார்கள்.

நீண்ட காலமாக எதிர்ப்பார்க்கப்பட்ட இரட்சகரான மேசியா, இப்போது அவர்கள் மத்தில் இருந்தார். யோவான் ஸ்நானகன்(மத்தேயு 3:2), இயேசு(மத்தேயு 4:17), மற்றும் இயேசுவின் சீஷர்கள் (லூக்கா 10:9,11) தேவனுடைய ராஜ்யம் சமீபமாக இருக்கிறது என்று பிரசங்கித்தார்கள். ஆனால், அநேக யு தர்கள் இதை நம்ப வில்லை.

தேவனுடைய வாக்கு தத்தங்களை நினைவு கூறுவதற்கு அநேகருக்கு நேரம் இல்லாமல் போனது. தேவனுடைய இராஜ்யத்தின் திட்டத்தில் சிலர் பொருந்தக் கூடாதபடி மிக சுயநலமுள்ளவர்களாக இருந்தார்கள் - அவர்களின் நாட்களில் இருந்தது போல, மிக வல்லமையுள்ள, ஐசுவரியமுள்ள ஒரு இராஜாவை விரும்பினார்கள். குடியிருக்க இடமில்லாத, ஒரு ஏழை ஆசாரியனுடைய குமாரனை அவர்கள் பின்பற்ற விரும்பவில்லை(மத்தேயு 8:20).

இயேசு அவருடைய சொந்த ஜனங்களுக்காக வந்தார், ஆனால், அவர்கள் அவரை நிராகரித்து, சிலுவையில் அறைந்தார்கள். ஆனால், சில யூதர்கள் புரிந்து கொண்டு, அவர் சொல்லியவைகளை விசுவாசித்தார்கள். இவர்களுக்கு தேவனுடைய பிள்ளைகளாகயிருப்பதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

தேவனுடைய ஜனங்கள் தேவனால் மிகவும் நேசிக்கப்பட்ட -வர்களாகவும், அவரால் அதிகமான பராமரிப்பையும் பெற்றவர்களாகவும் இருந்தார்கள். மோசேயின் மூலமாக தேவன்

கொடுத்த சட்டங்களைத் தங்களால் முடிந்த வரை கீழ்ப்படிந்து, இவருக்குப் பணிந்திருக்க வேண்டும் என்று அறிந்திருந்தார்கள்.

இப்படிப்பட்ட விசுவாசமும், கீழ்ப்படிதலும் உள்ளவர்கள் தேவனுடைய இரக்கத்தையும் பராமரிப்பையும் பெறும் ஊழியக்காரராவார்கள். இவர்களே தேவனுடைய குமாரர்களும், இயேசுவுக்கு சகோதரரும், தேவனுடைய வீட்டாரும், ராஜ்யத்திற்கு பங்காளிகளுமாக இருப்பார்கள். பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியை பெற்றார்கள் - தேவனோடு கிரியை செய்ய தேவையான வல்லமையும், புரிந்து கொள்ளுதலையும் பெற்றார்கள்.

சபையின் அங்கத்தினராவதற்கு யூதர்கள் அபாத்திரராகப் போனதினால், அவர்களுக்குக் கொடுத்த வாய்ப்பு நீக்கப்பட்டு, புறஜாதிகளுக்கு அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டது. சபையின் (1,44,000) எண்ணிக்கை நிறைவடைந்து விட்டால், அதற்குப் பங்குள்ளவர்களாகும்படி, இனி வேறொருவரும் அழைக்கப்பட -மாட்டார்கள். (வெளி14:1) இவர்கள் சிறு மந்தை என்றும் அழைக்கப்பட்டு, இயேசுவோடு ஆயிர வருடம் ஆட்சி செய்வார்கள்.

சபை வகுப்பாரைக் கூட்டிச் சேர்த்த வேலை முடிந்தவுடன், சுவிசேஷ யுகம் முடிவடையும், இஸ்ரயேலின் குருட்டாட்டம் நீக்கப்படும், ஆயிர வருட யுகத்தின் ஆசீர்வாதம் முழு உலகத்தையும் வந்து சேரும்.

**விசுவாசிகள் தேவனுடைய குமாரர்களாகும் படி இயேசு வாய்ப்பளித்தார்.**



# பாடம் - 59

## இராஜ்யத்தின் உவமைகள்

**“அதற்கு அவர் -- தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது” - மாற்கு 4:11.**

கிறிஸ்தவர்கள் அல்லாத அநேகர் இயேசுவை ஒரு மிகப் பெரிய போதகராகக் கருதுகிறார்கள். அவர் போதிக்க பயன்படுத்தின ஒருமுறை - உவமைகளாகும். புதிய ஏற்பாட்டில் சுமார் 30 உவமைகள் உள்ளது.

நல்லொழுக்கப் பாடங்கள் (அ) மத கோட்பாடுகளை எடுத்துக்காட்டும் சிறு கதைகளை உவமைகளாகும். போதிப்பதற்கு இரண்டு பொருட்கள் ஒப்பிடப்படுகிறது.

சிலர் மட்டும் புரிந்துக் கொள்ள, உவமைகளாகப் போதிக்கப்பட்டது. இயேசு மிக ஆழமான ராஜ்யத்தின் சத்தியங்களை அருமையான சிறு கதைகள் மூலமாகப் போதித்தார். அவைகளை நாம் வாசித்து, ஆராய்ந்து, தேவனுடைய திட்டங்களையும், நோக்கங்களையும் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

மத்தேயு 22:2-10 ல், ராஜாவின் குமாரனைப் பற்றிச் சொல்லப்பட்ட உவமையில், ராஜ்யத்தில் முதன்மையான இடத்தைப் பெற யூதர்கள், முதல் அழைப்பை பெற்றார்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்கு பின் அநேக இடங்கள் இருந்த படியால், அழைப்பு புறஜாதிகளுக்குச் சென்றது.

அந்நாட்களில், திருமணத்திற்கு வரும் விருந்தாளிகள், அழைப்பிதழோடுக் கொடுத்த திருமண வஸ்திரத்தையும் தரித்துக் கொண்டு வரவேண்டும். (மத்தேயு 22:11-14) திருமணவஸ்திரம் தரித்திராத மனுஷன் விருந்திலிருந்து வெளியேற்றப்படுவான்.

பாவத்திற்கான, கிறிஸ்துவின் பலியை நிராகரிப்பவர்களிடமிருந்து, சத்தியத்தின் வெளிச்சம் நீக்கப்படும் என்பதை இந்தக்கதை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. இவர்கள் சபையாக இருக்கும் வாய்ப்பை இழந்து விடுவார்கள்.


மணவாட்டியும் (சபை), மணவாளனும் (இயேசு), இணையக்கூடிய

திருமணத்தின் விருந்துக்கு பங்குக் கொள்ள விரும்புபவர்கள், (வஸ்திரமான) கிறிஸ்துவின் நீதியை தரித்துக்கொள்ள வேண்டும். இது இயேசுவின் மரணத்தின் மூலமாக, அவரைப் பின்பற்றுபவர்களுக்கு தங்களுடைய பாவமான மாம்சத்தை மூடுவதற்காகக் கொடுக்கப்படும் அடையாளமான சால்வையாகும். இதை நீதிமானாக்கப்படும் நிலைமை என்றழைக்கிறோம்.

மத்தேயு 13:46 ஆம் வசனத்தில் “விலை உயர்ந்த முத்தைப்” பற்றி வாசிக்கிறோம். இந்த முத்து, ராஜ்யத்தின் மதிப்பை எடுத்துக்காட்டுகிறது - எல்லா விலை மதிப்புகளுக்கும் அருமைபாடுப்பட்டதாக இருக்கிறது. நாம் வைத்திருக்கும் விலை மதிப்புள்ள எல்லாவற்றைளும் விட இது மதிப்புள்ளதாக இருக்கிறது.

தாலந்துகளைப் பற்றிய உவமையில், இயேசுவைப் பின்பற்றக் கூடியவர்கள் தங்களுக்குரிய தாலந்துகளுக்குப் பொறுப்புள்ளவர்காக இருக்கிறார்கள். ஒவ்வொரு சீஷரும் தாங்கள் பெற்ற தாலந்துகளைத் தங்களால் இயன்ற மட்டும் அதை தேவனுக்கேற்ற பணியில் பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.(மத்தேயு 25:14-29)

**கிறிஸ்துவர்கள் அல்லாத அநேகர் இயேசுவை ஒரு மிகப் பெரிய போதகராக கருதுகிறார்கள்.**



# பாடம் - 60

## இரண்டு உவமைகள்

**"அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்." - மத்தேயு13:3**

லூக்கா 15:11-32 ஆம் வசனங்களில் சொல்லப்பட்ட உவமையில் அந்த மனிதன் பிதாவாகிய தேவனையும், மூத்த குமாரன் யூத மத குருக்களையும், இளையகுமாரன் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நிர்விசாரமாக எண்ணின யூதர்களையும் அடையாளப்படுத்துகிறார்கள். இவர்களில் சிலர், பாவத்திற்காக மனம் வருந்தியதால் யோவான், ஞானஸ்நானம் கொடுத்தார்.

இளைய குமாரன் அனைத்து சொத்துக்களையும் இழந்த பின், தன்னுடைய தவறான வழிகளை உணர்ந்து, தன்னுடைய தகப்பன் வீட்டுக்கு ஒரு வேலைக்காரனாகத் திரும்பிப் போக விரும்பினான். அவனுடைய தந்தை அவனை மன்னித்து, அவனை அன்போடு ஏற்றுக்கொண்டதும் அல்லாமல், அவனை கனம் பண்ணும் படி அவனுக்கு ஒரு பெரிய விருந்தை ஆயத்தம் செய்தார்.

பெருமையுள்ள மூத்த குமாரன் (பரிசேயர், சதுசேயர், மத குருக்கள்) தகப்பன் தன்னுடைய சொத்தையும், அன்பையும் பெற தகுதியற்றவனுக்கு கொடுப்பதைப் பார்க்க விரும்பவில்லை. எப்படியிருந்தாலும், இந்த தகப்பன் தன்னுடைய இளைய குமாரன் மீண்டும் வீடு திரும்பியதில் பெரும் மகிழ்ச்சியடைந்தார்.

இந்த தகப்பன், அழகான சால்வை(இயேசுவின் நீதியின் சால்வை), விலையுயர்ந்த மோதிரம்(வல்லமையும், அதிகாரமும்), பாதரட்சை(சமாதானத்தின் பாதரட்சை), கொழுத்த கன்று (பாவமன்னிப்புக் கென்று செலுத்தக்கூடிய பலி), போன்ற வெகுமதிகளை இளைய குமாரனுக்கு கொடுத்தார். உண்மையில், பொறாமை கொண்டு, பெருமையால் நிறைந்து, சுயநீதியில் நடந்து, வெளிப்புறம் மாத்திரம் தேவனுடைய சட்டங்களை கடைபிடிப்பவர்களை இந்த மூத்த குமாரன் அடையாளப்படுத்துகிறான்.

இதே பாடம் மற்றொரு உவமையிலும்(லூக்கா 16:19-31) காணப்படுகிறது. யூத ஜாதி ஐசுவரியவானையும், மேஜையில் வைக்கப்பட்ட உணவுகள், தேவனுடைய ஐசுவரியமுள்ள வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் அடையாளப்படுத்துகிறது. அக்காலத்தில் யூதர்களுக்கு மட்டுமே அந்த ஆசீர்வாதங்கள் கொடுக்கப்பட்டது. வாசல் அருகே அமர்ந்து மேஜையில் இருந்து விழும் துணிக்கைகளால் தன் பசியை ஆற்ற ஆவலாய் இருந்த ஏழை லாசரு, அந்த ஆசீர்வாதங்கள் மேல் வாஞ்சையுள்ள புறஜாதிகளை அடையாளப்படுத்துகிறான். இவர்களுக்கு எந்த விதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கொடுக்கப்படவில்லை. ஆனால், ஐசுவரியவான் மரித்த பின், தேவனுடைய கிருபை யூதர்களோடு மட்டும் இராததினால், சகல ஆசீர்வாதங்களும் புறஜாதிகளுக்கும் வந்து சேர்ந்தது. சபை வகுப்பாரின் உறுப்பினர்களாவதற்கு, புறஜாதிகளுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. புறஜாதிகளுக்குப் பாதகமாக இருந்த அந்த யுகத்தின் முடிவை லாசருவின் மரணம், அடையாளப்படுத்துகிறது.

இந்த உவமையிலும்,
மற்ற உவமைகளிலும்,
இன்னும் அநேகப்
பாடங்கள்
மறைந்திருக்கிறது.
இயேசு தம்முடைய
சீஷர்களுக்கு பாடங்கள்
கற்பிப்பதற்கு
சொல்லப்பட்ட கதைகள்
என்பதை நாம் நினைவில்
கொள்ள வேண்டும்.

**இந்த "கொட்ட குமாரன்"
இஸ்ரயேலில் உள்ள
பாவிகளையும், பொது
மக்களையும்
அடையாளப்படுத்துகிறார்கள்.**



# பாடம் - 61

## விழித்தெழுதல்

**"எல்லாரும் அழுது அவளைக் குறித்துத் துக்கங் -கொண்டாடுகிறதைக் கண்டு, அழாதேயுங்கள், அவள் மரித்துப் போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அவள் மரித்துப் போனாளென்று அவர்கள் அறிந்ததினால், அவரைப் பார்த்து நகைத்தார்கள்." - லூக்கா 8:52,53**

பெற்றோருக்கு ஒரே குமாரத்தியாக அருந்த பன்னிரெண்டு வயது சிறுமி, மரித்தாள். இயேசு பெற்றோரிடமும், அங்குக் கூடியிருந்த மக்களிடமும், சிறுமி "நித்திரை"யில் இருக்கிறாள் என்று உறுதியளித்தார். அவர் அவள் கையை பிடித்தவுடன் எழுந்தாள்.

மார்த்தாள், மரியாளின் சகோதரன் இறந்த போது இயேசு, "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்", என்றார். இயேசு அவரை எழுப்புவதற்கு நான்கு நாட்கள் காத்திருந்தார். அந்த சரீரம் கெட்டு போக தொடங்கியிருக்க வேண்டும்.(யோவான் 11:11-14)

உயிர்பெற்ற லாசருவும், மற்றவர்களும், மரித்தப்பின் அவர்கள் சென்ற இடத்தை அல்லது அவர்கள் இருந்த நிலைமையைப் பற்றி ஏதும் சொல்லவில்லை என்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. நிச்சயமாக, அவர்கள் பரலோகம் சென்றிருந்தால் ஒரு அருமையான பரலோக வீட்டை வர்ணித்திருப்பார்கள் அல்லது எரிகிற நரகத்திற்கு சென்றிருந்தால் நம்மை எச்சரித்திருப்பார்கள்.

தாவீது தன்னுடைய பிதாக்களோடு நித்திரையடைந்தார் என்று வாசிக்கிறோம். (1இராஜாக்கள் 2:10) அப்போஸ்தலனாகிய பவுல் (1தெசலோனிக்கேயர் 4:13-15) மரணத்தில் "ஆழ்ந்த நித்திரையில்" இருப்பவர்களை பற்றி பேசுகிறார். மரண நிலைமையை விவரிப்பதற்கு நீண்ட காலமாக "நித்திரையடைந்தார்" என்று சொல்லப்படுகிறது.

நித்திரையும், மரணமும் ஒரே மாதிரியில்லாவிட்டாலும், இவைகள் ஒரே நிலையைக் குறிக்கிறது. நீங்கள் உறங்கும் போது, உங்களைச் சுற்றி நடக்கும் காரியங்கள் பற்றி உங்களுக்குத் தெரியாது.

பிரசங்கி 9:5,10, சங்கீதம் 146:4 ஆம், வசனங்களும் மரணத்தை இப்படியாகவே விவரிக்கின்றனர்.

ஒரு மனஷனாவது, மிருகமாவது ஜீவசுவாசத்தை இழந்தால், அவை மரிக்கும். இது அமைதியான, சுயநினைவற்ற நிலையாகும் - ஜீவன் அற்ற நிலை. மரணத்தின் நித்திரையிலிருந்து உயிர்த்தெழுதலில் எழும்புவதற்கு மனுக்குலம் வாக்குறுதி பெற்றிருக்கிறது. ஏதேனில் இழந்த மனித நிலைக்குரிய ஜீவன், வரும் யுகத்தில் திரும்பக் கொடுக்கப்படும்(லூக்கா 19:10).

மரித்த வெகு சிலரை மட்டுமே இயேசு உயிர்ப்பித்தார். ஆயிர வருட ஆட்சியில், உயிர்த்தெழுதலில், தேவனுடைய சட்டங்களுக்குக் கீழ்ப்படிபவர்களுக்கே, நித்திய ஜீவனை கொடுப்பார் என்று இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மரித்த மக்கள் எங்கும் உயிரோடிருப்பதில்லை என்பதை நாம் காண்கிறோம். இவர்கள் "இயேசுவுக்குள் நித்திரை"யாக இருக்கிறார்கள். ஏனென்றால், இவரே அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட இரட்சகரும், மீட்பருமாவார். இவருடைய தியாகமே, ஈடுபலி என்று அழைக்கப்பட்டு, வருங்காலத்தில் உயிரோடெழும்புவதற்கு வழி செய்தது. (தானியேல் 12:2) எவ்வளவு அற்புதமான ஒரு வாக்குத்தத்தம் !

**வேதாகமம் மரணத்தை நித்திரை என்று விவரிக்கிறது. ஆகவே, நித்திரையிலிருந்து எழ காத்திருப்பதுப் போல, மரணத்திலிருந்தும் எழுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**



# பாடம் – 62

## நியாயத்தீர்ப்பு

**"நியாயத்தீர்ப்பு நாளிலே உனக்கு நேரிடுவதைப் பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் (கப்பர்நாகூம்) சொல்லுகிறேன் என்றார்". - மத்தேயு 11:24**

கப்பர்நகூமில் இயேசு அநேக அற்புதங்கள் செய்திருந்தாலும், இன்றைக்கு அது பாழடைந்திருக்கிறது. இயேசு மத்தேயு 11:24 ல் சொல்லிய தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருக்கிறது. தேவன் கப்பர்நாகூமின் ஜனங்களுக்கு அநேக ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும், ஞானமான முறையில் பொருப்பாக பயன்படுத்த வேண்டும் என்று கொடுத்திருந்தார்.

சோதோம் கொமோரா பட்டணங்கள், இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களையும் கிருபைகளையும் பெறாததினால் அவர்களிடம் தேவன் அதிகமாக எதிர்ப்பார்க்கவில்லை. (மத்தேயு 10:15) இந்தப் பட்டணங்கள் மிகவும் கொடிதான துன்மார்க்கமும், அசுத்தமாகவும் இருந்தது. இருந்தாலும், கப்பர்நகூம் பட்டணத்திற்கு அளித்த வெளிச்சத்தையும், ஞானத்தையும் இவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தால், இவர்கள் மனந்திரும்பியிருப்பார்கள் என்று வசனங்கள் உறுதியளிக்கிறது.

முதலாம் நியாயதத்தீப்பின் நாள், ஏதேனில் நடந்தது - ஆதாம் சோதிக்கப்பட்டதில், தோல்வியடைந்தார். அவருடைய தோல்வியின் காரணமாக, மரணத்தீர்ப்பைப் பெற்றார். இதனிமித்தம் முழுமனுக்குலமும் மரணத்திற்குள் விழுந்தது. இயேசு ஆதாமுக்குப் பதிலாக தன்னுடைய ஜீவனை ஈடுபலியாகக் கொடுத்து, அவரையும், அவர் சந்ததியையும் மரணத்தீர்ப்பிலிருந்து மீட்காவிட்டால், அனைவரும் மரண நிலையில் நித்தியமாக இருந்திருப்பார்கள்.

நியாயத்தீர்ப்பின் நாள் (மேசியாவின் யுகம்), இருபத்து நான்கு மணி நேரம் அல்ல, 1000 வருடங்களாகும் (2பேதுரு 3:8). அப்பொழுது, முழு உலகமும் நித்திய ஜீவனை பெற பாத்திரமாக இருக்கிறார்களா, இல்லையா என்று சோதிக்கப்படும். இதில் சோதோம், கோமோராவும்,

இன்னும் பாவத்தினால் அழிந்த அனைத்துப் பட்டணங்களும் உள்ளடங்கும்.

தேவனுடைய பார்வையில், நன்மையானக் காரியங்களைச் செய்ய எல்லா வாய்ப்புகளும் கொடுக்கப்பட்ட பின் தான், ஒரு தனி நபர் நியாயம்தீர்க்கப்படுவார். அப்போது சாத்தானின் தூண்டுதல் நீக்கப்பட்டு, இராஜ்யத்தின் சட்டங்களை எளிதாக கடைப்பிடிப்பதற்கும், கீழ்ப்படிவதற்குமான சகல உதவிகளும், ஆசீர்வாதங்களும் கொடுக்கப்படும்.

சுவிசேஷ யுகத்தில், இயேசுவை பின்பற்றக்கூடிய சீஷர்கள், ஆதாமின் கீழ்ப்படியாமையின் நிமித்தமாக வந்த தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். இந்த உலகத்திற்கு வரும் மகா நியாயத்தீர்ப்பின் நாளுக்கு முன்னதாகவே, சிறு மந்தை என்று அழைக்கப்பட்ட இயேசுவின் சீஷர்கள் சோதிக்கப்படுகிறார்கள்.

சாகாஜீவனைப் பரிசாகப் பெற்றபின், இவர்கள் இயேசுவோடு பரலோகத்தின் நியாயாதிபதிகளாக இருப்பார்கள். (1கொரிந்தியர் 6:2) அவர்களுடைய சொந்த அனுபவங்களில் தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும், உணர்ந்து உயிர்த்து எழும் உலக மக்களுக்கு நீதியை கற்றுக் கொள்வதற்கு உதவி செய்து, இந்த பூமியில் நித்தியமான ஜீவனைப் பெற வழிநடத்துவார்கள்.

**இன்றைக்கு கப்பர்நகூம் பட்டணம் பாழாக்கப்பட்டிருக்கிறது.**



# பாடம் - 63

## இரண்டாம் மரணம்

**“அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.” - மத்தேயு 25:34**

வெள்ளாடுகளும், செம்மறி ஆடுகளும் பற்றிய உவமையில் (மத்தேயு 25:31-46). சபை வகுப்பார் பரலோகத்தில் மகிமை அடைந்த பின் தேவனுடைய ராஜ்யத்தின் நிலைமைகளை சித்தரிக்கிறது. ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பின் அதில் நடைபெறும் வேலைகளைப் பற்றி, இயேசு சொன்ன ஒரே உவமையாகும்.

உலகத்தில் உள்ள சகல ஜாதியாரும், (மரணத்தில் நித்திரை செய்யும் அனைவரும் இதில் அடங்குவார்கள்) ஆயிர வருட ஆட்சியில் கிறிஸ்துவுக்கு (இயேசு மற்றும் அவருடைய சபையும்) முன் நியாத்தீர்ப்பு பெறுவார்கள்.

அவர்களுடைய உண்மையான விருப்பங்கள் என்ன என்று முடிவெடுக்கப்படும் - அதாவது தேவனோடு, ராஜ்யத்தின் சட்டங்களை முழு விருப்பத்தோடு செயல்பட விரும்புகிறார்களா, இல்லையா என்று வெளிப்படுத்தப்படும்.

இந்த உவமையில் சொல்லப்பட்ட செம்மறி ஆடுகள், தங்களுடைய முழு விருப்பத்தோடு பரலோகத்தின் தேவனையும் அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்துவின் நீதியையும், அன்பையும், கற்றுக் கொண்டு அவருடைய ராஜ்யத்தில் கீழ்ப்படிய முயற்சி செய்யும் மக்களை அடையாளப் படுத்துகிறார்கள். இவர்கள் படிப்படியாக நீதியைக் கற்றுக் கொண்டு தேவனோடு இசைவாக வாழ்வதினால், பூரணமான உலகத்தில் நித்திய ஜீவனைப் பெற்று நித்தியமாக வாழ்வதற்கு நியாயம் தீர்க்கப்படுவார்கள். செம்மறி ஆடுகளைப் போல இவர்கள் சாந்தத்தோடு, நீதி மற்றும் சத்தியமாகிய பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்கு வழிநடத்தப்படுவதற்கு தங்களை முழுமையாக ஒப்புக்கொடுக்கப்பார்கள்.

வெள்ளாடுகள், செம்மறியாடுகளைப் போல் அதிகமான எண்ணிக்கையுள்ளவர்கள் அல்ல. இவர்கள் எந்தச் சூழ்நிலைகளிலும் சுகமாக வாழ்ந்து, நித்திய ஜீவனைப் பெறுவதற்கான கட்டளைகளை கீழ்ப்படிய மறுப்பவர்களை அடையாளப்படுத்துகிறார்கள். அவர்கள் பாவ வழிகளை விட்டு வருவதற்கு எந்த விதமான முயற்சியும் செய்யாததினால், இவர்கள் இரண்டாம் மரணத்திற்கு அல்லது நித்தியமான அழிவுக்கு நியாயம் தீர்க்கப்படுவார்கள் - ஜீவனிலிருந்து அறுப்புண்டு போவார்கள். (வெளி 21:8, அப்போஸ்தலர் 3:23)

அநேக வசனங்கள் அழிவை, அக்கினிக்கு அடையாளப் படுத்துகிறது. பாவத்திற்கு தண்டனை அக்கினி என்று தேவன் என்றுமே நமக்கு நியமித்ததில்லை. அவர் அன்பும் கிருபையும் நிறைந்த தேவனாக இருப்பதினால், எந்த விதமான உயிரினங்களையும் கொடூரமான முறையில் நித்தியமாக வாதிப்பதில்லை.

அக்கினி, பொருட்களை முற்றிலுமாக அழிப்பதினால், வேதாகமம் முற்றிலுமான அழிவை அக்கினிக்கு ஒப்பிடுகிறது. எருசலேம் நகரத்திலிருந்த குப்பை குழி இன்னோம் பள்ளதாக்கிலிருந்தது. அதில் உள்ளவைகளை அழிக்க அக்கினி எரிந்து கொண்டே இருக்கும். அதில் குப்பைகள் மட்டும் அல்லாமல், மிருகத்தின் சடலங்களும், மரித்த துன்மார்க்கர்களையும் அதில் எறிவார்கள். இன்னோம் பள்ளத்தாக்கை கெஹன்னா என்றும் அழைப்பார்கள். இது வேதாகமத்தில் “நரகம்” என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த கெஹன்னாவிலிருந்து ஒருவரும், என்றுமே ஜீவனுக்குத் திரும்பி, விடுவிக்கப்படாததினால், இதை இரண்டாம் மரணத்திற்கு குறிப்பிடப்படுகிறது.

**செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளின் உவமையானது, ராஜ்யத்தின் நிலைமைகளைச் சித்தரிக்கிறது.**



# பாடம் - 64

## இராஜ்யத்தை குறித்த விளக்கம்

**“பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக”. - மத்தேயு 6:9,10**

இயேசுவும் அவருடைய சீஷர்களும், ராஜ்யத்தை பற்றிய உவமைகள் வழியாகவும், அற்புதங்களின் மூலமாகவும் கற்பித்தார்கள். அற்புதங்கள் அனைத்தும் தேவனுடைய ராஜ்யத்தில் நடக்க இருக்கும் காரியங்களுக்கு மாதிரியாக இருந்தது. பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கும் அநேக சரித்திரங்கள் வரக்கூடிய காரியங்களைச் சித்தரிப்பது போல, இந்த அற்புதங்களும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைச் சித்தரிக்கிறது.

தேவனுடைய இராஜ்யத்தில் சிலர் மட்டும் அல்ல மனுகுலத்தில் உள்ள அனைத்து வியாதியஸ்தர்களும், அங்கவீனமுள்ளவர்களும் சொஸ்தமடைவார்கள். செவிடரின் செவி கேட்கும், குருடர்கள் பார்வையடைவார்கள். (ஏசாயா35:5,6)

குஷ்டரோகம் பாவத்தைக் குறிக்கிறது. இயேசு 10 குஷ்டரோகிகளை சொஸ்தமாக்கினார். அதில் ஒருவர் மட்டுமே அவருக்கு நன்றி சொல்ல திரும்பி வந்தார். இந்த யுகத்திலும் வெகு சிலரே இயேசு முழு உலகத்தையும் பாவத்திலிருந்து மீட்க மரித்தார் என்பதை உணருவார்கள். (லூக்கா 17:11-17)

வியாதியஸ்தரை சொஸ்த்தப்படுத்தினது, உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அனைத்து மக்களும் “நல்ல வைத்தியராலே” குணப்படுவார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது. இந்த முழு உலகத்தையும் பாவத்திலிருந்து இரட்சிக்க தேவன் இயேசுவின் மூலம் கிரியை செய்கிறார்.

பார்வையற்ற கண்களும் செவிடான செவிகளும் திறப்பது, ராஜ்யத்தில் மனக்கண்களும், காதுகளும் திறக்கப்படுவதைக் குறிக்கிறது. அப்போது, தேவன் எவ்வளவு அன்பு கூர்ந்தார் என்றும், அவர் செய்த அற்புதமான காரியங்களையும் மனுக்குலம் உணரும்.

மறுரூப மலையில் நம்முடைய ஆண்டவர் மறுரூபமானதும், ராஜ்யத்தைக் குறித்த மற்றொரு எடுத்துகாட்டாகும். இயேசுவின் தோற்றம் திடீர் என்று மாறினது போல் இருந்தது. ஆனால் உண்மையில் அவர் மாற வில்லை. இதுவே மறுரூபமாகும். அவர் மகிமையடைந்து திவ்விய சுபாவத்தில் இருக்கப்போகிறதை இங்கு ஒரு காட்சியாகக்காட்டப்பட்டது.

அவரோடு இருந்த பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் (மத்தேயு 16:28) வசனத்தில் வாக்களிக்கப்பட்டதைத் தரிசித்தார்கள். “இவர் என்னுடைய நேச குமாரன் அவருக்கு செவிகொடுங்கள்” என்ற தேவனுடைய சத்தத்தையும் கேட்டார்கள். (மத்தேயு 17:5)

நீண்ட காலத்திற்கு முன் மரித்த மோசே மற்றும் எலியாவும் இந்த தரிசனத்தில் கண்டார்கள். மோசே நியாயப்பிரமானத்தையும், உலகத்தின் மேல் பிரபுக்களாக இருக்கக்கூடிய விசுவாசமுள்ள பழைய ஏற்பாட்டு வீரர்களையும் குறிக்கிறார். எலியா, பரலோகராஜ்யத்தில் உள்ள சபை மக்களைக் குறிக்கிறார். இந்த தரிசனமானது, தேவனுடைய ராஜ்யம், குறித்தகாலத்தில் வரும் என்பதை வலியுறுத்துகிறது.



**இயேசு மலையின் மேல் மறுரூபமான காட்சி, இராஜ்யத்தின் தரிசனத்தை எடுத்துக்காட்டியது.**

# பாடம் – 65

## உன்னதத்தில் ஓசன்னா

**“ஓசன்னா,கர்த்தருடைய நாமத்தினாலலே வருகிற இஸ்ரயேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்.” - யோவான் 12:13**

இயேசுவின் ஊழியம் முடிவை நெருங்கும் பொழுது, பெத்தானியாவில் உள்ள அவருடைய நெருங்கிய நண்பர்களான மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவை சந்தித்தார். (இயேசுவால் மரணத்திலிருந்த எழுப்பட்ட அதே லாசரு) அவர் அங்கு அடிக்கடி விருந்தாளியாகச் செல்லுவது வழக்கம், அது அவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது.

மரியாள் தன்னுடைய அன்பை, வெளிப்படுத்துவதற்காக வெள்ளைக்கல் பரணியில் உள்ள விலையேறப் பெற்ற நளதம் என்னும் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றி, பாதத்தில் பூசி, அவளுடைய மயிரினால் அவருடைய பாதத்தைத் துடைத்தாள். அற்புதமான சுகந்த வாசனை அந்த அறையை நிரப்பியது. இந்த வெள்ளைக்கல் பரணி நம்முடைய இருதயத்தையும், நறுமணம் கிறிஸ்துவிற்கும், சபைக்கும் மற்றும் அனைவருக்கும் நம்முடைய இருதயத்தில் இருந்து வெளிப்படும், நல்விருப்பங்களையும், பரிவையும், அன்பையும், சாந்தத்தையும் குறிப்பிடுகிறது.

யூதாஸ்காரியோத் என்ற ஒரு சீஷன் மரியாளை பறியாசம் செய்தான் இந்த தைலத்தை விற்று தரித்திரருக்கு கொடுத்திருக்கலாமே என்று சொன்னான். எப்படியிருந்தாலும், மரியாளின் அன்பையும், அர்ப்பணிப்பையும் இயேசு மெச்சிக் கொண்டு, அவள் என்னை அடக்கம் பண்ணுவதற்காக, அபிஷேகம் செய்தாள் என்றார். இன்னும் சில நாட்களுக்குப் பின் இவர்களை விட்டு எடுத்துக்கொள்ளப்படுவார் என்பதையும் இயேசு அறிந்திருந்தார்.

இஸ்ரயேலின் இராஜாக்களைப் (கழுதையின் மேல் பவனிவருவது, பழக்கமாக இருந்தது) போல், மறுநாள் ஒரு கழுதைகுட்டியை கொண்டுவரச் சொல்லி, அதின்மேல் எருசலேமுக்குள் பவனி வந்தார். ஜனக்கூட்டம் அவரை மேசியா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். “தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா, கர்த்தரின் நமத்தினாலே வருகிறவர் ஸ்தோரிக்கப்பட்டவர், உன்னதத்திலே

ஓசன்னா ” (மத்தேயு 21:9)என்று ஆர்ப்பரித்துக்கொண்டு, அவர்களுடைய வஸ்திரங்களையும், மரக்கிளைகளையும் அவருக்கு முன் பரப்பினார்கள். அல்லேலூயா போல் ஓசன்னா என்பதற்கு துதி, மகிழ்ச்சி என்று பொருள்படும்.

இயேசுவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதைக் குறித்து பரிசேயர்கள் கோபமடையந்து, ஜனங்களை அடக்கும் படி இயேசுவை கூப்பிட்டுச் சொன்னார்கள்.(சகரியா9:9) ஆம் வசனத்தின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றி கொண்டிருக்கிறதாகவும், இவர்கள் கூப்பிடாவிட்டால், கல்லுகள் கூப்பிடும் என்றும் அவர்களுக்குச் சொன்னார்.

இயேசு இந்த பூமியின் மேல் பெரிய இராஜாவாகி, எதிரிகளை அழிப்பார் என்றும், இனி ஒருபோதும் ரோம இராஜ்யத்திற்கு அடிமைகளாக இருக்க வேண்டியதில்லை என்றும் ஜனங்கள் எண்ணினார்கள். ஆனால், இயேசு எருசலேமை நோக்கி கண்ணீர் விட்டார். அவருடைய ராஜ்யம் இப்போது துவங்காது என்று இயேசு நன்கு அறிந்திருந்தார். மேலும், இதினிமித்தம் அநேகர் ஏமாற்றம் அடைந்து, அவரைக் கொல்ல வேண்டும் என்று கூக்கூரலிடுவார்கள் என்றும் அவர் அறிந்திருந்தார்.

அவர் ஆலயத்திற்குச் சென்ற போது, வியாபாரிகள் பலி செலுத்துவதற்கான புறாக்களை விற்றுக் கொண்டிருந்ததைக் கண்டார். அவர்கள் போட்ட சத்தமும், பேரம் பேசும் விதங்களும், ஜெபத்திற்கான ஒரு இடத்தை போல் அது இல்லை. பிரதான ஆசாரியர்களின் குடும்பங்கள் ஐசரியவான்களாகவும், மேலும், சந்தை கடைகளில் மிக பெரிய அளவில் லாபங்களையும் சம்பாதித்தார்கள். இயேசு மிகவும் கோபம் அடைந்து வியாபாரிகளையும் காசுக்காரர்களையும் வெளியே விரட்டி விட்டார்.

**சீக்கிரத்தில் இந்த ஜனங்கள் அவரை மரணத்திற்கு ஒப்புவிப்பார்கள் என்று இயேசு அறிந்திருந்தார்.**



# பாடம் - 66

## இராஜ்யத்தினுடைய விலை மதிப்பு

**"ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" - மத்தேயு 7:14**

இயேசு சாலையின் வழியாக நடந்து செல்லுகையில், ஒரு வாலிபன் அவர் கால்களில் விழுந்தான். இந்த ஐசுவரியமுள்ள வாலிபன், தன்னால் இயன்ற வரைக்கும் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து, ஒழுக்கமுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தான். ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்வதற்கு ஒருவருக்கும் உரிமை இல்லாததினால், இப்படி வாழ்வது அவனுடைய கடமையாக இருந்தது.

சட்டங்களையும் தெளிவாகப் புரிந்து கொண்ட, யூத மத தலைவராக இருந்தான். தான் ஏதோ ஒரு வகையில் குறைவுபடுவதாக உணர்ந்து, அவன் இயேசுவிடம் "நித்திய ஜீவனை பெறுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான். இயேசுவில் நன்மையும், உண்மையும் இருப்பதை உணர்ந்தான். மேலும், அவருடைய போதனைகளையும் அறிந்திருந்தான்.

இயேசு நியாயப்பிரமாணங்களைக் கைக்கொள்ளச் சொன்னார். நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கும் எந்த ஒரு யூதனும் ஜீவனைப் பெறுவான் என்று வாக்களிக்கப்பட்டிருந்தது. அந்த வாலிபன் எப்போழுதும் தேவனுக்குப் பிரியமாக நடந்ததினால், "போதகரே இவை எல்லாவற்றையும் என் சிறு வயது முதல் கடைபிடித்து வருகிறேன்" என்று பதில் அளித்தான்.

அந்த வாலிபன் தான் செய்த காரியங்கள் அனைத்திலும் திருப்தியடைந்தாலும், தன்னுடைய வாழ்க்கையில் ஏதோ ஒன்று குறைவுபடுகிறது என்று எண்ணி இந்தக் கேள்வியைக் கேட்டான். அவன் அபூரணமானவன் என்று அறிந்ததால், நித்திய ஜீவனைப் பெற இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான்.

பொது இடத்தில் தாழ்மையோடு நடந்து கொண்டதினால், இயேசு அந்த வாலிபனை மிகவும் நேசித்தார். இயேசு அவனைப் பார்த்து, "நீ போய், உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு.

அப்போது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும், பின்பு என்னைப் பின்பற்றிவா” என்றார்.(மத்தேயு 19:21)

அந்த வாலிபன் மிகவும் ஆஸ்தியுடையவனாக இருந்ததினால் அவன் மிகவும் விசனம் அடைந்து, தன்னுடைய சொத்துகளையும், ஆடம்பரமான வாழ்க்கையையும் விட்டுவிட மனதில்லாதவனாய் திரும்பிச் சென்றான். அவனுக்கு சொந்தமானவைகளை உடனடியாக விற்க வேண்டும் என்று அவர் தவறாகப் புரிந்து கொண்டான். அந்த ஆஸ்திகளை பிறனுடைய நன்மைக்காகப் பயன்படுத்த சொன்னார் என்பது அவனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக, நாம் வைத்திருக்கும் சொத்துக்களை விட, நம்முடைய ஆண்டவரை பின்பற்றுவதின் மூலம் நமக்குக் கிடைக்கும் பரிசுகள் மேன்மையாகவும், உச்சிதமாகவும் இருக்கும்.

இயேசு பேசின “ஊசியின் காதில் ஒட்டகம் நுழைதல்” என்ற உவமையில் துல்லியமாக எடுத்துரைத்தார். (மத்தேயு 19:23,24) பழங்காலத்தில் பெரிய மதில்சுவர்களில் உள்ள சிறிய வாசலை “ஊசியின் காது” என்று அழைப்பார்கள். சூரிய அஸ்தமனத்திற்குப் பின் பெரிய வாசல்கள் அடைக்கப்படும். ஒட்டகமானது அந்த சிறிய வாசலுக்குள் நுழைவதற்கு, தன்னுடைய முதுகின் மேல் வைத்திருக்கும் பாரத்தை இறக்கி விட்டு, அமர்ந்து கால்களை மடக்கி சற்று கஷ்டப்பட்டு நுழைய வேண்டும். அதே போல் நாமும், ஆண்டவரைப் பின் பற்ற, தேவையற்ற பாரங்களை வாழ்க்கையிலிருந்து அகற்ற வேண்டும்.

**அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுடையவனாக இருந்ததால், துக்கம் அடைந்தவனாகத் திரும்பினான்.**



# பாடம் - 67

## நினைவு கூறுதலின் ராபோஜனம்

**“நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே”. - 1 கொரிந்தியர் 5:7**

யூதர்களின் பஸ்காவுக்கு ஐந்து நாட்களுக்கு முன் இஸ்ரயேலின் இராஜாவாக, இயேசு கழுதையின் மேல், எருசலேமுக்குள் பவனி வந்தார். பஸ்காவின் விருந்து ஒவ்வொரு வருடமும் முதலாம் மாதமாகிய நீசான் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து ஏழு நாட்கள் கொண்டாடப்படும். அநேக வருடங்களுக்கு முன், மோசே எகிப்தின் அடிமையிலிருந்து இஸ்ரயேல் மக்களை விடுவித்து, கானானுக்கு வழி நடத்தியதை யூதர்கள் நினைவுகூர்ந்தார்கள். அந்த ஜாதியின் முதற்பலன்கள் மரணத்திலிருந்து விடுதலை பெற்று கடந்து சென்றதையும் சித்தரிக்கிறது. எகிப்தில் வந்த பத்தாவது வாதை எல்லா தலைச்சன் பிள்ளைகள் (எகிப்து, இஸ்ரயேல்) மேலும் வந்தது. ஆட்டுக்குட்டியின் இரத்தம் வீட்டு வாசற்படியின் நிலைகளில் தெளிக்கப்பட்டால் மட்டுமே தலைச்சன் பிள்ளைகள் காப்பாற்றப்படார்கள். இஸ்ரயேல் ஜாதியின் பிறப்பை இந்த சம்பவம் குறித்தது. இந்நாள் வரைக்கும் இந்த பஸ்கா கொண்டாடப்பட்டு வருகிறது.

முதல் பஸ்காவை நிறைவேற்ற இயேசு தாமே பஸ்கா ஆடானார். இயேசுவும், அவருடைய சீஷர்களும் ஒவ்வொரு வருடமும் பஸ்காவைப் புசித்தார்கள். கடைசி முறை இயேசு அவர்களுடன் பந்தியிலிருந்து போஜனத்தை புசித்து முடித்த பின்பு, அவர்கள் கடைபிடிக்க ஒரு புதிய கட்டளையைக் கொடுத்தார். பஸ்காவுக்கு பதிலாக ராபோஜனத்தைத் துவங்கிவைத்தார்.

இயேசு அப்பத்தை எடுத்து, நன்றி செலுத்தி, பிட்டு சீஷர்களுக்கு கொடுத்து, “இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாக இருக்கிறது”. (1கொரிந்தியர் 11:24) “பின்பு, பாத்திரத்தையும் (திராட்சை ரசம்) எடுத்து, நன்றி செலுத்தி, சீஷர்களுக்குக் கொடுத்து, இதை அனைவரும் வாங்கிக் குடியுங்கள்”. (மத்தேயு 26:27) இது அனைவரின் பாவ மன்னிப்புக்காக சிந்தப்படுகிற என்னுடைய இரத்தமாக இருக்கிறது.

முழு உலகத்தின் பாவத்திற்கு இயேசுவின் மரணம் ஈடுபலியாகக் கொடுக்கப்பட்டதை இயேசுவைப் பின்பற்றுபவர்கள் இருதயத்தில் உணர்ந்தவர்களாக, ஒவ்வொரு வருடமும் அவருடைய மரணத்தை நினைவு கூறும்படி இதைச் செய்கிறார்கள். தங்களுடைய ஜீவனை பலிசெலுத்தி புதுசிருஷ்டிகளாகிறார்கள்.(புதியசிந்தை) முடிவுபரியந்தம் விசுவாசத்தைக் காத்துக் கொண்டால், இராஜ்யத்தில் ஆவியின் சரீரத்தைப் பெற்று, சபையின் அங்கத்தினர்களாக, இயேசு கிறிஸ்துவோடு இந்த பூமியின் மேல், ஆயிர வருடங்கள் ஆட்சி புரிவார்கள்.(வெளி 20:4)

சபையின்பலி உலகத்தை மீட்க அவசியமில்லை. ஆனாலும், வாஞ்சையுடன் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க விரும்பி, தங்களுக்குரியவைகளை எல்லாம் பலி செலுத்தி, (நேரம், பணம், தாலந்து மற்றும் ஆற்றல்) மரணம் வரைக்கும் விசுவாசத்தில் நிலைத்திருப்பவர்களுக்குத் தேவன் திவ்விய சுபாவத்தைக் கொடுப்பார்.

**ஒவ்வொரு வருடமும் நினைவுக் கூறுதலின் ராபோஜனத்தில் பங்கெடுக்கும் போது, நாம் நம்முடைய ஆண்டவரின் மரணத்தை நினைவு கூறுகிறோம்.**



# பாடம் - 68

## இதோ இந்த மனுஷன்

**“நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான்......இதோ இந்த மனுஷன் என்றான்”. - யோவான் 19:4,5**

இராபோஜனத்திற்கு பின் இயேசு பதினொரு சீஷர்களையும் கெத்செமேனே தோட்டத்திற்கு ஜெபிக்க அழைத்துச் சென்றார். அவர்கள் அங்கிருந்தப்பொழுது, யூதாஸ் பட்டயங்களைச் சுமந்த ஒரு படையை அழைத்து வந்தான். அவர்கள் இயேசுவை பிரதான ஆசாரியனாகிய காய்பாவிடம் அழைத்து சென்றனர். இந்த ஆசாரியனும் மற்ற ஆலோசனை சங்கத்தார்களும், இயேசுவின் மேல் குற்றங்களை சுமத்தி அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க மனதாயிருந்தார்கள்.

அதற்கு பின் ரோம ஆளுனராகிய பிலாத்துவிடம் அழைத்துச் சென்றார்கள். இயேசு நல்லவர் என்றும், யூத மத குருக்கள் தங்களுடைய சுயநலத்திற்காக அவரை கொல்ல நினைக்கிறார்கள் என்றும் பிலாத்து கண்டறிந்தான் (மாற்கு 14:55)

ஒரு வாரத்திற்கு முன் இயேசு எருசலேமுக்குள் கழுதையின் மேல் பவனி வந்த போதும், மக்கள் அவரை இராஜாவாகப் போற்றினார்கள். இதனிமித்தம் ரோமர்கள் நிச்சயமாக இயேசுவைக் கொன்று விடுவார்கள் என்று ஆசாரியர்கள் எதிர்பார்த்தார்கள்.

இயேசு கலிலேயாவை சேர்ந்தவர் என்று பிலாத்து அறிந்து, தன் இருதயத்தில் குற்றமில்லாதவர் என்று தோன்றின ஒருவருக்கு மரணத்திற்குள் நியாயம்தீர்க்கும் பொறுப்பை தட்டி கழித்தான். கலிலேயாவின் அதிபதியாகிய ஏரோதிடம் அனுப்பினான். ஆனால் ஏரோது இயேசுவைக் குறித்த காரியங்களையும், செய்த அற்புதங்களையும் கேள்விப்பட்டு பயந்து, மீண்டுமாக பிலாத்துவிடம் அனுப்பினான்.

பிலாத்து யூதர்களை வெறுத்தாலும், அவர்கள் கொண்ட வந்த இயேசுவை மிகவும் விரும்பினார். யூதர்களிடமிருந்து பிரச்சனைகளை தவிர்ப்பதற்கு, இயேசுவை அடிக்கும்படி கட்டளை கொடுத்து, யூதர்களை

திருப்திபடுத்த நினைத்தான். ஆனால், இதுவும் அவர்களைத் திருப்திப்படுத்தாமல், "சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" என்று கூக்குரலிட்டார்கள்.

இயேசு அவர்கள் எதிர்பார்த்த ஒரு இராஜாவாகவோ, வீரராகவோ இருக்கவில்லை. ரோமர்களிடமிருந்து தங்களை விடுவிக்க, மாவீரன் அலெக்சாந்தரைப்போல் ஒரு இராஜாவை அவர்கள் எதிர்ப்பார்த்தார்கள். இயேசுவிலிருந்த அஹிம்சை பொறுமை, சாந்தம், அனைவரிடத்திலும் காட்டின அன்பு போன்ற குணங்களின் நிமித்தமே அவரை நிராகரித்தார்கள்.

இயேசு தேவனுடைய குமாரன் என்று அநேகர் ஏற்றுக் கொண்டதையும், இயேசு நேர்மையற்ற, பேராசையுள்ள ஆசாரியர்களைக் குறித்து எச்சரிக்கிறார் என்பதையும் யூத மத தலைவர்கள் அறிந்திருந்தார்கள். இதை நிறுத்த விரும்பினார்கள்.

பஸ்காவின் போது சிறையிலிருந்து ஒரு குற்றவாளியை விடுவிப்பது வழக்கமாயிருந்தது. பிலாத்து இயேசுவை அல்லது பரபாசை விடுதலை செய்வதற்கான தேர்வை யூதர்களிடம் வைத்தான். அந்த ஜனக்கூட்டம், "பரபாசை விடுதலை செய்" என்றது.(லூக்கா 23:13-25) இயேசு எதிராளிகளிடமிருந்து, தன்னை மீட்க தேவனிடம் கேட்டிருக்கலாம், ஆனால், தன்னுடைய மரணம் மனுக்குலத்தின் மீட்புக்கு மிக அவசியம் என்று அறிந்த இயேசு தான் தப்பித்துக் கொள்ள முயற்றிக்கவில்லை.



# பாடம் – ६९

## சிலுவை மரணம்

**“இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசியிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.” - லூக்கா 23:43**

இயேசு நிரபராதி என்று பிலாத்து அறிந்திருந்தும், யூத மக்களின் விருப்பத்திற்குக் கையளித்தார். சிலுவை மரணம் கொடூரமான மரணமாகும்.

சேவகர்கள் கிறிஸ்துவின் அங்கியை எடுத்து கொண்டு, முள்ளுகளால் ஒரு கீரிடத்தைப் பின்னி அவர் சிரசின் மேல் வைத்தார்கள். இரக்கமின்றி அவரை கன்னத்தில் அறைந்து, கேலி செய்தார்கள். அவருடைய நெருங்கிய நண்பர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறியாமல் இருந்தார்கள். பேதுரு பயத்தினால், இயேசுவை மறுதலித்தார். உடனே சேவல் கூவின சத்தத்தை கேட்டு, இப்படி செய்வார் என்று இயேசு சென்ன வார்த்தைகளை நினைவுகூர்ந்து அவமானத்தில், வெளியே ஓடி மனம் கசந்து அழுதார்.(லூக்கா 22:54-62)

இயேசுவின் இருபக்கத்திலும் இரண்டு கள்ளர்கள் அவரோடு அறையப்பட்டார்கள். இயேசுவின் தலைக்கு மேல் “இவர் யூதர்களின் ராஜா” என்று எழுதப்பட்டிருந்தது, இதனை மூன்று மொழிகளில் எழுதப்பட்டு அவருடைய “குற்றம்” சொல்லப்பட்டிருந்தது.

இயேசுவின் விரோதிகள், அவர் செய்த அற்புதங்களை கேள்விப்பட்டதினால், அவரை சிலுவையில் இருந்து இறங்கச் சொல்லி கேலி செய்தார்கள். ஆனால், இயேசு முழுமையாக தேவனை விசுவாசித்து, தேவனுடைய திட்டத்தில் அவர் மரிக்கவேண்டிய நேரத்தை அறிந்திருந்தார். இயேசு தன்னுடைய ஜீவனை தப்பித்துக்கொள்ள வாய்ப்பு இருந்தும், முழுவிருப்பத்தோடு சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டார். அவர் மரிக்காவிட்டால் இந்த மனுகுலத்தை மீட்க இயலாது என்று அறிந்திருந்தார். இதற்காகவே பூமிக்கு வந்தார்.

அருகில் இருந்த ஒரு கள்ளன், இயேசுவை நோக்கி “நீ கிறிஸ்து அல்லவா, உன்னை இரட்சித்துக் கொண்டு, எங்களையும் காப்பாற்றும்” என்றான். மற்றவன் அவனை அதட்டி, “நாம் நம்முடைய கிரியைகளுக்குத் தக்க பலனைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால், அவர் ஒரு

பாவமும் அறியாதவர்" என்றான். அதற்கு பின், அந்த கள்ளன் இயேசுவின் ராஜ்யத்தில் அவனை நினைத்துக் கொள்ளும் படிக் கேட்டுக்கொண்டான்.

இயேசு, "நான் உனக்கு சொல்லுகிறேன், இன்றைக்கு நீ என்னுடன் பரதீசில் இருப்பாய்", என்று அன்புடன் பதிலளித்தார். இந்த வசனப்பகுதியில் உள்ள கமாவை சற்று கவனியுங்கள். "இன்றைக்கு" என்ற வார்த்தைக்குப் பின்னால் வரக்கூடிய கமா முன்னால் வந்து விட்டது. ஒரு சின்ன கமா வசனத்தின் அர்த்தத்தையே மாற்றிவிட்டது.

வேதாகத்தை எழுதியவர்கள் எந்த விதமான குறியீடுகளையும் பயன்படுத்தவில்லை. சுமார் 400 வருடங்களாக இந்த குறியீடுகள் உபயோகத்தில் உள்ளது. இந்தச் சு ழ்நிலையில் "இன்றைக்கு" என்ற வார்த்தைக்கு முன் வர வாய்ப்பில்லை என்பதை நாம் அறிவோம், ஏனென்றால், இயேசுவோ அல்லது அந்தக் கள்ளனோ, மரித்த அன்று பரதீசுக்கு போக வில்லை. பரதீஸ் என்பதற்கு "தோட்டம்" என்று பொருள்படும். இந்த பூமி ஆயிரவருட அரசாட்சியில் பூரணப்பட்டு, மிக அழகாக இருக்கும் என்பதை ஏதேன் தோட்டம் மிக எளிமையாக சித்தரிக்கிறது.

**"இவர் யூதர்களின் ராஜா" என்ற வார்த்தைகள் சிலுவையில், இயேசுவின் தலையின் மேல் பலகையில் எழுதப்பட்டிருந்தது.**



# பாடம் - 70

## வெறுமையான கல்லறை

**“ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும் ” - 1 கொரிந்தியர் 15:44**

சீஷர்களின் நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுவிட்டது. ஆண்டவரிடம் அநேகக் காரியங்களை எதிர்பார்த்தார்கள். அவரை மிகவும் நேசித்தார்கள். மேலும் அவருடைய மிகுந்த ஞானத்தையும், வல்லமையையும் நம்பினார்கள். அவரைப்பின் பற்றி, உடனடியாக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க சீஷர்கள் ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால் இயேசு இப்பொழுது மரித்தார். சிலுவை மரணம்! கள்ளர்களோடு மரித்த அவமானம்! அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை அறியாதிருந்தார்கள்.

பரிசுத்த ஆவியைப் பெறும் வரைக்கும் சீஷர்கள் ஆவிக்குரியக் காரியங்களை புரிந்துக்கொள்ள இயலவில்லை. இயேசு உயிர்த்தெழுந்து ஆவிக்குரிய ஜீவியாக இருக்கிறார் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இனி அவர் மனிதன் அல்ல, மாமிசமும், இரத்தமும் உடையவர் அல்ல. இயேசு ஒரு வித்தியாசமான நிலைமையில் இருந்த போதிலும், தான் உயிரோடு இருப்பதை சீஷர்களுக்கு காண்பிக்கும் பொருட்டு தன்னை வெளிப்படுத்த வேண்டயதாக இருந்தது. ஆவிக்குரிய ஜீவியாக இருந்ததால் மனுஷ ரூபத்தில் காட்சியளிக்க அவருக்கு வல்லமை இருந்தது. அவர்கள் இயேசுவை காண முடிந்தது. புசிக்கவும், பேசவும் முடிந்தது.

சிலுவையில் அறையப்பட்ட மூன்றாம் நாளிலே மகதலேனா மரியாள் வெள்ளைப்போளத்துடன் கல்லறைக்குச் சென்ற போது வாசலில் வைக்கப்பட்டிருந்த கல் புரட்டப்பட்டிருந்தது. அவள் உள்ளே பார்த்த போது ஒரு தூதன், “பயப்படாதே அவர் இங்கு இல்லை, அவர் உயிர்த்தெழுந்து விட்டார்” என்றார். (மத்தேயு 28:5,6)

மரியாள் இயேசுவுடன் பேசினாள் ஆனால், அவர் தோட்டக்-காரனைப் போல் காட்சியளித்ததினால் அவள் அவரை அறியாதிருந்தாள். ஆனால், அவர் பேசின பொழுது, அவருடைய குரலைக் கேட்டு அவரைக் கண்டுபிடித்தாள். இயேசு இன்னும் பரலோகத்தில் இருக்கும் பிதாவினிடம் செல்லவில்லை என்று விவரித்தார். (யோவான் 20:17) நடந்ததை சீஷர்களிடம் அறிவிக்க சொன்னார்.

அதே நாளில், கிலேயோபாசும் மற்றொரு சீஷனும் சில நாட்களுக்கு முன் நடந்த சோகமான சம்பவங்களைப் பேசிக்கொண்டு எம்மா ஊருக்குப் பயணம் சென்றார்கள். இயேசுவும் அவர்களோடு சென்றார். ஆனால், அவர்கள் அவரை அறியாதிருந்தார்கள். இயேசு மகிமை அடையும் முன் இப்படிபட்ட பாடுகள் அவசியம் என்றும், மரணம், உயிர்த்தெழுதல் பற்றியும் முன் அறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களை அவர் தெளிவாக விவரித்தார்.

இயேசு சொன்ன காரியங்கள் மிகவும் சுவாரசியமாக இருந்ததினால் அவர்களோடு தங்கி அப்பம் புசிக்கும் படி வேண்டிக் கொண்டார்கள். அப்பொழுது அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தி அங்கிருந்து மறைந்து சென்றார். அவருடைய ஆசீர்வாதங்கள் இருதயத்தின் ஆழத்துக்குள் பாய்ந்ததினால், “ நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா ” என்றார்கள்.(லூக்கா 24:32)

அன்று மாலை அநேக சீஷர்கள் மேல் வீட்டில் கூடினார்கள். யூதர்களுக்கு அவர்கள் பயந்ததினால், கதவுகள் பூட்டப்பட்டது. அன்றைய தினத்தில் நடந்த ஒவ்வொரு சம்பவங்களையும் சுவாராசியமாக சம்பாஷித்துக் கொண்டிருந்தப் பொழுது, திடீர் என்று இயேசு அவர்கள் மத்தியில் நின்றார்! அவர்கள் அறிந்த ஒருவரை போல் காட்சியளித்தார். ஆனால், அவர்கள் பயந்தார்கள். இயேசு அவர்களின் பயத்தைப் போக்கி, மாம்ச சரீரம் எடுக்கும் வல்லமையைப் பெற்றிருந்தார் என்பதை விவரித்தார்.(லூக்கா 24:36-43)

**பழைய ஏற்பாட்டில் அவருடைய மரணத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை எம்மா ஊருக்கு செல்லும் வழியில் இயேசு விவரித்துச் சொன்னார்.**



# பாடம் - 71

## இனி மாம்சமல்ல

**"அதற்கு இயேசு - தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்." - யோவான் 20:29**

தன்னுடைய சகோதரர்கள் எளிதில் இயேசுவின் காட்சியை நம்பிவிட்டார்கள் என்று அப்போஸ்தலனாகிய தோமா நினைத்தார். இதை விசுவாசிக்க இன்னும் சில ஆதாரங்கள் தேவை என்பதை உணர்ந்ததால், அவர் இயேசுவின் காயப்பட்ட கரங்களையும், ஈட்டி பாய்ந்த விலாவையும் தொட்டுப் பார்த்தால் மட்டுமே நம்புவதாகச் கூறினார்.

இயேசு உயிர்த்தெழுந்தார் என்று சீஷர்கள் நம்ப வேண்டியது மிகவும் அவசியமாக இருந்தது. ஏனென்றால் இதுவே அவர்கள் கொண்ட விசுவாசத்தின் அடிப்படையாகும். அநேக சீஷர்கள் இயேசுவின் குரலினாலும், அப்பம் பிட்ட விதத்தையும், ஜெபித்ததையும் கண்டு இயேசு தங்களோடு இருப்பதை உணர்ந்தார்கள்.

அனைவரும் கூடி வந்திருக்கும் ஒரு மாலையில், திடீர் என்று இயேசு அங்குக் காணப்பட்டு, "உங்களுக்குச் சமாதானம்" என்றார். இந்த முறை அவர்கள் அறிந்திருந்த இயேசுவை போல் காணப்பட்டார். தன்னைத் தொட்டுப்பார்க்கும் படிச் சொன்னார். மேலும், அவர்களோடு புசித்தார். இயேசு அவர்களுக்கு அநேக வசனங்களையும் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலையும் விவரிக்க வாய்ப்புக் கிடைத்தது. அவர் செய்த அற்புதங்கள் மற்றும் அவருடைய மரணத்தின் நோக்கத்தையும், முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.(லூக்கா 24:33:48)

இயேசு தன்னை விசுவாசிக்கும் படி தோமாவிடம் கேட்டு கொண்டார். ஆனால், எந்த ஆதாரமும் இல்லாமல் விசுவாசிப்பவர்கள் பாக்கியவான்கள் என்றும் சொன்னார். உயிர்த்தெழுந்த அன்று மூன்று முறை சீஷர்களுக்கு இயேசு தரிசனமானார். மேலும், அடுத்த 39 நாட்களிள், ஐந்து முறைகளுக்கு மேல் அவர் தரிசனமானார். இயேசு உண்மையில், உயிர்த்தெழுந்தது ஆவியின் சரீரத்தில், மிகவும் உயர்த்தப்பட்ட நிலைமையில் இருக்கிறார் என்பதை உணர்ந்தார்கள். (பிலிப்பியர் 2:9)

யூதாஸ் துரோகியாக இருந்ததினால், 12 அப்போஸ்தலர்களில்

ஒருவனாக இருக்கும் உரிமையை இழந்தான். இயேசுவை உண்மையாகப் பின் பற்றுபவர்களை அப்போஸ்தலர்கள் என்று அழைக்கலாம். ஏனென்றால், சகல ஜாதிகளுக்கும் ராஜ்யத்தின் நற்செய்தியைப் போதிக்க அனுப்பப்பட்டார்கள். ஆனால், இவர்களில் 12 பேர்கள் விசேஷமாக தேர்வு செய்யப்பட்டார்கள். சவுல், யூதாஸின் இடத்தைப்பிடித்தார்.

பெந்தெகொஸ்தேவுக்கு பின் இயேசு தன்னுடைய பிதாவினிடத்திற்குச் சென்றார். சவுல் தமஸ்குவுக்கு போகும் வழியில், மகிமையடைந்த இயேசுவைக் கண்டார். அந்த மகிமையும், பிரகாசமும் அவரைப் பார்வை இழக்கச் செய்தது. அதற்கு பின் அவர் பவுலாக மாறினார்.

மற்றொரு தரிசனத்தில் ஆண்டவர் அனனியாவுடன் பேசி,(தமஸ்குவில் உள்ள சீஷன்) சவுலிடம் சென்று நீர் “தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம்” என்று சொல்ல சொன்னார். அனனியா சவுலுடன் பேசிக்கொண்டிருக்கையில் அவர் கண்களிலிருந்து “செதில்கள்” விழுந்த பின் அவர் பார்வை அடைந்தார்.(அப்போஸ்தலர் 9:18) கிறிஸ்துவத்தை முற்றிலுமாக அழிக்க அநேகக்காரியங்களைச் செய்து கொண்டிருந்த சவுல் இப்பொழுது தன்னுடைய ஜீவனை இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு அர்ப்பணிக்க ஆயத்தமானார்.

**இயேசுவின் விலாவில் உள்ள காயங்களில் என் கைகளைப் போட்டால் மட்டுமே, நான் இயேசுவை விசுவாசிப்பேன் என்று தோமா சொன்னார்.**



# பாடம் - 72

## பெந்தெகொஸ்தே ஓய்வு

**“அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல், நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்து.....” அப்போஸ்தலர் 2:2,3**

பழைய யூத பிரமாணத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு 50 வருடங்களுக்கு ஒரு யூபிலி ஆண்டு அனுசரிக்கப்பட்டது. (50 ஆவது ஆண்டு விழா) அந்த வருடம் அடிமைகள் விடுதலைப் பெற்றார்கள். வீடுகள், நிலங்கள் உரிமையாளரிடம் திரும்பக் கொடுக்கப்பட்டது. மேலும், விதைப்பு நிறுத்தப்பட்டு, நிலத்திற்கும் ஓய்வு கொடுக்கப்பட்டது.

பஸ்காவுக்கு இரண்டு நாட்களுக்கு பின் நடக்கும் இந்த ஐம்பதாவது நாளில், முதற்பலன்கள் சேர்க்கப்படும் என்று லேவியராகமம் 23:15,16 ஆம் வசனங்கள் குறிப்பிடுகிறது. தேவனுக்கு நன்றி செலுத்தி மகிழும் நாளாக இருந்தது, பின் அது பெந்தெகொஸ்தே என்று அழைக்கப்பட்டது.

எவ்வேழு வருடங்களுக்குப் (7x7=49) பின் ஒரு யூபிலி ஆண்டு வருவது போல, எவ்வேழு வாரங்களுக்கு பின் ஒரு யூப்லியின் நாள் (பெந்தெகொஸ்தே) நாள் வரும்.

இயேசு மரித்து, உயிர்த்தெழுந்தப் பின் 11 அப்போஸ்தலர்களும், உன்னதமானவரின் வல்லமையை பெறும் வரை எருசலேமில் காத்துக்கொண்டிருக்கக் கட்டளைப் பெற்றார்கள். ராஜ்யத்தின் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க, இந்த பதினொரு பேரும் ஆண்டவரின் விசேஷமான பிரதிநிதிகளாக இருந்தார்கள்.

இங்கு கூடியிருந்தவர்கள் மேல் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதம் பரிசுத்த ஆவியாக ஊற்றப்பட்டது. இது பிரிந்த அக்கினி நாவுகள் போன்றவைகள் ஒவ்வொருவருடைய தலையின் மேலும் அமர்ந்தது. பலத்த காற்றின் சத்தத்தோடும், அக்கினியைப் போல் இறங்கி, சீஷர்கள்

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். இது சபையின் வளர்ச்சியின் தொடக்கமாக இருந்தது. ஆதாமுக்காக இயேசு தன்னை பலியாகக் கொடுத்து விட்டார். இப்பொழுது, தேவன் அதை அங்கீகரித்ததினால், அவருடைய இரத்தம் சபையாக மாறக்கூடியவர்களுக்குப் பயன்படவேண்டும்.

முதலில், தேவன் அவர்களை ஏற்றுக்கொள்ளுவதற்குக் காத்திருந்தார்கள். அப்போஸ்தலர்கள் யூதாசுக்கு பதிலாக ஒருவரை தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் மத்தியாஸை தேர்வு செய்திருந்தாலும், பின் வந்த நாட்களில் தேவன் பவுலைத் தெரிந்துகொண்டார்.

இந்த பன்னிருவரும் புதிய எருசலேமின் 12 அஸ்திபாரக் கற்களாக இருப்பார்கள்.(வெளி 21:2,14) அதற்கு பின் ஒருவரும் தேர்வு செய்யப்படவில்லை.

**பெந்தெகொஸ்தே நாளின் போது சீஷர்கள் பரிசுத்த ஆவியை பெற்றார்கள்.**



# பாடம் - 73

# பெந்தெகொஸ்தே நாளின் போதனை

**"ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்." - யோவேல் 2:29**

இயேசு கிறிஸ்துவை காட்டிக்கொடுத்ததினால், அவமானம் அடைந்த துரோகியான அப்போஸ்தலன், யூதாஸ்காரியோத் நான்றுகொண்டு செத்தான். பவுல் யூதாஸ்க்கு பதிலாகத்தேர்வு செய்யப்படும் வரை 11 அப்போஸ்தலர்கள் மட்டுமே இருந்தார்கள்.

எருசலேமில், அந்த பதினொருவருக்கும், மற்றும் அநேகருக்கும் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவ சபையை தொடங்குவதற்கு அநேக அற்புதமான வரங்களைப் பெற்றார்கள். அநேக இடங்களில் ஜனங்கள் அனைவரும் புரிந்து கொள்ளத்தக்கதாக போதிக்கும் படி, இந்த தாழ்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கு, அநேக மொழிகளை பேசும் வரத்தை தேவன் கொடுத்தார்.

அங்கு வந்திருந்த ஜனக்கூட்டம், கலிலேயர்கள் தங்களுடைய ஜென்ம பாஷையில் பேசுவதைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். இயேசுவின் சீஷர்கள் வரக்கூடிய காரியங்களை முன் அறிவித்து, வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கி, முடவரை குணப்படுத்தி, சில நேரங்களில் மரித்தோரையும் உயிர்ப்பித்தார்கள்.

இரட்சகராகிய இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததினால், உலகம் முழுவதும் அவருடைய ராஜ்யத்தில் ஜீவிப்பதற்கு ஒரு வாய்ப்பைப் பெறுவார்கள் என்று ஜனங்களுக்கு போதித்தார்கள்.

அக்காலத்தில், ஆண்கள் மற்றும் பெண்கள் அநேகர் இயேசுவை பின்பற்றினார்கள். இருந்தாலும், அப்போஸ்தலர்கள் மட்டுமே தேவனால் விசேஷமாக பயன்படுத்தப்பட்டார்கள். இயேசு அவர்களை பார்த்து, "பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்றார்.(மத்தேயு 16:19)

இந்தக் கட்டளை முதலில் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்த அப்போஸ்தலர்கள் தேவனுடைய பிரதிநிதிகளாக இருந்தார்கள். அவர்கள் பேசின வார்த்தைகளும் எழுதின எழுத்துக்களும் அதிகாரப்பு ர்வமாக இருந்தது. தேவனுடைய வழிநடத்துதலில் அப்போஸ்தலர்கள், சபையை சரியாக நடத்தினார்கள். இந்த கட்டளைகள் 12 பேர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது, மற்ற யாருக்கும், எந்த சு ழ்நிலையிலும் இப்படிப்பட்ட கட்டளைகள் கொடுக்கப்படவில்லை.

மத்தேயு 16:19 ஆம் வசனத்தில், ராஜ்யத்தின் திறவுகோல்கள் பேதுருவிடம் கொடுப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ராஜ்யத்தின் சுவிசேஷத்தின் கதவுகளை திறக்க பேதுரு பயன்படுத்தின அடையாளமான திறவுகோல்களை இது குறிக்கிறது. முதலில் இதை யூத ஜாதிக்குப் பயன்படுத்தினார். இயேசு மரித்து 3½ வருடங்களுக்குப்பின் அவர் இரண்டாம் திறவுகோலை பயன்படுத்தி புறஜாதிகளுக்கு கதவைத் திறந்தார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில், அங்கத்தினரான முதல் புறஜாதி கொர்நேலியு ஆவார்.

**புதிய சபைக்கு அப்போஸ்தலர்கள், விசேஷமான வழிகாட்டிகளாகக் கொடுக்கப்படார்கள்.**



# பாடம் - 74

## அப்போஸ்தலர் பவுல்

**"அதற்குக் கர்த்தர், நீ போ, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்." - அப்போஸ்தலர் 9:15**

சபை வேகமாக வளர்ந்ததினால், சகோதரர்களின் தேவைகளுக்காகவும், வேலைகளை பகிர்ந்து கொள்ளவும் கண்காணிகள் தேர்வு செய்யப்பட்டார்கள்.(அப்போஸ்தலர் 6:1-6) தேவனுடைய வல்லமையையும், கிருபையையும் முழுமையாகப் பெற்ற ஸ்தேவான், பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் ஜனங்கள் மத்தியில் செய்தார்.(அப்போஸ்தலர் 6:8) அவருடைய விசுவாசத்தினால் அவர் கல்லெறியப்பட்டார். அவர் கல் எறியப்படும் பொழுது, சவுல் என்னும் வாலிபன் சாட்சிக்காரர்களுடைய வஸ்திரங்களை வைத்துகொண்டு அங்கு நின்றான். ஸ்தேவான் முதல் இரத்த சாட்சியாக மரித்தார்.

இயேசுவை நேசித்து, அவரைப் பற்றி போதிப்பவர்களை கல்லெறிந்து கொல்லுவதும், சிறையில் அடைப்பதும், தேவனுக்குச் செய்யும் தொண்டு என்று சவுல் நினைத்தான்.

தான் செய்யும் அனைத்துக் காரியங்களிலும் சவுல் உத்தமனும், பக்தி வைராக்கியமும் கொண்டிருந்தான் - இது தேவ சித்தம் என்று எண்ணினான். இப்படி செய்வது தேவனுடைய சித்தம் என்று நினைத்தான். தமஸ்குவுக்குப் போகும் வழியில் இயேசு சவுலுக்கு எதிர்ப்பட்டு, அவன் செய்வது அனைத்தும் தவறு என்றும், தேவனுடைய உண்மையான போதனைகளைக் கடைபிடிப்பதினால் கிடைக்கும் சிலாக்கியத்தையும் எடுத்துரைத்தார். சவுலின் இருதயம் செம்மையாக இருந்ததினால், அவர் கிறிஸ்தவனாக மாறி, தன்னுடைய மீதியிருக்கும் வாழ்க்கையைத் தேவனுடைய ஊழியத்திற்காக அர்ப்பணித்தார். அவருக்கு விசுவாசமும் வைராக்கியமும் மிக அதிகமாக இருந்ததினால், அவர் 12 ஆவது அப்போஸ்தலனாகத் தேர்வு செய்யப்பட்டார். அவர் மற்றவர்களைக் காட்டிலும், அநேக தரிசனங்களையும் வெளிப்பாடுகளையும் கண்டார். மேலும், அவர் அநேக நிருபங்களை எழுதினார். அது பிற்காலத்தில் புதிய ஏற்பாட்டின் புத்தகங்களானது. அவருடைய முதலாம் சுவிசேஷப் பயணத்தில், சவுலின் நாமம் பவுலாக மாற்றப்பட்டது. அவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலராக இருந்து, அநேக தேசங்களுக்குச்


சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவர் (மற்ற யாரும்) எரியும் நரகத்தை பற்றியும், நித்திய ஆக்கினையைப் பற்றியும் போதிக்கவில்லை. இயேசு இரண்டாவது முறையாக வந்து அவருடைய சத்துருக்களைப் பாதப்படியில் போடும் மட்டும், ஆளுகை செய்வார் என்று வலியுறுத்தினார். நீதியுள்ளவர்களுக்கும், அநீதியுள்ளவர்களுக்கும் உள்ள உயிர்த்தெழுதலைக் குறித்தும், இன்னும் மற்ற அநேக உபதேசங்களையும் போதித்தார்.

பவுலின் வாழ்க்கையில் உள்ள சத்தியத்தின் வல்லமை மிகவும் அதிகமாக இருந்தது. அவருடைய எழுத்துக்களை கற்றுக் கொள்ளுவதினால் நாம் மிகவும் ஐசுவரியமுள்ளவர்களாகிறோம்.

அவர் அநேக சுவிசேஷ பயணங்களை மேற்கொண்டார். அவருடைய பயமற்ற தைரியமான பிரசங்கத்தினாலும், எழுத்தினாலும், பயணத்தினாலும் அநேக உபத்திரவங்கள் அடைந்தார். தேவனுடைய ஊழியத்திற்காக அனுதினமும் தன்னை பலிசெலுத்தினார். அவர் கல்லெறியப்பட்டு, அடிக்கப்பட்டு, பட்டினியாக விடப்பட்டு, கப்பல் சேதங்களில் அகப்பட்டு முழுகிபோகும் சூழ்நிலையில் அகப்பட்டு, கடைசியாக சிறைச் சேதம் செய்யப்பட்டார்.

மாம்சத்தில் இயேசுவைப் பவுல் சந்திக்காவிட்டாலும், அவர் சம்பாஷணைகள் முழுமை அடைந்து, பலியின் ஜீவியத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். சுவிசேஷ யுகத்தில் உள்ள இயேசு கிறிஸ்துவின் சீடர்களுக்கு ஒரு அருமையான மாதிரியை விட்டுச் சென்றார்.

**இயேசு சவுலுக்கு எதிர்ப்பட்டு, அவரை கிறிஸ்தவராக மாற்றினார்.**



# பாடம் - 75

## அப்போஸ்தலர் பேதுரு

**“சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால் ” - ரோமர் 11:17**

கொர்நேலியு என்ற ஒரு புறஜாதி, தேவனிடத்தில் பக்தியாக ஜெபித்து வந்தார். அவர் ஒரு கிறிஸ்தவரோ, யூதரோ அல்ல. அவர் இயேவுவை அறிந்திருந்து, அவரை பின் பற்றி, தேவனுடைய சித்தத்தை செய்யவேண்டும் என்று விரும்பினார். ஆனால், இந்த வாய்ப்பு கொர்நேலியுவுக்கோ மற்ற புறஜாதிகளுக்கோ கொடுக்கப்படவில்லை.

கர்த்தருடைய தூதன் கொர்நேலியுவுக்கு தரிசனமாகி, தேவன் அவருடைய ஜெபத்தை கேட்டார் என்றும், பேதுரு என்ற ஒருவர் மூலம் தேவன் அவருடைய சித்தத்தை விவரிக்கப்போகிறார் என்றும் அறிவித்தார். ஆகவே, கொர்நேலியு தன்னுடைய இரண்டு வேலைக்காரரை பேதுருவின் வீட்டுக்கு அனுப்பினார்.

இதற்கு இடையில், தேவன் பேதுருவுக்கு கொர்நேலியுவைப் பற்றிக் கட்டளை கொடுத்தார். அந்நாள் வரைக்கும் தேவன் யூத ஜனங்களோடு மட்டுமே தொடர்பு வைத்திருந்தார். இயேசு சிலுவையில் மரித்து 3 ½ வருடங்களுக்கு பின், தேவன் சபை வகுப்புக்கான அழைப்பை புறஜாதிகளுக்கும் கொடுத்தார். இதில் கிறிஸ்தவராக மாறிய முதல் புறஜாதி கொர்நேலியு.

இந்நாள் வரைக்கும் நியாயப்பிரமாணத்தின் படி புற ஜாதிகள் மத்தியில் நண்பர்கள் ஏற்படுத்தி கொள்ளுவதும், அந்தக்குடும்பங்கள் மத்தியில் திருமணங்கள் செய்வதும் தவிர்க்கப்பட்டதால், பேதுருவுக்கும் மற்றவர்களுக்கும் இது ஒரு புதிய காரியமாக இருந்தது. யூதர்கள் முழுமையாக இயேசுவை விசுவாசித்து அவரை பின்பற்றியிருந்தால், அந்த ஜாதியாரில் மட்டுமே முழுசபையும் தேர்வு செய்யப்பட்டிருக்கும். ஆனால், சிலர் மட்டும் அழைப்பை ஏற்றுக்கொண்டதினால், யூத யுகம் முடிந்தவுடன், அந்த அழைப்பு புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டது.

புறஜாதிகள் மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்று பேதுரு ஒரு தரிசனத்தின் மூலமாக தேவனுடைய கட்டளைகளை அறிந்தார். பேதுரு யூதர்கள் சட்டத்தின் படி புசிக்கத்தகாத, அநேக விதமான அசுத்த

மிருகங்களைக் கொண்ட ஒரு துப்பட்டி வானத்திலிருந்து இறங்கி வரக்கண்டார். இப்பொழுது அதை அடித்து புசிக்கும்படி தேவன் பேதுருவுக்குச் சொன்னார். இது மூன்று முறைநடந்தது. இந்த தரிசனத்தைக் குறித்து பேதுரு சிந்தித்துக் கொண்டிருக்கையில், கொர்நேலியு வீட்டுக்கு அழைத்து செல்லும்படி மூன்று புருஷர்கள் வந்தார்கள். பேதுருவும் மற்ற பலரும் உடனடியாக அந்த வீட்டுக்குச் சென்றார்கள்.

கொர்நேலியுவும் அவர் குடும்பத்தாரும், பேதுரு சொல்லப் போகிறதை கேட்க வாஞ்சையோடு காத்திருப்பதைக் கண்டார்கள். பேதுரு இயேசுவின் உண்மையான சரித்திரத்தை விவரமாகச் சொன்னார் - அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், அவருடைய மணவாட்டியாக அழைப்பு பெற்ற சபை. சுவிசேஷத்தைக் கேட்ட அனைவரும் பெரும் மகிழ்ச்சி அடைந்து, சீஷர்களாக மாறுவதற்கான சட்டங்களை முழுமையாக ஏற்றுக் கொண்டார்கள்.

தேவன் அவர்கள் மேல் பரிசுத்த ஆவியை ஊற்றினார். அப்போது, பெந்தெகொஸ்தே நாளில் யூதர்கள் தேவனுடைய ஆவியைப் பெற்றது போல அவர்கள் அந்நிய பாஷைகளை பேசக்கூடிய வரத்தை பெற்றார்கள். அனைவரும் கர்த்தருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள் - “தேவன் பட்சாபாதம் உள்ளவர் அல்ல” என்று பேதுரு உணர்ந்தார்.(அப்போஸ்தலர்10:34) அப்பொழுது சுவிசேஷ யுகம் தொடங்கியது.

**புறஜாதிகள் சபைக்குள் ஏற்று கொள்ளப்படுவதற்கு பேதுருவுக்கு தரிசனம் காட்டப்பட்டது.**



# பாடம் - 76

## அந்தியோகியாவில் உள்ள சபை

**“கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது, அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.” அப்போஸ்தலர் 11:21**

எருசலேமைத் தவிர, ஆதிகால சபையின் வரலாற்றில் சீரியாவில் உள்ள அந்தியோகியா பட்டணம் மிகவும் பிரபலமாக இருந்தது. அங்கு புறஜாதிகள் மத்தியில் “கேட்கிற காது” உடையவர்கள் அநேகர் காணப்பட்டார்கள். இந்த அந்தியோகியாவில், இயேசுவை பின்பற்றக் கூடியவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் முதன் முதலில் வழங்கப்பட்டது. (அப்போஸ்தலர்11:26)

இயேசு மற்றும் அப்போஸ்தலர்களை போல அந்தியோகியாவில் உள்ள சபை மிக எளிமையாக இருந்தது. அறிவு, ஞானம், சகோதர அன்பு மற்றும் கிறிஸ்துவ ஐக்கியத்தில் வளரவும், ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கும் அவர்கள் கூடிவந்தார்கள். மற்ற பட்டணங்களுக்கு ஊழியக்காரர்களை அனுப்ப உதவி செய்தார்கள். பவுல் தன்னுடைய முதல் பயணம் மற்றும் இரண்டாவது பயணத்தையும் அந்தியோகியாவிலிருந்து தொடங்கினார். அவருடைய மூன்றாவது பயணமும் அங்கிருந்து தொடங்கியது, ஆனால் அது முடியும் முன் எருசலேம் சிறையில் அடைக்கப்பட்டார்.

அந்தியோகியாவில் விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதை, எருசலேமில் உள்ள சகோதரர்கள் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். துவக்கத்தில், ஸ்தேவானை கல் எரியப்பட்ட பொழுது, இயேசுவின் சீஷர்கள் சிலர் அந்தியோக்கியாவுக்கு தப்பி சென்று, அங்கு இயேசுவை பற்றியும், தேவனுடைய அற்புதமானத் திட்டங்களை பற்றியும் போதித்தார்கள்.

அந்தியோகியா சபையில் பர்னபா என்பவர் விசுவாசமுள்ள ஊழியக்காரராக இருந்தார். மத்திய தரைக்கடலின் சீப்பிரு எனப்பட்ட தீவிலிருந்தவர். அவர் ஒரு லேவியன், சகல பிரமாணங்களையும் கற்றுத் தேறினவர். பர்னபா என்பதற்கு ஆறுதல் அல்லது உதவியாளர் என்று பொருள். புதிய கிறிஸ்தவர்களுக்கு உபதேசிக்க உதவி செய்யக்கூடிய ஒரு அன்பான தேற்றவாளனாக இருந்தார். அங்கு தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்த ஞானத்தை பெறுவதற்கு அநேகர்

வாஞ்சித்ததினால், பர்னபாஸ் தனக்கு தெரிந்த, சிறந்த ஆசிரியனாகிய பவுலை அனுப்பினார்.(அப்போஸ்தலர் 13:1-3, 15:36)

பவுலும், பர்னபாவும் அந்தியோகியா சகோதரர்களாலே மிகவும் நேசிக்கப்பட்டு, கனப்படுத்தப்பட்டார்கள். ஆனால் யூதர்கள் அவரை வெறுத்து துன்புறுத்தினார்கள். அதுமாத்திரம் அல்ல, அதற்கு பின் ரோம போரரசர்கள் கிறிஸ்தவர்களை கொடூரமான சித்ரவதைகளுக்கு கையளித்தார்கள். தாங்கள் சோர்ந்து போகும் நேரங்களில் இதை ஒரு பொழுது போக்காக செய்து மகிழ்ந்தார்கள்.

தேவன் சபையாரின் விசுவாசத்தை சோதிப்பதற்கு இப்படிபட்ட தீமைகளை அனுமதித்தார். இயேசுவைப் பின்பற்றுபவர்களின் குணலட்சணங்கள் வளர்ச்சி அடைய இப்படிப்பட்ட அனுபவங்கள் மிக அவசியமாக இருக்கிறது.

சுவிசேஷ யுகம் முழுவதும் சபைக்கு அடிக்கடி இப்படிப்பட்ட கொடூரமான துன்பங்களும் வேதனைகளும் பல வழிகளில் வந்தது. மேலும், இந்த அனுபவங்கள் சபையானது இது போன்ற சோதனைகளுக்குள்ளாக்கப்படுகிற உலக ஜனங்களின் மேல் இரக்கமுள்ளவர்களாகும் படிக்கு உதவுகிறது. வரும் யுகத்தில் அனைவரையும் புரிந்து கொண்டு அன்பு செலுத்த, சபைக்கு ஒரு நல்ல வாய்ப்பாகும்.

**கிறிஸ்தவர்களை சித்திரவதைப்படுத்தி ரோம அரசர்கள் மகிழ்ந்தார்கள்.**



# பாடம் - 77

## பெரோயா வேதமாணவர்கள்

**"அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்." - அப்போஸ்தலர் 17:11**

மக்கொதோனியாவில் உள்ள பெரோயா பட்டணத்து விசுவாசிகள் வேதத்தை ஆராய்ந்து பார்த்ததினால் தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் மிகவும் பிரபலமானார்கள். அவர்கள் பவுலின் வார்த்தைகளையும் சீலாவின் வார்த்தைகளையும் ஆதாரமில்லாமல் நம்பவில்லை. அவர்கள் மிகவும் சிறிய வகுப்பாராக இருந்தாலும், தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்ததால், அவர்கள் பெரோயா வேதமாணவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

தேவனுடைய பிள்ளைகளாகக் கூடி, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, அவர்களுக்குக் கிடைக்கப் பெற்ற இயேசுவின் நற்செய்திகளை படித்தார்கள். ஆதிகால சபை, பெரிய கட்டிங்களிலோ ஆலயங்களிலோ கூடிவர வில்லை. மேலும், அவர்களுடைய கண்காணிகளும், மூப்பர்களும் பொறுப்புக்கேற்ற விலையுயர்ந்த அங்கிகளை அணியவில்லை. எந்த விதத்திலும் அவர்கள் ஏற்றத் தாழ்வை வெளிப்படுத்தவில்லை. சபையில் ஒரே தலையாகிய இயேசுவின் கீழ், வசனங்களை ஆராய்ந்து நிரூபிக்க ஒரே விசுவாசத்தில் உள்ளவர்கள் ஒன்று கூடினார்கள். (2பேதுரு 1:1)

இன்றைய வேதமானவர்களுக்கு அநேக மொழிபெயர்ப்புகளும், மற்ற ஒத்தவாக்கிய அகராதிகளும், இன்னும் அநேக புத்தகங்களும் சத்தியத்தை தெளிவாக அறிந்து கொள்ள வாய்ப்பு அளிக்கிறது. இவை அனைத்தையும் நம்முடைய வீட்டிலிருந்தே கற்றுக்கொள்ளலாம். ஆனால், பல நூற்றாண்டுகளாக உலகத்தில் சில வேதாகமங்களே இருந்தது. மேலும், அநேகர் படிப்பறிவு அற்றவர்களாக இருந்தனர். இதில் ராஜாக்களும், ராணிகளும் அடங்குவார்கள். இன்றைக்கு பெரும்பான்மையானவர்களுக்கு படிப்பு அறிவு உண்டு. சூரியன் அஸ்தமித்தவுடன் நாம் மின்விளக்குகளை எரிய விடுகிறோம்.

தானியேல் 12:4, வசனத்தில் உள்ள காலப்பகுதியில் நாம்

வாழ்ந்துகொண்டிருக்கிறோம். “ அப்பொழுது, அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள். அறிவும் பெருகிப்போம் என்றான்”.

மற்ற சந்ததிகளைக் காட்டிலும், நம்முடைய சந்ததிக்கு இது அதிகமாக பொருந்தும். இரயில் வண்டி, விமானங்கள், விண்வெளிக் கப்பல்கள், புத்தகங்கள், தொலைபேசிகள், தொலைக்காட்சி பெட்டிகள், வானொலி பெட்டிகள், கம்பியூட்டர்கள் - அனைத்தும் கற்பனைக்கு எட்டாதவைகளாகும்.

நாம் இன்றைக்கு நம்முடைய வீட்டில் மட்டும் அல்ல, மற்ற இடங்களிலும் சென்று வேதப்படிப்புகளைக் கற்றுக்கொள்ளலாம். உலகில் உள்ள பல இடங்களில் நடக்கக்கூடிய மாநாடுகளில் கலந்துக்கொள்ளலாம். இந்த யுகத்தின் முடிவில் இருக்கும் நாம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்த ஆசீர்வாதங்களின் நிமித்தம் நாம் அதிகமான பொறுப்புகளை பெற்றிருக்கிறோம் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வேதத்தில் கற்றுக் கொடுப்பதை விசுவசியாமல், இன்றைக்கு அநேகர் இந்த வேதம் தேவனுடைய வார்த்தை என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு தேவனுடைய திட்டத்தில் இன்று, அவருடைய திட்டங்களை முழுமையாகவும், ஆழமாகவும் புரிந்து கொள்ளக்கூடிய காலமாக இருக்கிறது. ஆகவே, நாம் விசுவாசத்தோடு கற்றுக்கொண்டு, நம்முடைய குணலட்சனங்களை மகா பரிசுத்தமான விசுவாசத்தில் வளர்ச்சி அடைய முயற்சிப்போம்.

**அறிவு பெருகின காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.**



# பாடம் - 78

## பரிசுத்த ரோம பேரரசு

**"பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." - ஏசாயா 55:9**

அப்போஸ்தலர்கள் மரித்த பின், சபை மற்ற தலைவர்களைத் தேர்வு செய்து, கொடுக்க வேண்டிய அதிகாரத்தை விட அதிகமானவைகளைக் கொடுத்தது. ஆதிகால சபையின் மக்கள் படிப்பறிவு குறைவு பட்டதால் - பொது மக்கள் வேதத்தைப் படித்து புரிந்துகொள்ளவில்லை. ஆகவே, அநேக தவறுகள் ஏற்பட ஏதுவாக இருந்தது. வல்லமை பெற்று அதிகாரத்தில் இருந்தவர்கள் (படிப்பறிவுள்ளவர்கள்) ஆயர்களும், பேராயர்களும் மற்ற மதத்தலைவர்களும், பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படாத தேவனுடைய சத்தியத்திற்கு முரண்பாடானவைகளைப் போதித்து வந்தார்கள்.

பேரரசனாகிய "கான்ஸ்டான்டைன்" கிபி325 ஆம் வருடம் எல்லா கண்காணிகளையும் அழைத்து ஒரு ஆலோசனை கூட்டம் நடத்தினான். துருக்கியில், நீசீயா என்ற இடத்தில் கூட்டம் நடத்தினான். ராஜ்யம் பிரிக்கப்படாமல் இருக்க இந்த கூட்டம் நடந்தது. ராஜ்யம் பிரிக்கப்படாமல் இருக்க இந்த கூட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஆகவே, இது அரசியலை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

கண்காணிகள் பல மாதங்கள் விவாதித்தார்கள். இறுதியாக எந்த போதனைகள் "மெய்யானது" என்று பேரரசனால் முடிவு செய்யப்பட்டது. அப்போஸ்தலர்கள் தொடர்ந்து வழிநடத்துவது மற்றும் திருத்துவம், அகிய இரண்டு முரண்பாடான உபதேசங்கள் ஜனங்கள் மேல் கட்டாயப்படுத்தப்பட்டது. இந்த புதிய நீசீயன் விசுவாசத்தை ஏற்று கொள்ளாதவர்கள் வெளியே எறியப்பட்டார்கள்.

தேவ ஆவியின் வழிநடத்துதலின்றி ஐரோப்பாவிலும், ரஷ்யாவிலும் கிறிஸ்தவம் பரவ ஆரம்பித்தது. "பரிசுத்த ரோம பேரரசு" ஸ்தாபிக்கப்பட்டது. போப் மற்றும் பேரரசனும் சிங்காசனத்தில் பக்கம் பக்கமாக அமர்ந்தார்கள். இது சபைக்கும் அரசாங்கத்திற்கும் நடக்கும் "திருமணம்" என்று அழைக்கப்படுகிறது.

நெப்போலியன், போப்பினால் முடிசூட்டப்படுவதற்கு மறுத்த 1799 வருடத்தில் இந்த அமைப்பு ஒரு மிகப்பெரிய தோல்வியைச் சந்தித்தது. நெப்போலியன் அந்த போப்பை பிரான்ஸ் நாட்டுக்கு சிறை பிடித்துச் சென்றார். இது போப்புக்கு ஒரு கொடுமையான அனுபவமாக இருந்தது. அந்த காலத்திலிருந்தே போப் மார்க்கத்தின் ஆதிக்கம் குறைய ஆரம்பித்தது.

கிறிஸ்துவம் வேகமாக பரவியது. அநேகர் இயேசு பிறந்த மற்றும் மரித்த இடத்தையும் காண வந்தார்கள். இயேசுவின் தாய்நாடான எருசலேமை இஸ்லாமிய துருக்கியர்கள் கைப்பற்றும் காலம் வரைக்கும் இந்தப்பயணங்கள் அமைதியாக நடந்தது. இவர்கள் கிறிஸ்துவர்களை கொடூரமாக நடத்தினார்கள்.

நூற்றுக்கணக்கான மைல்கள் பயணித்து, ஐரோப்பாவில் உள்ள சகல கிறிஸ்தவர்களும் ஒன்று சேர்ந்து, துருக்கியர்களோடு போரிட்டு அந்த புனித ஸ்தலத்தை ஜெயிக்க முடிவு செய்தார்கள். ஆனால், அவர்கள் இயேசுவால் போதிக்கப்பட்ட அன்பையும் மற்றும் நாம் தேவனை தொழுது கொள்ளக்கூடிய வேண்டிய விதமே முக்கியம் என்பதை மறந்து விட்டார்கள். “வாளை எடுப்பவன் வாளால் மடிவான்” என்று இயேசு எச்சரித்திருந்தார். சிலுவை போர் வீரர்கள் பரிசுத்த நகரத்தைக் கைப்பற்ற, அவர்கள் எடுத்த அதிரடியான முயற்சியில் அநேக மாசற்ற பொது மக்களைக் கொன்றார்கள்.

**நீங்கள் தேவனை தொழுது கொள்ளக்கூடிய இடத்தை விட தொழுதுகொள்ள வேண்டிய விதம் மிக அவசியம்**



# பாடம் - 79

## இடைப்பட்ட யுகங்கள்

**“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி - கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.” - மத்தேயு 7:21**

இந்த இடைப்பட்ட காலத்தில் அதிகாரத்தில் உள்ளவர்கள், தங்களுக்கு இணங்காதவர்களை கொடூரமாக கொடுமைப் படுத்தினார்கள். சிலர் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள். சிலர் கல்லெறியப்பட்டார்கள் அல்லது கட்டப்பட்டு எரிக்கப்பட்டார்கள். இவை அனைத்துமே தேவனுடைய நாமத்திற்காகவும், சத்தியத்திற்காகவும் நீதியின் நிமித்தமும் செய்யப்பட்டது. ஆனால், ரோம பேரரசில் “Charlemagne Charles the great” என்றவர் ஒரு நல்ல இராஜ்யத்திற்கு தேவையான சட்டங்களையும் ஒழுக்கங்களையும் பற்றிய அறிவை நன்கு உணர்ந்திருக்கும் அருமையான அரசனாக இருந்தான்.

கிபி 800 ஆம் வருடத்தில் லியோ 11 என்ற போப் சார்லஸ்மேக்னை பரிசுத்த ரோம ரேரசுக்கு பேரரசனாக முடி சூட்டப்பட்ட பொழுது, யுத்தங்கள் முடிவடைந்து சமாதானம் நிலவும் என்று அநேகர் எதிர்ப்பார்த்தார்கள். ஆனால், அவருடைய ராஜ்யம் தேவனுடையதாக இராததினால், கல்விக் கூடங்களும், சட்டச் சபைகளும் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டதால் நித்தியமாக நீடிக்கவுமில்லை பரிபூரண நீதியையும் கொடுக்கவில்லை. குறுகிய காலமான அவனுடைய 14 வருட ஆட்சியில் நவீன நாகரீகத்தைத் துரிதமாக நடைமுறைப்படுத்தினான். ஆனால், தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிப்பதற்கு அது அவருடைய காலமாக இருக்கவில்லை.

சிலுவை போர் வீரர்கள் மேற்கில் உள்ள எளிமையான விவசாயிகள், பெரிய முதலாளிகளிடம், அடிமைகளாக வேலை செய்யும் முறைகளைத் தகர்த்து எறிய தங்களால் இயன்ற வரைக்கும் முயற்சி செய்து, பொருளாதாரத்தையும், அறிவு பூரணமான காரியங்களிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தினார்கள். ரோம கத்தோலிக்க அரசாங்கத்தின் சபையின் போதனைகளுக்கு விரோதமாக செய்திகளை அநேக ஜனக் கூட்டங்கள் பரப்பினார்கள்.

பிரான்ஸ், ஸ்பானியா மற்றும் இத்தாலியாவிலிருந்து வந்த ஒரு

வகுப்பினர் “ஆல்பிகென்சேஸ்”. இவர்கள் முழுமையாக ரோம திருச்சபையின் சட்டதிட்டங்களையும் கோரிக்கைகளையும் எதிர்த்தார்கள். அவர்கள் சுயத்தை வெறுத்து சாட்சியான ஒரு பரிசுத்த ஜீவியத்தை வாழ்ந்தார்கள்.

மேலும், வேத வசனங்களை அவர்கள் அதிகமாக பயன்படுத்தினார்கள். இவர்கள் ஆன்மீகவாதிகள் என்று கருதப்பட்டார்கள். இவர்கள் தலைமையில் உள்ளவர்களை எதிர்த்து சபையின் உண்மையான கருத்துக்களை ஸ்தாபித்தார்கள்.

பீட்டர் வால்டோவை பின்பற்றினவர்கள் “வால்டெனேஸ்” என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் பிரான்ஸிலிருந்தும், இத்தாலியிலிருந்தும் வந்தவர்கள். வேதாகமம் மற்றும் விசேஷமாக அதில் உள்ள புதிய ஏற்பாடு மட்டமே கிறிஸ்துவர்களுக்குரிய விசுவாசத்தின் சட்டங்களைக் கொடுக்கக் கூடும் என்று நம்பினார்கள். இவர்களுடைய பிரசங்கங்கள் மக்களை வேதம் வாசிக்கத் தூண்டியது. இந்த இரண்டு வகுப்பினரும் திருத்துவக் கொள்கைகள் இல்லாதவர்கள்.

கொடூரமான சித்திரவதைகள், “ஆல்பிகென்சேஸ்” வகுப்பாரை நூறு வருடங்களுக்குள் முற்றிலுமாக அழித்துப் போட்டது. ஆனால், “வால்டென்சஸ்” வகுப்பினர் ஆல்ப்ஸ் மலையின் பள்ளத்தாக்குக்கு விரைந்தோடி, இன்னாள் மட்டும் அங்கேயே குடியிருக்கிறார்கள். இவர்கள் மட்டுமே அந்த கால பகுதியில் வாழ்ந்த வகுப்பினரில் உயிரோடிருப்பவர்கள். இன்றைக்கு இவர்கள் இத்தாலியில் சுவிஷேசப் பணிகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள்.



**இடைப்பட்ட யுகங்களின் காலப் பகுதிகளில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் தங்களுடைய விசுவாசத்தின் நிமித்தம் உபத்திரவங்களை அனுபவித்தார்கள்.**

# பாடம் - 80

## சீர்திருத்தவாதிகள்

**“நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.” -2 தீமோத்தேயு 2:15**

பேரரசுகளின் திட்டங்களிலும், குருக்கள், பேராயர்களுடைய வார்த்தைகளிலும் திருப்தியடையாத மக்கள் அங்கும் இங்கும் இருந்தார்கள். தாங்களே வேதத்தை வாசித்து, இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க விரும்பினார்கள்.

ஆரம்பக்காலத்தில், இங்கிலாந்தில் பிறந்த ஜான் வைக்லிபும், “போஹிமேன்” ஆக இருந்த ஜான்ஹஸ் என்ற இருவரும் சீர்த்திருத்த வாதிகளாக இருந்தார்கள். தேவன் போப்பின் மூலம் மட்டுமே பேசுவதையும், மக்களிடம் வரி வசூலிப்பதற்கு அதிகாரம் உண்டு என்பதையும் அவர்கள் என்றுமே நம்பவில்லை. எளிதாக வாழ்ந்து சபையில் விசுவாசத்தோடு பணிபுரிந்தவர்களை மெச்சிக் கொண்டார்கள். ஹஸ்தன்னுடைய விசுவாசத்திற்காக எரிக்கப்பட்டார். ஜான் ஹஸ்ஸைப் போல் சுயாதீனத்தை நேசித்து துன்மார்க்கத்தை அநேகர் வெறுத்து தங்களுடைய விசுவாசத்திற்காக யுத்தம் செய்ய துணிந்தார்கள். இதன் அடிப்படையில் நடந்த அநேக யுத்தங்களில் அநேகர் கொல்லப் - பட்டார்கள்.

வில்லியம் டின்டேல் என்ற ஆங்கிலேயர், தேவனுடைய வார்த்தைகளை வாசிக்க அநேகருக்கு உதவிகளைச் செய்யும் ஒரு அருமையான சீர்திருத்தவாதியாகயிருந்தார். அன்றைய தினத்திற்குரிய ஆங்கிலத்தில் வேதாகமத்தை மொழிப்பெயர்த்தார். தேவனையும் அவருடைய மக்களை சேவித்தத்தற்காக அவர் எடுத்த முயற்சியினிமித்தம் கொல்லப்பட்டார்.

மார்டின் லூத்தர், அனைவராலும் நன்கு அறியப்பட்ட ஒரு பிரபலமான சீர்திருத்தவாதியாக இருந்தார். ரோம கத்தோலிக்க கல்லூரியில் குருக்களாக பயிற்சி அளிக்கும் இளைஞர்களுக்கு தலைமை வகித்தார். மற்ற குருக்கள் எழுதினதையும், சபையின் விசுவாசங்களையும் படித்து வந்தார். இந்த கத்தோலிக்க புத்தகங்கள் சகலத்தையும் விவரித்திருக்கும் என்று எண்ணி அவர் வேதாகமத்தை வாசிக்கவில்லை.


ஒரு நாள் லூத்தர் புதிய ஏற்பாட்டின் ஒரு பிரதியை வாசித்து, புரிந்து கொள்வதற்கு இவ்வளவு எளிதாக இருப்பதைக்கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். சில வசனங்கள் கத்தோலிக்க போதனைகளில் உள்ள அநேக தவறுகளை சுட்டிக் காண்பித்தது.

அநேகருக்கு கல்வி அறிவு இல்லாததினால், இந்த துன்மார்க்கமான போதகர்கள், தவறான உபதேசத்தைத் தந்திரமாகப் போதித்தார்கள். ஜோஹான் டெட்செல் என்ற ஒரு ஜெர்மனிய துறவி மிக கொடூரமானவனாக இருந்தான். பாவங்கள் செய்யாத போதும் பாவமன்னிப்புச் சீட்டுகளை வாங்கும்படி அனைவரையும் கட்டாயப்படுத்தினான். இப்படிப்பட்ட திட்டத்தினால் ரோம கத்தோலிக்க சபைக்கு செல்வங்களும், ஐசுவரியமும் குவிந்தது. மேலும், இதன் விளைவாக எதிர்ப்புகள் தொடங்கி சீர்திருத்தத்திற்கு வழிவகுத்தது.

பாவ மன்னிப்பு சீட்டுக்கு விரோதமாக, மார்டின் லூத்தர் 95 தவறுகளை சபை கதவில் ஆணி அடித்து மாட்டினார். அப்போது தான் அச்சடிக்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. ஆகவே, இவைகள் அனைத்தும் அச்சடிக்கப்பட்டு, அநேக தேசங்களிலுள்ள ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது.

ரோம சபை லூத்தரை இப்படிப்பட்ட விசுவாசங்களைக் கைவிடும் படி கட்டளையிட்டது. அவர் இவைகளை மறுத்துவிட்டு இன்னும் அதிகமான திருத்துதல்களை செய்து, வேதாகமத்தை ஜெர்மானிய மொழியில் மொழிப்பெயர்த்து, லுத்தரன் சபையை ஸ்தாபித்தார்.

**டைடேலும், லூத்தரும் வேதாகமத்தை மக்கள் வாசிக்கும் மொழியில் மொழிபெயர்த்தார்கள்.**



# பாடம் – 81

# புலனாய்வு

**“அவர்கள் உங்கள் ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள். மேலும், உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும்” - யோவான் 16:2**

இந்த பரிசுத்தமான புலனாய்வு விசாரணை போப் இன்னோசென்ட் 111 என்பவர் ஐரோப்பாவில் ஸ்தாபித்தார். சபைக்கு விரோதமாக செயல்படுபவர்களைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்காக இந்த நீதி மன்றம் உருவாக்கப்பட்டது. (அதிகாரத்தில் உள்ளவர்களில் கருத்துக்களுக்கு எதிராக செயல்படுபவர்கள்)

இந்த நீதிமன்றம் மிக சக்திவாய்ந்ததாக இருந்தது. சிறு சந்தேகத்திற்குரிய ஒவ்வொருவரைப் பற்றியும் உடனடியாகத் தகவல் கொடுக்கக் கட்டளையிட்டிருந்தது. மனித வரலாற்றில் இது ஒரு இராட்சத செயலாக இருந்தது. துரதிஷ்டமாக கண்டுபிடிக்கப்பட்டவர்களைக் கொடூரமான முறையில், மனிதாபிமானமில்லாமல், இரக்கம் அற்ற சித்ரவதைகள் தண்டனையாக வழங்கப்பட்டது. சீர்திருத்தத்தை காரியங்கள் 500 வருடங்களாக நடந்தது.

அதற்கு பின்பு சபையின் வல்லமை குறையத் துவங்கியது. சத்தியத்திற்கு முரண்பாடான தவறுகள் கற்றுக்கொடுக்கப்படுகிறது என்று அநேக வல்லுனர்களும், வேதாந்திகளும் உணர்ந்து, அவர்களுக்கு எதிராக பேசினார்கள். இப்படி செயல்படுவதினிமித்தம் கொல்லப்பட்டாலும், அவர்களின் சிந்தனைகளை மக்களிடம் அறிவித்து சீர்திருத்ததை ஏற்படுத்தினார்கள்.


கத்தோலிக்கர்களும், புரோட்டடஸ்டன்களும் சபையின் புலனாய்வு விசாரணை அசுத்தம் என்று உணர்ந்தார்கள். அக்காலத்தில் அறியாமையிலும், மூடநம்பிக்கையிலும் மக்கள் முழுகிக் கிடந்தார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், அச்சு இயந்திரங்களின் கண்டுபிடிப்புகளினால், அநேக மக்கள் படிக்கும் வாய்ப்பைப் பெற்றார்கள். சத்தியத்தின் வெளிச்சம் அதிகமாக வீசத் தொடங்கியது.

லேவியராகமம் 19:18 ஆம் வசனத்தில் மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்ட கட்டளையும், பின்பு மாற்கு 12:33 ஆம் வசனத்தில் சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்ட “உன்னை போல் பிறனை நேசி” என்ற கற்பனை முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டது.

இப்படியாக அன்பு, இரக்கம் மற்றும் நீதி அங்கு முற்றிலும் காணப்படவில்லை. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜான் கால்வின் என்பவர் அக்காலத்தில் உள்ள எல்லா மதத்தின் அறிவை கற்று கொள்வதற்கு கடினமாக முயற்சித்தார். அவர் தன்னுடைய 20 ஆம் வயதில் புரோடஸ்டன்டாக மாறினார். வேதாகமத்தில் அவர் கண்ட உண்மைகளை ஒரு புத்தகமாக வெளியிட்டார். பின் நாட்களில், அவர் கொண்ட விசுவாசத்தைக் கடுமையாகப் போதித்தார். வேறு வித்தியாசமான விசுவாசத்தில் இருப்பவர்களை தண்டிப்பது தன்னுடைய கடமையாக எண்ணினார். மைக்கேல் செர்வீட்டஸ் திருத்துவத்திற்கு எதிராக ஒரு புத்தகத்தை வெளியிட்ட பொழுது, அவர் குற்றம் சாட்டப்பட்டு, கட்டி எரிக்கப்பட்டார். அன்பின் பிரமாணத்தை கால்வினும் மறந்தார்.

தேவன் சிலருக்கு மட்டுமே ஆவிக்குரிய உயிர்த்தெழுதலை கொடுப்பார் என்றும், மற்ற அனைவரும் நித்தியமான "எரி நரகத்தில்" உபத்திரவப்படுவார்கள் என்றும் கெல்வின் நினைத்தார். வேதாகமத்தை குருகிய கண்ணோட்டத்துடனும், அதை தவறாகவும் புரிந்து கொண்டதினால், அன்பான தேவனுடைய இரக்கத்தையும் திட்டங்களையும் அவரால் அறிந்து கொள்ளமுடிய வில்லை.

சுவிட்ஸர்லாந்தில் உள்ள உள்ரிக் விங்கலி ஆரம்பித்த சீர்த்திருத்தத்தை கால்வின் தொடர்ந்து நடத்தினார். இவர்கள் லூத்தரை காட்டிலும் அதிகமான காரியங்களை செய்தார்கள்.



# பாடம் - 82

## வெஸ்லியர்கள்

**“அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்” - 2தீமோத்தேயு 3:12**

இங்கிலாந்தில் வாழ்ந்த எபிஸ்காபாலியன் மந்திரிக்கும், பக்தியுள்ள அவருடைய மனைவிக்கும் பிறந்த இரண்டு குமாரர்கள், ஜான் மற்றும் சார்லஸ் வெஸ்லி. குடும்பத்தில் 19 பிள்ளைகள் இருந்தனர். 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில், வேதாகம கதைகள், வேத வாசிப்பும் அவர்களுடைய வளர்ச்சியை முக்கியமானப் பகுதியாக இருந்தது.

தன்னுடைய தந்தைக்கு வயது சென்ற பொழுது, அவருக்கு உதவி புரிய ஜான் ஆக்ஸ்போர்டு கல்லூரியை விட்டுச் சென்றார். அவ்வேளையில், சார்லஸ் வெஸ்லி கல்லூரியில் இருந்து கொண்டு மற்ற இரண்டு மாணவர்களோடு அவருடைய கிறிஸ்துவ வாழ்க்கைக்கு உதவியாக வேத பாடங்களை ஆராய்ச்சி செய்ய, ஒரு அமைப்பை ஏற்படுத்தினார். இதை “பரிசுத்த கூட்டமைப்பு” என்று அழைக்கப்பட்டது. அதன் உறுப்பினர்கள், ஒழுக்கத்தோடு வாழ கற்றுக் கொண்டார்கள். சில மாணவர்கள் இவர்களை கேலி செய்து, “மெத்தடிஸ்ட்” என்றும் அழைத்தார்கள். இந்நாள் வரைக்கும் அந்த பெயர் அவர்களைப் பற்றிக் கொண்டது.

ஊழியக்காரர்களுக்குப் பதிலளிக்க 1735 ஆம் வருடத்தில் இந்த இரண்டு சகோதரர்களும் அமெரிக்கா சென்றனர். சார்லஸ் வியாதிப்பட்டு, இங்கிலாந்து திரும்பினார். 1738 ஆம் வருடத்தில் ஜானும் திரும்பி விட்டார். அவருடைய பயணம் தோல்வியாக கருதப்பட்டது. ஆனால், பயணத்தின் போது, பயங்கரமான புயலின் மத்தியிலும், இந்த ஜான் தேவன் பேரில் முழு நம்பிக்கை வைத்த சில “ஜெர்மென் மோராவியன்ஸ்ல்” ஈர்க்கப்பட்டார். அவர்களிடமிருந்து அநேக கிறிஸ்துவ வாழ்க்கை நெறிகளை கற்றுக்கொண்டு, தேவன் பேரில் அவர்கள் வைத்திருந்த ஆழமான முழு விசுவாசத்தைக் கண்டு மெச்சிக் கொண்டார்.

வெஸ்லியர்கள் ஆதி கால சபையின் எளிமையான போதகத்திற்கும், வகுப்புகள் துவங்குவதற்கும், வேத பாடங்களுக்கும் திரும்பினார்கள். மற்ற விசுவாசத்தில் இருப்பவர்கள் இவர்களை கடுமையாக எதிர்த்து, கூட்டங்களை கலைப்பதற்கு கால் நடைகளை இடையில் விரட்டினார்கள். ஜான் வெஸ்லி ஒரு மிகப் பெரிய போதகராக

இருந்தாலும், அநேகர் கோபமடைந்து, கூட்டங்கள் அவருக்கு விரோதமாகக் காரியங்களைச் செய்தது.

1784 ஆம் வருடம் ஜான் வெஸ்லி இங்கிலாந்தில் உள்ள சபையை உடைத்து "மெத்தடிஸ்ட்" சபையை ஸ்தாபித்தார். இதில் உள்ள பாடல்கள் அனைத்துமே அவரால் எழுதப்பட்டது. ஆயிரக்கணக்கான பாமாலைகளை எழுதினார். அதில் சில பாடல்கள் இன்னும் பாடப்படுகிறது.

"இலவச கிருபை" என்ற ஒரு மாபெரும் வேதாகம சத்தியம், வெஸ்லியால் வெளிப்படுத்தப்பட்டது. (வெளி 22:17 "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள் தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்") - அவர் விரும்பிய வசனமாகும். என்றாலும் - ராஜ்யத்தில் முழு மனுக்குலமும் இந்த பூமியின் மேல் நித்தியமாக ஜீவிக்க ஒரு வாய்ப்பு கிடைக்கும் - என்ற இந்த சத்தியத்தின் முழுமையான பொருளை அவர் அறியவில்லை.

1788 ஆம் வருடம் சார்லஸ் வெஸ்லி லண்டனில் மரிக்கும் வரைக்கும் போதித்தார். 1791 வருடம், 87 ஆம் வயதில் காலமானார். அவருடைய உபதேசங்கள் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது.

**மிகப் பெரிய போதகர், ஜான் வெஸ்லிக்கு விரோதமாக, அடிக்கடி எதிர்ப்புக்கள் மூண்டது.**



# பாடம் - 83

## யாத்திரிகள் மற்றும் அமைதிபடுத்துபவர்கள்

**"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்" - சங்கீதம் 31:24**

1620 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி அன்று புனித யாத்திரிகர்கள், கற்பாறையான "மாசாசௌசெடின்" கரையில் இறங்கினார்கள். இந்த புதிய உலகில் பாதுகாப்பாக அடி எடுத்து வைத்ததற்காக தேவனை ஸ்தோத்தரித்தார்கள். இவர்கள் இங்கிலாந்து சபையிலிருந்து பிரிந்த, பக்தியுள்ள ஜனங்களாயிருந்தார்கள். தங்களுடைய சபை மற்றும் தாய்நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அதிகமான தைரியம் தேவைப்பட்டது.

ஒன்பது வருடங்களுக்குப் பின்பு "மாசாசௌசெடில்" புரிடியன்ஸால் காணிகள் நிறுவப்பட்டது. இவர்களும் கூட பக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். இங்கிலாந்தில் இருந்தவர்களுக்கு எந்த விதமான மத சுயாதீனங்களும் கொடுக்கப்படாததினால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

சில வருடங்களுக்கு பின் ஜார்ஜ் பாக்ஸ் என்ற ஒரு பக்தியுள்ள இளைஞன் வேதாகமத்தை விசுவாசித்தார். உலகளவில் உள்ள அநேக சபைகளின் நிமித்தம் அவர் வருத்தமடைந்தக் காரணத்தினால், "குவாரிசம்" என்ற இயக்கத்தை நிறுவினார். 1640 வருடம் துவங்கி அவர் போதித்தார்.

அங்கிருந்த அநேக குழுக்கள் போர் புரிவதை எதிர்த்தார்கள். எனவே, அவர்கள் போர் புரியவில்லை. இவர்கள், அமீஷ், மெனோநைட், குவாக்கர் ("நண்பர்களின் கூட்டமைப்பு" என்று பொதுவாக அழைக்கப்பட்டார்கள்) மத்தியில் காணப்பட்டார்கள். அநேகர் ராணுவத்திற்கு எதிராக இருந்ததினால், ஐரோப்பாவை விட்டுச் சென்றார்கள். ஒவ்வொரு சபையும் தன்னில் தான் முழுமைபெற்றதினால், எந்த சபையும் மற்ற சபைகளைப் பற்றி எதுவும் சொல்லக்கூடாது என்று நம்பினார்கள்.

"அன்பிலிருந்து அன்பு பிறக்கும்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நண்பர்கள் மத வாழ்க்கையைக் கொண்டிருந்தார்கள்.

இவர்கள் எளிமையுள்ள, தெய்வீக வழிநடத்துதலில் உறுதியான விசுவாசம் கொண்டவர்களாயிருந்தார்கள். இவர்கள் பேசும் பொழுது மட்டும் அல்ல தங்களுடைய அன்றாட வாழ்க்கையிலும், அதை அப்பியாசப்படுத்தினார்கள். யுத்தங்கள் மற்றும் இயற்கை சீற்றங்களின் மீட்புப் பணிகளைத் தொடர்ந்து செய்ததினால், இவர்கள் மிகவும் பிரபலமானார்கள். காணிகள் அமைக்கப்பட்ட நாட்களில் இந்த மத அமைப்பு மட்டுமே அடிமைத்தனத்தை எதிர்த்து நின்றவர்கள்.

கொடூரமான சித்திரவதைகளின் மத்தியிலும் இவர்களின் எண்ணிக்கைகள் அதிகரித்தது. 1634 வருடத்தில் அமெரிக்காவில் 60 குவாக்கர்கள் இருந்தார்கள். 4வருடங்களுக்கு பின்பு இவர்கள் 30,000 மாக உயர்ந்தார்கள்.

2கொரிந்தியர் 10:4 - "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்கு-கிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது என்ற பவுலின் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு யுத்தத்தின் போது வேத மாணவர்கள் ஆயுதம் எடுத்துச் செல்வது தடுக்கப்படுகிறது. நாம் மனிதர்களை அழிப்பதற்கல்ல, மாறாக அவர்களை மீட்பதற்கே விரும்புகிறோம். ராணுவ சேவைக்காக நீங்கள் கட்டாயப் படுத்தப்பட்டால், உங்கள் தேசத்திற்கு சேவை செய்ய மற்ற வழிகளை நாடுங்கள். எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் உள்ள "conscientious objectors".



**தங்களுடைய தாய் நாட்டை விட்டு வெளியேற புனித யாத்திரிகர்களுக்கு அதிகமான தைரியம் தேவைப்பட்டது.**

# பாடம் - 84

## உயர்மட்ட விமர்சகர்கள்

**"நீங்களோ பிரியானவர்ளே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு,..." - யூதா 20,21**

இன்று அநேக கிறிஸ்தவர்கள் உடல் ரீதியாக துன்பங்கள் அனுபவிப்பதில்லை. கட்டி வைத்து எரிக்கப்படுகிறதுமில்லை, பசியுள்ள சிங்கங்களின் குகையில் போடப்படுவதுமில்லை. ஆனால், கிறிஸ்துவ மதம் வலுவற்ற மதியீனமான ஒரு மதம் என்று எண்ணுபவர்கள், குற்றங்களைக் கண்டுபிடித்து, உண்மை கிறிஸ்தவர்களை அடிக்கடி எதிர்க்கிறார்கள்.

தேவன் முழு மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்கான அருமையான திட்டத்தைக் காண வேதாகமத்தை ஆராய்வது மிக அவசியம். நாம் தொடந்து வாசித்து, ஜெபிக்கும் பொழுது ஒவ்வொரு நாளும், நம்முடைய ஆழமான விசுவாசம் பலப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டு, வளர்ச்சியடையும். அநேகத் தவறுகள் நம்முடைய சிந்தையில் மெதுவாக நுழைந்து உண்மைக்கு இசைவாக நாம் கற்று அறிந்த பாடங்களை விட்டு நம்மை இழுத்துச் செல்ல வாய்ப்பு உண்டு. தேவனுடைய வார்த்தையின் தூண்டுதலினால், நாம் வேதத்தை நம்புகிறோம் என்பதை நாம் நிரூப்பிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. (1தெசலோனிகேயர் 5:21)

வேதாகமத்தை நிராகரிப்பதற்காகவே சிலர் வேதத்தை வாசிப்பது உண்டு. இவ்விதமாக, இவர்கள் ஆராய்ச்சி, சத்தியத்தையோ அல்லது தேவனுடைய திட்டங்களையும், நோக்கங்களையும், அறிந்துகொள்ளும் விருப்பத்தையும் ஏற்படுத்துவதில்லை. மற்றவர்களுடைய விசுவாசத்தைக் குறித்து கேலி செய்பவர்களை அப்போஸ்தலனாகிய பவுல், இவர்களை "பரியாசக்காரர்" என்று அழைக்கிறார். (2பேதுரு 3:3)

குற்றம் கண்டுபிடிப்பதில் தங்களை தாங்களையே பெரிய ஆட்களாக எண்ணிக்கொண்டு தானியேலையும் மற்ற பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளையும், நம்பாமல், அவர்களை இழிவுப்படுத்தி -யிருக்கிறார்கள். இப்படியாக அவர்கள் இயேசுவையும் தேவ ஆவியால் ஏசப்பட்ட சீஷர்களையும் அவமதித்தார்கள். தானியேலின் புத்தகம் நம்முடைய நாட்களுக்குரிய அநேக அற்புதமான தீர்க்கதரிசனங்களை

உள்ளடக்கியிருக்கிறது. இதில் அநேக தீர்க்கதரிசனங்கள் இன்று நிறைவேறினதையும், நிறைவேறிக் கொண்டிருப்பதையும் நாம் காண்கிறோம்.

உலக அறிவைப் பெற்று இன்று அநேகர் ஞானவான்களாக இருப்பதினால் முழுமையாக பெருமை கொள்கிறார்கள். வேதாகமத்தைக்கற்று அதை நல்ல முறையில் புரிந்துகொள்பவர்களும் பெருமை கொண்டு உயர்ந்த மனநிலையைப் பெறலாம். ஆனால், இந்த சத்தியம் தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, நாம் நம்மை அல்ல தேவனுடைய ஞானத்தையே மகிமைப்படுத்துபர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைகளில் நாம் முழு நம்பிக்கைக் கொள்ளலாம் - அவருடைய வாக்குறுதிகள் என்றுமே தோல்வியடையாது. நம்முடைய ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவை பின் பற்றுவதின் பொருள் என்ன என்பதை சரியாகப் புரிந்துகொள்ள வழி நடத்தும்.(எரேமியா 9:23,24)

மக்கள் அதிகமான மத தவறுகளை நம்ப தொடங்கின பின், உயிர்த்தெழுதல் மற்றும் பூமியின் மேல் அற்புதமான தேவ ராஜ்யத்தைப் பற்றின நம்பிக்கைகள் முற்றிலுமாக காணாமல் போனது. இவைகள் காலப் போக்கில், அரசாங்கமில்லாத இராஜாக்கள், ஒழுங்கற்ற, சட்டங்களை கடைபிடிக்காத ஒரு நிலைமையை ஏற்படுத்தியது. தானியேல் 12:1 ம் வசனத்தில் சொல்லப்பட்ட "மகா உபத்திரவ காலத்தை" இது வருவிக்கும். குறித்த காலத்தில் உபத்திரவ காலம், கிறிஸ்துவின் இராஜ்யம் பூமியின் மேல் ஸ்தாபிக்கப்படுவதற்கு வழிவகுக்கும்.(ஆகாய் 2:6,7)

**மனுக்குலத்திற்காக தேவனுடைய அழகான திட்டம் வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.**



# பாடம் - 85

## ஜீவனுள்ள தேவனுடைய ஆலயம்

**“தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன், அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.” - 1 தீமொத்தேயு 3:15**

இடைப்பட்ட யுகங்களின் காலப்பகுதிகளில் அநேக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு, அநேக மதத் தலைவர்கள் மக்களை அநேக விதங்களில் பாதிப்பை ஏற்படுத்தினார்கள்.

கிபி 330 இன் துவக்கத்தில், ரோம கத்தோலிக்க மக்களுக்கும் கிழக்கு கிரேக்க பழமை வாய்ந்த சபைகளுக்கும் போட்டியாகவே இருந்தது. கடைசியாக கிபி 869 ஆம் வருடத்தில் இவர்களுக்குள் பிளவு ஏற்பட்டது. பழமையான சபைகள் போப்பின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததினால், இந்த பிரிவு இந்நாள் வரைக்கும் பிரிவாகவே இருந்துவிட்டது.

மேற்கத்திய ஐரோப்பாவில் இஸ்லாமிய மதம் பரவுவதை பழமையான சபை தடுத்தது. சபையில் இவர்கள் மத்தியில் அநேக இரத்தசாட்சிகள் வாழ்ந்தார்கள். அவர்களுடைய விசுவாசத்திற்காகத் துன்பப்பட்டு மரிக்கவும் துணிந்தார்கள்.

மிகப் பெரிய ஆலயங்களும், பேராலயங்களும் நாகரீக உலகில் எங்கும் கட்டப்பட்டது. பொதுவாக, இதற்கான பொருளாதார உதவிகளையும், பராமரிக்கும் செலவுகளையும் எளிய மக்களிடம் வசூலிக்கப்பட்டது.

இயேசுவின் நாட்களில், சபைக்காக நிதி திரட்டுவது “கிறிஸ்துவ வேலை” -யாக இருக்கவில்லை. இன்று பலர் இயேசுவின் வேலைக்காக பணம் திரட்டுவது, ஒரு நன்மையான வேலை என்று கருதுகிறார்கள். கிறிஸ்துவின் சபையைக் கட்டுவது என்றால், கட்டிடங்களை அல்ல, மாறாக நம்மை நாம் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டப்படுவதே, உண்மையான சபையின் வேலை கொடுத்திருக்கிறார்கள்.(யூதா 20)

தேவனுடைய ஜனங்கள் ஜீவ கற்களைப் போலிருக்கிறார்கள். ஆவிக்குரிய ஆலயத்திற்கு ஏற்றவாறு அவர்களின் அனுபவங்களின்

மூலம் வடிவமைக்கப்பட்டு, பட்டைதீட்டப்படுகிறார்கள். ஆலயம் என்பது செங்கலால் கட்டப்பட்ட சபை அல்ல. மாறாக, சுவிசேஷ யுகத்தில், சத்தியத்தின் பணிக்காக இயேசுவை பின்பற்றக்கூடியவர்களைக் கொண்டு கட்டப்படுவதாகும். இவர்கள் வாய்ப்பு கிடைக்கும் போது அனைவருக்காகவும் நன்மை செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள். (கலாத்தியர் 6:10)

சகோதர ஐக்கியம் அவசியமானது (எபிரேயர் 10:25) இயேசுவைப் பின்பற்றுபவர்கள் ஒன்று கூடி பாடி, ஜெபித்து, தேவனைப் புகழ்வது, தேவனுடைய வார்த்தையாகிய “வெளிச்சத்தில்” நம்மை என்றுமே, நிலை நிறுத்தி, அந்த வெளிச்சத்தை மற்றவர்களுக்கு பிரகாசிக்க செய்யும். இதை நாம் சபை கட்டிடத்தில் மட்டும் அல்ல, எங்கு வேண்டுமானாலும் செய்யலாம்.

ஒரே விசுவாசத்தில் இருப்பவர்களை சந்திக்க வாய்ப்பு கிடைக்காத சிலர், அதிகமாக படித்து ஆராய்ச்சி செய்து, ஞானத்திலும், சத்தியத்தை அறிகிற அறிவிலும், தேவனுடைய திட்டங்களை அறிந்துகொள்வதிலும் விருத்தியடைந்திருக்கிறார்கள். ஆகவே, இயேசுவை பின்பற்ற விரும்புபவர்களுக்கு, தேவனுடைய ஆலயத்தில் “ஜீவனுள்ள கற்களாக” கட்டப்படுவதற்குத் தேவையான சகலத்தையும் தேவன் கொடுக்கிறார்.

**ஏழை மக்களிடம் நிதி வசூலித்து, மிகப் பெரிய பேராலயங்கள் கட்டப்பட்டது.**



# பாடம் - 86

## மேற்கு நோக்கி நகர்ந்த கிறிஸ்தவம்

**“பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்”. - எபேசியர் 4:13**

1800 ஆம் ஆண்டின் துவக்கத்தில் அமெரிக்காவில் உள்ள அநேக சபைகளில் பெரும் அளவு பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் விளைவால் “மேற்கத்திய இயக்கம், புதிய இடம் மாறுதல், உள்நாட்டு சண்டைகள் போன்றவைகள் ஏற்பட்டது. ஸ்தாபிக்கப்பட்ட சபைகளை விட்டு, வெளியேறி, வேறு புதிய சபைகளை ஏற்படுத்தியதால் அநேக பிரிவுகள் உண்டானது. அநேக மிஷினரி அமைப்புகள் ஸ்தாபிக்கப்பட்டு, அவைகளில் பல ஒன்றோடொன்று இசைவாகவுமிருந்தது. 1816ஆம் வருடத்தில் அமெரிக்க வேதாகம சங்கம் துவங்கப்பட்டு, எளிதில் சென்றடையாத இடங்களுக்கும் வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டது.

1786 ஆம் வருடம் பிள்ளைகளுக்குரிய மத கோட்பாடுகளைப் பற்றிய யோசனை மெத்தடிஸ்ட்டால், அமெரிக்காவிற்குக் கொண்டுவரப்பட்டது. 1816 ஆம் வருடத்தில், அதாவது 30 வருடங்களுக்கு பின், நாட்டின் ஒவ்வொரு பகுதிகளிலும் ஞாயிறு பள்ளிகள் காணப்பட்டது.

மேற்கத்தியக் குடிகள் நிலையாக அமர்ந்தபின், அநேக மதத்தலைவர்கள் அங்கு தேவைப்பட்டார்கள். அநேக மதப்பிரிவும், மத அறிவுக்காக பள்ளிகளை ஸ்தாபித்தார்கள். பிற்காலத்தில் ஊழியர்களும், குருக்களும் அதில் பயிற்சி பெற்றனர்.

சுவிசேஷகர்களும், மிஷினரீகளும் மேற்கத்திய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்கள் சுவிசேஷகர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் பல இடங்களுக்குச் சென்று விசேஷமான ஆராதனைகளை நடத்தும் சராசரி புரோட்டஸ்டன்ட் பொது மக்களாக இருந்தார்கள். இவர்கள் மற்ற நாடுகளில் புதிதாய் குடியேறும் பொழுது, சுவிசேஷத்தை அறிவிப்பது மட்டும் அல்லாமல், ஒரு சட்டமாக மருத்துவ பணியையும், கல்வி அறிவையும் கொடுத்தார்கள்.

19 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், முகாம்களை அமைத்து கூட்டங்கள் கூடினதும், காணப்பட்டது. பிற்காலத்தில் அமெரிக்க சுவிசேஷ


பணியில் இது ஒரு பழக்கமாகமானது. மேற்கத்திய நாடுகளின் ஒவ்வொரு பகுதிகளிலும் இவைகள் ஏற்படுத்தப்பட்டது.

ஐரோப்பாவிலிருந்தும் மற்ற நாடுகளில் இருந்தும் மேற்கு நோக்கி அநேகர் சென்றதால், பல புதிய மத பிரிவுகள் வேகமாக தொடர்ந்து உருவானது. இவர்களில் சிலரை "மார்மோம்ஸ்" (பின்பு புனிதர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்) ஆவர். அதற்கு பின் அட்வென்டிஸ், கிறிஸ்துவ விஞ்ஞானிகள், அதற்கு பின்பு யேகோவாவின் சாட்சிகள். டுவாயிட் மூடி என்ற சுவிசேஷகர் மனித உரிமைக்காக போராடும் படை வீரர்கள் மத்தியில் கிறிஸ்துவப் பணியைச் செய்து வந்தார்.

தெற்கிலும், வடக்கிலும் உள்ள அநேக சபைகள் அடிமையிலிருந்து விடுதலைப் பெற்ற கருப்பர்கள் மேல் இரக்கம் காட்டி, அவர்களுக்கு மதக் கோட்பாடுகளை கற்று தரும் பள்ளிகளை அமைத்தனர். காலப்போக்கில் கருப்பர்கள் தங்களுக்கென்று சொந்த சபைகளை ஸ்தாபித்தார்கள்.

இந்த பாடத்தின் துவக்கத்தில் உள்ள வார்த்தைகளை, மேற்கூறியவைகள் நிரூபித்து நிறைவு, செய்கிறது. மேலும், தேவனுடைய வார்த்தைகள் ஜனங்களிடம் வந்து சேர்ந்ததற்கான சில எடுத்துகாட்டுகளாகவும் அமைகிறது.

**மிஷினரீகள், புதிதாய் குடியேறின நாடுகளிலும், அந்நிய தேசங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.**



# பாடம் - 87

## அநேகர் இங்கும் அங்கும் ஓடுவார்கள்

**"தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரை போடு, அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்." - தானியேல் 12:4**

மனுக்குலத்தின் வரலாற்றில், எக்காலத்திலும் காணப்படாத அறிவின் வளர்ச்சி கடந்த 100 ஆண்டுகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. இன்றைக்கு நாம் காணக்கூடிய அநேக விஞ்ஞான கண்டுபிடிப்புகள் ஒரு நூற்றாண்டிற்கு முன்பு காணப்படவில்லை. நீண்ட காலமாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவின் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் தொடங்கியது என்று அநேகர் உணராதிருக்கிறார்கள்.

கடந்த 1454 ஆம் வருடம் ஜோஹான் குட்டன்பெர்க் கண்டுபிடித்த அச்சு இயந்திரங்களின் வழியாக ஒவ்வொரு வருடத்திலும் வளர்ந்த அறிவு சேமிக்கப்பட்டது. இதன் விளைவாக உலகம் எங்கும் எல்லா துறைகளிலும் அறிவு பெருகியது.

அறிவின் பெருக்கத்தோடு, தேவனுடைய வார்த்தைகளின் அறிவும் "இங்கும் அங்கும் ஓடி" தொடர்ந்து பெருகியது. இதுவே, நாம் குறிப்பிடப்பட்டிருக்கிற "கடைசி காலத்தில்" வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இது நீண்ட காலமாக மனுகுலத்தைத் தொடர்ந்து வந்த பாவமும், மரணமும் முடிவும், சுவிசேஷ யுகத்தின் நிறைவும், ஆயிரவருட ஆட்சியின் துவக்கத்தின் காலப்பகுதியாகும்.


மேலும், தேவன் குறித்த காலத்தில் மனிதனின் சிந்தைகள் ஊக்குவிக்கப்பட்டு இன்னும் பல நுணுக்கமான கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டில் மின்சார இயந்திரங்களை இயக்குவதற்கு நீராவி பயன்படுத்தபடலாம் என்று கண்டு பிடித்தார்கள். அதற்கு பின்பு மின்சார சக்தி பயன்படுத்தபடலாம் என்று கண்டு பிடித்தார்கள். அதற்கு, பின்பு மின்சார சக்தி பயன்படுத்தப்பட்டது. இன்றைக்கு இருக்கும் மின்அணு சக்திகளும், அணுசக்திகளும், சிந்திக்க முடியாத அளவுக்கு, தொலைதொடர்புகளிலும்,

போக்குவரத்திலும் அதிக வேகத்தோடு செயல்பட புதிய வழிகளை ஏற்படுத்தியுள்ளது.

விண்வெளி கப்பல்களை கட்டுவதற்கு திட்டம் தீட்டும் ஞானத்தை சற்று யோசித்து பாருங்கள் -- மனிதன் நிலவில் நடப்பது குறுகிய காலத்தில் மிக துரிதமாக, கண்டுப்பிடிக்கப்பட்ட இவ்வளவு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் வியக்கத்தக்கது. பல நூற்றாண்டுகளாக மனுக்குலம் குதிரைகளை விட வேகமாக எங்கும் பயணம் செல்லாதவர்களாக இருந்தார்கள். மேலும், பெரும்பாலான மக்கள் பிறந்த இடத்தை விட்டு 50 மைல்கள் கூட பிரயாணம் செய்ததில்லை.

முதல் வாகனம் கடந்த 200 வருடங்களுக்கு முன்பு தான் கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால், இன்று அநேக விதமான போக்குவரத்து வாகனங்கள் உள்ளது. நம் மத்தியில் இவைகள் இன்று மிக எளிதாக பயன்படுத்தப்பட்டு “இங்கும் அங்கும் ஓடுவார்கள்” என்று நாகூம் 2:4 ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாக இருக்கிறது.

**மற்ற எந்த காலத்திலும் ஏற்படாத அளவுக்கு கடந்த 100 ஆண்டுகளுக்குள் அறிவு மிகவும் பெருகிற்று.**



# பாடம் - 88

## அறிவு பெருகும்

**“மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்” - மத்தேயு 24:27**

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு கடைசி காலத்தில் அறிவு பெருகிப் போகும் என்பதை தேவன் தானியேலின் தீர்க்கதரிசனத்தின் மூலம் அறிவித்தார். பூமிக்குரிய காரியங்களில் மட்டும் அல்ல, ஆவிக்குரிய காரியங்களிலும் மிகுந்த ஞானம் பெருகி இருப்பதை நாம் இன்றும் காணலாம். 1874 ஆம் வருடத்தில் நம்முடைய ஆண்டவர் திரும்பும் வரைக்கும் தேவனுடைய திட்டங்கள் பல நூற்றாண்டுகளாக இந்த உலகத்திற்கு மறைக்கப்பட்டது.

தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம், அக்காலத்திலிருந்து ஆயிரக்கணக்கான மக்களுக்கு கிடைத்தது. இடைப்பட்ட யுகங்களின் காலப் பகுதியிலிருந்து நம்பப்பட்டு வந்த அநேக மூடநம்பிக்கைகளும், மனித யோசனைகளும் இக்காலத்து சத்தியத்தின் வெளிச்சத்தில் நிலைநிற்கவில்லை. அக்காலத்திலிருந்து மனித சிந்தையில் ஆவிக்குரிய காரியங்கள் பொறிதட்டியது, அவைகள் இந்நாள் வரைக்கும் கொழுந்துவிட்டு எறிகிறது.

மின்னல், என்று மத்தேயு 24:27 ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்ட வார்த்தை, **“astrape”** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இதற்கு “மிகுந்த பிரகாசம்” என்று பொருள். மின்னல் சற்று நேரத்திற்கு சிறிதளவு வெளிச்சம் மட்டுமே கொடுக்கும். ஆனால், சூரியனுடைய வெளிச்சம் பூமியின் கிழக்கு தொடங்கி மேற்கு வரைக்கும் பரவி பூமி முழுவதையும் வெளிச்சத்தால் நிரப்புகிறது. ஆகவே, இங்கு சொல்லப்படும் வெளிச்சம் நிச்சயாக மின்னலை குறித்ததாக இல்லாமல் சூரியனையுடையதாகும். இப்படியே நம்முடைய ஆண்டவராகிய இயேசுவும், மறைந்திருக்கும் சகலத்தையும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்து எல்லா பாடங்களிலும் உள்ள சத்தியத்தை வெளிப்படுத்துவார்.

இன்றைக்கு இருக்கக்கூடிய தொலைக்காட்சி, கம்பியூட்டர்கள், விமானங்கள், விண்வெளி கப்பல்கள் உள்ள காலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்களுடைய தாத்தா பாட்டியின் பழமையான

காலத்தை உணர்வதற்கு வாய்ப்புகள் இல்லை. ஆகையால் சென்ற காலத்தில் நடந்தவைகளை நாம் எண்ணிப் பார்க்கும் போது, நாம் அறிவு பெருத்த காலத்திலும், முடிவின் காலத்திலும் இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். (இந்த தீமையான காலத்தின் முடிவில்)

இந்த உலகத்தை தொழிற்சாலைகள் மட்டும் அல்ல, இயற்கையும் அநேக விதமான மாற்றங்களை ஏற்படுத்தி, இந்நாள் வரைக்கும் ஒருபோதும் பயன்படாத நிலங்களைக்கூட, வருங்காலத்தில் பயனுள்ளதாக மாற்ற ஆயத்தப்படுத்துகிறது. இன்றைக்கு ஏற்படக்கூடிய பூகம்பங்களும், வெள்ளங்களும், புயல்களும் இந்த மாற்றங்களை ஊக்கப்படுத்துகிறது. குறித்த காலத்தில் சாபங்கள் நீக்கப்பட்டு, தேவனுடைய ஆசீர்வாதங்கள் ஒவ்வொருவருக்கும் வந்து சேரும். (ஏசாயா 35:1, 45:18, 65:17,21,22)

வருங்காலத்தில் மகிமையான இந்த பூமி அற்புதமான பரதீஸாக இருக்கும் என்று வேதம் போதிக்கிறது. இதில் தேவன் மனுக்குலத்திற்காக வைத்திருக்கும் திட்டங்கள் நிறைவடைந்து, நம்முடைய கற்பனைக்கு எட்டாத ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும். தேவனுடைய பாதப்படியாக இருக்கும் இந்த பூமியை அவர் மகிமைப்படுத்துவார். (ஏசாயா 60:13, 66:1, அப்போஸ்தலர் 7:49)

**உலகத்தின் முடிவு நாட்களில் அறிவு பெருகும்.**



# பாடம் – 89

## உபத்திரவத்தின் காலம்

**“ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்.” - மத்தேயு 24:21**

வசனத்தில் சொல்லப்பட்ட காரியங்கள் அனைத்தும் இக்காலத்தில் நிறைவேறிக் கொண்டிருப்பதை நாம் உணரலாம். (தானியேல் 12:1) “யாதொரு ஜாதியாரும் தோன்றிய முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்ககாலம் வரும்”

ஆனாலும், உலகத்தில் வந்திருக்கும் இந்த உபத்திரவமே கடைசி உபத்திரவம் என்று நாம் அறியும் போது நமக்கு ஆறுதலாக இருக்கிறது.

இந்த பூமி தேவனுடைய கட்டுப்பாட்டில் இருந்ததுப் போல இப்பொழுதும் இருக்கிறது என்று ஜனங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற காரணத்ததினால், அக்காலத்தில் இருக்கும் மக்கள், கடுமையான முறையில் பாடங்களைக் கற்றுக் கொள்ளுவார்கள். நாம் காணக்கூடிய இந்த உலகத்தையும், அதில் உள்ள மனுக்குலத்தையும் தேவன் முற்றிலுமாக அழிப்பதில்லை. மாறாக, பூமியை கெடுப்பவர்களை அவர் முற்றிலுமாக அழித்துவிடுவார். (வெளி 11:18)

கிறிஸ்துவும் அவருடைய சபையும், பூமிக்குரிய ஆட்சிப் பொறுப்பை பெறும் சரியான காலம் வந்தவுடன் சாத்தானும் அவனை பின்பற்றினவர்களின் வஞ்சம் நிறைந்த துன்மார்க்கமான செயல்கள் நிறுத்தப்படும்.(வெளி 20:2,3) மரித்தோர் உயிர்பெறுவார்கள் (அப்போஸ்தலர் 24:15) நீதியும் சமாதானமும் அதிகாரப்பூர்வமாக எங்கும் ஸ்தாபிக்கப்படும். எப்படிப்பட்ட அற்புதமான ஆசீர்வாதங்கள். மேலும், இவை அனைத்துமே தேவனால் வாக்களிக்கப்பட்டிருப்பதால், இவைகள் நிச்சயமாக சம்பவிக்கும் என்று உறுதியாக விசுவாசிக்கலாம்.

யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் அல்லது கொடுமையான முறையில் சிலர் மற்றவர்களை நடத்துவதைப் பற்றியும் நாம் கேட்பதற்கு விரும்புவதில்லை. அதேபோல் யுத்தங்களில் மற்றவர்களை அழிப்பதற்கு பயன்படுத்தும் கட்டிடங்களையும், கருவிகளையும் பற்றி யோசிப்பதற்கு நாம் விரும்புவதில்லை அல்லது தீவிரமாக பரவக்கூடிய வியாதிகள், பட்டினி, வேலை நிறுத்தம்,

நிறுவனங்கள் மூடப்படுவது, பெரிய அமைப்புகள் ஸ்தாபிக்கப்பட்டு அவர்களுடைய சொத்துகளும் அதிகாரங்களும் அதிகரித்து கொள்ளுவது, மக்கள் மத்தியில் சுயநலமாகவும், பேராசையுள்ளவர்களாகவும் இருப்பவர்களை பற்றியும் நாம் சிந்திப்பதை விரும்புவதில்லை.

இவை அனைத்துக் காரியங்களும் வரக்கூடிய காலத்தில் சீர்பொருத்தப்பட்டு, முழு மனுக்குலமும் சமாதானத்தில் ஒற்றுமையாக குடியிருப்பார்கள். மத சம்பந்தப்பட்ட அமைப்புகளும் அநேக அனுபவங்களை பெற்று ஒன்று கூடி சமாதானத்தோடு செயல்படுவார்கள்.

பூமியில் உள்ள அனைத்து துறைகளிலும் காணப்படுகிற ஒழுக்கக்கேடானக்காரியங்களை "anarchy" என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும். (முழுமையான துன்மார்க்கமும், ஒழுக்கக்கேடும், சட்டத்திற்கு புறம்பான காரியங்களும்) இந்தக் காரியங்கள் பூமியின் இந்நாள் வரைக்கும் ஏற்படாத மகா உபத்திரவத்தின் காலம் வருவதற்கு காரணமாகிவிடும். இப்படிப்பட்ட ஒரு காலத்தை எதிர்பார்க்காமல் இருந்தாலும், இனிவரக்கூடிய மேன்மையான ஒரு காலத்தை எதிர்பார்த்து மகிழ்ச்சி அடைகிறோம். இந்த பு மியில் எந்த மக்களும் இது வரைக்கும் அனுபவித்திராத சந்தோஷத்தை அனைவரும் அனுபவிக்க இருக்கிறார்கள்.

**இப்பொழுது நடைபெறும் இந்த "உபத்திரவக் காலமே" பூமியில் உள்ள மக்களுக்குக் கடைசி உபத்திரவக் காலமாக இருக்கும்.**



# பாடம் – 90

## வெற்றி வாகை சூடிய போர் வீரர் சபை

**“அவன் இரும்புக்கோலால் அவர்களை ஆளுவான், அவர்கள் மண்பாண்டங்களைப் போல் நொறுக்கப்படுவார்கள்.” - வெளி 2:27, சங்கீதம் 2:9.**

சுவிசேஷ யுகத்தில் உள்ள சபையே “போர்ச் சேவகர்” என்று அழைக்கப்படுகிறது. ஆகவே, அவர்கள் பட்டயத்தோடும், துப்பாக்கிகளோடும், டாங்குகளோடும் போருக்குச் செல்வார்கள் என்று பொருள்படாது. தேவனுடைய பிள்ளைகள் உலகத்தின் சோதனைகளுக்கும், மனித விருப்பங்களுக்கும், சாத்தானின் வஞ்சகத்திற்கும் எதிராக செயல்படுவதினால் இவர்களுடைய போர்க்களம் முற்றிலும் வித்தியாசமானது.

தன்னுடைய “உரிமைகளுக்காக” சபை போராடுவதில்லை. இடைப்பட்ட யுகங்களின் காலப்பகுதியில் சபை தன்னுடைய விசுவாசத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளாத போதும் பட்டயத்தாலும், ஈட்டிகளாலும், யுத்தங்களையும் நடத்தி மிகுதியான தவறுகளை செய்தது.

இந்தப் பூமியில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் வாழ்ந்த போது, உலகத்திற்குரிய எந்த விதமான அதிகாரங்களிலும் அவர்கள் தலையிட்டதே இல்லை. மாறாக, நாட்டின் சட்டதிட்டங்களையும், அதிகாரிகளையும் மதிக்கவேண்டும் என்று கற்று கொடுத்தார்கள். அதிகாரிகள் அந்த பதவிக்கு பாத்திரவானாக இல்லாமல் போனாலும் அதிகாரத்தின் நிமித்தம் நாம் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுக்க வேண்டும் என்று போதித்தார்கள். (மத்தேயு 22:21, ரோமர் 13:1) இயேசுவுக்கும் அவருடைய அப்போஸ்தலர்களும் இந்த உலக அரசியலில் கலந்து கொள்ளாமல், தனித்து இருந்தாலும் அவர்கள் அனைவரும் சட்டதிற்கு உட்பட்டிருந்தார்கள்.

சபை தரித்துக் கொள்ள வேண்டிய சர்வாயுதங்களைக் குறித்து எபேசியர் 6:11-17-ஆம் வசனங்களில் வாசித்து அறியலாம். கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய பட்டயத்தோடும், தேவனுடைய வார்த்தையினாலும், சத்தியத்தினாலும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யக் கூடிய ராஜ்யத்தின் நற்செய்தியை அறிவிக்கவும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்யக் கூடிய நல்ல ஆவியையும் பெற்றிருக்கிறார்கள்.

நாம் பெற்ற நீதியுள்ள மார்க்கவசம் இயேசுவின் மரணத்தினால் நமக்கு கிடைத்த நிலைமையை அடையாளப்படுத்துகிறது. இது இயேசுவின் விலையுர்ந்த பலியினால் நமக்குக் கிடைத்த பாதுகாப்பான கவசமாகும். இதை அணியாதவர்கள் ஜீவனை இழப்பார்கள்.

ஆண்டவருக்கு முழுமையாக அர்பணிக்கப்பட்ட வாழ்க்கையை சமாதானத்தின் பாதரட்சை அடையாளப்படுத்துகிறது. இவைகள் கரடு முரடான இடத்தில் (உலகத்தின் எந்த காரியங்களுக்கு) உலகத்தோடு ஒத்துபோகாதபடிக்கு நம்மை காத்துக்கொள்கிறது.

தேவன் மேலும், அவருடைய சத்தியத்தின் மேலும் வைக்கும் விசவாசமே கேடகமாகும். சாத்தானும், அவனுடைய ஆட்களும் எய்யக் கூடிய “அம்புகளிடமிருந்து” இந்த கேடகம் நம்மை காத்து கொள்ளுகிறது.

நாம் அணியக் கூடிய தலைசீரா ஞானத்தையும், இரட்சிப்புக்குரிய நம்பிக்கையையும் அடையாளப்படுத்துகிறது. நாம் நம்முடைய சிந்தையில் பெற்றிருக்கும் சத்தியத்தின் அறிவை சாத்தான் தன் வல்லமையைக் கொண்டு அழிக்காதபடிக்கு, இதை நாம் எப்பொழுதும் அணிய வேண்டும். நாம் எடுத்து செல்லும் ஆவியின் பட்டயம் அசத்தியமான போதனைகள் நம்மை மேற்கொள்ளாதபடி அவைகளை எதிர்த்து நிற்க பயன்படுகிறது. தேவனுடைய வார்த்தைகளை மிக எச்சரிப்போடு, தொடர்ச்சியாக ஆராய்ந்து அறிந்து கொண்டு, சத்தியத்தை காத்து கொண்டால், இந்த ஆவியின் பட்டயத்தை நாம் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

**தேவனுடைய பிள்ளைகள் பட்டயம், துப்பாக்கி, டாங்குகளைக் கொண்டு போர் புரிவதில்லை.**



# பாடம் - 91

## புதிய வானங்களும் புதிய பூமி

**“பின்பு நான் புதிய வானத்தையும், புதிய பு மியையும் கண்டேன். முந்தின வானமும் முந்தின பு மியும் ஒழிந்துபோயின, சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.” - வெளி 21:1**

வேதத்தில் உள்ள அநேக வசனங்கள் அடையாள மொழியைப் பயன்படுத்தியுள்ளது. இங்கு வானம், அநேக மதங்களை அல்லது ஆவிக்குரிய வல்லமைகளையும், பூமி இந்த உலகத்தில் காணக்கூடிய அமைப்புகளையும், மலைகள் பூமிக்குரிய அரசாங்கத்தையும், கொந்தளிக்கும் கடல் துன்மார்க்கமான உலக மக்களையும் அடையாளப்படுத்துகிறது.

யோவான் இந்தப் புதிய பூமியில் காட்சியை காணும் போது, இதே பூமியில் புதிய அமைப்புகளையும், தேவனுடைய நீதியுள்ள சட்டங்களையும், கட்டளைகளையும் உள்ள ஒரு மேன்மையான புதிய வாழ்க்கை முறையையும் கண்டார்.

யோவான் புதிய வானங்களைக் காட்சியாகக் காணும் போது, தேவனுடைய சிங்காசனத்தை அவர் காணவில்லை. ஆக, இங்குச் சொல்லப்படும் வானம், பூமியில் தங்களை தாங்களே “சரி” என்று சொல்லும் எல்லா மத அமைப்புகளையும் அடையாளப்படுத்துகிறது. இவர்களுடைய செயல்களின் மூலம் படிப்படியாக கிறிஸ்துவின் நீதியுள்ள, சத்தியமான ராஜ்யம் ஸ்தாபிக்க வழிவகுக்கும்.

கிறிஸ்துவின் ராஜ்யம், என்பது மூன்றாவது “வானமும், பூமியும்” அல்லது வரக்கூடிய உலகமாகும். நோவாவின் காலத்தில் ஜலத்தினால் அழிக்கப்பட்ட உலகமே முதல் உலகமாகும். இதை முதல் உலகம் என்று அழைக்கப்படுகிறது.(2பேதுரு 3:6) அந்த உலகம் தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருந்தது.


அடுத்ததாக அப்பொழுது தொடங்கின இந்த உலகம் மகா உபத்திரவத்தின் காலத்தில் முடிவு அடையும். சாத்தானின் வல்லமையும், ஆளுகையும் இருப்பதினால் இதை “இன்றைய தீமையான உலகம்” என்றும் அழைக்கப்படுகிறது. உண்மையில் சாத்தான் “உலகத்தின் அதிபதி” என்று அழைக்கப்படுகிறான். (யோவான் 12:31) அன்பும், நீதியும்

அடிப்படையாகக் கொண்ட இந்த புதிய வானங்களும் புதிய பூமியும் ஸ்தாபிக்கப்படும். வல்லமைகளும் சர்வாதிகாரமும் முற்றிலும் அகற்றப்படும். நீதி மட்டும் நிலைத்து நிற்கும்.

கிறிஸ்துவின் 1000 வருட ஆட்சியில் இந்த உலகத்தில் இருக்கும் தீமைகள் படிப்படியாக நீக்கப்படும். அக்காலத்தில் நீதி முழுமையாகச் செழிக்கும். (சங்கீதம் 72:7) மேலும், “நீங்கள் மனம்பொருந்திச் செவி கொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.” (ஏசாயா 1:19). ஆனால், துன்மார்க்கமான அனைவரும் அறுப்புண்டு போவார்கள்.(சங்கீதம் 37:9)

நம்முடைய ஆண்டவர் இந்த உலகத்தில் அவருடைய சீஷர்களுக்கு “உம்முடைய ராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக” (மத்தேயு 6:10) என்று ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தது முதல், மனுக்குலம் இப்படிப்பட்ட ஒரு நிலைமையை நம்பிக்கையோடு, ஜெபித்துகொண்டும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட அற்புதமான வாக்குதத்தம் நிறைவேற நாம் அனைவரும் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறோம்.

**வரக்கூடிய உலகம் “கிறிஸ்துவின் ராஜ்யம்”.**



# பாடம் - 91

## பூத்து செழிக்கும் வனாந்தரம்

**“வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, காடுவெளி களித்து, புஷ்பத்தைப்போல செழிக்கும். அது மிகுதியாய்ச் செழித்துப் பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும், அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்.” - ஏசாயா 35:1,2**

இந்த காலத்தில் பூமி மிகுந்த கொடூரமான குழப்பம் நிறைந்த, இக்கட்டான நிலையில் இருக்கும் போது, பூமியையும் சுற்றுப்புற சூழலையும் காக்க அநேக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. மனிதனுக்குள் இருக்கும் அறிவு அற்புதமாக கிரியைசெய்துக் கொண்டிருக்கிறதையும் நாம் காணலாம். ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்புகளும், குறுகிய காலத்தில் மிக துரிதமாகக் கண்டுப்பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆனால், மனிதனுடைய இருதயம் மேட்டிமையினாலும், பேராசையினாலும், நிறைந்திருப்பதினால், அவர்களுடைய கண்டுபிடிப்புகளில் முழுமையாக மனுகுலத்திற்கு பயன்படுவதில்லை. இந்த பூமியை சீர்படுத்த நினைப்பவர்கள் கிறிஸ்துவின் அரசாட்சியில் தேவனுடைய வல்லமையினால், அதை பூரணமான நிலைமைக்கு சீர்பொருத்தி வெற்றி பெறுவார்கள். “வனாந்திரம் புஷ்பத்தை போல செழிக்கும்,” என்று சொன்ன வார்த்தைகள் வருங்காலத்தில் பிரேத குழிகளில் இருந்து வரும் கோடிக்கணக்கான மரித்த அனைவரும் உயிர்பெற்று சரீரத்திலும், ஆவியிலும் பூரணமாக போஷிக்கப்பட்டு, பராமரிக்கப்படுவார்கள் என்று அறிந்து கொள்ளலாம். மூடநம்பிக்கைகள் நீக்கப்பட்டு, அறியாமைக்கு பதிலாக ஞானமும், பகைக்கு பதிலாக அன்பும், பாவமற்ற நிலைமையும் கொடுக்கப்படும். அடுத்துவரும் யுகம் அறிவை கற்று கொள்ளும் காலமாக இருக்கும்.

அன்று யூதர்கள் தேவனுடைய இராஜ்யம், பூமிக்குரிய ராஜ்யத்தை மட்டுமே குறிப்பிடுகிறது என்று தவறாகப்புரிந்துகொண்டது போல, இன்று தேவனுடைய இராஜ்யம் பரலோகத்திற்குரியது மட்டுமே என்று அநேகரால் தவறாக புரிந்துக்கொள்ளப்படுகிறது. ஆனால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு, தேவனுடைய ராஜ்யம் இந்த பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்றும் அதற்கு மேலாக பரலோகத்தில் ஆட்சி அமைக்கப்படும் என்றும் மிகத் தெளிவாக போதித்தார். ஏசாயா 65:17, வெளி 21:1.

அனைவரும் ஒருமித்து சமாதானத்தோடு, பூரணமான உலகத்தில் இருப்பார்கள் என்று கற்பனை செய்து பார்ப்பதற்குக் கூட கடினமாக இருக்கிறது. ஆனாலும், இவை அனைத்தும் நிறைவேறும் காலம் சீக்கிரத்தில் வருகிறது. சகலவிதமான அழிவுக்குரியவைகள் நீக்கப்படுவதினால் நிச்சயமாக, “வனாந்திரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து புஷ்பத்தைப் போல செழிக்கும். அது மிகுதியாக செழித்து பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும், லீபனோனின் மகிமையும், கார்மேல் சாரோன் என்பவைகளின் அலங்காரமும், அதற்கு அளிக்கப்படும். அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்.” (ஏசாயா 35:1,2). பாவம் செய்வதற்கு முன்பு இருந்த ஏதேன் தோட்டத்தைப் போல சீர்பொருந்தப்பட்ட உலகம் இருக்கும். அப்போது இந்த உலகம் “பரதீஸ்” என்று அழைக்கப்படும்.

இவ்வளவு அழகான உலகத்தில் தேவன் தந்த நித்திய ஆசீர்வாதங்களை எண்ணி தேவனை அனைவரும் புகழ்வார்கள்.

நன்மையையும், தீமையையும் அனுபவிக்க வாய்ப்பு கிடைத்த மனுக்குலத்திற்கு தேவனுடைய இராஜ்யத்தில் நன்மையைத் தெரிந்து கொள்ள மிக எளிதாக இருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு அந்த பூரணமான உலகத்தில் நித்தியமாக ஜீவன் கொடுக்கப்படும். ஆனால், தீமையானவைகளை மனப்பூர்வமாக தொடர்ந்து செய்பவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

இந்த பூமி மேசியாவின் ஆட்சியில், சீர்த்திருந்துதலின் காலமான 1000 வருடங்களில் தேவன் முன்பு படைத்த நிலைமைக்கு திரும்பும். மொத்தத்தில் இந்த பூமியும் அதில் உள்ள மனுக்குலமும் முழுமையாக சிருஷ்டிக்கப்படும்.

**சீர்ப்பொருந்தப்பட்ட இந்த பூமி பாவம் செய்வதற்கு முன்பு இருந்த ஏதேன் தோட்டத்தை போல இருக்கும்.**



# பாடம் - 92

## அல்லேலூயா ஆர்ப்பரிப்பு மற்றும் வரப்போகும் யுகா யுகம்

**“அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும், ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடி, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள். பரிசுத்தவான்களின் இராஜாவே தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்....” - வெளி 15:3**

ஆயிரவருட அரசாட்சியின் முடிவில் நம்முடைய மத்தியஸ்தர் இராஜ்யத்தை பரலோகத்தின் பிதாவிடம் ஒப்புக்கொடுப்பார். (1கொரிந்தியர் 15:24) நம்முடைய சர்வவல்லமையுள்ள தேவன் உண்மையில் துதிக்கப்பட தக்கவரும், அன்புக்கும் கீழ்படிதலுக்கும் பாத்திரவானாக இருப்பவர் (சங்கீதம் 86:9). ஆனால், சிலர் அவருடைய இருதயத்தில் தேவன் மேல் பிரியமும் பக்தியும் இல்லாததினால், கட்டாயத்தின் பேரில் அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்.

மனுக்குலத்திற்கு தேவன், அவருடைய சித்தத்தின் படி நடப்பதற்கு கற்றுக் கொடுக்காமல் தேவன் அவர்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்கமாட்டார். ஆகவே, சாத்தான் அவன் கட்டுகளில் இருந்து தளர்த்தப்பட்டு மீண்டுமாக மக்களை மோசம் போக்கும் படி முயற்சி செய்வான். (வெளி 20:3).

அந்தச் சூழ்நிலையில் முழுமனுக்குலமும் நீதியின் அனுபவங்களையும், தீமையின் அனுபவங்களையும் பெற்றிருப்பார்கள். அவர்கள் நன்மையையும் தீமையையும் சுயமாக தேர்ந்தெடுப்பதற்கு சுயாதீனம் பெறுவார்கள். மனபூர்வமாக சாத்தானை பின் பற்றக்கூடியவர்களுக்கு இரண்டாம் மரணத்தையும், தேவனுடைய சட்டதிட்டங்களை விரும்பி கடைபிடிப்பவர்களுக்கு இந்த பூரணமான பூமியின் நித்திய ஜீவனைத் தருவார்.

நாம் “பாவத்தில் மரித்திருந்த போதே தேவன் நம்மேல் பாராட்டின அன்பு மிகவும் பெரிது.(எபேசியர் 2:1) இப்படி பாவத்தில் மரித்த அனைவரும் வாழக்கூடிய உரிமையை இழந்தவர்கள். அவர்கள் அனைவரும் மரணத்திற்குள்ளாக தீர்ப்பை பெற்றவர்கள்.(ரோமர் 3:10)

சாத்தான் தன்னை, தேவனை விட உயர்த்துவதற்கும், மனுக்குலம் அவனை வணங்குவதற்கும், அவன் மேற்கொண்ட முயற்சிகளில், அவன் இந்நாள் வரைக்கும் சோர்ந்து போகாமல் கிரியை செய்து கொண்டிருக்கிறான். அவன் முழுமையாகக் கட்டப்பட்டப் பின்பும்

அவனுடைய முடிவுகளில் எந்த விதமான மாற்றங்களும் இருக்காது. அவன் மீண்டுமாக கட்டவிழ்க்கப்படும் போது அவன் இந்தப் பூமியை அவன் ஆதீக்கத்தில் கொண்டுவருவதற்கு முயற்சி செய்வான். அப்பொழுது, மனுக்குலம் மீண்டுமாக ஒரு முறை சோதனைக்கு உட்படுத்தப்படும்.

1000 வருட ஆட்சியின் முடிவில் துன்மார்க்கமான அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். கீழ்படிந்து, மனப்பூர்வமாக தேவனுடைய சித்தத்தை செய்பவர்களுக்கு, தேவனுடைய முன் திட்டத்தின்படி அவர்கள் அனைவரும் பூரணப்படுத்தப்படுவர்.(ஏசாயா 45:18) இப்படியாக ஆதியாகமம் 22:18 ஆம் வசனத்தில் “உன் சந்ததிக்குள் பூமியில் உள்ள குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்” என்று தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்ததங்கள் முழுமையாக நிறைவடையும்.

இனி வியாதியும் இல்லை, மரணமும் இல்லை. (வெளி 21:4). பூமி முழுவதும் சுத்திகரிக்கப்பட்டு “அதன் பலனை பூரணமாகக் கொடுக்கும்”. இந்தப் பூமியில் உள்ளவர்களுக்கும் பரலோகத்தில் உள்ள அனைவரும் “சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் துதியும், கனமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உள்ளது.” என்று பரலோகத்தில் உள்ளவர்களுக்கும், பூலோகத்தில் உள்ளவர்களும் கூறுவார்கள். (வெளி 5:13, எபேசியர் 2:7, பிலிப்பியர் 2:10,11)

“உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.” அல்லேலுயா!

**துதியும், கனமும், மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் தேவனுக்கே உரியது.**

